# அண்ணாவின் புனைகதைத் திறன்

இரா.சேது

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# அண்ணாவின்
# புனைகதைத் திறன்

முனைவர் இரா.சேது

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
*இரண்டாம் முதன்மைச் சாலை*
*மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்*
*தரமணி, சென்னை - 600 113*

பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு
அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : தமிழ்நாடு அரசு)

வரிசை எண். 2

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Aṇṇāviṉ puṉaikatait tiṟaṉ |
| Author | : | Dr. R. Sethu<br>Professor of Tamil (Retd.)<br>Vivekananda College<br>No. 1, Chithiraikulam East Street<br>Mylapore, Chennai-600 004 |
| General Editor | : | Dr. K.A. Gunesekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 684 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2011 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | vi + 154 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.70/- (Rupees Seventy Only) |
| Printed by | : | **Pavai Printers (P) Ltd.,**<br>16 (Old No. 142), Jani Jan Khan Road<br>Royapettah, Chennai-600 014 |
| Subject | : | Skill of fiction writing of C.N. Annadurai |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

**பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சிந்தனையாளர்கள், படிப்பாளிகள், பேச்சாளர்கள், நாடக நடிகர்கள், சமூக விழிப்புணர்வாளர்கள் எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள் என்னும் பரிமாணங்கள் பலவற்றை ஒருங்கே பெற்றவராகப் பேரறிஞர் அண்ணா அவர்களே கண்டறியப் படுகிறார்.

இப்படியான ஒரு மாமனிதரைப் பற்றிய பன்முக ஆய்வுகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலமாக வெளிப்பட வேண்டும் எனும் எண்ணத்தில் தமிழ்நாடு அரசு ''பேரறிஞர் அண்ணா தமிழ்மேம்பாடு'' எனும் பொருண்மையில் இந்நிறுவனத்தில் ஓர் அறிக்கட்டளையை நிறுவியுள்ளது. இந்த அறக்கட்டளை மூலம் அமையும் சொற்பொழிவுகளை எழுத்துருவில் பெற்று எதிர் காலத்தினர் பயன்படுத்துமளவில் நூல்களாக வெளியிடும் திட்டம் இந்நிறுவனத்தில் மேற்கொள்ளப் பெற்று வருகிறது.

இந்நிறுவனத்தில் இந்த அறக்கட்டளையின் இரண்டாவது சொற்பொழிவாக ''அண்ணாவின் புனைகதைத்திறன்'' என்ற தலைப்பில் பேராசிரியர் முனைவர் இரா. சேது அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் எழுத்துரு நூலாக்கம் பெற்று அச்சில் ஏறி வெளியிடப்பெற்றுள்ளது.

பேராசியர் சேது அவர்கள் பேச்சாளராகவும் கல்வியாளராகவும் இதழாளராகவும் பேரறிஞர் அண்ணாவைப் பற்றி ஆய்வு செய்தவராகவும் ஆய்வு செய்து வருபவராகவும் இருப்பதால், இச்சொற்பொழிவு எழுத்துருவும் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளது.

பேரறிஞர் அண்ணாவின் புனைகதைகளின் திறன்களை இதழியல் நோக்கிலும், வரலாற்றுப் பண்பாட்டு வழிகளிலும், திறனாய்வுப் பார்வையிலும், சமூதாயச் சிந்தனைப் போக்கிலும் சிறந்த ஆய்வு நெறிமுறையின் அடிப்படையில் ஆராய்ந்து

எழுதியுள்ள பேராசிரியர் சேது அவர்கள் மிகவும் பாராட்டத் தக்கவர்.

இந்நூலின் பின்னிணைப்பாகப் பேரறிஞர் அண்ணாவின் எழுத்துப்பணிகளின் பட்டியல் இடம்பெற்றுள்ளது. இது ஆய்வாளர்களுக்கு மிகவும் பயன்படும்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பபட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. இரா. சிவக்குமார் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர் மற்றும் இந்நூலினை மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், கணிப்பொறியாளர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் என் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தாருக்கு என் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# ஆசிரியரைப் பற்றி. . .



பேராசிரியர் முனைவர் இரா. சேது அவர்கள் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரியில் பிறந்தவர். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரிலும், உயர் நிலைப் பள்ளிக் கல்வியை ஆ. தெக்கூரிலுள்ள விசாலாட்சி கலாசாலையிலும் பயின்றார். காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரியில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டமும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். இதழியலில் சான்றிதழ் பெற்றுள்ளார்.

பள்ளி, கல்லூரி நாள்களில் பேச்சுப் போட்டிகளிலும், எழுத்துப் போட்டிகளிலும் கலந்து கொண்டு எண்ணிறந்த பரிசுகளைப் பெற்றுள்ளார். சில திங்கள், தமிழக அரசின் செய்தித் துறையில் பணியாற்றியுள்ளார். சென்னை விவேகானந்தா கல்லூரியில் முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் துறையில் பணியாற்றியுள்ளார். தமிழ்த்துறைத் தலைவராகவும் வீற்றிருந்தார். அண்ணாவின் கதைகளை ஆய்ந்து 1980ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். பேச்சிலும் எழுத்திலும் வல்லவர். பேரறிஞர் அண்ணாவால் நாவன்மை மிக்கவரெனப் பாராட்டப் பெற்றவர். பேரறிஞர் அண்ணாவின் இலக்கியப் பேரவையால் சிறப்பிக்கப் பட்டவர். இவரது முனைவர் பட்டத்திற்கான ஆய்வுரை உலகளாவிய தமிழ்ப் பேரறிஞர்களால் பாராட்டுப் பெற்றது. ‘அண்ணாவின் படைப்புத்திறன்’ முதல் பதினைந்துக்கு மேற்பட்ட அரிய நூல்களை வழங்கியுள்ள இவரைப் பல இதழ்களும் பாராட்டியுள்ளன.

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | அண்ணாவின் எழுத்துப் பணி | 1 |
| 2. | சமுதாய விடுதலை | 15 |
| 3. | கதைக்கலை | 78 |
| 4. | முடிவுரை | 144 |
| | பின்னிணைப்பு | 148 |

# அண்ணாவின் எழுத்துப் பணி

**தோற்றம்**

தமிழகத்தில் தலைசிறந்த சிந்தனையாளராக விளங்கியவர் பேரறிஞர் அண்ணா. அவரது சிந்தனை எழுத்தாகவும் பேச்சாகவும் வெளிப்பட்டது. அவர் சொற்பொழிவாளராக இதழாசிரியராக, கட்டுரையாளராக, சிறுகதை, புதினங்களின் படைப்பாளியாக, நாடக ஆசிரியராக, நடிகராக, திரைப்படக் கதை உரையாடல் ஆசிரியராக, கவிஞராக, ஓவியராக, மொழியாக்கத் திறனாளியாக உயர்ந்தார். அவர் எழுத்தின் எல்லாத் துறை களிலும் முயன்று வெற்றியடைந்தார். உயர்ந்த குறிக்கோளையும் பகுத்தறிவுச் சிந்தனையையும் பெற்றுத் · தன்னேரில்லாச் சிறப்போடு விளங்கினார்.

பச்சையப்பன் கல்லூரியில் கலை முதல்வராகப் படித்துக் கொண்டிருந்த போது சுயமரியாதை இயக்கத்தின் தூணாக விளங்கிய தமிழ் மருத்துவர் மாசிலாமணி முதலியார் நடத்திய 'தமிழரசு' எனும் ஏட்டில் 'மகளிர் கோட்டம்' என்ற தலைப்பில் 1931ஆம் ஆண்டு கட்டுரை ஒன்று வரைந்தார். அக்கட்டுரை பற்றி மயிலை சிவமுத்து கூறுவதாவது:

> 1931ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் நாள் வெளிவந்த 'தமிழரசு' எனும் வார இதழிலே 'மகளிர் கோட்டம்' என்ற ஒரு கட்டுரை வெளி வந்தது. அதை எழுதியவர் இருபத்தொரு வயதுள்ள ஓர் இளைஞர். பச்சையப்பன் கல்லூரி மாணவர். சி.என். அண்ணாத்துரை என்னும் பெயரினர். அந்தக் கட்டுரையிலே நகைச்சுவை நிரம்பி இருந்தது; வீரச்சுவை வீறுபெறத் திகழ்ந்தது. சொல் அடுக்குகளும் ஆங்காங்கு அழகு பெறத் திகழ்ந்தன.
>
> *(மயிலை சிவமுத்து, நான் கண்ட அண்ணா, திராவிடன் பொங்கல் மலர், 1959)*

1932ஆம் ஆண்டு, கல்லூரியில் நடைபெற்ற 'சேசைய சாத்திரி'யின் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு மாஸ்கோ மக்களின் அணிவகுப்பு (Moscow Mob Parade) என்ற தலைப்பில் ஆங்கிலக்கட்டுரை ஒன்று வரைந்து முதல்பரிசைப் பெற்றார்.

அக்கட்டுரை அவ் ஆண்டு வெளிவந்த கல்லூரி மலரிலும் இடம்பெற்றது. அன்றைய காலக்கட்டத்தில் பொதுவுடைமைக் கருத்துக்கள் உலகெங்கும் பரவிப் பல பேரரசுகளை அச்சுறுத்தி வந்தன. தன்மான இயக்கத்தின் தலைவரான பெரியார் ஈ.வெ.ரா. சோவியத்நாடு சென்று திரும்பியிருந்தார். அச்சமயத்தில் அண்ணா எழுதிய 'மாஸ்கோ மக்களின் அணிவகுப்பு' அவர் உள்ளம் புத்தெண்ணங்கள் மலரும் சோலையாக மாறி மணம் பரப்புவதைக் காட்டுவதாக அமைந்திருந்தது. 1934ஆம் ஆண்டு ஆனந்த விகடன் இதழுக்குக் 'கொக்கரக்கோ' என்ற சிறுகதையை எழுதி அனுப்பினார். அச் சிறுகதைக்கு நன்கொடையாக ரூபாய் இருபதை (20) ஆனந்தவிகடன் அளித்தது. கல்லூரியை விட்டு வெளிவந்தபின் 1935ஆம் ஆண்டு நீதிக்கட்சித் தலைவராகவிருந்த பாசுதேவ் அவர்களோடு சேர்ந்து 'பாலபாரதி' என்ற வார ஏட்டிற்கு ஆசிரியராகவிருந்தார். அவ் ஏட்டில் தொழிலாளர் நலம் பேணும் கட்டுரைகளை வரைந்தார். காஞ்சி மணிமொழியார் தொடங்கிய 'நவயுகம்' என்ற வார ஏட்டிற்கும் ஆசிரியராக இருந்து பணியாற்றினார். 1938இல் 'விடுதலை', 'குடியரசு' இதழ்களில் துணையாசிரியராக இருந்து பெரியாரோடு இணைந்து பணியாற்றினார். 1942ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் 'திராவிடநாடு' எனும் வார இதழைத் தொடங்கினார். 1949இல் 'மாலைமணி' எனும் நாளேட்டின் ஆசிரியராகப் பொறுப் பேற்றார். 1953இல் 'நம்நாடு' எனும் நாளேட்டின் ஆசிரியரானார். 1957இல் 'Home Land' (தாயகம்) என்ற ஆங்கில ஏட்டைத் தொடங்கினார். 1962இல் 'Home Rule' (தன்னாட்சி) என்ற ஆங்கில வார ஏட்டின் ஆசிரியரானார். 1963இல் 'காஞ்சி' எனும் தமிழ் வார ஏட்டைத் தொடங்கினார். இவ்விதழ்களோடு கட்சித்தலைவர்கள் நடத்திய இதழ்களிலும் தொடர்ந்து எழுதிக்கொண்டே இருந்தார். சமுதாய நலனில் நாட்டங் கொண்ட அவரால் எழுதாமல் இருக்க முடியவில்லை. தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபின், பணிச்சுமை காரணமாக எழுத நேரம் கிடைக்காததற்காகப் பெரிதும் வருந்தினார். அவர் எழுதிய இறுதி மடலில்,

> எந்தப்பணி எனக்கு இனிப்பும் எழுச்சியும் தந்து வந்ததோ, எந்தப்பணியிலே நான் ஆண்டு பலவாக, மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு வந்தேனோ, எந்தப்பணி மூலம் நீ என்னை உன் அண்ணனாக ஏற்றுக்கொண்டு, பெருமிதத்துடன் உலகுக்கு அறிவித்து வந்தாயோ, எந்தப் பணி வாயிலாக என் கருத்துக்களை உனக்கு அளித்து உன் ஒப்புதலைப்பெற்று அந்தக் கருத்துக்களின் வெற்றிக்கான வழியினைக் காணமுடிந்ததோ,

> எந்தப்பணி மூலம் தமிழகத்தை அறியவும், உலகத்தை உணரவும் தமிழ்ப் பண்பை நுகரவும் வழிகிடைத்து வந்ததோ, எந்தப் பணி மூலம் எப்போதும் உன் இதயத்தில் எனக்கோர் இடம் கிடைத்து அது குறித்து நான் அளவற்ற அக மகிழ்ச்சி பெற முடிந்ததோ அந்தப் பணியை முன்புபோலச் செய்ய முடியாதவன் ஆக்கப்பட்டு, முடிய வில்லையே என்ற ஏக்கத்தால் தாக்கப்பட்டு, 'சூழ்நிலையின் கைதி' யாக்கப்பட்டுக் கிடக்கின்றேன் என்பதனை அறிவாய் (காஞ்சி, 14-1-'69)

எனக் குறிப்பிட்டுள்ளார். மேலே உள்ள எழுத்துக்கள் அண்ணா தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னரும் எழுத்துப்பணியில் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டை உள்ளங்கை நெல்லிக்கனி யாக்கிக் காட்டுகின்றன.

விடுதலையில் அண்ணா தீட்டிய தலையங்கங்களான, 'கல்கத்தா காய்ச்சல்', 'ஓமான் கடற்கரைச் சீமான்கள்', 'ரிப்பன் மண்டபத்துச் சீமான்கள்' போன்றவை பலராலும் வியந்து பாராட்டப்பட்டன. 'ரிப்பன் மண்டபத்துச் சீமான்கள்' என்ற தலைப்பில் எழுதப் பெற்ற 'விடுதலை' தலையங்கத்தைப் பெரியார் பலமுறை படித்தார். உடனே அண்ணாவைப் பாராட்ட வேண்டுமென்ற எண்ணம் பெரியாருக்கு ஏற்பட்டது. அறுபது வயது நிறைந்த பெரியார் மிகவும் சிரமப்பட்டு அண்ணா தங்கியிருந்த மூன்றாவது மாடிக்கு ஏறிச் சென்று அண்ணாவைக் கண்டு அவர் எழுதியிருந்த 'ரிப்பன் மண்டபத்துச் சீமான்கள்' என்ற தலையங்கத்தைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார். அவரது தலைவரே வியந்து பாராட்டும் அளவிற்கு அண்ணா எழுத்தாற்றல் மிக்கவராக விளங்கினார். சென்னையில் ஆளுநராக விருந்த லார்ட் எர்ஸ்கின் பிரபு நிருவாகத் திறன் அற்றவராக இருந்தார். அப்பொழுது நீதிக்கட்சி ஆங்கில அரசை ஆதரித்து வந்தது. அரசுக்கு ஆதரவாக நீதிக்கட்சி இருந்தபோதிலும் ஆளுநராக இருந்த லார்ட் எர்ஸ்கின் பிரபுவின் நிருவாகக் குறையைச் சுட்டிக்காட்டி அண்ணா 'விடுதலை'யில் ஒரு தலையங்கம் தீட்டினார். இதனை அறிந்த ஆளுநர், சர்.ஏ.டி. பன்னீர்செல்வத்திடம் அண்ணாவின் கட்டுரை குறித்து முறையிட்டார். சர்.ஏ.டி. பன்னீர்செல்வமும் ஈரோடு விரைந்து அண்ணாவைக் கண்டு ஆளுநரைப்பற்றி வரைந்த கட்டுரைக்கு வருத்தம் தெரிவிக்குமாறு கூறினார். 'நான் எழுதியவை நியாயமானவை; உண்மையானவை; அக்கட்டுரை என்னால் நன்கு அறிந்தே எழுதப்பட்டுள்ளதென்றும் அதற்காக வருத்தம்

தெரிவித்துக் கட்டுரை வரைய முடியாதென அண்ணா மறுத்துவிட்டார். அண்ணா தன் கருத்தை மாற்றிக் கொள்ளாததைக் கேட்ட பன்னீர் செல்வம் மனக்குறையோடு ஈரோட்டிலிருந்து திரும்பினார். சில திங்கள் கடந்த பின்னர் அண்ணாவைச் சந்தித்த பன்னீர்செல்வம் ஆளுநர் லார்ட் எர்ஸ்கின் பிரபுவைப் பற்றி அவர் எழுதியிருந்த கருத்து முற்றிலும் சரியானதேயெனக் கூறிப் பாராட்டினார். அண்ணா எதனையும் நன்கு ஆராய்ந்த பின்னரே எழுதுவாரென்றும், எத்தகையோர் வந்து வேண்டினாலும் தன் கருத்தினின்று பின்வாங்கமாட்டா ரென்றும் இந்நிகழ்ச்சி உறுதிப் படுத்தியுள்ளது. 'கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது', 'டாலர் ரூபிள் சண்டை', 'ஆனால் ஆகவே', 'ஆவடியும் காவடியும்', 'குற்றம்பார்க்கில் சுற்றம் இல்லை,', 'ழகரமும் றகரமும்', 'கிளிக்குப் பச்சை பூசுவதா?', 'நோ ஞா', 'ஞாயிறு போற்றுதும்' ஆகிய மடல்கள் அவரது எழுத்தாற்றலுக்குச் சான்றாகத் திகழ்கின்றன.

'ஊரார் உரையாடல்', 'பரதன் வீரன் வாதங்கள்' ஆகிய தலைப்புகளில் சிந்தனையைக் கிளரும் செய்திகளைத் தந்தார். 8.5.55 'திராவிடநாடு' வார ஏட்டில் 'தம்பிக்கு' என்ற பகுதியைத் தொடங்கி வாரம் தோறும் எழுதிவந்தார். 8.5.55 'திராவிடநாடு' வார ஏட்டில் தொடங்கி 14.1.69 முடிய 'காஞ்சி' வார ஏட்டில் வந்த தம்பிக்குக் கடிதங்கள் எண்ணிக்கையில் 261 ஆகும். கைதி எண் '6342' என்ற தலைப்பில் 'காஞ்சி' வார ஏட்டில் பத்தொன்பது (19) கடிதங்களைச் சிறை நினைவுகளாக எழுதியுள்ளார்.

பெரிய நாடகங்களையும் ஓரங்கநாடகங்களையும் சேர்த்து ஏறத்தாழ நாற்பத்தாறு நாடகங்கள் எழுதியுள்ளார். 'சந்திரோதயம்', 'சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்', 'நீதிதேவன் மயக்கம்' முதலான நாடகங்களை எழுதியதோடு அந்நாடகங்களில் தானே பாத்திரமேற்று நடித்துள்ளார். இலக்கியத் திறனாய்வை 'நீதிதேவன் மயக்கம்' எனும் நாடகமாக வடித்து அதனை நடித்துக்காட்டிய பெருமை அண்ணாவுக்கு உண்டு. 'கவிதையல்ல ஆக்கிக் கொள்ளலாம்' என்ற தலைப்பில் குடியரசு தொடங்கிக் காஞ்சி வார ஏடுவரை பல கவிதைகளை இயற்றியுள்ளார். மக்களின் கவனத்திற்கு எளிதில் வராத அரசியல் விவகாரங்களையும் சமுதாயச் சீர்கேடுகளையும் 'கேமிராவுக்குத் தப்பிய காட்சிகள்' என்ற தலைப்பில் ஓரங்க நாடகம்போல் தீட்டியுள்ளார். அடுப்பங்கரையில் சமையல் செய்யும் அரிவையரும் அரசியல் விழிப்புணர்வு பெறவேண்டு மென்ற நோக்கோடு மூன்று பெண்களைக் கதை மாந்தர்களாக அமைத்து அவர்களது உரையாடலை 'அந்திக்கலம்பகம்' எனும்

தலைப்பில் எழுதினார். அவ்வாறு எழுதி வெளிவந்தவை எண்ணிக்கையில் இருபத்தெட்டாகும் (28). 11.2.34ஆம் ஆண்டு ஆனந்த விகடனில் வெளிவந்த 'கொக்கரக்கோ' என்ற சிறுகதை தொடங்கி 14.1.66 'காஞ்சி' பொங்கல் மலரில் வெளிவந்த 'பொங்கல் பரிசு', 'உடையார் உள்ளம்' முடிய சிறுகதைகளை வரைந் துள்ளார்; குறும் புதினங்களையும்; புதினங்களையும், வரைந் துள்ளார்.

அண்ணா எழுத்தாளராக மட்டுமல்லாமல் தமிழகத்தில் செல்வாக்குள்ள அரசியல் கட்சியின் தலைவராக இருந்தார். அவரது கருத்துக்களைப் பரப்ப எண்ணிறந்த ஏடுகள் தோன்றின. அண்ணாவின் எழுத்துக்களைப் பின்பற்றித் தமிழகத்தில் முற்போக்கு எண்ணங்கொண்ட பல எழுத்தாளர்கள் உருவானார்கள். அவர்களுள் தலையாயவராக விளங்குபவர் கலைஞர் மு. கருணாநிதியாவார். அண்ணாவைப் போலவே சிறுகதை, புதினம், கவிதை, கட்டுரை, திரைக்கதை, உரையாடல், நாடகம், நடிப்பு ஆகிய அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்து விளங்குகின்றார். பேச்சிலும் எழுத்திலும் அண்ணாவின் தம்பியாகத் திகழும் கலைஞர், தமிழக முதல்வராக விளங்கிய அண்ணாவின் வழியில் நின்று தமிழக முதல்வராக இருந்து நாட்டிற்குப் பெருமைத் தேடித் தந்து கொண்டிருக்கின்றார். ஒரு காலத்தில் அண்ணாவின் பேச்சையும் எழுத்தையும் புறக்கணித்த தேசிய எழுத்தாளர்கள் அண்ணா இல்லாமல் தமிழகத்தில் பேச்சோ எழுத்தோ இருக்க முடியாது என்ற நிலைகண்டு வியந்து நிற்கின்றனர்.

அண்ணாவின் எழுத்தைப் பின்பற்றி எழுதிய எழுத்தாளர்களின் எழுத்துக்கள் அண்ணாவின் எழுத்தைப் போலவே இருந்ததால் அவை அண்ணாவின் பெயரில் சில ஏடுகளில் வந்துள்ளன. தில்லை வில்லாளன் எழுதிய 'கொத்தனார் பிரின்சுபால்' ஆகிறார் என்ற சிறுகதையும், இரா. செழியன் எழுதிய 'இராஜாடி ராஜா' என்ற சிறுகதையும் தக்க சான்றாகும். சில பதிப்பகத்தார் அவரது கட்டுரைகளையும் நாடகங்களையுங் கூடக் கதையென வெளியிட்டுள்ளனர். 'சொர்க்கத்தில் நரகம்' என்ற கட்டுரை வரைந்துள்ளேன் எனத் திராவிட நாடு பொங்கல் மலரின் (1957) முன்னுரையில் கூறியுள்ளார். 'வழக்குவாபஸ்', 'சோணாசலம்' போன்ற ஓரங்க நாடகங்களையும் சிறுகதைகள் என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளனர்.

சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற வார, திங்கள் இதழ்களில் பெரும்பாலும் அறிவு விளக்கக் கட்டுரைகளே வெளிவந்தன. இவற்றைப் பலரும் விரும்பிப் படித்தாலும்

படிப்பறிவு குறைந்த நாட்டில் அனைவருக்கும் கருத்துக்கள் போய்ச் சேரக் கதை வடிவம் தேவைப்பட்டது. சுயமரியாதை இயக்கத்தில் முதன்முதலாக மூவலூர் இராமாமிர்தத்தம்மையார்' 'தாசிகளின் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்' என்ற புதினத்தை 1936இல் எழுதினார். அந்த இயக்கத்தில் வேறுயாரும் புதினமோ சிறுகதையோ எழுத முன்வரவில்லை. அண்ணா அந்தத்துறையில் துணிந்து இறங்கினார். அதற்குரிய காரணத்தை அண்ணா இவ்வாறு கூறியுள்ளார்.

> இலக்கிய ஏடுகள் மக்களின் மார்க்கெட்டிலே மலிந்து நடமாடவேண்டுமானால் இலக்கியம் கோபுர உச்சியிலிருந்து குப்பைமேட்டுக்கு வரத் தயாராய் இருக்க வேண்டும். கற்றோரும் மற்றோரும் பண்டிதரும் பாமரரும் பணக்காரனும் ஏழையும் படித்துணரும் பாங்கிலே எளியநடையிலே இயற்கைக் கருத்தைக் கவின் பெற எடுத்துரைக்கும் ஏடுகள் எழுதப்படவேண்டும்.
> *(சி.என். அண்ணாதுரை, 'நாடும்ஏடும்', ப.12)*

அண்ணா சிறுவயது முதற்கொண்டே கதைகளைப் படிப்பதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். அவர் படித்த நூல்களுள் மிகுதியும் கதைநூல்களாகவே இருந்தன. தம்முடைய கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் தம் கருத்துக்கள் பாமர மக்களுக்கு எளிதில் சென்று சேரக் கதைகளைக் கூறும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். தம்முடைய கட்டுரைகளின் தொடக்கத்திலோ இடையிலோ கதைகளைக் கூறி விரும்பிய கருத்தை எழுதிச் செல்வார். பல ஆண்டுகளாக நடிக்கப்பெற்று வந்த 'சந்திரோதயம்' எனும் அவரது முதல் நாடகத்தைத் திராவிடநாடு (14.1.55) வார ஏட்டில் கதை வடிவில் சுருக்கித் தந்தார். 'சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' என்ற நாடகத்தையும் 'மகுடாபிஷேகம்' எனும் பெயரில் 'திராவிடநாடு' வார ஏட்டில் (14.1.49) கதைவடிவில் வடித்துத் தந்துள்ளார், பெர்னாட்சா எழுதிய Apple Cart எனும் ஆங்கில நாடகத்தை 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' எனும் தலைப்பில் கதைவடிவில் அளித்துள்ளார். இப்சன் எழுதிய 'An enemy of the people' என்ற ஆங்கில நாடகத்தை 'மக்கள் தீர்ப்பு' எனும் தலைப்பில் கதை வடிவில் தந்துள்ளார். இர்விங் வாலஸ் எழுதிய The Man என்ற ஆங்கிலப் புதினத்தை 'வெள்ளைமாளிகை' என வரைந்தார். ஹால் ஹெயின்ஸ் எழுதிய Iron Fence என்ற ஆங்கிலப் புதினத்தை இரும்பு முள்வேலி எனவும், ஜெராம் கேஜெராம் எழுதிய Antony John என்ற ஆங்கிலப் புதினத்தை 'அந்தனி ஜான்' எனத் தமிழிலும்

மொழியாக்கம் செய்து தந்தார். அடையாறு மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையிலும் மேரிகரோலி என்ற பெண்மணி எழுதிய 'மாஸ்டர் கிறிஸ்டியன்' (புரட்சித் தலைவி) என்ற புதினத்தை அண்ணா படித்து முடித்ததாகவும் குமுதம் (7.2.69) வார இதழ் குறிப்பிட்டுள்ளது.

அண்ணா அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக் கழகத்திற்குப் புறப்படுவதற்குச் சற்று முன்பு விமானநிலையத்தில் மத்திய அரசு வெளியுறவுச் செயலாளர் அண்ணாவிடம் சில புத்தகங்களைக் கொடுத்து 'இந்தப் புத்தகங்கள் பொது அறிவு தொடர்பான புத்தகங்கள். யேல் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் தங்களுக்குப் பெரிதும் பயன்படுமெனக் கூறினார். அப்புத்தகங் களைக் அண்ணா கையில் வாங்கிப் பார்த்துவிட்டு இந்தப் புத்தகங்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பே படித்து விட்டதாகக் கூறினார். ஓயாத படிப்பின் காரணமாக மிகப்பெரிய நூலகமான கன்னிமேரா நூலகத்திலுள்ள எல்லா நூல்களையும் அண்ணா படித்துள்ளார் என்ற கருத்தும் தமிழ் மக்களிடையே உண்டு. சாந்துணையும் கல்லாதவாறு என்ற திருக்குறளின் வினாவிற்கு அண்ணா விடையாக விளங்கினார்.

மேலைநாடுகளில் ஏற்பட்ட தொழில் புரட்சியும் அறிவியல் முன்னேற்றமும் மக்கள் வாழ்வில் புதிய மாற்றத்தை உருவாக்கின. அம்மாற்றங்கள் இலக்கியங்களிலும் எதிரொலித்தன. மக்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் புதிய நடுத்தர வகுப்பினரை உருவாக்கியன. அவ்வகுப்பினர் அறிவினைத்தேடும் தாகம் கொண்டவர்களாக விளங்கினர் அதனால் இயந்திரம் போல் இயங்கிக் கொண்டிருக்கும் வாழ்விலும் நேரம் கிடைக்கும் போது அறிவுப் பசிக்கு ஏடுகளை நாடிச் சென்றனர். மக்கள் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டதுபோல் இலக்கியத்திலும் காலப்போக்கில் வடிவங்களில் மாற்றம் ஏற்பட்டது. பண்டைக் காலத்தில் காவியங்கள் பெற்றுள்ள இடத்தை இன்றைய புதினங்கள் பெற்றன; தனிப்பாடல்கள் பெற்றுள்ள இடத்தைச் சிறு கதைகள் நிறைவு செய்தன.

புதிதாகத் தோன்றிய இலக்கிய வடிவத்தினை மேலை நாட்டினர் நாவல் (Noval) என அழைத்தனர். நாவெல்லா என்ற இத்தாலியச் சொல்லே ஆங்கிலத்தில் நாவல் என அழைக்கப்பட்டு வந்தது. நாவல் என்ற ஆங்கிலச் சொல் புதினம் எனத் தமிழில் வழங்கப்படுகிறது.

1741ஆம் ஆண்டு ரிச்சர்ட்சன் என்ற இத்தாலியர் 'பாமெலா' என்ற புதினத்தை எழுதினார். அதுவே உலகின் முதல்

புதினமாகக் கருதப்படுகிறது. 1865ஆம் ஆண்டு பங்கிம் சந்தர் வங்கமொழியில் எழுதிய 'துர்க்கேச சநந்தினி' எனும் புதினமே இந்திய மொழிகளில் வந்த முதல் புதினமாகும். இந்திய மொழிகளில் வெளிவந்த இரண்டாவது புதினம் 1876ஆம் ஆண்டு வேதநாயகம் பிள்ளையால் முதன் முதலாகத் தமிழில் எழுதப்பெற்ற 'பிரதாப முதலியார் சரித்திரமாகும். உலகில் புதினம் தோன்றிச் சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் கழிந்தபின்னரே தமிழில் புதினம் தோன்றியது. தமிழில் புதினக்கலையை வளர்த்த பெருமை மாயூரம் வேதநாயகம் பிள்ளைக்குப்பின் ராஜம் ஐயர், மாதவையா, பாரதியார், மறைமலையடிகள், வ.ரா., கல்கி கிருஷ்ண மூர்த்தி, கே.சி. வேங்கட ரமணி, நாரணதுரைக்கண்ணன், விந்தன், மு.வ., அகிலன், ஜெயகாந்தன் முதலானவர்களையே சாரும்.

புதினங்கள் வெளிவரத் தொடங்கிய காலத்தில் உலகின் எல்லா நாடுகளிலும் எதிர்ப்புகள் தோன்றின. புதினங்கள் மக்களின் ஒழுக்கக் கேட்டிற்குத் துணைபோவதாகக் கூறிக் கற்ற பலர் அவற்றை ஏற்க மறுத்தனர். தமிழ்த் தென்றல் திரு.வி.க. போன்ற அறிஞர் பெருமக்கள் போலிப் புதினங்கள் மக்களுக்கு ஒழுக்கக்கேட்டை வளர்ப்பதாகக் குறை கூறினர்.

*போலி நாவல்கள் பெண்ணுலகையே கெடுத்து வருகின்றன. தங்கள் வாழ்வை நஞ்சென எரிப்பது போலி நாவல் என்று பெண்மணிகள் கருதுவார்களாக. போலி நாவல்களையும் போலி நாடகங்களையும் படித்து நல்வாழ்வை இழந்து பின்னே வருந்தி வருந்தி மாண்ட சில பெண் மக்கள் கதைகள் எனக்குத் தெரியும் (திரு.வி.க. பெண்ணின் பெருமை, ப.71)*

தமிழ்ப் புதினத்தைப் படைத்த முன்னோடிகளில் ஒருவரான மாதவையா (1872-1925) 'முத்து மீனாட்சி' எனும் புதினத்தில் இளம் விதவைகளின் துயரத்தை வெளிப்படுத்தி மறுமணத்தைப் போற்றி எழுதினார். விதவை மணத்தை அவரது புதினமான மீனாட்சி வலியுறுத்தியதால், மாதவையா கண்டனத்திற்கு ஆளானார். 'இந்நாவல் வெளிவந்தவுடன் இந்தக் கொள்கையையும் வாழ்க்கைக் குறிக்கோளையும் ஹிந்து நாளிதழ் பழித்து எழுதியது எனத் தா.வே. வீராசாமி எழுதியுள்ளார். (தா.வே. வீராசாமி, தமிழில் சமூகநாவல்கள், ப.3)

இந் நூற்றாண்டில் தோன்றிய புதிய இலக்கிய வடிவம் சிறுகதை. மனித இனத்தின் வேகமான வாழ்க்கைக்கு விருந்தளிப்பது. இயந்திரம் போல் இயங்கும் வாழ்க்கையில் சிறிது ஓய்வு கிடைக்கும் போது அறிவூட்டும் கருவியாக அமைவது. ஒரு கருத்தைக் கற்பவர் நெஞ்சில் ஆழமாகப் பதியுமாறு செய்யும்

ஆற்றல் சிறுகதைக்கு உண்டு. சிறுகதை தோன்றியபோது, அந்த வடிவத்திற்கு ஏராளமான எதிர்ப்புகள் ஏற்பட்டன. அதனை எதிர்த்துப் பேனா முனையால் போராடினார்கள். அந்தப் போரில் எட்கார் ஆலன்போ, ஓ.ஹென்றி, மாப்பசான், செக்காவ், கோகல் முதலானவர்கள் வெற்றிகண்டார்கள். அவர்களது படைப்புகளை மக்கள் விரும்பிப் படித்தார்கள். உலகில் சிறுகதைகள் தோன்றிப் பல ஆண்டுகள் கழிந்த பின்னரே இந்தியாவில் சிறுகதை இலக்கியம் தோன்றத் தொடங்கியது. இந்தியாவில் முதன் முதல் சிறுகதை இலக்கியம் வங்க மொழியிலேயே தோன்றியது; அம்மொழியில் பங்கிம் சந்தரும், இரவீந்திரநாத் தாகூரும் சிறுகதைகளைப் படைத்துத் தந்தனர். தமிழில் முதன் முதலில் வ.வே.சு. ஐயர் 'குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை' என்ற சிறுகதையை வரைந்தார். இவரது சிறுகதைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்று 1927ஆம் ஆண்டு 'மங்கையர்க்கரசியின் காதல்' என்ற தலைப்பில் முதன் முதலில் வெளிவந்தன. வ.வே.சு. ஐயரைத் தொடர்ந்து மாதவையா, கு.ப. ராசகோபாலன் (கு.ப.ரா.), புதுமைப்பித்தன், கல்கி கிருஷ்ணமூர்த்தி முதலானவர்கள் சிறுகதையைச் செழுமையடையச் செய்தனர். 'மணிக்கொடி' இதழ் சிறுகதை வளர்ச்சிக்கெனத் தனிக்கவனம் செலுத்தியது. 'காந்தி', 'எழுத்து', 'ஊழியன்', 'கலைமகள்', 'கல்கி', 'ஆனந்தவிகடன்', 'ஆனந்தபோதினி' ஆகிய ஏடுகள் தமிழில் சிறுகதை வளரத் துணைபுரிந்தன.

தமிழில் சிறுகதைகள் தோன்றிய காலத்திலேயே அண்ணா சிறுகதைகள் எழுதத் தொடங்கினார். பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது 1934ஆம் ஆண்டில் 'ஆனந்தவிகட'னுக்குக் 'கொக்கரக்கோ' என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதி அனுப்பினார். அதற்குப் பரிசாக 'ஆனந்த விகடன்' அண்ணாவிற்கு இருபது ரூபாயை அளித்தது. 'கொக்கரக்கோ' தொடங்கி, 'காஞ்சி' இதழில் இறுதியாக வெளிவந்த 'பொங்கல் பரிசு', 'உடையார் உள்ளம்' முடிய ஏறத்தாழ எண்பத்தொன்பது சிறுகதைகள் வரைந்துள்ளார்.

பெரியார் ஈ.வெ.ரா.வால் நடத்தப்பட்டு வந்த 'குடியரசு', 'விடுதலை' இதழ்களில் அண்ணா துணையாசிரியராகப் பணியாற்றி வந்தார். 1940 ஆண்டு குடியரசு இதழில் 'வீங்கிய உதடு' என்ற புதினத்தை எழுதத் தொடங்கினார். சமூக நீதிக்காகப் போராடிய நீதிக் கட்சியிலும் சமுதாய விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட தன்மான இயக்கத்திலும் அண்ணா தன்னை இணைத்துக் கொண்டிருந்ததால் அவரது படைப்புக்கள் சமுதாய விழிப்புணர்வுக்குத் தூண்டுகோலாக அமைந்தன.

இலட்சியம் இல்லாத எழுத்து மணமில்லாத மலருக்கு ஒப்பானதென எண்ணி எழுதுகோலைப் பயன்படுத்தினார். 'நாட்டில் நல்ல நினைப்புகளும் நிலையும் உண்டாக்குவதற்காக இலக்கியத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணுபவர்கள் போர் வீரர்களிலே ஒருவகையினர் என்றே, கருதுவேன்; பாராட்டுவேன் (ப.வாணன், ரஷ்ய இலக்கியம், அண்ணாதுரை முன்னுரை,ப.10) பொன்னுக்காகவும், புகழுக்காகவும், பொருளுக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் பலர் தமிழில் புதினங்களைப் படைத்தனர். வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே.ஆர். ரெங்கராசன் போன்றவர்கள் துப்பறியும் கதைகளையும், மர்மக்கதைகளையும் எழுதி மக்களிடையே செல்வாக்குப் பெற்று வாழ்ந்தனர். இந்நிலை கண்டு அண்ணா பெரிதும் வருந்தினார். சமுதாயத்தில் மலிந்துள்ள சீர்கேடுகளை அகற்றுவது ஓர் எழுத்தாளனின் தலையாய கடமையென எண்ணினார். அதனால் கதைக்கோடாரியைக் கையில் எடுத்தார். தன் வாழ்நாளின் இறுதிவரை எழுதுகோலை ஒருபோர்க் கருவியாகக் கொண்டு சமுதாயத்தில் போராடினார். சமூக விடுதலைக்காகத் தம் கதைகளில் கருத்துக்களைக் கணையாக்கித் தந்தார். மலையாள எழுத்தாளர் கேசவதேவின் கண்ணாடி என்ற புதினத்திற்கு டி.என். ஜெயச்சந்திரன் வரைந்த முன்னுரையில் கூறியுள்ள கருத்து அண்ணாவின் நோக்கிற்கு ஏற்பாடுடையதேயாகும்.

> இலக்கியம் என்னுடைய பிரச்சினையல்ல. வாழ்க்கைதான் என்னுடைய பிரச்சினை. வாழ்க்கையில் இன்பத்தைப் பெருக்க வேண்டும். வேதனையைக் குறைக்க வேண்டும். இதுதான் என் இறுதி இலட்சியம். இதற்காக நான் எழுதுவது மட்டுமல்ல. சொற்பொழிவாற்றுவதும் உண்டு. ஒரு தெளிவான சமூகக் குறிக்கோள் உள்ள எழுத்தாளன் நான். இந்தச் சமூக உறவுதான் என்னை எழுத வைக்கிறது. (டி.என். ஜெயசந்திரன், முன்னுரை, கேசவதேவ், கண்ணாடி, (மொழி.பெ.), ப. XI )

இலக்கியம் சுவையை மட்டும் தந்தால் மட்டும் போதாது. பயனையும் தருதல் இன்றியமையாதது என்பதனை ஒரு முன்னுரையில் அண்ணா இவ்வாறு கூறியுள்ளார்:

> இலக்கியம் சுவையை மட்டும் ஒன்பது வகைகளுடன் மேலும் ஒன்று தேடிக்கண்டறிந்து கூட்டித் தந்தாலும் போதாது. பயன் இருக்கவேண்டும். சுவையும் பயனும் காலத்தை வெல்லும் தன்மையும் பிறந்த இடத்திலே மட்டுமல்லாமல் செல்லுமிடமெங்கும் சிறப்பும் புகழும்

பெறுகிற தன்மையும் இருக்க வேண்டும் இலக்கியத்திற்கு. (அண்ணாதுரை முன்னுரை, ப.வாணன், ரஷ்ய இலக்கியம், ப.10)

எண்ணத்திற்கு முதலிடமும் எழுத்துக்கு இரண்டாவது இடமும் தந்தார். குறிக்கோளுக்காகவே இலக்கியத்தைக் கையாண்டு மக்களுக்கு வழிகாட்டியுள்ளார். ஆறு புதினங்களையும் ஒன்பது குறும்புதினங்களையும் படைத்துள்ளார்.

அண்ணா திராவிடர் கழகத்தில் இருந்தபோது அக்கட்சியின் தலைவராக இருந்த பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. அதனால் தூத்துக்குடியில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் அண்ணா கலந்து கொள்ளவில்லை. இதனையே வாய்ப்பாகக் கொண்டு அண்ணாவின் வளர்ச்சியில் பொறாமை கொண்ட திராவிடர் கழகத்தில் சிலர் பெரியாரிடத்திலே புறங்கூறினர். காலமெல்லாம் கட்சிக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பேசியும் எழுதியும் அயராது உழைத்தும் வந்த அண்ணாவுக்குத் தம் தலைவரின் செயல்பாடு மிகுந்த வேதனை அளிப்பதாக இருந்தது. தன் உள்ளக் குமுறலை உருவகமாக்கிச் சிறுகதைகள் மூன்றினைப் படைத்தார். இம்மூன்று உருவகச் சிறுகதைகளும் வடிவத்திலும் வகுத்துச் சொன்ன முறையிலும் சிறந்து விளங்குகின்றன. சுமார் சுப்பையாவும், உபகாரி உலகநாதனும் எழுத்தெனும் அண்ணாவின் கலைக்கோயிலில் அழியாத ஓவியமாகத் திகழ்கின்றன.

### ராஜபார்ட் ரங்கதுரை (திராவிடநாடு, 6.6.48)

நாடகக் கம்பெனி ஒன்றில் காட்பாடியில் நடித்துக் கொண்டிருந்த போது முதலாளி குருமூர்த்தி ஒரு கோயிலில் பாடிக் கொண்டிருந்த ரங்கதுரையைச் சந்தித்தார்; தன்னுடைய கம்பெனியில் ரங்குவைச் சேர்த்துக் கொண்டு பெரிய விளம்பரங்களைத் தந்து ராஜபார்ட் ரங்கதுரை என்ற சிறப்பைப் பெறச் செய்தார். முதலாளிக்கும் ரங்குவால் நல்ல வசூல் கிடைத்தது. ரங்கு தன் தாய்க்கு உடல்நிலை சரியில்லை யென்று ஊருக்குச் சென்றான். இதனை ஒருவாய்ப்பாகக் கருதி முதலாளியிடம் ரங்குவைப் பற்றிப் பழிகளைச் சுமத்தினர். அவர்களது பேச்சைக் கேட்ட முதலாளி ரங்குவை அழைக்கவில்லை. அழைப்பு வருமென்று எதிர்பார்த்த ரங்கு எதுவும் வராததால் வெற்றிலைப் பாக்குக் கடைவைத்துக் கொண்டு ஊரிலே தங்கி விட்டான். இத்தனை நாள் அக்கம்பெனியில் உழைத்ததன் பலன் கண்ணீர்த்துளிகள்தாம்

எனக் கூறி வருந்தினான். குருமூர்த்திக்கும் ரங்குவுக்கும் இடையில் மனவேறுபாடு வளர்ந்தது. உருவகக்கதையான இச்சிறுகதை பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இடையே ஏற்பட்ட மனவேறுபாட்டைக் காட்டுவது. முதலாளி குருமூர்த்தி பெரியாராகவும், ரங்கதுரை அண்ணாவாகவும் உருவகம் செய்து தீட்டப்பட்டதாகும் ராஜபார்ட் ரங்கதுரை எனும் உருவகக்கதை.

*மரத்துண்டு (திராவிடநாடு, 13.6.48)*

மரத்துண்டு வைரம்பாய்ந்ததாக வீட்டில் கிடந்தது. அதைப் பயன்படுத்தாதலால் அம்மரத்துண்டு கறையானுக்கு இரையாகியது. தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டிற்குப் பின் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனைக் கருவாகக் கொண்டு அண்ணா 'மரத்துண்டு' என்ற சிறுகதையை உருவகக் கதையாக எழுதியுள்ளார்.

*இரும்பாரம் (திராவிடநாடு, 13.6.48)*

கொலம்பசு மிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்தான். அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அப்பால் பெரியதோர் நாடு இருக்கிறது அதனைக் காணவேண்டுமெனப் பல நாட்டினரிடம் கேட்டுக் கொண்டான். யாரும் அவன் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. கொலம்பசுவோடு உடன் பிறந்தவன் மரக்கலக்காரருக்குப் பயன்படும் படங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான். பிரபல இத்தாலியக் கடற்படை அதிகாரியின் மகளை மணந்து கொண்டான். இந்த இரு தொடர்புகளும் கொலம்பசின் மனதில் புதிய நாடுகளைக் கண்டறியும் ஆவலைத் தூண்டின. ஸ்பெயின் அரசர் பெர்டினாண்டும் அரசி இஸபெல்லாவும் கொலம்பசைப் பயணத்தைத் தொடங்க ஏற்பாடு செய்து கொடுத்தனர். புதிய தீவுகளைக் கண்டுபிடித்து ஸ்பெயின் கொடியை நட்டுக் கொலம்பசு வெற்றியுடன் நாடு திரும்பினான். ஸ்பெயின்நாட்டு அரசனும் அரசியும் பார்சிலோனா பட்டணத்தில் கொலம்பசுக்கு மாபெரும் வரவேற்பளித்தனர். மக்களும் மகிழ்ச்சியில் திளைத்தனர். ஸ்பெயின் அரசனும் அரசியும் கொலம்பசை மீண்டும் தீவுகளைக் காண அனுப்பி வைத்தனர். வஞ்சகர்கள் கொலம்பசு மீது பழிசுமத்தி அரசனையும் அரசியையும் மாற்றினர். பொறாமை கொண்டவர்களின் வஞ்சகத்தால் நடுக்கடலில் கைது செய்யப்பட்டபின், இரும்பாரத்தோடு, சிலபகல் சென்றபின் அரசனும் அரசியும் மனமாற்றம் பெற்றுக் கொலம்பசை வரவேற்றனர். அவர்களது பாராட்டைப் பெற்ற போதிலும், தனக்குப் பூட்டப்பட்ட

இரும்பாரத்தைக் கொலம்பசு அகற்ற மறுத்துவிட்டான். அவன் இறக்கும் போது அந்த இரும்பாரம் கொலம்பசோடு சேர்த்தே புதைக்கப்பட்டது. இந்த வரலாற்று நிகழ்ச்சியை அடித்தளமாக வைத்துத் தனக்கும் தன்னுடைய தலைவரான பெரியாருக்கும் உள்ள கருத்து வேறுபாட்டை 'இரும்பாரம்' எனும் சிறுகதை வாயிலாக வெளிப்படுத்தினார். அவ்வாறு அண்ணாவால் வரையப்பட்ட உருவகக்கதையான இரும்பாரம் உருவகத்திற்கே இலக்கணமாக அமைந்தது.

### *சுமார் சுப்பையா (காஞ்சி, 14.1.65)*

அண்ணாவின் நகைச்சுவைக் கதைகளுள் இது ஒன்று. சுமார் என்ற சொல்லை வைத்துக் கொண்டு வலைபின்னுகின்றார். சுமார் என்ற சொல் சுப்பையாவிற்கு வேலைபார்த்த இடத்தில் ஏற்பட்ட பழக்கம் அன்று; பயிற்சியாகும். முத்துசாமி என்ற முதலாளியிடம் வேலை பார்த்தபோது பசுமாடு 1¼ படி பால்கறக்குமென உறுதியாகக் கூறினார். ஆனால் அப்பசுவோ ஒருபடி கறப்பதே அரிதாக இருந்தது. 1¼ படி கறக்குமெனக் கூறினாயே? கறந்ததா என முதலாளி சுப்பையாவைக் கோபித்துக் கொண்டார். அதிலிருந்து சுமார் என்ற சொல் சுப்பையாவை ஆட்கொண்டது. அந்த முதலாளியிடமிருந்து வெளிவந்து வேலாயுதம் என்ற முதலாளியிடத்தில் சுப்பையா வேலைக்குச் சேர்ந்தார். சுமார் என்று கூறிவந்த வாடிக்கையான சொல் வேலாயுதத்திடம் வந்த பின்னும் மறையவில்லை. முதலாளிக்கு அச்சொல்லைக் கேட்டாலே கோபம் வந்தது. வேலாயுதம் சுப்பையாவிற்கு உறவினர். அதனால் சுப்பையாவின் மகனுக்குப் பத்து ஏக்கர் நிலமுள்ள செல்வந்தர் வீட்டில் ஏற்பாடு செய்தார். செல்வந்தர் சுப்பையாவிடம் உன் மகன் அழகாக இருப்பானா? என்று கேட்டார். அதற்குச் சுப்பையா சுமாராக இருப்பான் எனக் கூறினார். சுமார் என்ற சொல்லே நல்ல சம்பந்தத்தைக் கெடுத்தது. சுப்பையா வேலை பார்த்த கடையில் சிகப்பன் என்ற முரடன் கலகம் செய்து முதலாளியைத் தாக்கிவிட்டான்; கத்திரி கொண்டு கொலை செய்யவும் முயற்சித்தான். வழக்கு நடந்தது. சுப்பையா குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். முரடன் சிகப்பனுடைய வக்கீல் கழுகாசலம் சுப்பையாவைக் குறுக்கு விசாரணை செய்தார். கலகம் நடந்தபோது மணி என்ன என்றார். சுமார் பனிரெண்டு இருக்குமென்றார். உனக்குத் திட்ட வட்டமாகத் தெரியாது என வக்கீல் உறுதிப்படுத்தினார். வக்கீல் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் உறுதிபடச் சுப்பையா சாட்சி சொல்லாததால் சிகப்பன் வழக்கில் வெற்றி பெற்றான். அதனால் சுப்பையாவிற்கு வேலை

போயிற்று. ஆறுமாதத்திற்குப் பிறகு கார்மேகம் என்பவரிடம் சுப்பையா வேலைக்குச் சேர்ந்தார். சுப்பையா ஒவ்வாரு காரியத்திலும் முன்னேற்பாடாக நடக்கத் தொடங்கினார். எந்தக் காரியமும் காலதாமதமின்றி நடைபெறுவதில்லை. எதற்கெடுத்தாலும் தாமதம். அங்கும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். வேலை பார்க்கும் தொழிலாளிக்கு முன்யோசனையும் சுறுசுறுப்பும் வேண்டு மென்பதை வலியுறுத்துகிறார் அண்ணா.

**உபகாரி உலகநாதன் (காஞ்சி, 24.7.64)**

உபகாரி உலகநாதன் என்பது அவரது தந்தையார் பெயர். இவர் பெயர் சின்னக் குழந்தை. ஆனால் இவர் தந்தையாரின் பெயரையே வைத்துக் கொண்டார். யாருக்கும் கெடுதல் செய்ய வேண்டுமென்பது அவரது எண்ணமில்லை. ஆனாலும் அவர் செயல் கெடுதலில்தான் முடியும். அன்பு நாடக மன்றத்தினர் நாடகத்திற்குத் தலைமை தாங்க அழைத்தனர். மேடைக்குச் செல்லும் வழியில் சாக்கடைத் தண்ணீர் தேங்கியிருந்தது. இப்படியா நாற்றமடிப்பது என்று சினந்து கொண்டார். நாடகக் கொட்டகைக்கு நன்மை செய்வதாக எண்ணித்தான் கூறினார். அந்த இடத்திற்குச் சொந்தக்காரர் நாடக் கம்பெனியைக் காலி செய்யச் சொல்லிவிட்டார். மேனேசருக்குத் தரும சங்கடமாகப் போய் விட்டது. கம்பெனியைக் காலி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. நல்லது செய்யப்போய்க் கெடுதலாய் முடிந்தது. நாடகத்தில் நடித்தவர்களைப் பாராட்டும் போது ராஜபார்ட்டை விட்டுவிட்டுச் சோதிடம் சொன்ன குறத்தியைப் பாராட்டினார். ராஜபார்ட் போட்ட அக்கம்பெனியின் மேனேசர் ஆத்திரங் கொண்டார். அதனால் குறத்தி வேடம் போட்ட பெண்ணைக் கம்பெனியை விட்டு வெளியேற்றினார். அப்பெண் உபகாரி உலகநாதம் பிள்ளையிடம் சென்று அவரது பாராட்டினால் தனக்கு வேலை போய்விட்டதை வருத்தத்தோடு கூறி அழுதாள். உலக நாயகம் பிள்ளைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளது நடிப்பைப் பாராட்டப்போய் அவள் பிழைப்பிற்கே பாதகமாக முடிந்ததேயென நினைத்துக் கவலைப்பட்டார். உபகாரம் செய்வதாக எண்ணிப் பலரைத் துன்பத்திற்கு ஆளாக்கிய உள்ளத்தில் கள்ள மில்லாத மனிதரை அழகொழுகச் சிறுகதையாக வடித்துக் காட்டியுள்ளார் அண்ணா.

# சமுதாய விடுதலை

## புனைகதை

மேலை நாட்டினர் சிறுகதை, புதினம், கட்டுரை முதலானவற்றை Fiction எனும் ஆங்கிலச் சொல்லால் குறித்தனர். Fiction எனும் சொல்லைத் தமிழ் அறிஞர்கள் புனைகதைகள் என அழைத்தனர். அம்முறையில் அண்ணாவின் சிறுகதைகளும் குறும்புதினங்களும், புதினங்களும் அடங்கும். அது பற்றிய ஆய்வே அண்ணாவின் புனைக்கதைத் திறன்.

முற்போக்கு எண்ணங்கொண்ட அண்ணா, புதிய இலக்கிய வடிவமான புனைகதைகளைத் தம் கருத்துக்களைப் பரப்பும் கருவியாகக் கொண்டார். சோவியத் எழுத்தாளரான மார்க்கிம் கார்க்கி தாம் எழுத்தாளரான காரணத்தை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

> நான் எழுதத் தொடங்குவதற்கு முதல் காரணம் அமுக்கிக் கொள்கிற சாரமற்ற வாழ்க்கை என்னை நிர்ப்பந்திப்பது; இரண்டாவது காரணம் என்னுள் காட்சிக் கருத்துப் பிம்பங்கள் நிறைந்திருத்தலால் என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை.

இந்த உண்மை அண்ணாவுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது.

> ஒவ்வொரு காலக் கட்டத்திலும் புதுப்புதுப் பிரச்சினைகளும் தொல்லைகளும் துன்பங்களும் தீமைகளும் சமுதாயத்திற்கு ஏற்படுவதுண்டு. அவற்றை வெளிப்படுத்துவதும் அவற்றோடு பேனா முனையால் போராடுவதும் எழுத்தாளனின் கடமையாகும்.

என்பதனை அண்ணா முழுமையாக உணர்ந்து எழுத்துப்பணியில் ஈடுபட்டார். அண்ணா விரும்பிய சமூகச் சீர்திருத்தம் மேற்போக்கானதன்று. ஆழமானது. அதனால்தான் தம் புனைகதைகளில் சமுதாய அவலத்தை வெளிப்படுத்தினார். தமிழ்ச் சமுதாயத்தை அரித்துக் கொண்டிருக்கும் வேர்ப்புழுக்களான பெண்ணடிமைத்தனம், சமயப் பொய்மை, சாதிக் கொடுமை, மூடநம்பிக்கை, போலித்தனம், பொருளியல்

ஏற்றத்தாழ்வு ஆகிய கொடுமைகளைத் தம் புனைகதைகளில் எடுத்துக்காட்டி மக்களைச் சிந்திக்கத் தூண்டினார்.

## பெண் விடுதலை

அண்ணா காலத்தில் பெண்கள் எல்லா நிலையிலும் அடிமைப்படுத்தப்பட்டிருந்தனர்; பெண் கல்வி மறுக்கப்பட்டது. பெண்களின் துன்ப நிலையைக் கண்ட அண்ணா, 'ஏழை அழுத கண்ணீர் மட்டுமல்ல ஏந்திழையார் சிந்திடும் கண்ணீரும் நமது சமுதாயத்தை நாசமாக்கும். நச்சு மரமாக மாற்றும்' என எச்சரித்துள்ளார். அண்ணாவைச் சூழ்ந்துள்ள சமுதாயத்தில் பெண்கள் வரதட்சணைக் கொடுமையில் வாடினர்; பொருந்தா மணத்தால் பொருமினர்; செல்வம் படைத்தவர்களால் வஞ்சிக்கப் பட்டனர்; ஆடவர் பன் மனைவியரை மணந்து கொண்டனர்; விலைமகளிர் வேதனைப் பட்டனர்; கைம்பெண்டிர் கலக்க மடைந்தனர். இவற்றையெல்லாம் தம் புனைகதைகளில் வெளிப் படுத்தியதோடு அமையாது, அதற்கு மாற்று வழிகாணவும் புனைகதை வடிவத்தைப் பயன்படுத்தினர். 'பெண் விடுதலை' என்ற குறிக்கோளுக்காகத் தம் கதைகளைக் கருவியாக்கினார், அண்ணா.

### வரதட்சணைக் கொடுமை

பெண்ணைப் பெற்றவர்களைப் பெரிதும் கலங்கச் செய்வது இக்கொடுமை. எழில் நிறைந்திருந்தும் ஏழ்மை காரணமாக உரிய காலத்தில் திருமணம் நடைபெறாது பலபெண்கள் அல்லலுறுகின்றனர். இன்பமான இல்லற வாழ்விற்குத் துன்பமாக அமைந்திருப்பது இந்தச் செயல். மணமகன் மருத்துவரானால், பொறியாளரானால், அரசு அலுவலகத்தில் பணிபுரிபவராக இருந்தால் இவ்வளவு கையூட்டாகத் தரவேண்டுமென்ற அவலநிலை உள்ளது. இக் கொடுமையைக் கண்டிக்காத அறவோர் இல்லை. ஆயினும் நெல்லினும் ஊட்டமாக இக்களை வளர்ந்துள்ளது. நாடகச் செல்வர் டிகே. சண்முகம் ஈரோட்டில் நடத்திய 'குமாஸ்தாவின் மகள்' என்ற நாடகத்தை அண்ணா பார்த்தார். அந்நாடகத்தின் முடிவு அவருக்கு மனநிறைவைத் தரவில்லை. எனவே குமாஸ் தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள் என்ற தலைப்பில் ஒரு குறும் புதினத்தைத் தீட்டினார். அதில் ஐம்பது வயது நிறைந்த கணபதி சாஸ்திரிக்குப் பதினாறு வயது நிறைந்த எழில் நங்கை காந்தா நான்காந் தாரமாக வாழ்க்கைப் படுகிறாள். வரதட்சணை கொடுக்க முடியாத காரணத்தால் வயோதிகரை மணந்த ஏழைக் குமாஸ்தாவின் மகள் காந்தாவின் உள்ளக் குமுறலை அண்ணா இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்;

> என்னை மனைவியாகப் பெற்ற மகானுபாவருக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். நரைமயிர், நல்ல கறுப்புச் சாயம் பூசிக் கொண்டிருந்தார்; பல் பல போய்விட்டன. பொய்ப்பற்கள் கட்டிக் கொண்டிருந்தார்; கன்னங்களில் குழி; கை கால்களில் படை; அதனை மறைக்கச் சந்தனம் பூசிக் கொண்டிருந்தார். அதன் மீது பளப்பளப்பான ஜரிகைப் போர்வைகள் அவருக்கு. இந்த லட்சணத்தில் காசநோய். எனக்கு முன்பு அவருக்குப் படுக்கையறைப் பதுமையாக இருந்துவிட்டுப் பரந்தாமன் திருவடி நிழலை அடைந்த பத்தினிமார் மூவர். நான் நான்காந்தாரம் அவருக்கு.

வரதட்சணையின் கொடுமையால் வேதனைப்படும் ஏழை காந்தாவின் உள்ளக் குமுறலை அண்ணா இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

மணமகனின் தோற்றம் எப்படிப்பட்டது என்பதனை அண்ணா எடுத்துரைத்து அவர்களுக்கு இன்னும் திருமணம் தேவைப்படும் கொடுமையை எள்ளல் சுவையோடு எடுத்துரைத்துள்ளார்.

> அவரிடம் பணமிருந்தது. ஏழ்மையில் நெளிந்து கொண்டு நானிருந்தேன். கிடாப்போல் வளர்ந்தவளை எவனுக்காவது பிடித்துக் கட்டி வைக்காமலிருக்கலாமோ என்று கேட்க ஊரிலே பல பித்தர்கள் இருந்தனர். எத்தகைய பொருத்தமும் வரதட்சணை தந்தால் சரியாக இருக்கிறதெனக் கூறும் சோதிடம் சிலர் இருந்தனர். உலகிலே எது இல்லை? பளபளப்பான தோலைப் போர்த்துக் கொண்டிருக்கும் பாம்பு இல்லையா? எப்படியோ ஒன்று என் கழுத்தில் தாலி ஏறிற்று.

## பொருந்தாமணம்

திருமணத்திற்கு மனப்பொறுத்தமே சாலச் சிறந்தது ஆயினும் அதனை மனதில் கொள்பவர் அரிதாகவே உள்ளனர். அண்ணாவின் புனைகதைகளில் பெரும்பாலானவை பொருந்தா மணத்தைக் கூறுவனவாகவே உள்ளன. அறுபது வயது நிறைந்த மாரியப்ப பிள்ளை பதினாறு வயது நிறைந்த சாரதாவை மணந்து கொள்கிறார். வயோதிகரைப் பணத்திற்காக மணந்து கொண்ட சாரதாவின் எழிலை அண்ணா 'கபோதிபுரக் காதல்' என்ற குறும் புதினத்தில் குறித்துக் காட்டிச் சாடுகிறார். 'மாரியப்ப

பிள்ளையோ பணக்காரர். எனவே அந்த ராணி சாரதா சமூகத்தில் வளர்த்து விடப்பட்ட பழக்கத்தில் தனது அழகையும் இளமையையும் பலிகொடுக்கப் போகிறாள். இவ்விதம் அழிந்த 'அழகுகள் எவ்வளவு', 'தேய்ந்த இளமை எத்துணை', சந்தான கிருஷ்ண ஐயருக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்ட மோகனாவை 'வாலிப விருந்து' என்ற சிறுகதையில் சித்திரிக்கிறார், அண்ணா.

> இளமை பெருகும் எழில் மணமும் வீசிட அவள் உலவினாள். இவர் காலத்தால் கசக்கப்பட்டு முதுமையெனும் முற்றத்திலே கிடந்தார். ஐயருக்கு மட்டும் அறுபது வேலி நிலமும் அரை இலட்சம் ரொக்கமும் இல்லாவிடில் இந்தப் பேத்தி பெண்டாட்டி ஆகியிருக்க முடியுமா?

என்ற கேள்வியை எழுப்புகிறார்.

மாகாளிப்படி சமீன்தாருக்கும் மதுர வல்லிக்கும் மணம் நடந்தது. சமீன்தார் மதுரவல்லியை இரண்டாந்தாரமாக மணந்து கொண்டார். அவர்களுக்குள் உள்ள வயதுப் பொருத்தத்தைக் 'காமக் குரங்கு' என்ற சிறுகதையில் அண்ணா குறித்துக் காட்டுகின்றார்.

> ஐம்பது வயதுக் கிழவருக்கு அந்த இருபது ஆண்டு இளமங்கையைப் பெண்டாட்டியாக்கினதைப் பற்றிப் பேசமுடியுமா? பெரிய இடமாயிற்றே, நமக்கேன் பொல்லாப்பு என்று வாயை மூடிக் கொண்டனர்.

திருமணம் நடந்து விடுவதால் மட்டும் வாழ்வு நிறைவு பெறுவதில்லை. வயதுப் பொருத்தமும் வேண்டும் என்பதனைப் பொருந்தாத் திருமணத்தைக் கேலி செய்வதன் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். பொருந்தாமணம் மகளிரின் ஒழுக்கக் கேட்டிற்குக் காரணமாக இருப்பதனைக் 'காமக்குரங்கு', 'வாலிப விருந்து', 'சுடுமூஞ்சி', 'கபோதிபுரக்காதல் முதலான கதைகளில் காட்டியுள்ளார். பொருந்தாமணம் இளம் பெண்களை விதவையாக்கிவிடும் அவலத்தையும் வெளிப்படுத்த அண்ணா தவறவில்லை. 'கன்னி விதவையான கதை' அதற்குச் சான்றாக விளங்குகிறது. பொருந்தா மணத்தை ஓர் ஊரில் எதிர்த்துக் கேட்டனர். அதனை அண்ணா ஒரு கட்டுரையில் எடுத்துக் காட்டி வரவேற்றுள்ளார்.

> கேட்டனர் ஒரு ஊரில். கேட்டது மட்டுமல்ல. குறுக்கே நின்று இத்தகைய கூடா மணத்தைத்

> தடுத்துவிட்டனர். தடுத்ததோடு நிற்கவில்லை. மணமகளை அதே நேரத்தில் தக்க மணமகனுக்கு மணமுடித்துக் கொடுத்தனர். இத்தகைய சீரிய செயல் புரிந்த சிலர்களை நாம் பாராட்டுகிறோம் (விடுதலை, 3-4-40) .

**ஆண் ஆதிக்கம்**

பெண்கள் கெடுவதற்கு ஆண்களே முதன்மையான காரணமென 'ரங்கோன் ராதா'விலும், 'பார்வதி பி.ஏ.'விலும், 'கபோதிபுரக் காதலி'லும் தெளிவுறுத்தியுள்ளார். தருமலிங்க முதலியாரால் வீட்டை விட்டு வெளியேற்றப் பட்ட ரங்கம் சூழ்நிலையால் விபச்சாரியாக்கப் படுவதை 'ரங்கோன் ராதா'வில் படம் பிடித்துக் காட்டுகிறார். ஒரு பெண்ணின் விபச்சாரம் சாத்தியமாவது ஓர் ஆணினால் தானே எனச் சீற்றத்தோடு வினா எழுப்புகிறார். ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்களின் கற்பின்மீது கவலை பிறக்கும்படி ஆடவர் யாவருக்குமே அறிவு இன்ஜெக்சன் கொடுக்க வேண்டுமெனப் 'பார்வதி பி.ஏ.'வில் பார்வதியின் கூற்றாக வெளிப்படுத்தியுள்ளார்.

பெண்கள் தங்களைத் தாங்களே விற்றுக் கொண்டாலன்றிப் பிழைக்க வழியில்லையா? எனப் 'பிரார்த்தனை', 'வீங்கிய உதடு', 'ரங்கோன் ராதா', 'குமஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்', 'அவள் விபச்சாரியானாள்', 'குற்றவாளி யார்?', ஆகிய கதைகளில் வினா எழுப்புகிறார். அதற்கான காரணத்தையும் ஒரு கதை மாந்தர் வாயிலாகக் கூறுகிறார். 'ஆண்களிடம் நீதி வழங்கும் உரிமை இருப்பதுதான்; குற்றவாளிக்கே நீதிபதி பதவி. ஆண்கள் கையில் இத்தகைய பொறுப்புகள் இருக்கும் வரை பெண்ணினம் எப்படி விடுதலை பெறமுடியும்? பெண்கள் நெடுங்காலமாக ஆண்களின் கொடுமைக்குப் பலியாவதைக் கண்டு இந்த உலகத்தில் உள்ள யாரும் கவலைப்படாததை,

> நாய் பூனை இவைகளிடம் கூட இரக்கம் காட்டும் ஆடவர்களை நான் பார்த்திருக்கின்றேன். அப்படிப் பட்ட கருணாகரர்கள் கூட மனைவியை அடித்துத் துன்புறுத்தும் பொழுது யாரும் குறுக்கிட்டுத் தடுக்க மாட்டார்கள்.

என்று ரங்கம் வாயிலாக வெளிப்படுத்துகிறார். நிலவைப் பெண்ணோடு ஒப்பிடும் தன் தாய் ரங்கத்திடம் ராதா, நிலவுக்கு ஒளி தரும் சூரியன் இயற்கை நியதியின்படி அளமும் காலமும் அறிந்து ஒளி தருகிறான். பெண்ணுக்கு வாழ்வளிக்கும் ஆடவனோ

எந்த நீதிக்கும் கட்டுப்பட்டவனல்லன். அவன் இஷ்டம். இது மாறவேண்டுமானால் பெண்கள் தங்கள் வாழ்வைத் தாங்களே அமைத்துக் கொள்ளக் கூடிய திறமை, வசதி உரிமை ஏற்பட வேண்டும் எனக் கூறுகிறாள். பெண்களின் உயர்வுக்குப் பெண்களே போராட வேண்டுமேயன்றி ஆண்களின் கருணையை எதிர்பார்ப்பது அறியாமையென்பது அண்ணாவின் கருத்தாகும்.

**பன்மனைவியர் மணம்**

ஆண்கள் சமுதாயத்தில் பெற்றுள்ள ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது பன்மனைவியர் மணமாகும். கணவனை இழந்த இளம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதற்குச் சமுதாயம் ஆதரவு காட்டவில்லை. ஆனால் மனைவியை உயிரோடு பெற்றிருப்பவர்களும், மனைவியை இழந்தவர்களும் எத்தனை முறை வேண்டுமானாலும் எத்தனை பெண்களை வேண்டு மானாலும் திருமணம் புரிந்து கொள்வதற்குத் தடை இல்லை. இதனைத் தீமையென்றும் சமுதாயம் எண்ணவில்லை. ஆண்களுக்குத் துணையாகப் புராண இதிகாசங்களும் வழிவழியாக இருந்து வலிவூட்டுகின்றன.

மனைவி இருக்கும்போதே ஆண்கள் பல பெண்களை மணந்து கொள்கின்றனர். 'வாலிப விருந்தில்' வரும் சந்தான கிருஷ்ணன் தன்னுடைய முதல் மனைவி குழந்தை பெறும் வாய்ப்பில்லை என்பதனால் அவளை அவள் தாய் வீட்டிற்கு அனுப்பி விடுகிறான். மோகனா என்ற இளம் பெண்ணை மணந்து கொள்கிறான். 'ரங்கோன் ராதா'வில் வரும் தருமலிங்க முதலியார் மிட்டா கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தங்கத்தை இரண்டாவது மனைவியாக மணமுடித்துக் கொள்கிறார். ரங்கம் இத் திருமணத்தைத் தடைசெய்யத் தன்னால் முடிந்தவரை போராடிப் பார்த்தாள்; வெற்றிபெற முடியவில்லை.

> ஆண்களின் மனம் வானம் போன்றதுதான். அதிலே பல நட்சத்திரங்கள் இருந்து தீரும். ஒளிவிடும் மதியிருந்தாலும் மின்மினியும் இருக்கும். கருமேகமும் இருக்கத்தான் செய்யும். எனவே ரங்கம் இருக்கும்போது தங்கம் ஏன்? என்று கேட்டுப் பயன் இல்லை.

எனப் புலம்பினாள் ரங்கம். வானத்தில் விண்மீன்கள் இருப்பதுபோல், கருமேகம் இருப்பதுபோல், ஆடவர் வாழ்வில் ஆரணங்குகள் பலர் இருப்பதில் வியப்பில்லை என்று ரங்கம் மூலமாக அண்ணா உலகப் போக்கை நையாண்டி செய்கிறார். ஆண்களுக்கு எத்தனை வயதாகியிருந்தாலும் எத்தனை

மனைவியை அவர்கள் மணந்திருந்தாலும், உடம்பெல்லாம் நோய் நிறைந்திருந்தாலும் ஆண்கள் திருமணம் செய்து கொள்வதற்குத் தடையில்லை. பலரை மணந்து கொள்ளும் ஆண்மகனின் கொடுமையைக் கண்டு சமுதாயம் வாய் மூடி மௌனியாக இருக்கிறதேயென அண்ணா வேதனைப் படுகிறார். 'ஆண் மகனுக்கென்ன-எத்தனை முறை வேண்டுமாயினும் மணம் செய்து கொள்ளலாம். காசநோய் இருக்கலாம். அதற்காக வேண்டி மணம் செய்து கொள்ளா திருப்பானா? ஊரார் உனக்குக் காசம் இருக்கிறது! மணம் ஏன்? என்றா கேட்பர். இல்லை காசநோயால் அவதியுறும் இவனுக்குக் காலமறிந்து மருந்துதர ஒரு மங்கை நல்லாள் தேவை என்றுதான் கூறுவர்.' இக்கூற்றில் அண்ணாவின் வேதனைக் குரல் வெளிப்படுகிறது. பன்மனைவியர் மணத்தைத் தடுக்காமல் சமுதாயம் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு வருந்தினர். அதற்கு வழி காணத் துடித்தபோது சென்னை மாகாண முதலமைச்சராக விருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் இருதாரத் தடைச் சட்ட மசோதா கொண்டு வந்தபோது அதனை ஆதரித்து 'வள்ளி நாயகியின் கோபம்' என்ற சிறுகதையை வரைந்தார். அன்பான இல்லற வாழ்வுக்கு ஒருவனுக்கு ஒருத்தியென்பதே சீரிய நெறியெனப் போற்றினார்.

### விலைமகளிர் அவலம்

சமயமும் நிலவுடைமையும் முதலாளித்துவமும் சுவைத்துச் சுவைத்துச் சுரண்டிய கொடுமையால் உருவானவர்களே விலைமகளிராவர். அவர்களின் அவலத்தை அண்ணா தம்முடைய தொடக்ககாலக் கதைகளில் வெளிப் படுத்தியுள்ளார். பெண்ணினத்தினை இழிவு படுத்தும். விபச்சாரத்தை ஒழிக்கும் சட்டம் வந்தபோது அண்ணா எல்லையில்லாத மகிழ்ச்சி யடைந்தார். வழிவழிவந்த பிறப்பால் விலைமகளாகப் பிறந்தவர்களையும், தனிமனிதச் சமுதாயக் கொடுமைகளால் விலை மகளிரானவர்களையும் ஆண் துணையில்லாமல் வறுமை, பொருளாதார மின்மை காரணமாக வாழவழியற்ற தன்னை ஆதரிக்க எவருமில்லாத நிலையிலும் விலைமகளிரானவர் களையும், இளவயதில் விதவையாகி மறுவாழ்வு பெறாமல் ஆண்களின் வஞ்சகத்தால் வழுக்கி விழுந்தவர்களையும் தம்முடைய கதைகளிலே படைத்துள்ளார். சமீன்தாரர்கள், செல்வர்கள் பற்றிய கதைகளிலெல்லாம் விலைமகளிர் இடம் பெற்றுள்ளனர். நிலவுடைமைச் சமுதாயத்தில் இத்தீமை தவிர்க்க முடியாததாகவே இருந்தது. சமூகக் கொடுமையால் பெண்கள் விபச்சாரத்தை விரும்பி ஏற்பதை 'என் வாழ்வு', 'கோமளத்தின் கோபம்' முதலிய கதைகளில் காட்டியுள்ளார். ஆண்களின்

கொடுமையால் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதை ரங்கோன் ராதாவில் ரங்கம் இவ்வாறு கூறுகிறாள்.

> பெண் விபச்சாரியாகி விட்டாள் என்ற பேச்சைக் கேட்ட மாத்திரத்திலே ஆண்கள் ஆளுக்கொரு கல்லைக் கையிலே தூக்கிக் கொள்கிறார்கள். அந்தப் பெண்ணின் வீட்டு மக்கள், உற்றார் உறவினர் இவர்கள் மட்டுமா, வழியிலே வருகிறவன் போகிறவன் கூட அல்லவா வசைபுராணம்' பாடுவான்.

தைரியமாக எல்லோரும் சேர்ந்து அந்தப் பெண்ணின் உயிரை வாங்குவார்களே தவிர அவர்களுடைய விபசாரம் சாத்தியமானது ஒரு ஆணினால்தானே என்று யோசிக்க மாட்டார்கள். விபச்சாரத் தடைச்சட்டம் சட்டமன்றதில் கொண்டு வரப்பட்டபோது, சட்டசபையில் மேட்டுக் குடியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர் என்ற குறிப்பு சட்டமன்றப் பதிவேட்டில் இருப்பதை மறுப்பதற்கில்லை. விபச்சாரத் தடைச் சட்டம் தமிழகப் பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை உருவாக்கியதென்பதில் ஐயமில்லை.

### கைம்பெண்டிர் நிலை

சமுதாயத்தில் பெண்களின் நிலை வருந்தத்தக்கதாகவே இருந்தது. கணவனை இழந்த மகளிர் நெருப்பில் மாய்ந்து உயிர் துறந்தனர் என்பதனைப் புறநானூறு கூறுகின்றது. இன்றும் இராசஸ்தான் போன்ற மாநிலங்களில் கணவனை இழந்த மகளிர் தீயில் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். கணவனை இழந்த மகளிர் உடன் கட்டை ஏறும் பழக்கம் வடநாட்டில் இருப்பதை ஏடுகளில் காணலாம். கைம்பெண்களுக்கு மறுவாழ்வு தரவேண்டுமென ஆரிய சமாஜம் போன்ற அமைப்புகளும், இசுவர சந்திர வித்யா சாகர், இராசாராம் மோகன்ராய் போன்ற சீர்திருத்த வாதிகளும் இடையறாது போராடினர். இந்து சமயத்தில் இப்பழக்கம் நெடுங்காலமாக இருந்து வந்திருப்பதால் மக்களிடையே எளிதில் மாற்றங்காண முடியவில்லை.

1856ஆம் ஆண்டு விதவைகளின் மறுமணச் சீர்திருத்தச் சட்டம் (Widow's Remarriage Reform Act) உருவாகியது. தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம் மகளிர் விடுதலைக்காக அயராது போராடியது. 1931ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்ற விருதுநகர் சுயமரியாதை இரண்டாவது மாநாட்டில் விதவா விவாகத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெரியார் ஈ.வெ.ரா.

> உலகில் மனித வர்க்கத்தினருக்குள் இருக்கும் அடிமைத் தன்மை ஒழிய வேண்டுமானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் அழிய வேண்டும். அது அழிந்த நிலையே சமத்துவம் சுதந்திரம் எனும் முளை முளைக்கும் இடமாகும். இதற்கு விதவைகளுக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை ஏற்படுத்துவதே முதல் காரியமாகும்.

என்றார். கைம்பெண் துயர் துடைக்க யாரும் முன் வராத நிலையில் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தபலர் விருதுநகர் மாநாட்டிற்குப் பின் விதவைகளை மணம் புரிந்தனர். செட்டிநாட்டைச் சார்ந்த சொ. முருகப்பா என்ற சுயமரியாதைக் காரர் விதவையை மணந்து கொண்டார். தமிழிலக்கியத்திலும் மாதவையாவின் முத்து மீனாட்சி தொடங்கி, பாரதியின் சந்திரிகை வரை விதவை மணம் குறித்து வற்புறுத்தி வந்தனர். பாரதியாரின் தலைமாணவரான வ.ரா.வும் 'சுந்தரி' (1917) வாயிலாக விதவை மணத்தை மிகுந்த ஆற்றலோடு வெளிப் படுத்தினார்.

'சுந்தரி' என்ற புதினத்தில் விதவை மணத்தை வ.ரா. வலியுறுத்தியதாலேயே அண்ணா அவரை 'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' எனப் போற்றினார். விதவைகளுக்கு மறுமணம் வேண்டுமென்ற சீர்திருத்த எண்ணம் அவர் மனதில் பதிந்ததால் தம்முடைய கதைகளில் விதவைகளின் மறுமணத்தை வரவேற்று எழுதினார். எந்த இனம் சாத்திரத்தையும் சம்பிரதாயத்தையும் காட்டி விதவை மணத்தைத் தடுத்ததோ அந்த இனத்தின் வாழ்விலிருந்தே விதவைகள் மறுமணத்தைத் தொடங்கிக் கதைகளை வரைந்தார். இதற்கு எடுத்துக்காட்டாக முன்நிற்பவை. 'பேரன் பெங்களூரில்' என்ற சிறுகதையும், 'பாமாவிஜயம்' என்ற சிறுகதையுமாகும்.

வைதீகர் புண்ணியகோடி கனபாடிகள் மகள் இளம் விதவையான ஏமலதாவுக்கும் பள்ளித் தமிழாசிரியர் கனகசுந்தரத்திற்கும் காதல் ஏற்பட்டது. பள்ளித் தமிழாசிரியர் கனக சுந்தரம் தம்முடைய திருமணத்திற்குக் கனபாடிகளையே மந்திரம் ஓதி மணத்தை நடத்தி வைக்க வேண்டினார். அவரும் ஒப்புக் கொண்டார். கனபாடிகள் மணவறையிலிருந்து மந்திரங்களை ஓதினார். மணமகன், மணமகள் கழுத்தில் தாலியைக் கட்டினான். மணப் பெண் தன் முகத்தை மறைத்திருந்த சேலையை நீக்கி விட்டு 'அப்பா நமஸ்கரிக்கிறேன்' என்றாள். 'யார் ஏமுவா?' என்று புரோகிதர் அலறித்துடித்து மயக்கமுற்றார். புரோகிதரின் உள்ளக் குமுறலை அண்ணா-

> பாதகீ! கல்லைக் போட்டாயே தலையிலே; உன்னைப்போல விதவைகள் இப்படியா காரியம் செய்கின்றனர். இலைமறை காயாக ஏதோ நடப்பதுண்டு. இப்படி விவாகமா? அதற்கு நான் புரோகிதமா? என்ன துணிவு? எவ்வளவு அக்கிரமம்? என் மதிப்பு என்ன ஆவது? மதம் என்ன ஆவது? பிழைப்பும் போச்சேடி பேதையே.

எனப் புலம்புவதாகக் கூறியுள்ளார். ஏமலதா கணவனுடன் பெங்களூர் சென்று குடியேறினாள். அப்பாவுக்கு அடிக்கடி கடிதம் வரைந்தாள். பேரன் பிறந்த செய்தி கேட்டுக் கனபாடிகள் பூரித்துப்போனார்.

ஏமலதாவின் திருமணத்தின்போது சீற்றம் கொண்ட கனபாடிகள் பேரன் பெங்களூரில் பிறந்துள்ளான் என்ற செய்தி கேட்டு மகிழ்ச்சியுற்றார். இதனைப் பேரன் பெங்களூரில் என்ற கதையில் கூறியுள்ளார். 'பாமா விஜயம்' என்ற சிறுகதையில் சந்தைப் பேட்டைச் சமீன்தாருக்குப் பாமாவை மணமுடிக்க அவ்வூர் புரோகிதர் சுப்பையர் திட்டம் தீட்டினார். சுப்பையரின் விதவை மகள் கமலா அவ்வூர்க் கோவில் நாதசுர வித்துவான் சுப்பிரமணிய பிள்ளையைக் காதலித்தாள். சீர்திருத்தத் திருமணத்தைப் புரிந்து கொண்டாள். இது கண்ட புரோகிதர் மனம் பதறினார். '1938-40 ஒரு வசீகர வரலாறு' என்ற சிறுகதையில் இரண்டாண்டுகளுக்கு முன் கடையில் சேர்ந்த கண்ணுச்சாமிக்கும் கடை முதலாளி சொக்கலிங்கம் செட்டியாரின் மகள் கல்யாணிக்கும் திருமணம் நடைபெற்றது. கண்ணுச்சாமியின் திருமணத்தைப் பெற்றோர் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். இரண்டாண்டுகளுக்குப்பின் இளம் விதவை கல்யாணி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். இவ்வாறு அண்ணா விதவை மணத்தை வரவேற்று எழுதியுள்ளார். கபோதிபுரக் காதலில் வரும் விதவை சாரதா கண்ணிழந்த கபோதி பரந்தாமனை மணந்துகொண்டாள். விதவைக்குத் திருமணமா எனக் கேட்டவர்களைப் பார்த்துக் கதையின் இறுதியில் அண்ணா இவ்வாறு பேசுகிறார்.

> விதவை சாரதாவுக்கும் விழியிழந்த பரந்தாமனுக்கும் மணம் நடந்தேறியது. வீதிகளில் வீணர்கள் வம்பு பேசினர். சமையற் கட்டுகளில் பெண்கள் சகலமும் தெரிந்தவர்கள் போலக் கேலி செய்தனர். வைதிகர்கள் வந்தது விபரீதம் எனக் கைகளைப் பிசைந்தனர். உற்றார் உறவினர் உறுமினர். ஆனால் கபோதிபுரக் காதலை இனியாராலும் தடுக்க

முடியாது. அவர்கள் இன்பபுரி சென்று இன்பத்துடன் வாழ்ந்து வரலாயினர்.

விதவைகளின் துயர் துடைக்க அவர்களுக்கு மறுமணம் செய்யப்படவேண்டுமென்பதனை வலியுறுத்திப் பல கதைகளை அண்ணா வரைந்துள்ளார்.

## கலப்பு மணம்

சமுதாயத்தில் வேரூன்றியுள்ள சாதியும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் மறையக் கலப்பு மணம் தேவை என்பதனை அண்ணா தம் 'குமரிக்கோட்டம்' என்ற குறும் புதினத்தில் படம் பிடித்துக்காட்டியுள்ளார். குழந்தை வேலுச் செட்டியார் தன் மகன் பழநி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கிறித்தவப் பெண்ணை மணந்து கொண்டதை எதிர்த்தார். அவரே குமரக் கோட்டம் கட்டியபோது உப்பிரசாதிப் பெண்ணின் புன்னகையில் சாதி சம்பிரதாயங்களைப் பறக்கவிட்டார். அதனால் குழந்தைவேலுச் செட்டியார் உப்பிரசாதியைச் சார்ந்த கீழ்சாதிப்பெண்ணை மணக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்; அப்பெண்ணை மணந்தார். தன் மகன் தாழ்த்தப்பட்ட பெண்ணை மணந்தபோது வீட்டை விட்டுத் துரத்திய குழந்தை வேலுச் செட்டியார் இப்பொழுது தன் மகனை உடன் அழைத்து ஒரே வீட்டில் வாழ்கிறார். காதல் மலர்கிறபோது மற்ற பாகுபாடுகளெல்லாம் மறைந்துவிடுவதை எடுத்துக் காட்டுகின்றார். 'தங்கத்தின் காதலனி'ல் சாதி உணர்வு காரணமாகத் தங்கத்தை மணந்துகொள்ள மறுத்த பொன்னம்பலம் தன் மகளின் காதலை வரவேற்றுக் கலப்பு மணத்தை நடத்தி வைக்கிறார். 'பாமா விஜயத்தில்' பாமா மணம் விரும்பிய காதலனைச் சாதி கடந்து கலப்பு மணம் செய்து கொள்கிறாள். 'சிங்களச் சீமாட்டி'யில் நாயுடு வகுப்பைச் சேர்ந்த மலர்க்கொடியைச் சைவ வேளாளர் குடியில் பிறந்த சங்கரன் மணந்து கொள்கிறான். உண்மைக் காதலுக்கு இடையூறாகச் சாதி வெறியும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் இருக்கக் கூடியதென்பதைப் பார்வதி-குமார் திருமணத்தைப் 'பார்வதி பி.ஏ.'வில் கூறியுள்ளார். 'ரங்கோன் ராதா'வில் பரந்தாமன் ராதா திருமணம் கலப்பு மணமாகவே சிறக்கிறது. 'தசாவதாரம்' என்ற கதையில் தேசபக்தன் பத்திரிகை ஆசிரியர் தேவர், பிராமணக் குலத்தில் பிறந்த சூடாவைக் காதலித்து மணந்து கொள்கிறார். தன் தங்கை வேறு குலத்தில் பிறந்தவரை மணந்ததால் ஆத்திரங் கொண்ட கல்யாண சுந்தர சாஸ்திரிகள் தேவரைக் கோபிநாதர் கோயில் கொள்ளை வழக்கில் ஈடுபடுத்திக் கைதுசெய்யுமாறு செய்து விடுகிறார். தேவர் கைது செய்யப்பட்டபின், சூடா

அவரைச் சிறையிலிருந்து வெளியில் கொண்டு வரப் பெருமுயற்சி செய்கிறாள். அவளது முயற்சிகளுக்கெல்லாம் அவளது அண்ணன் இடையூறாக இருந்தான். முடிவுறாத இக்கதையில் பார்ப்பனர்களின் கலப்பு மணத்திற்கு எதிராகச் செயல்படுவதை விளக்கிச் செல்கிறார்.

பெண் யாரிடம் அன்பைச் செலுத்துகிறாளோ அவரோடு இணைந்து வாழ்வதில் தான் மகிழ்ச்சியும் பேரின்பமும் காண்கின்றனள் என்ற பேருண்மையை வலியுறுத்தவே இக்கதைகளை எழுதியுள்ளார். ஆண், பெண் காதலுக்குத் தடையாய் உள்ள இந்தியச் சமூகத்தின் நால் வருண வேறு பாட்டையும் பொருளாதாரச் சீர் கேட்டையும் அழித்தொழித்துப் பொய்யான கட்டுப்பாடுகளைத் தகர்க்கவே அண்ணாவின் உணர்வு முன்னால் நின்றது. இருமனங்கள் இணைகின்றபோது பொய்யான கட்டுப்பாடுகள் அகன்று கலப்பு மணங்கள் பெருகுமென எழுதினார். ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தவுடன், எழுதிய வண்ணம் பேசிய வண்ணம் கலப்பு மணத்தைச் சட்ட வடிவமாக்கி ஏற்றம் அளித்தார். கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குப் பொற் பதக்கம் அளித்தார். அரசு அலுவலகங்களில் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கினார். பின்வரும் தலைமுறை கலப்புமணம் செய்து கொள்ள விழிப்புணர்ச்சியை உருவாக்கினர்.

## சொத்துரிமை

பெண் அடிமைப் பட்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம், அவளுக்குச் சொத்துரிமை இல்லாததேயாகும். அண்ணா பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, செங்கற்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொண்டார். முதல் சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கு ஆண்களைப் போலவே சமமாகச் சொத்து உரிமைகளும் வாரிசுப்பாத்தியதைகளும் கொடுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெரியார் ஈ.வெ.ரா.

> பெண் அடிமையென்பதற்கு உரிய காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே மிகவும் முக்கியமான காரணம் என்பது நமது அபிப்பிராயம். ஆதலால் பெண்கள் தாராள மாகவும் துணிவுடனும் முன் வந்து சொத் துரிமைக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமான காரியமுமாகும்.

எனக் கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கதாகும். செங்கற்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானமும் பெரியாரின் துணிவுரையும் அண்ணாவின் எண்ணத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை தேவையென்ற கருத்தை ஆழமாகப் பதித்தன. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய சட்டசபையில் மசோதா கொண்டுவந்தனர்.

1943இல் மத்திய சட்டசபையில் பெண்களுக்குச் சொத்துரிமை தரப்பட வேண்டுமென்று மசோதா வந்தபோது இலட்சுமணபுரி வைதீகர்கள் அம் மசோதாவைக் கடுமையாக எதிர்த்தனர். அவர்களது மனைவியர் பெண்களுக்குச் சொத்துரிமை உண்டென்ற மசோதாவை நிறைவேற்ற வேண்டி உண்ணா விரதம் இருந்தனர். அதனை எதிர்த்து ஆண்கள் உண்ணாவிரதம் இருந்த வேடிக்கையைக் கருத்துரையாக்கிக் கதை வடிவில் ‘உண்ணா விரதம் ஒரு தண்டனை’ என்ற தலைப்பிட்டுச் சிறுகதையாகத் தந்துள்ளார். இக்கதை மூலமாகப் பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென்பதை வலியுறுத்தினார். ஆண் களோடு சமமாக வைத்து எண்ணப்படும் நிலையில் பெண்களின் முன்னேற்றம் அமைய வேண்டுமென வேட்கை கொண்டார். பெண் தன்னைப் பிணித்துக் கொண்டுள்ள தடைகள் அனைத் தினின்றும் விடுதலைபெற வேண்டுமென ஏறத்தாழ அறுபது விழுக்காட்டுக் கதைகளில் வலியுறுத்திள்ளார். மாந்தர் இனம் இரண்டு சிறகுகளையுடைய பறவை போன்றது. ஒன்று ஆண்; மற்றொன்று பெண். இரண்டு சிறகுகளும் பலம் பொருந்திய தாக அமைந்து பொதுமை ஆற்றலால் இயக்கப்பட்டால் பறவை வானத்தை நோக்கி இயல்பாகப் பறக்க முடியுமென்பது அண்ணாவின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

## சமய மறுப்பு

பண்டைத் தமிழரிடையே சமயம் ஒரு அமைப்பாக உருவாகவில்லை; வாழ்வின் ஒரு கூறாகவே இருந்தது. கடவுள் வழிபாடு இருந்தது; ஆனால் அதன் பெயரால் போரோ பூசலோ விளைந்ததில்லை. சங்க மருவிய காலத்தில் சமயங்களால் நிகழ்ந்த மோதல்களைக் காணமுடிகிறது. புறச் சமயங்களான சமண பௌத்தம் ஆகியவற்றை அகச் சமயங்களான சைவமும் வைணவமும் எதிர்த்தன. சமண சைவப் போராட்டங்கள் உருவாயின; அதனால் மக்கள் பிளவு பட்டனர். அழிவுகள் நேர்ந்தன. விதியும் மூடநம்பிக்கையும் மக்களிடையே பரவின. தன்னைப் பற்றி நினைத்துப்பார்க்காத அளவுக்குக் குருட்டு நம்பிக்கைகள் தோன்றின. ஆரிய மதமும் அதன் கொள்கைகளும்

தமிழகத்தில் நுழைந்து மக்களை அடிமைப்படுத்தின; சமயம் மக்களை ஏமாற்றிச் சுரண்டிப் பிழைக்கும் கருவியாக அமைந்தது.

> குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணைகட்கும் ஐந்து கடவுளர் வழிபாட்டுக்குரியவர்களாக இருந்தனர். சேயோன் மாயோன் வேந்தன் வருணன் கொற்றவை ஆகிய கடவுளரைப் பற்றிய எண்ணற்ற புராணக் கதைகள் சிலப்பதிகாரக் காலத்துக்குள் தமிழகத்தில் நுழைந்து விட்டன. தமிழகத்தில் குடியேறிய ஆரியர்கள் சமயக்கதைகள் பலவற்றையும் புனைந்து பரப்பி விட்டனர். *(கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும், ப.169).*

என்ற கருத்து சிந்திக்கத்தக்கதாக இருந்தது. வடக்கிலிருந்து வந்த சமயங்களும் வழிபாட்டு முறைகளும் தமிழர் வாழ்வில் புகுந்து தமிழரின் சமய நெறியை மாசுபடுத்தி விட்டன. இவ்வுண்மையை மறைமலையடிகள் தம் கட்டுரையில்

> தமிழ் மக்களிடையே வடக்கிருந்து வந்து நிலைபெற்ற பௌத்த சமண சமயத்தாராலும் அவருக்குப்பின் வந்த குழுவினராலும் பல்வேறு மதங்களும் மதப்போர்களும் இந்நாட்டின்கண் மேன்மேற்கிளைத்து வரலாயின வென்றுணர்ந்து கொள்ளல் வேண்டும் *(மறைமலை அடிகள், தமிழர் மதம், ப.23).*

எனக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிருந்துவந்த ஆரியர் சமயக் கொள்கைகள் தமிழர் வாழ்வில் புகுந்தன. அதனால் தமிழர் வீழ்ச்சியுற்றனர் என்ற உண்மையை அண்ணா 'ஆரியமாயை' என்ற நூலில்,

> இயற்கை இன்பத்தைத் துய்த்து வீரத்தை வணங்கி அறத்தை நம்பி வாழ்ந்த திராவிடரிடையே கட்டுக் கதைகளைப் பரப்பிக் கோழைத் தனத்தை வளர்த்தவர் ஆரியரே என்பதும் ஆரியக் கோட்பாடுகள் புகா முன்னம் திராவிடர் அறிவுத் துறையிலே ஆர்வம் கொண்டிருந்தவர்களே

என்றும் கூறியுள்ளார்.

> சிறப்பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றிக் கொடுமைப் படுத்திப் பணம் பறித்து,

> புரோகிதக் கூட்டமும் செல்வந்தனும் பிழைக்க மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றிப் பொதுவாக மனித வர்க்கத்திற்கு அவற்றால் எவ்விதப் பயனும் இல்லாமல் போய்விட்டது.

என்று சமயத்தின் நிலை குறித்துக் கூறியுள்ளார். செங்கற்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை இயக்க மாநாட்டில், 'மக்கள் பிறவியினால் உயர்வு தாழ்வு உண்டு என்ற கொள்கையை இம்மாநாடு அடியோடு மறுப்பதுடன் அதை ஆதரிக்கிற மதம், வேதம், சாஸ்திரம் புராணங்களையெல்லாம் பொது ஜனங்கள் பின்பற்றக் கூடாதென்று தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. இவற்றையெல்லாம் அறிந்து உணர்ந்த அண்ணா தமிழர்கள் தாழ்ந்ததற்குரிய காரணங்களைக் கதை வடிவில் தந்து மக்கள் விழிப்புற வழிகாட்டினார்.

நடைமுறைவாழ்வில் மதத்தின் பெயரால் நடக்கும் கொடுமைகளைக் கண்டு கலங்கினார். மதம் மக்களை முன்னேற விடாமல் தடுத்து மூடநம்பிக்கைகளையும், சாதிப் பிரிவுகளையும், விதிக்கு அடிமையாகும் நிலையையும் உருவாக்கியதைக் கண்டு வருந்தினார். சமய வாழ்வில் இருப்போரின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்தினார். திராவிடச் சமுதாயம் ஆரியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு இருக்கும் துன்பநிலையை வரலாற்றுக் கதைகள் மூலமாகவும் சமூகக் கதைகள் மூலமாகவும் படம் பிடித்துக் காட்டியுள்ளார். சமயப் புரட்டுகளை மட்டும் எடுத்துரைக்காமல் வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் மக்களை வாட்டி வதைக்கும் சமயத்தின் பன்முகக் கூறுகளின் தீங்குகளையும் சமயத்தைக் கட்டிக் காக்கும் சமய வாதிகளின் இழி செயல்களையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

### வரலாற்றுக் கதைகளில் சமயம்

சிறுகதைகளில் உள்ள வரலாற்றுச் சிந்தனைகள் எதிர்காலத் தலைமுறையினர்க்கு வழிகாட்டும் ஆவணம். காலப் பெட்டகமான வரலாறு கடந்த கால மக்களின் வாழ்க்கைப் போக்கைக் காட்டும் கருவியாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் ஏற்றம் பெற எண்ணும் மக்களுக்கு அறிவூட்டும் ஆசானாக அமைந்துள்ளது. சமுதாய நலம் பேணும் எழுத்தாளர்கள் வரலாற்றில் பொதிந்துள்ள, மறைந்துள்ள, மறைக்கப்பட்டுள்ள உண்மைகளை வெளிக்கொணரக் காலந்தோறும் போராடிக் கொண்டிருக்கின்றனர். வரலாறு குறித்து அண்ணா,

> வரலாறு என்பது மன்னர்களின் ஆட்சிமுறை என்று கொள்வதை விட அவர்தம் ஆட்சியின்

> வீழ்ச்சிக்கும் சூழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தோரை வெளிப்படுத்துதல்

எனக் குறிப்பிட்டுள்ளார்.

> வரலாற்றில் குறிப்பிடாத காரணங்களையும் புலப்படுத்துதல்

எனவும் தெளிவுபடுத்தியுள்ளார். வரலாற்று ஆசிரியரின் பங்குக் குறித்து, ஹட்சன்

> கிடைக்கின்ற ஆதாரங்களையும் சிதறுண்டு கிடக்கின்ற சான்றுகளையும் ஒருங்கு திரட்டி நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கற்பனை வளத்தோடு இணைந்த சிறந்ததொரு கலைப்படைப்பை உருவாக்கித் தருவதுதான் வரலாற்று ஆசிரியரின் பணியாகும்

எனக் கூறியுள்ளார்.

> [It is the business of the historical novelist to bring creative imagination to bear upon the day facts of the annalist and the antiquarian and out of a mass of scattered material gleaned from variety of sources to evolve a picture having the fullness and unity of art]. (W.H. Hudson, Introduction to the study of literature, p. 160)

அமெரிக்கத் திறனாய்வாளர் பிராண்டர் மாத்யூஸ்

> சிறுகதை என்பது ஒரே ஒரு பாத்திரத்தின் நடவடிக்கைகள் பற்றியோ, ஒரு தனிச் சம்பவத்தைப் பற்றியோ, அல்லது ஒரு தனி உணர்ச்சி தரும் விளைவைப் பற்றியோ எடுத்துக் கூறும் இலக்கியம்.

என்றார். (The Mathew Brander, the philosopher of the short story)

வரலாற்று ஆசிரியர் பற்றிக் கூறிய ஹட்சன் கூற்றுக்கும், பிராண்டர் மாத்யூஸ் கூறிய சிறுகதை இலக்கணத்திற்கும் ஏற்ப அண்ணாவின் சிறுகதைகள் அமைந்துள்ளன.

**பிடிசாம்பல்**

சமயப் பொறையைக் கடைப்பிடிக்க வேண்டிய சமயச் சான்றோர் சமயக் காழ்ப்புணர்ச்சி காரணமாகப்

பழிவாங்கியதைப் 'பிடி சாம்பல்' எனும் சிறுகதையில் எடுத்துக் காட்டியுள்ளார். பல்லவ மன்னன் நரசிம்மவர்மனின் படைத்தளபதி பரஞ்சோதியார் கீழைச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிக்கேசியை வாதாபியில் நடந்த போரில் வென்றார். அங்கிருந்து காஞ்சிக்குத் திரும்பும் போது கணபதி விக்கிரகத்தை எடுத்து வந்து பரஞ்சோதியார் தாம் பிறந்த திருச்செங்காட்டாங் குடியில் நிறுவினார். அங்குள்ள வாதாபி கணபதியின் உருவச் சித்திரம் 1946ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் தேதி வெளிவந்த கல்கி வார இதழின் அட்டையை அலங்கரித்தது. ஓவியர் சந்திரா அக் கணபதி உருவத்தை நேரில் பார்த்து வரைந்திருந்தார். அந்த ஓவியம் தீட்டப் பெற்ற கல்கி இதழில் சிவகாமியின் சபதம் தொடர்கதையின் சிறுத்தொண்டர் அத்தியாயம் வெளிவந்தது. அதனைப் படித்த அண்ணா நரசிம்ம வர்ம பல்லவனின் படைத்தளபதியாக இருந்த பரஞ்சோதியார் சமயக் காழ்ப் புணர்ச்சி காரணமாகப் படைத்தளபதி பதவியிலிருந்து சைவசமயப் பணிக்கு அனுப்பப்பட்டார் என்ற கருத்தை அடிப்படையாக வைத்துப் 'பிடிசாம்பல்' எனும் சிறுகதையைத் திராவிட நாடு வார இதழில் 18.5.47இல் எழுதினார். இச் சிறுகதையில் பரஞ்சோதியார் விரும்பிச் சமயப் பணி செய்யப் பதவியைத் துறக்கவில்லை. சமயக் காழ்ப்புணர்ச்சி கொண்ட வைணவர்களுக்கு மன்னன் உடந்தையாக இருந்ததால் அங்கிருந்து துரத்தப்பட்டார் என்பதனைச் சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

சாளுக்கிய நாட்டிற்கும் பல்லவ நாட்டிற்கும் தீராப் பகை இருந்து வந்தது. கீழைச்சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிக்கேசி பல்லவ மன்னன் மகேந்திரவர்ம பல்லவனைப் போர்க்களத்தில் வென்றான். மகேந்திரவர்ம பல்லவனின் மகன் நரசிம்மவர்ம பல்லவன் அரசுக் கட்டிலில் அமர்ந்தவுடன் சாளுக்கிய நாட்டின் தலைநகரான வாதாபி மீது படைத்தளபதி பரஞ்சோதியார் தலைமையில் படையெடுத்துச் செல்லப் பணித்தான். பரஞ்சோதியாரின் தலைமையில் சென்ற படை வாதாபியை வென்றது. மகேந்திர வர்ம பல்லவனை வென்ற இரண்டாம் புலிக்கேசியைக் கொன்று வெற்றிவாகை சூடியது. பல்லவ நாட்டு மன்னன் நரசிம்மவர்ம பல்லவன் மகிழ்ந்தான். பல்லவ நாட்டு மக்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். படைத்தளபதியின் புகழ் நாடெங்கும் பரவியது.

சைவப்பற்றுக் கொண்ட பரஞ்சோதியாரின் புகழ் நாடெங்கும் பரவக் கண்ட வைணவர்கள் பொறாமை கொண்டனர். பரஞ்சோதியாரின் வெற்றி சைவத்திற்குக் கிடைத்த

வெற்றியாகச் சைவர்கள் எண்ணி மகிழ்வதாக மன்னனிடம் புறங்கூறினர். வைணவர்கள் செய்த சூழ்ச்சியில் சிக்கிய மன்னன் மனமாற்றம் பெற்றான். படைத்தளபதி பரஞ்சோதியாரைச் சைவப் பணிபுரிய விடைதந்தான். மாபெரும் படையை நடத்திச் சென்று மாற்றாரை வென்ற பரஞ்சோதியார் சிவனடியாராக மாறினார் என மன்னரும் மற்றோரும் கூறினர். இதனை மறுத்து 'மன்னரும் வைணவர்களும் செய்த சூழ்ச்சியால் படைத்தளபதியாக இருந்த பரஞ்சோதியார் சிவனடியாராக மாற்றப்பட்டார்' என அண்ணா எழுதியுள்ளார்.

பரஞ்சோதியார் சைவப் பணியை விரும்பிப் படைத் தொழிலைத் துறக்கவில்லை. சைவப்பற்றுக் கொண்ட பரஞ்சோதியாரை வைணவ சமயம் காரணமாக வஞ்சம் தீர்த்துக் கொண்டது. பரஞ்சோதியார் சிறுத்தொண்டர் ஆனார் என்பதை ஆக்கப்பட்டார் என அண்ணா கூறியுள்ளார். படைத்தளபதி பரஞ்சோதியார் சிறுத்தொண்டராக ஆக்கப்பட்டார் என்ப தனைப் பெரியபுராணச் செய்யுள்களிலிருந்தே சான்று களைக் காட்டியுள்ளார். பரஞ்சோதியார் படைத்தளபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கு அண்ணா மூன்று காரணங் களைக் கூறியுள்ளார். (1) சாளுக்கியர் தந்திரம் (2) சைவ வைணவ ஆதிக்கப்போட்டி (3) மன்னருக்குப் பரஞ்சோதியாரின் புகழ் கேட்டு ஏற்பட்ட சிறிதளவு பொறாமை பரஞ்சோதியார் படைத்தளபதி பதவியினின்று விடுவிக்கப்பட்ட பின் படைத் தளபதி பதவியில் அமர்ந்தவரின் ஆற்றல் குறைவினால் புலிக்கேசியின் மகன் விக்ரமன் பல்லவ மன்னன் பரமேசுவரனை வெற்றி கண்டு சந்திரகாந்தா என்ற குதிரை மீதமர்ந்து பல்லவ நாட்டின் தலைநகரான காஞ்சி நகருக்குள் வெற்றிக் களிப்புடன் பவனி வந்தான். மகேந்திரவர்மன் இரண்டாம் புலிக்கேசியிடம் தோற்றான்; மகேந்திரவர்ம பல்லவனின் மகன் நரசிம்மவர்ம பல்லவன் இரண்டாம் புலிக்கேசியை வென்று கொன்றான், இரண்டாம் புலிக்கேசியின் மகன் விக்ரமன் நரசிம்மவர்ம பல்லவனின் மகன் பரமேசுவரனைத் தோற்கடித்தான். இத்தோல்விக்குக் காரணம் பரஞ்சோதியார் படைத் தளபதியாக இல்லாததேயாகும் என அண்ணா தெளிவுபடுத்தியுள்ளார். பரஞ்சோதியார் படைத்தளபதியாக இருந்திருந்தால் தாங்கள் வெற்றி பெற முடியாதென்பதை உணர்ந்தே பரஞ்சோதியாரைப் படைத்தளபதிப் பொறுப் பிலிருந்து நீக்குவதற்குச் சாளுக்கியர் மறைமுகமாகச் சூழ்ச்சி செய்தனர். வெற்றியும் கண்டனர் எனக் காட்டியுள்ளார்.

'சமயப் பற்றிருந்தால் படைத்தொழிலுக்குத் தலைமை தாங்கக் கூடாதா?' என்ற கேள்வி கேட்டால் 'பிடி சாம்பல்' என்போர்க்கு அண்ணா அரிய விளக்கத்தை அளித்துள்ளார்.

'படைத் தொழிலில் இருப்பதால் சிவத்தொண்டு சாத்தியமின்றிப் போகுமா? ஆவுரித்துத் தின்று உழல்பவனும் ஐயனை நம்பினால் அவர்களே நாம் வணங்கும் தெய்வம் என்று சைவம் கூறப் போர்த் தொழிலைக் கடமையாகக் கொண்ட பரஞ்சோதியாருக்கு மட்டும் ஏன் மடாலயம் புகவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டது? நீங்கள் சிந்திக்க வேண்டியவை. 'பிடி சாம்பல்' தீட்டியதன் நோக்கம் அது தான். சமயப்பற்று காரணமாகப் படைத்தளபதியைக் கூட இழக்கத் துணிந்த மன்னனின் பேதைமையைச் சுட்டிக்காட்டியுள்ளார். அப்பேதைமை காரணமாகப் பல்லவ நாடு மாற்றாருக்கு அடிமைப்பட்டதை இரண்டாம் புலிக்கேசியின் மகன் விக்ரமன் பல்லவ நாட்டை வென்று உலா வந்ததை எடுத்துக்காட்டி எச்சரித்துள்ளார்.

### புலிநகம் (20.1.46, திராவிட நாடு)

அண்ணா 'புலிநகம்' என்னும் சிறுகதையைத் திராவிட நாடு வார ஏட்டின் பொங்கல் மலரில் எழுதினார். சென்னை நுங்கம்பாக்கம் குறள்நெறிக் கழகத்தினர் நடத்திய குறள் விழாவில் (27.10.54) 'புலிநகம்' என்னும் இச்சிறுகதை நாடகமாக நடிக்கப் பெற்றது. சிவாசி புலிநகத்தால் பீசப்பூர் சுல்தானின் படைத்தளபதி அப்சல்கானைக் கொன்ற வரலாற்றை வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். அதற்குப்பின் மறைந்துள்ள உண்மையைச் சிலர் அறிய ஆர்வம் காட்ட மாட்டார்கள். உண்மையைச் சிலர் அறிந்திருந் தாலும் அச்சம் காரணமாக வெளியிடத் தயங்குவர். ஆனால் அண்ணா வரலாற்றில் மறைந்துள்ள, மறைக்கப்பட்டுள்ள உண்மைகளை நெஞ்சத் துணிவோடு தெரிவிக்கத் தயங்கியதில்லை. அதனால் சிலரது பழிச்சொல்லுக்கும் ஆளானார்.

மராட்டிய மாவீரன் சிவாசியின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு 'புலிநகம்' எனும் இச்சிறுகதை தீட்டப்பெற்றுள்ளது. சிவாசி இந்துமதத்தின் காவலனாக விளங்கினான். அவனது வீர தீரச் செயல்களை ஒடுக்கப் பீசப்பூர் சுல்தான் தன்னுடைய படைத்தளபதி அப்சல்கானை 5000 குதிரை வீரர்களும், 7000 காலாட் படைகளும் கொண்ட படையுடன் பிரதாப்கார் நகருக்கு அனுப்பினான். சிவாசியை எப்படியும் சிறைப் பிடித்துவிட முடியுமென்று நம்பிக்கை அப்சல்கானுக்கு இருந்தது. காடுமலை கடந்து அப்சல்கானின் பெரும்படை பிரதாப்கார் நகருக்கு வெளியே அணிவகுத்து நின்றது. சிவாசியின் சிறுபடை பிரதாப் நகருக்கு உள்ளே தங்கி இருந்தது. இருவருக்கும் இடையே ஒரே ஒரு காடு. அதனை அடைய ஒரே ஒரு பாதை. சிவாசி சமரசம்

ஒப்புக் கொண்டால் அதனை முன்னின்று முடிக்கக் கிருஷ்ணாஜி பாஸ்கர் என்ற வேதியரை அப்சல்கான் பீசப்பூரிலிருந்து உடன் அழைத்து வந்தான். கிருஷ்ணாஜி பாஸ்கர் அப்சல்கானின் தூதுவராகச் சில வீரர்களோடும் பணியாட்களோடும் சிவாசியிடம் சமாதானம் பேசச் சென்றார். சிவாசியும் அவர்களை அன்புடன் வரவேற்றான். கிருஷ்ணாஜி பாஸ்கர் தங்குவதற்குத் தனக்கு அருகில் ஒரு தனி விடுதியையும், அவருடன் வந்தவர்களுக்கு நெடுந்தொலைவில் ஒரு விடுதியையும் ஏற்பாடு செய்து கொடுத்தான். சிவாசி நள்ளிரவில் கிருஷ்ணாஜி பாஸ்கரைத் தனியே சந்தித்தான். மராட்டிய மண்டலத்துக்கு வந்துள்ள ஆபத்தை நினைக்கும்போது,

> மனக்கஷ்டமாகத் தான் இருக்கும்; இருந்தாலும் மாவீரனைப் பணிவதன்றி வேறு மார்க்கம் இல்லை.
>
> பணிவது பற்றியல்ல பூதேவா நான் சோதிப்பது என மனோபீஷ்யம் சங்கல்பம் பாழாகுமே.
>
> படைபலம் அவனிடம் அதிகம். எதிர்த்துப் பயன் இல்லை. தோல்வி நிச்சயம் சம்பவிக்கும் அழிவை அணைத்துக் கொள்வாருண்டோ?' 'மறையவரே' என் சங்கல்பம் இங்கு பாரத வர்ணத்திலே நமது ஜென்ம பூமியில் புண்ய பூமியில் இந்து சாம்ராஜ்யம் சிருஷ்டிக்க வேண்டும் என்பதுதான். என்பொருட்டு அல்ல. பிராம்மணோத்தமர்களின் பொருட்டே, நான் இந்தப் பாடுபடுகின்றேன். என் இலட்சியம் தங்களுக்குத் தெரிந்திருக்கும். பசு, பிராமணர் இவற்றின் இரட்சகன் சிவாசி என்பதை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே என் நோக்கம். இந்த ராஜ்யம் ஏற்பட்டால் தான் பூர்வ பெருமை நிலைக்கும். பண்டைச் சிறப்பு மீண்டும் தோன்றும். ஆரிய வர்த்தத்திலே வேதாச்சாரமும் குலதர்மமும் ஜொலிக்கும். ஸ்வாமி! சித்தம் குழம்பியிருக்கும் நான் தங்களை யாசிக்கிறேன். என் சங்கல்பம் ஈடேற வழி செய்யுங்கள். சனாதன தர்மம் தழைக்க உபாயம் கூறுங்கள். இந்தப் பிஜப்பூர் படையினால் அழிந்து விடலாமோ? நான் பாடுபட்டு வளர்ந்து வரும் பால்யன் பூஜிதரே! ஒரு வழி காட்டும்!
>
> 'நானா? வழிகாட்டுவதா?' சிவாஜி நான் பிஜப்பூர் சுல்தானின் தூதுவன்!
>
> 'இல்லை, சுவாமி! தாங்கள் பாரத்வர்ஷத்தின் பிரதிநிதி! ஆர்ய வர்த்தத்தை இரட்சிக்க வேண்டிய

ஆர்ய சிரேஷ்டர்! தங்களை அப்சல்கான் அனுப்பி யிருந்தாலும் சரி நான் தங்களை ஆண்டவன் அனுப்பி வைத்த தூதுவர் என்றே கொள்கிறேன்.

கிருஷ்ணாஜி பாஸ்கர் வந்ததோ சிவாசியைப் பணிய வைக்க. சிவாஜியை நேரில் சந்தித்த பின் கிருஷ்ணாஜி பாஸ்கர் உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்யும் துரோகியானார்.

அப்சல்கானிடம் போர் வேண்டாம். பணிவதாகச் சொல்லி அனுப்பு. பாவனைக்கு அப்சல்கானிடம் நேரடியாகப் பணியத் தீர்மானித்திருப்பதாகச் செய்தி அனுப்பு. தனியாக அப்சல்கான் இங்கே விஜயம் செய்யட்டும். நான் அவரிடம் சரண் புகுந்து விடுகிறேன். சமர் வேண்டாம் என்று அப்சல்கானிடம் தூது அனுப்பு.

எனக் கூறிக் கிருஷ்ணாஜி பாஸகர் சிவாசியிட மிருந்து விடைபெற்றார்.

அப்சல்கானிடம் சென்று கிருஷ்ணாஜி பாஸ்கர் சிவாசி சரணடைய ஒப்புக் கொண்டதாகக் கூறினார். இதனைக் கேட்ட அப்சல்கான் மகிழ்ந்தான். சிவாசியால் அனுப்பப்பட்ட கோபிநாத் பண்டிட்ஜி என்ற தூதுவனும் அப்சல்கானிடம்

சிவாசி சமர் செய்ய விரும்பவில்லை. பிஜப்பூர் ஆட்சிக்கு அடங்கி நடக்க ஒப்புக் கொண்டுள்ளார். பிஜப்பூர் சுல்தானின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட இசைவு தெரிவித்துள்ளார். சரணடைய விரும்பு கிறார். சரணாகதி குறித்து இங்கு வந்து பேசுவதற்குத் தயங்குகிறார். தங்களைச் சுற்றியுள்ள பெரும்படை அவருக்கு அச்சத்தைத் தருகிறது. அதனால்தான் தங்களைத் தனியே சந்திக்க விரும்புகிறார். இந்த வேண்டுகோளை ஏற்றருள வேண்டுமெனப் பணிவுடன் கூறினான்.

சரி அஞ்சவேண்டாம். நாளைச் சிவாசியின் சம்மதத்தைப் பெற நானே நேரில் ஆயுதமினறித் தனியாக வருகிறேன்.

என அப்சல்கான் சிவாசியின் தூதுவன் கோபிநாத் பண்டிட்ஜியிடம் கூறினான்.

போர்வீரர்களின் துணையின்றி நிராயுதபாணியாக அப்சல்கான் தனிமையில் சிவாசியைச் சந்தித்தான். அப்சல் கானைத் தழுவுவதுபோல் பாசாங்கு செய்து கையிலே மறைத்து

வைத்திருந்த புலிநகத்தால் சிவாஜி அப்சல்கானின் அடிவயிற்றில் கீறிக் கொன்றான். ஏற்கெனவே திட்டமிட்ட சூழ்ச்சியின் படி வஞ்சகம் வென்றது. இக்கொலைக்கு இருவேதியர் களும் துணைபுரிந்தனர். அப்சல்கானின் படைகள் சிவாசியை நெருங்காதவாறு அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டன. சிவாசியின் படைகள் பீஜப்பூர் சுல்தானின் படைகளை வென்று வெற்றி முழக்கமிட்டனர். அப்சல்கானின் மரணம் குறித்த சதிச் செயல்களுக்குக் காரணமானவர்களை அண்ணா இனம் காட்டிச் செல்கிறார்.

அப்சல்கானைச் சிவாஜி வக்ரமாகக் கொன்ற வரலாற்றுச் சம்பவத்தையே மக்கள் அறிவர் என வரலாற்று ஆசிரியர் கூறுவர். ஆனால் கோபிநாத் பண்டிட்ஜி, கிருஷ்ணாஜி பாஸ்கர் என்பவர்களைப் பற்றிக் கூறார். சரித்திரம் என்றால் மன்னர்கள் கதை தானே என்று மக்களும் எண்ணிக்கொண்டு, கோபிநாத் பண்டிட்ஜி, கிருஷ்ணாஜி பாஸ்கர் போன்றவர்களைக் கண்டுபிடிக்க முயல்வதில்லை. ஆனால் இந்த உபகண்டத்து வரலாற்றிலே கோல் கொண்டவர்களைப் பற்றி அறிந்து கொள்வதைவிடக் கோபிநாதர்களைப் பற்றித் தெரிந்து கொண்டால் தான் உட்பொருள் விளங்கும், உண்மை துலங்கும். அப்சல்கானின் மரணம், புலிநகத்தால் என்று கூறுவதைவிடப் பூசுரனின் புன்னகையால் என்று கூறுவதே பொருந்தும். அப்சல்கானின் தூதுவராகச் சென்றவர் கிருஷ்ணாஜி பாஸ்கர். சிவாசியின் தூதுவராகச் சென்றவர் கோபிநாத் பண்டிட்ஜி என வரலாறு கூறுகிறது. அண்ணா வரைந்துள்ள புலிநகம் சிறுகதையில் அப்சல்கானின் தூதுவர் கோபிநாத் பண்டிட்ஜியென்றும், சிவாசியின் தூதுவர் கிருஷ்ணாஜி பாஸ்கர் என்றும் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரியர்களின் சூழ்ச்சியால் தான் அப்சல்கானின் மரணம் ஏற்பட்டதென்பதை ஸ்ரீவத்சவர் என்ற வரலாற்றாசிரியர் 'மொகலாயப் பேரரசு' (The Moghul Empire) என்ற நூலில் கீழ்க்கண்டவாறு குறித்துள்ளார்.

> சிவாஜியின் அருஞ்செயல்களைக் கேள்வியுற்ற மொகலாயப் பேரரசன் பீஜப்பூர் சுல்தான் கடுஞ்சினங் கொண்டான். படைத் தளபதி அப்சல்கானின் தலைமையில் படையை அனுப்பிச் சிவாசியை அடக்க எண்ணினான். பீஜப்பூரின் ஆளுமைக்குட்பட்ட பல பகுதிகளையும் கோட்டை களையும் கைப்பற்றியிருந்த சிவாசியைச் சிறைப்

> பிடித்து வருவதாகச் சூளுரைத்துப் படைக்குத் தலைமை தாங்கி அப்சல்கான் சென்றான். தன்னுடன் கிருஷ்ணாஜி என்ற ஆரியரையும் உடன் அழைத்துச் சென்றான். பீஜப்பூர் சுல்தானுக்குச் சிற்றரசாகச் சிவாசி இருக்கச் சம்மதம் தெரிவித்தால், போர்த் தளவாடங்களையும் படைகளையும் உதவுவதாகக் கூறுமாறு கிருஷ்ணாஜியைத் தூதாக அனுப்பினான். கிருஷ்ணாஜி, சிவாசியைச் சந்தித்துப் பீஜப்பூர் சுல்தானின் எண்ணத்தை உரைத்தவுடன் அப்சல்கானைச் சந்திக்கச் சிவாஜியும் ஒப்புதல் அளித்தான். பிரதாப் நகருக்கு ஒரு மைல் தொலைவில் இருக்கும் "பார்" எனும் இடத்தில் சந்திப்பதற்கான கூடாரத்தின் இரு மருங்கிலும் படைவீரர்களை மறைமுகமாக இருக்க வைத்துச் சென்றான் அப்சல்கான். சிவாஜியின் தூதுவன் கோபிநாத் பண்டிட்ஜி வேண்டியதற்கிணங்க அப்சல்கான் நிராயுத பாணியாகச் சிவாஜியைச் சந்திக்க வந்தான். அப்சல்கானும் சிவாஜியும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். சிவாஜி கையில் மறைத்து வைத்திருந்த புலிநகத்தால் அப்சல்கானின் வயிற்றைக் கீறிக் குடலை எடுத்துவிட்டான். அப்சல்கானின் ஆட்கள் சிவாஜியைக் கொல்ல முயன்ற போதிலும் சிவாஜி தான் அணிந்திருந்த இரும்பு உறையால் காப்பாற்றப் பட்டான்.

மேலே குறிப்பிட்டுள்ள வரலாற்றுச் செய்தியை 'மொகலாயப் பேரரசு' எனும் நூல் விரிவாகக் கூறியுள்ளது. சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் கே.கே.பிள்ளையும், 'தமிழக வரலாறும் பண்பாடும்' எனும் நூலில் தூதுவராகச் சென்றவர்களின் சூழ்ச்சித்திறனால் சிவாஜி தன் எண்ணத்தை முடித்துக் கொண்டதாகக் கூறியுள்ளார்.

அப்சல்கானின் மரணம் சிவாஜியினால் ஏற்பட்ட தென்பதனை விடத் தூது சென்றவர்களின் சமயப்பற்றினால் ஏற்பட்டதென்பதே வரலாறு உணர்த்தும் செய்தியாகும்.

**ஒளியூரில் (12.2.56, திராவிட நாடு)**

நாலந்தா அப்பல்கலைக்கழக வைதீகர்களால் எரியூட்டப் பட்ட வரலாற்றை 'ஒளியூரில்' எனும் சிறுகதையில் தீட்டியுள்ளார் அண்ணா.

பீகார் மாநிலத்திலுள்ள பாடலிபுரத்தின் (பாட்னா) அருகில் நாலந்தா என்னும் இடத்தில் பௌத்த மதக் கருத்துக்களைப் பரப்ப ஒரு பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினர். பல்வேறு நாடுகளிலிருந்தும் மாணவர்கள் அங்கு வந்து கல்வி பயின்றனர். மாணவர்களின் எண்ணிக்கை பத்தாயிரமாகவும் அங்குப் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐந்நூறாகவும் இருந்தன. பௌத்த மதக்கருத்துக்களைப் பரப்புவதற்காக அமைந்துள்ள இப்பல்கலைக் கழகத்தைக் கண்டு வைதீகர்கள் பொறாமை கொண்டனர். வேதநெறிக்கு இடையூறாக இப்பல்கலைக்கழகம் அமையுமென அஞ்சிய ஆரியர்கள் அப்பல்கலைக் கழகத்தை எரியிட்டுக் கொளுத்தச் சதித்திட்டம் வகுத்தனர். இதனைச் சில கதைமாந்தர்கள் வாயிலாக அண்ணா படம்பிடித்துக் காட்டுகிறார். ரங்கராசா பண்டிதர் என்ற ஆரியர் வைதீகக் கொள்கைகளில் அழுத்தமான பற்றுக்கொண்டவராக இருந்தார். பாஞ்சன்ய பூபதி என்ற வணிகர் அவரது நண்பராக இருந்து வந்தார். பூபதி வணிகத்தில் ஈடுபட்டுப் பெரும் பொருள் திரட்டினார். ரங்கராச பண்டிதரின் மகன் ராமப்பிரசாதனுக்கும் வணிகர் பூபதியின் மகள் மல்லிகாவுக்கும் இடையே காதல் மலர்ந்தது. புத்தமதக் கொள்கைகளில் தம்மை முழுதும் ஈடுபடுத்திக் கொண்ட பூபதியாரும் அப்பல்கலைக் கழகத்திற்குப் பெரும் பொருளை நன்கொடையாக வழங்கினார். அவரது மகள் மல்லிகாவும் தந்தையின் கருத்துக்கு உறுதுணையாக இருந்தாள். அப்பல்கலைக்கழகத்தில் சித்திர வேலைப்பாடுகளுடன் பதினாயிரம் செம்மரத் தூண்களை அமைக்கும் பணியில் பூபதியார் ஈடுபட்டிருந்தார். அப்பல்கலைக்கழகத்தில் பராசர சுவாமிகள் எனும் ஆரியர் வேத வகுப்புகளை நடத்தும் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். வேதமதத்திற்கு எதிராகப் புத்தமதம் பரவுவதைக் கண்டு கலங்கினார். ரங்கராச பண்டிதரின் துணையோடு அப்பல்கலைக்கழகத்தை மகத பூமியிலிருந்து ஒழித்துக் கட்டத் திட்டம் தீட்டினார். ரங்கராச பண்டிதரும் பராசர சுவாமிகளும் வைதீகத்தைக் காக்க எதையும் செய்யத் துணிவுடன் இருப்பதை அண்ணா உரையாடல் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

> ரங்கராசா! நீ ஆரியமார்க்கத்திற்குச் செய்துள்ள சேவை மகத்தானது. மனு மாந்தாதா காலத்திலே ஆரியம் செழித்தது. இப்போது அழிய இருந்த ஆரிய மார்க்கத்தைக் காப்பாற்றும் பெரும்பாக்கியம் உன்னைச் சேர்ந்தது. உத்தமனே! உன்னை நண்பனாக அமையப்பெற்ற நானே பாக்கியசாலி'.

என்னால் என்ன ஸ்வாமி எல்லாம் தாங்கள் காட்டிய வழி நடந்தேன். இட்ட கட்டளையை நிறைவேற்றினேன். என்னால் என்ன சாதிக்க முடியும்?

உன்னால் என்ன சாதிக்க முடியுமென்றா கேட்கிறாய்? நாலந்தா வெந்து சாம்பலாகப் போகிறதே நாளைக்கு, யாரால்?' உன் கைங் கரியமல்லவா இது? தூள் தூளாகப் போகிறது அவர்கள் கட்டி வைத்துள்ள மாடங்களும் கூடங் களும்! நாலந்தாவிலே கிளம்பப் போகும் ஜ்வாலை நெடுந்தொலைவு தெரியும். நெடுந் தொலைவு கற்கள் பிளந்து நாலா பக்கமும் பறக்கும். கட்டடங்கள் சடசடயெனச்சரியும்.

'ஸ்வாமி அந்த புத்தப் பண்டாரங்கள்... அவர்களா?' ஆரியத்தை அழித்தொழிக்க முனைந்த அந்த அசுரர்களா? கட்டிடத்தின் அடியிலே சிக்குண்டு சிலர், நெருப்பிலே பலர், இடிபாட்டுக்கடியிலே சிலர், இப்படி செத்துத் தொலைவார்கள். பிணக் குவியல்! நாலந்தா புத்தமதத்தாரின் பாசறை என்றார்களே, சுடுகாடு ஆகப்போகிறது நாளைக்கு! உத்தமனே எல்லாச் செம்மரத் தூண்களிலும் நான் கொடுத்த பொடி சேர்த்து விட்டாயல்லவா, தவறாமல்?

ஒவ்வொன்றிலும் தாங்கள் சொன்ன அளவு ஒவ்வொரு நாளும் அடிமடி நிறையக் கட்டிக் கொண்டு போயல்லவா தூண்களிலே துவாரத்தில் தூவி விட்டு வந்தேன்.

இந்த உரையாடலை மறைந்து நின்று கேட்ட ரங்கராச பண்டிதரின் மகன் திரு. ராம்பிரசாத்தன் காதலி மல்லிகாவைத் தேடி ஓடினான். ராம்பிரசாத்தும் மல்லிகாவும் அவள் தந்தை பூபதியாரும் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படவிருந்த அழிவைத் தடுக்க விரைந்தனர். சதிகாரர்களால் வழிமறித்து இம்மூவரும் கொல்லப்பட்டனர். நாலந்தா பல்கலைக்கழகம் தீக்கிரையாகியது. புத்தமதத்தைத் தடுக்கும் முயற்சியில் வைதீகம் வெற்றி கண்டது. வரலாற்றுச் சான்றுகளை முன் வைத்து அண்ணா வரைந்த உண்மையை அறிஞர் பலரும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் தலைமை அமைச்சராகவிருந்த ஜவஹர்லால் நேரு தம்முடைய 'உலக சரித்திரம்' (Glimpses of World History) எனும் நூலில் நாலந்தா பல்கலைக்கழகம் அழிக்கப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளார்.

> பீகார் மாநிலத்திலுள்ள பாடலிபுரத்தின் அருகில் நாலந்தா பல்கலைக்கழகம் சிறப்புடன் திகழ்ந்தது. அங்குப் பத்தாயிரம் மாணவர்களும் பௌத்தத் துறவிகளும் தங்கிக் கல்வி பயின்றனர். பௌத்தமதக் கருத்துக்களைக் கற்பிக்கத் தோன்றிய இப்பல்கலைக் கழகத்தை ஆரியக் கோட்பாடுகளுக்கு அரணாக விளங்கிய வாரணாசி கல்விக் கூடத்திற்கு எதிராக வைதீகர் கருதினர். அதனால் அப்பல்கலைக் கழகத்தை நெருப்பிட்டுக் கொளுத்தினர்! (Jawaharlal Nehru, Glimpses of World History, p. 122).

> பத்தாம் நூற்றாண்டில் நாலந்தா பல்கலைக் கழகத்தின் மாபெரும் நூலகம் நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்ட செய்தி வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டது.

என வரலாற்று வல்லுநர் பெஞ்சமின் வால்கர் கூறியுள்ளார்.

> (The huge manuscript Library of Nalanda was destroyed by a fire started by certain tirthika (Non Buddhists Variously Identified of Vaishnavita, Saivaita and Jain Monks) who had a grievance against the Monastery for some past affront (Banjamin Walker, Hindu work, Vol. II, P. 115).

நாலந்தா, கோஷ், டல்ட், சங்காலியா முதலான வரலாற்றுப் பேராசிரியர்களும் நாலந்தா பல்கலைக் கழகம் நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டதைத் தெரிவித்துள்ளார்.

1. Yale, R., Nalanda, The Great Buddhist University, 1923.
2. Ghose, A.A., Guide of Nalanda, 2nd E, 1946.
3. Dult, S., Buddhist Monks, Monasteries of India, 1962.
4. Sankalia, H.D., University of Nalanda, Bombay, 1921.

ஆரியம் தனக்கு எதிராக எது தோன்றினாலும் அதனை அழித்து விடும் என்ற உண்மையை வரலாற்றிலிருந்து இச்சிறுகதை வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளார்.

## திருமலை கண்ட 'திவ்யஜோதி'
## (13.1.52, திராவிட நாடு)

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களுள் பெரும் புகழோடு வாழ்ந்தவர் திருமலை நாயக்கர். திருமலை நாயக்கர் மீது அண்ணாவுக்கு எல்லையில்லாத பற்றுண்டு. மதுரை மாவட்ட இரண்டாவது தி.மு.க. மாநாட்டில் அண்ணா பேசும்போது, 'திருமலை நாயக்கர் வரலாற்றை நாடகமாக்க இருக்கிறேன்' எனக் குறிப்பிட்டுள்ளார். திருமலை நாயக்கர் வரலாற்றைப் பற்றிச் சத்திய நாத ஐயர் மதுரை நாயக்கர்கள் (Naiks of Madurai) எனும் நூலில் விரிவாகவே எழுதியுள்ளார். மற்றும் பலரும் திருமலை நாயக்கர் வரலாற்றை எழுதியுள்ளனர். ஆயினும் அவரது இறப்புக் குறித்துப் பல்வேறு ஆசிரியர்களும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித் துள்ளனர். உண்மையை அறியப் பல ஏடுகளையும் தேடும்போது எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதிய 'கன்னியர் வீரம்' எனும் நூலிலுள்ள 'பட்டர் புதல்வி' எனும் கட்டுரை அண்ணாவுக்குக் கிடைத்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு அண்ணா, "திருமலை கண்ட திவ்ய ஜோதி" என்ற தலைப்பில் திராவிட நாடு பொங்கல் மலரில் ஒரு சிறுகதை வரைந்தார். இச்சிறுகதையில் திருமலை மன்னரது இறப்பில் மறைந்துள்ள சதிச்செயல்களைச் சான்றுகளுடன் விளக்கிக் காட்டியுள்ளார்.

திருமலை மன்னர் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பூசாரி சந்திர சேகரப் பட்டாச்சாரியாரோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். அதனால், மன்னர் பட்டாச்சாரியார் வீட்டிற்கு அடிக்கடி செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பட்டாச்சாரியார் மகள் சுந்தரவல்லியைத் தன் காதல் வலையில் சிக்க வைத்தார். அவளை மணந்து கொண்டு அரண்மனையில் அரசியாக வைத்துக்கொள்வதாகக் கூறினார். அவளும் நம்பினாள். கருவுற்றாள். அவள் தந்தை நிலையை அறிந்து துடித்தார். மன்னர் அரசியாக ஏற்றுக் கொள்வதாகக் கூறிய செய்தியைக் கூறினாள். 'குல ஆச்சாரம் கெடுகிறதே' எனச் சினந்தார். சத்திரியனை நீ மணந்து கொண்டபின் நான் மீனாட்சிகோயில் பட்டாச்சாரியாக இருக்க முடியுமாவெனச் சினந்து கூறினார். மனமொடிந்த பட்டர் புதல்வி சுந்தரவல்லி நஞ்சுண்டு மடிந்தாள். மாரடைப்பால் இறந்து விட்டாள் எனப் பட்டாச்சாரியார் வெளியில் கூறினார். ஆயினும் அவர் உள்மனம் திருமலை மன்னரைப் பழிவாங்கத் துடித்தது. திருமலை மன்னரின் தளபதியாகவிருந்த லிங்கண்ணாவின் மதவெறியைப் பயன்படுத்தித் திருமலை மன்னரைப் பழிவாங்கப் பட்டாச்சாரியார் திட்டம் தீட்டினார்.

திருமலை மன்னரின் ஆதரவால் கிறித்துவமதம் நாட்டிற்குள் பரவுவது கண்டு தளபதி லிங்கண்ணா ஆத்திரங்கொண்டான். வேதமதத்திற்கு எதிராகக் கிறித்துவமதம் நுழைவது கண்டு திருமலை மன்னருக்கு எதிராகச் சந்திரசேகரப் பட்டாச்சாரியாரும், தளபதி லிங்கண்ணாவும் ஒன்று சேர்ந்து திருமலை மன்னரை ஒழித்துக் கட்டத் திட்டம் தீட்டினர். நாட்டில் பொளாதார நெருக்கடி ஏற்பட்டது. கோயில் நிலவறையில் புதையல் இருப்பதாகக் கூறி நள்ளிரவில் திருமலை மன்னரை லிங்கண்ணாவும், பட்டாச்சாரியாரும் அழைத்துச் சென்றனர். பொருள் மீது கொண்ட ஆசையால் மன்னர் நிலவறைக்குள் சென்றார். மன்னர் நிலவறையினின்று வெளியே வராதவாறு பெருங்கல்லால் இருவரும் மூடினர். நிலவறைக்குள் மூச்சுத் திணறிய மன்னர் உயிர் துறந்தார். திருமலை மன்னரும் தேவி சன்னதியில் பொருள் தேடிச் சென்று ஜோதியில் கலந்துவிட்டார் எனச் செய்தியைப் பரப்பினர். மக்களும் உண்மையென நம்பினர். அ.கி. பரந்தாமனார் ‘திருமலை நாயக்கர் வரலாறு’ என்னும் நூலில், ‘பட்டர் வகையினர் கோவிலில் நிலவறையில் புதையல் இருப்பதாக அழைத்துச் சென்று வெளியே வராதவாறு பெருங்கல்லை முகப்பில் மூடிவிட்டு வந்து மீனாட்சி அம்மனின் பொற்பாத கமலங்களில் திருமலை மன்னர் ஒன்றுபட்டு விட்டார்’ எனக் கூறினர் என வரைந்துள்ளார்.

பட்டாச்சாரியாரின் சொந்தக் காரணத்துக்காகப் பழி வாங்கிய சதியும், லிங்கண்ணா வேதமதத்திற்கு எதிராகக் கிறித்துவ மதம் பரவுவதைக் கண்டதனால் ஏற்பட்ட வெறுப்பும், திருமலை மன்னரது மரணம் என அறிந்திருந்தும் வரலாற்று ஆசிரியர்கள் வெளியிட முன்வருவதில்லை. இச்சிறுகதை வாயிலாக இரு ஆரியர்களின் சதிச்செயலே திருமலை மன்னரின் மறைவுக்குக் காரணமெனத் துணிவுடன் அண்ணா வெளிப்படுத்தியுள்ளார். அண்ணாவின் நடையில் ஆரியத்தாக்குதல் கடுமையாக இருந்தாலும், திருமலை மன்னரின் மறைவுக்கு இரு ஆரியர்கள் காரணம் என்பதில் இரண்டு கருத்தில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**தஞ்சை வீழ்ச்சி (14.1.53, திராவிட நாடு)**

அளகிரி நாயக்கர் ஆட்சியிலிருந்து தஞ்சை மராட்டிய மன்னரின் ஆளுகையின் கீழ் வந்ததை வரலாறு கற்றவர்கள் நன்கறிவர். அந்த ஆட்சி அமைந்த வரலாற்றின் பின்னணியில் உள்ள சதியைத் “தஞ்சை வீழ்ச்சி” என்னும் தலைப்பில் சிறுகதையாக எழுதினார். தஞ்சை மராட்டிய மன்னரின் ஆட்சிக்கு மாறியதில் உள்ள உண்மைகளைப் பல எழுத்தாளர்கள் தங்களின்

எண்ணப் போக்கிற்கேற்ப எழுதியுள்ளார். தஞ்சையில் நாயக்கர் ஆட்சி மாறி மராட்டியர் ஆட்சி ஏற்படுவதற்குக் காரணமானவர் வேதியர் வெங்கண்ணா என்பதில் இரண்டு கருத்தில்லை. அவர் செயல் துரோகமா, தியாகமா என்பதிலேதான் கருத்து வேறுபாடெல்லாம். சிறுகதை எழுதிப் புகழ் பெற்ற கு.ப. இராசகோபாலன் 'துரோகமா?' எனும் சிறுகதையில் வெங்கண்ணாவின் செயலை நியாயப்படுத்தியுள்ளார். வெங்கண்ணா செய்தது தியாகமென எடுத்துரைத்துள்ளார். வெங்கண்ணாவின் செயல் நாட்டுப்பற்றினைக் கருத்தாகக் கொண்டுள்ளதெனத் தம் சிறுகதையில் வரைந்துள்ளார். இதில் மாறுபட்ட கருத்து கொண்டவர்களும் உண்டு. எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், 'தஞ்சை நாயக்கர்' எனும் நூலில் "இட்ட சோற்றைப் பிடுங்குவது போல் தேடித்தந்த அரசைப் பறித்தாக வேண்டும்" என்று கங்கணம் கட்டிச் செயல்பட்ட வெங்கண்ணாவின் போக்கைக் கண்டித்துள்ளார். அண்ணாவும் வரலாற்றுப் பின்னணியில் இருந்து ஆராய்ந்து வெங்கண்ணாவின் செயல் துரோகமானதே எனச் சிறுகதையில் உறுதிப் படுத்தியுள்ளார். தமிழக முதல்வரான கலைஞரும் அண்ணா வழியில் நின்று வெங்கண்ணாவின் இரண்டகச் செயலை 'ராயசம் வெங்கண்ணா' எனத் தலைப்பிட்டு ஓரங்க நாடகமாகத் தீட்டியுள்ளார். (ராயசம் வேலை என்றால் கணக்கெழுதும் வேலை, கணக்கப்பிள்ளை.) எழுத்தாளர்களால் போற்றியும் தூற்றியும் கூறப்பட்டுள்ள வெங்கண்ணாவின் செயல் வினாக்குறியாக இருந்தது. அதற்கு அண்ணா இச்சிறுகதையின் வாயிலாகத் தெளிவான விடையளித்துள்ளார்.

கி.பி. 1673இல் தஞ்சையை விஜயராகவ நாயக்கர் ஆண்டு வந்தார். அப்பொழுது வெங்கண்ணா எனும் வேதியர் அரசாங்கக் கணக்கெழுதும் பணியில் அமர்த்தப்பட்டார். மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கருக்கும் தஞ்சையை ஆண்ட விஜயராகவ நாயக்கருக்கும் பகைமை ஏற்பட்டது. மதுரை சொக்கநாத நாயக்க மன்னனின் படைகள் தஞ்சையை முற்றுகை இட்டன. நடைபெற்ற போரில் தஞ்சை மன்னர் விஜயராகவ நாயக்கரின் குடும்பம் முற்றிலும் அழிக்கப்பட்டது. தஞ்சை ஆட்சி, மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கரின் ஆட்சியின் கீழ் வந்தது. மதுரை சொக்கநாத நாயக்கர் தம் சிற்றன்னையின் மகனும் தம் தம்பியுமான அளகிரி நாயக்கரைத் தஞ்சைக்கு அரசப் பிரதிநிதியாக நியமித்தார். அளகிரி நாயக்கர் தஞ்சை மன்னராகப் பொறுப்பேற்றவுடன் தஞ்சை மக்களிடமிருந்து பெற்ற வரிப்பணத்தை மதுரை மன்னருக்கு முறையாகச் செலுத்தி வந்தார்.

தஞ்சை மண்ணில் விஜயராகவ நாயக்கருக்கு எதிராக நடந்த போரினால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அது அளகிரிக்கு மிகுந்த கவலையைத் தந்தது. 'விஜயராகவ மன்னனுக்குத் திருவரங்கப் பெருமாள் மீது அளவு கடந்த பக்தி, அதனால், அரண்மனைத் தோட்டக் கோவிலில் திருமாலைத் துயில் கொள்ளும் நிலையில் அமைத்து வழிபட்டு வந்தார் என வெங்கண்ணா அளகிரியிடம் கூறினார். இருவரும் தோட்டத்தில் உள்ள கோயிலுக்குச் சென்றனர். அரங்கப்பெருமானின் சிலையை வெங்கண்ணா தூக்கினார். அச்சிலையின் அடியில் பொற்குவியல் புதையல் இருக்கக் கண்டனர். வேதியர் வெங்கண்ணாவை மன்னர் ஆரத்தழுவிக் கொண்டார். மன்னர் தம் அரசவையில் வெங்கண்ணாவுக்கு ஆலோசகராகப் பதவி உயர்வு அளித்தார். கணக்கெழுதி வந்த வெங்கண்ணாவின் நிலை ஒரேயடியாகவும் உயரத்திற்குச் சென்றது. புதையல் கிடைத்த மகிழ்ச்சியில் தஞ்சை மன்னர் அளகிரி வெங்கண்ணாவின் மீது மிகுந்த மதிப்பினை வைத்திருந்தார். இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு வெங்கண்ணா அளகிரியை மதுரையை ஆளும் சொக்கநாத நாயக்கரிடமிருந்து பிரித்துவிடத் திட்டம் தீட்டினார். அளகிரிக்கும் வெங்கண்ணாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு வளர்ந்தது. வெங்கண்ணாவை அளகிரி நாட்டை விட்டே துரத்தி அடித்தார்.

நாட்டைவிட்டே வெளியேற்றப்பட்ட வெங்கண்ணா அளகிரியை வஞ்சம் தீர்த்துக் கொள்ளப் பல வழிகளிலும் சிந்தித்தார். தஞ்சையை முன்பு ஆண்ட விஜயராகவ நாயக்கர் குடும்பம் முற்றிலும் அழிக்கப்படவில்லையென்றும், விஜயராகவ நாயக்கரின் வாரிசு - அவன் மகன் நாகபட்டினத்தில் ஒரு வணிகர் வீட்டில் உயிருடன் இருப்பதாகக் கேள்விப்பட்டார். அந்த வாரிசைக் கண்டு உள்ளம் பூரித்தார். அவனைக் கொண்டே அளகிரியைப் பழிவாங்கத் திட்டம் தீட்டினார். சிறுவனாக இருந்த அவனைப் பீஜப்பூர் சுல்தானிடம் அழைத்துச் சென்று தஞ்சைக்கு மன்னனாக ஆக்குமாறு வெங்கண்ணா வேண்டிக் கொண்டார். சுல்தானும் வெங்கண்ணாவின் வேண்டுகோளை ஏற்றுத் தளபதி வெங்காஜியின் தலைமையில் தஞ்சையை நோக்கிப் பெரும் படையை அனுப்பி வைத்தார். இப்படையைக் கண்டு அளகிரி அச்சமடைந்தார். மதுரை சொக்கநாத நாயக்கரின் உதவியை நாடினார். அவர் உதவிட மறுக்கவே, அளகிரி தனிமைப்படுத்தப் பட்டார். பீஜப்பூர் சுல்தானின் படை தஞ்சையை முற்றுகை யிட்டது. அளகிரி அப்படையைக் கண்டு அஞ்சி அரியலூர் காட்டில் மனநோயாளியாக அலைந்து திரிந்து பின் மடிந்தார். தஞ்சையின் மன்னராக விஜயராகவ நாயக்கரின் மகன்

செங்கமலதாசன் முடிசூட்டப்பட்டான். பீஜப்பூர் சுல்தானின் படையினர் பெரும்பொருளைப் பெற்றுக் கொண்டு அவர்களது தாயகம் திரும்பினர். தன்னைக் குழந்தையிலிருந்து எடுத்து வளர்த்த நாகை வணிகனுக்குத் தளபதி பதவியையும் பிரதானி பதவியையும் அளித்தான். தனக்கு முதலமைச்சர் பதவி கிடைக்குமென எதிர்பார்த்த வெங்கண்ணாவின் எண்ணத்தில் மண் விழுந்தது. இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதாகச் சூளுரைத்துச் சென்ற வெங்கண்ணா பீஜப்பூர் சுல்தானின் அருந்துணையை நாடினார்.

பீஜப்பூர் சுல்தானின் படைகள் இரண்டாவது முறையாகத் தஞ்சையை நோக்கி அணிவகுத்துச் சென்றன. தஞ்சை மன்னன் செங்கமலதாசன் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டான். மராட்டிய மாவீரன் வெங்காஜி தஞ்சையின் மன்னராக முடி சூட்டிக் கொண்டான். தஞ்சை மராட்டியர் கைக்கு இடம்பெயர்ந்தது. இத்தகைய நாட்டுப்பற்று அற்ற செயலுக்கு முழுமுதற் காரணம் தன்னலமே குடிகொண்ட வெங்கண்ணாவே என அண்ணா தம் சிறுகதையில் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்ணாவின் கதைமாந்தர்களில் அவரது கடுஞ் சினத்திற்கு ஆளானவர்களுள் இரண்டகச் செயல்புரிந்த வெங்கண்ணாவே முதன்மையானவர். இதனை, 'தஞ்சை வீழ்ச்சி' என்ற சிறுகதையில்

> அரசாங்கக் கணக்கெழுத அமர்த்தப்பட்டவன் தான். ஆனால், அவன் தஞ்சையில் தலையெழுத்தை மாற்றி எழுத வேண்டும் என்ற துணிவு கொண்டிருக் கிறான். வேதியன்-வஞ்சகன்- வெங்கண்ணா என்னும் பெயருடையான்-என் கற்பனையில் உதித்தவனல்ல- உண்மை உருவம் தஞ்சையின் உரிமைக்கு உலை வைத்த உலுத்தன்

எனக் கூறியுள்ளார்.

தஞ்சை வீழ்ச்சிக்குரிய காரணத்தைச் சில சொற்களால் சிந்திக்க வைக்கிறார்.

> வெங்கண்ணா இரு முறை அரசுகளைக் கவிழ்த்தான். நாட்டை நாசப்படுகுழியில் தள்ளி னான். இதுபோலப் பரந்த இந்தத் துணைக் கண்டத்தில் வஞ்சகம் வென்றதைக் காட்டும், வேதனை தரும் நிகழ்ச்சிகள் பலப்பல நடைபெற்றன. அரசுகள் அழிக்கப்பட்டன. அறம் அழிக்கப்பட்டது. நாடு சீரழிவுப்பட்டது. சுயநலமும் , சூழ்ச்சித் திறனும்,

> இனவெறியும், வைதீக வெறியும் கொண்டவர்கள் நாட்டுக்கு ஏற்படுத்திய நாசம் ஒன்றிரண்டல்ல. உள்ளத்தைக் குலுக்கக் கூடிய சம்பவங்கள் பலப்பல. 'தஞ்சை வீழ்ச்சி' அது போன்ற சம்பவங்களிலே ஒன்று "சரிதம் தரும் எச்சரிக்கை''

என வரைந்துள்ளார்.

> கமண்டல நீருக்கும் மக்களின் குருதிக்கும் இருந்து வந்த பயங்கரத் தொடர்பு மறைக்கப்பட்டு விடுகிறது. மங்கிக் கிடக்கும் உண்மைகள் தேய்ந்து தெரியும் சம்பவங்கள் - இவைகளிலே ஒன்று தஞ்சை வீழ்ச்சி. வீரம் வஞ்சகத்தால் வதைக்கப்பட்ட விபரீதச் சம்பவம்.

எனக் கூறி வரலாற்று ஆசிரியர்கள் உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

தஞ்சை மராட்டியருக்கு அடிமைப்பட்டதற்குக் காரணம், பதவி வெறியும் தன் இன நலனும் கருத்தில் கொண்டு செயல்பட்ட வேதியர் வெங்கண்ணாவே என்பதனைத் தெள்ளத் தெளிவாகக் காட்டியுள்ளார். தமிழர்களின் ஏமாளித்தனத்தையும், ஆரியர்களின் சூழ்ச்சித் திறனையும் எடுத்துக்காட்டி வீழ்ந்துபட்ட தமிழகம் உணர்ச்சி பெற இச்சிறுகதை வாயிலாக எழுச்சி முரசம் கொட்டியுள்ளார்.

அண்ணாவின் வரலாற்றுச் சிறுகதைகள் அனைத்தும் ஆரியர்களின் சூழ்ச்சியால் தமிழர்கள் வீழ்த்தப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன. மாற்றாரின் வஞ்சகச் செயலிலிருந்து தமிழர்கள் விடுதலை பெற்று வீறு கொள்ளப் பகுத்தறிவுக் கருத்துக்களை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதே அண்ணாவின் வரலாற்றுச் சிறுகதைகள் தரும் சிந்தனையாகும்.

படைத்தளபதி பரஞ்சோதியாரைச் சைவ சமயக் காழ்ப் புணர்ச்சி காரணமாக வைணவம் வஞ்சம் தீர்த்துக் கொண்டது. வைதீக சமயம் புத்தமதத்தின் வளர்ச்சியைத் தடுத்தது. வைதீகம் இசுலாமியத்தை எதிர்த்துச் சதி செய்தது. கிறித்துவ மதம் பரவுவதைக் கண்டு சினங் கொண்டது. அண்ணா தம் வரலாற்றுக் கதைகளில் சமயத்தின் பெயரால் நடந்த சூழ்ச்சிகளையும் சமயத்தை நம்பி வாழ்வோர் மேற்கொள்ளும் இழிசெயலையும் சான்றுகளோடு எடுத்துக் காட்டியுள்ளார்.

'பவளபஸ்பம்' என்ற சிறுகதை புத்தசமயத்திற்கு எதிராக வைதீக சமயம் விளைத்த அழிவை விளக்குவதாக அமைந்துள்ளது.

அக்கதையில் வரலாற்றுக் கதைகளில் காணப்படுவது போல் மன்னனும் மக்களும் காணப்படுகின்றனர். ஆயினும் இது வரலாற்றுக் கதையன்று; இது வரலாற்றுக் கற்பனைக் கதையாகும். இந்தியாவில் தோன்றிய புத்த சமயத்தை அதுதோன்றிய மண்ணில் பரவவிடாமல் வைதீக சமயம் தடுத்ததைக் கருவாகக் கொண்டு தீட்டப்பட்ட ஓவியம் 'பவளபஸ்பம்'.

அம்பலவாணக் கவிராயர் மகள் மருதவல்லியிடம் புத்தசமயக் கோட்பாடுகளை எடுத்துக் கூறிவந்தார். அவளும் அக் கருத்துக்களில் நாட்டம் மிக்கவளாக விளங்கினாள். நவகோடி என்பவரை மணந்து கொண்டாள். அந்நாட்டு மன்னன் புத்தமதக் கருத்துக்கள் நாட்டில் பரவுவதற்கு எதிராக இருந்தான். நவகோடியை மன்னன் தன் கைப்பாவையாக மாற்றினான். நவகோடி தன் மனைவி புத்தமதக் கருத்துக்களினின்று விடுபடுவதை எதிர்பார்த்தான். அவள் மறுக்கவே அவளுக்கு எண்ணரிய இன்னல்களை விளைவித்தான்; எத்துணை இடர் வந்த போதிலும் அவள் புத்தமதத்தினின்று வெளிவர விரும்பவில்லை. அக்கொள்கையில் மன உறுதியோடு இருந்தாள். மன்னனிடம் தயவைப் பெற்ற நவகோடி மனைவிக்குப் பல்வேறு வகையிலும் தொல்லை தந்து கொண்டே இருந்தான். மக்கள் பிணியால் வாடினர்; அவர்களது பிணியைப் போக்கத் தந்தையின் உதவியோடு பவள பஸ்பம் தயாரித்துக் கொடுத்தாள்.

மன்னனும் மருதவல்லியின் கணவனும் மருதவல்லிக்குத் தொடர்ந்து பல இன்னல்களைக் கொடுத்துக் கொண்டே இருந்தனர். புத்த சமயக் கருத்துக்களைப் பரவவிடாமல் தடுத்த மன்னனையும் அவள் கணவனையும் எதிர்த்துப் போராட முடியாத மருதவல்லி மரணத்தைத் தழுவினாள்.

புத்தமதம் நாட்டில் பரவ வொட்டாமல் வைதீக சமயம் தடுத்த கொடுமையை இக்கதையின் வாயிலாகப் புலப் படுத்துகின்றார். இக்கதையில் வரும் மருதவல்லி குண்டலகேசிக் காப்பியத்தின் தலைவி குண்டல கேசியை நினைவூட்டுபவளாக விளங்குகின்றாள். 'கலிங்கராணி' எனும் வரலாற்றுக் கற்பனைப் புதினத்தில் ஆரியத்தின் செயல்களைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார். மக்களின் சமய நம்பிக்கையையும் அவற்றை நம்பிப் பிழைப்பு நடத்தும் பதஞ்சலி போன்ற பாகீரதி கோயில் பூசாரிகளின் அட்டூழியங்களையும் எடுத்துரைத்துள்ளார். மலர்புரி அரசி கடவுள் மீது கொண்டுள்ள பக்தியைப் பூசாரி தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு மகேசுவர நம்பிக்கையைக் கற்பித்து அவளை நம்புமாறு செய்து விடுகின்றான். மனிதனை

மகேசுவரன் என எண்ணிய மலர்புரி அரசி, ஆரியரின் சூழ்ச்சியால் மையல்கொண்டு மகவொன்றைப் பெற்று விடுகின்றாள். ஆரியன் அரசிடம் பெற்ற செல்வாக்கால் மக்களை மந்திர தந்திரங்களால் அச்சுறுத்தி வந்தான். தன் எண்ணம் போல் அரசியையும் மக்களையும் ஏமாற்றுவதற்குச் சமய நம்பிக்கையை அடித் தளமாகக் கொண்டான்.

சமயத்தின் பெயரால் தமிழர்கள் ஆரியர் சூழ்ச்சிக்குப் பலியாகிய கொடுமையை இக்கதை வாயிலாக வெளிப் படுத்தியுள்ளார். அண்ணாவின் தொடக்ககாலக் கதைகளில் ஒன்றாக இருப்பதால், ஆரியத் தாக்குதலும் சமயச் சாடலும் மிகுந்துள்ளன. ஆரியர்களின் சூழ்ச்சியை அறியாத தமிழர்கள், அவர்களது கூற்றுகளை உண்மையென நம்பி ஏமாறும் அவல நிலையைக் கலிங்கத்துப்பரணியில் வரும் காலக்கிழவர் வாயிலாக அண்ணா வெளிப்படுத்துகின்றார்.

> ஆலயமென்பது ஆரியக் கோட்டை என்பதும் தந்திர யந்திரம் என்பதும் பாமரருக்குப் பலிபீடம் என்பதும் சிந்தனைச் சுதந்திரத்தை இழந்தவர் சிக்கித் தவிக்கும் சிலந்திக் கூடமென்பதும், அவருக்குத் தெரியும். அதனைத் தெரிந்திருந்த தமிழரோ அதனை மறந்தனர். சூதுகளைச் சூத்திரங்கள் என்று நம்பியும், மமதையாளரின் போக்கை மகிமையென்றும் எண்ணியதுமானவை நிலை பெற்றது கண்டு வாடினர்.

மக்களின் சமய நம்பிக்கையைத் தவறாகப் பரப்பிச் சுரண்டிப் பிழைக்கும் ஆரியரின் சூழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

### சமயவாதிகளின் புரட்டு

சமயத்தின் காவலர்களாக விளங்கும் மடாதிபதிகளின் கழிகாமச் செயலையும், அவர்களது இரட்டை வாழ்க்கையையும் பல கதைகளிலும் கூறியுள்ளார். மக்களுக்கு அறநெறியைக் கூறி ஒழுக்க நெறியை வலியுறுத்த வேண்டிய ஞானிகள் ஒழுக்கக் கேட்டிற்குத் துணையாக இருப்பதைக் 'கடைசிக் களவிலு'ம், சிறையிலிருந்து தவறிய சொக்கன் சாதுபண்டாரம் எனக் கூறிக் கொண்டு ஏமாற்றித் திரிவதை 'அன்னதானத்திலு'ம், சந்நியாசி வேடம் ஏற்றுக் கன்னிவேட்டையில் கருத்தழித்தவன் கதையைத் தேடியது 'வக்கீலை' என்ற சிறுகதையிலும், திருடர்கள் சாமியார் வேடத்தில் ஏமாற்றித் திரிவதை 'அப்போதே சொன்னேன்' என்ற கதைகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

**சமயத்தின் கடமை**

பசித்தவனுக்கு உணவளிக்காத சமயமும் அதன் வழி எழுந்த ஆலயமும் உண்மைச் சமய நெறியைத் தோற்றுவிக்கப் பயன்படாதென்பதைக் 'கலிதீர்த்த பெருமாள்' என்ற கதையிலும் உணர்த்தியுள்ளார். 'ரங்கோன் ராதா', 'பார்வதி பி.ஏ.' போன்ற புதினங்களில் சமயச் சாயல்களில் இருப்பவர்கள் சாதிப் பாதுகாப்பிற்கும், தனியுடைமை வளர்ச்சிக்கும், மூடநம்பிக்கைகளைப் பெருக்குவதற்கும் எப்படி துணை போகிறார்கள் என்பதனைக் காட்டுகின்றார். சமயத்தின் பெயரால் ஜாதகம், சோதிடம் எனக் கூறி ஏமாற்றுவதை எள்ளி நகையாடுகிறார். 'பலாபலன்', 'பேய் ஓடிப் போச்சு', 'சுடுமூஞ்சி' முதலான கதைகளிலும் விளக்கியுள்ளார். இந்து சமயத்தைச் சார்ந்தோர் முதலில் யாருக்கு மரபுரிமை மரியாதை, கிடைக்க வேண்டுமென்பதற்காகச் சாமியை அறையில் வைத்துப் பூட்டிய அவலத்தைக் 'கருப்பண்ணசாமி யோசிக்கிறார்' என்றும் கிறித்துவ மதம் பரவுவதைச் கண்டு சமயபுரத்து அம்மன் கலக்கம் அடைவதாகக் கற்பனை செய்து 'சமயபுரத்து அம்மன் தொடுக்கும் மானநஷ்ட வழக்கு' எனத் தீட்டியுள்ளார்.

> சமயம் என்பது மனிதனின் மாண்புகளை உருவாக்குவது. ஒழுங்குபடுத்துவது; உயர்த்துவது. இதனையே மறைமலையடிகள், திரு.வி.க. போன்றோர் சமயக் கொள்கையாகக் கொண்டனர். சமயத்தைப் பற்றிய தமது கண்ணோட்டத்தில் அண்ணா ஒருமொழிவில் தெளிவு படுத்தியுள்ளார். 'சமயம் என்பது மனிதனின் பிரச்சினை களைத் தீர்த்து வைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அவனுக்கு அது சரியான பாதையைக் காட்ட வேண்டும். மக்களின் ஒரு பகுதியினரைத் தீண்டத் தகாதவர்களாய்க் கருதிச் சமூக ஏற்றத் தாழ்வைக் கற்பிக்கும் ஒரு மதத்தை யாரும் ஏற்க முடியாது. மென்மையாகவும் அழகாகவும் துவக்கத்தில் இருக்கும் மெத்தை, தலையணைகள் தான் நாளடைவில் மென்மை குறைந்து அவற்றின் இடுக்குகளில் தேள் குஞ்சுகளும் இருக்கும். அப்போது படுக்கையை உதறிப்போடுவது போல் நாம் மதத்தில் படிந்துள்ள மாசுகளைப் போக்கவேண்டும். மதத்தில் உள்ள அழுக்குகளை அகற்றும், பணிக்கு என்னை நான் ஒப்படைத்து வருகிறேன்.

எனச் சமயம் பற்றிய கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். (சேது நம்மவன், (தொகு.); அறிஞர் அண்ணாவின் மாதுளை, ப.30.)

அண்ணாவின் நோக்கம் சமயத்தை ஒழிப்பதன்று; சமய நெறியைத் தூய்மைப் படுத்துவதேயாகும். சமயத்தில் மலிந்துள்ள போலிக் கொள்கைகளையும் அதனை மேற்கொண்டுள்ளோர் செய்யும் தீய செயல்களையும் கண்டிக்கும் கொள்கையினராவர். கடவுள் இல்லையென்ற கருத்துடையவரல்லர். திருமூலர் கூறியுள்ள 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கருத்தில் நம்பிக்கையுள்ளவர், இதனை ஒரு கட்டுரையில், 'நாங்கள் நாத்திகரல்ல; ஒன்றே குலமும் ஒருவனே தேவன் என்ற உள்ளத்துறையும் உண்மையை உரைத்தோம் எனத் தெளிவு படுத்தியுள்ளார்.

## சாதி ஒழிப்பு

பண்டைத் தமிழகத்தில் பிறப்பின் அடிப்படையான பாகுபாடுகள் இல்லை; தொழிலடிப்படையில் அமைந்த பாகுபாடுகளே இருந்தன. ஆரியர்களின் வருகைக்குப் பின்பு பிறப்பின் அடிப்படையிலான சாதிப்பாகுபாடுகள் தோன்றலாயின. இதனை அறிஞர் ராகுல சாங்கிருத்தியாயன், 'ஆரியர்கள் வந்தபின்பு அதாவது 3500 வருடங்களுக்கு முன்னாலே கருப்பன் வெள்ளையன் அல்லது சூத்திரன் ஆரியன் என்ற பிரச்சினை இந்தியாவில் தோன்றிவிட்டது' (ராகுல சாங்கிருத்தியாயன், பொதுவுடைமை தான் என்ன? கண. முத்தையா, மொ.பெ., ப.32) எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆரியர்கள் தங்களை உயர்ந்தவர்களாக்கிக் கொள்ளும் வகையில் பிறப்படிப்படையிலான பாகுபாடுகளை உருவாக்கினர். அதைப் பாதுகாக்கும் வகையில் மனுதர்மச் சாத்திரம் எழுந்தது 'மனித ராசி பல்கும் பொருட்டாகவே பிரம்ம சத்திரிய வைசிய சூத்ர என்ற நால் வருணத்தையும் வேதஞானம் புவிபுரத்தல் செல்வ மீட்டல் ஏவல் புரிதல் என்ற கடப்பாடுகளின் வழியே வகுத்து வைத்தார். இவர்கள் இறைவனுடைய முகம், தோள், தொடை, பாதம் ஆகிய பகுதிகளினின்றும் தோற்றமுற்றனர் என்கிறது மனுதர்ம சாஸ்திரம். (மனுதர்ம சாஸ்திரம், திருலோக சீதாராம் (மொ.பெ.பக்.22-23)). தொல்காப்பியர் காலத்திலே இந்நால் வருணக் கருத்துக்கள் தமிழகத்தில் கால் கொள்ளத் தொடங்கி விட்டன. பொருளதிகார மரபியலில் அந்தணர் (நூற்பா 1570), அரசர் (நூற்பா 1572), வைசிகர் (நூற்பா 1578), வேளாளர் (நூற்பா 1581) ஆகியோரின் தோற்றமும் தொழிலும் சொல்லப் படுகின்றன. புறநானூற்றிலும்,

**வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண்படுமே**

எனும் பாடல் பகுதியில் மேற்பால்-கீழ்பால் எனும் உயர்வு தாழ்வோடு கூடிய நாற்பால் பகுப்பு ஏற்பட்டுவிட்டதைக் காட்டும்.

முதல் புரட்சியாளரான திருவள்ளுவர் பிறப்பின் அடிப்படையிலான பாகுபாட்டை எதிர்த்து,

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

என முழங்கினார். பின்னர்ச் சித்தர்களும் சாதியக் கொடுமைகளைக் கடுமையாகச் சாடினர். சிவவாக்கியர்,

***சாதி ஆவது ஏதடா, சலந்திரண்ட நீரெல்லாம்***
***பூதவாசல் ஒன்றல்லோ?***
***பூதம் ஐந்தும் ஒன்றல்லோ?***
***காதில் வாளி காரை கம்பி பாடகம் பொன் ஒன்றல்லோ?***
***சாதி பேதம் ஓதுகின்ற தன்மையென்ன தன்மையே?***

என வினாத்தொடுத்தார். சுவாமி விவேகானந்தரும் இந்தியாவின் உண்மையான அரசியல் வீழ்ச்சிக்கும் இனத்தின் வெற்றிக்கும் சாதியின் மோசமான அமைப்பு ஊன்று கோலாக அமைந்திருப்ப தாகக் குற்றம் சாட்டியுள்ளார் (Swami Vivekananda, The Complete Works of Swami Vivekanandar. Vol. VIII, p.2412) சாதிப்பாகுபாடுகள் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இருப்பதை நன்கு உணர்ந்த அண்ணா,

> இந்த நாட்டிலே ஜாதிதான் மக்களுக்கும் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்தில் கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனத்திலே இடக்கு நோயைப் புகுத்தி விட்ட முறை. எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை - சமத்துவத்தை- சமதர்மத்தை நாம் காண வேண்டுமானால் முதலில் சாதி தொலைந்தாக வேண்டும்!

எனக் கூறியுள்ளார் (சி.என். அண்ணாதுரை, சமதர்மம், ப.5)

மனிதனுடைய அறியாமையையும் அகங்காரத்தையும் வளர்க்கச் சாதி பயன்பட்டது. தேளுக்குக் கொடுக்கிலும், பாம்பிற்கு நச்சுப் பல்லிலும், ஆட்கொல்லிக்குக் கோரப்பல்லிலும் விஷம் இருப்பதுபோல ஒருவனை ஒருவன் அடித்துக் கொல்லவும், அட்டைபோல் சமுதாயத்தை உறிஞ்சவும் மதவாதிக்கும் சாதி பயன்பட்டு வருகிறது. இதனை ஒழிக்கவே அண்ணா கதைக் கோடாரியைக் கையில் எடுத்தார்.

காதல் மணத்திற்குச் சாதி தடையாக இருப்பதைத் தங்கத்தின் காதலனிலும், 'சிங்களச் சீமாட்டி'யிலும் வெளிப்

படுத்தியுள்ளார். மேல் சாதிக்காரர்களின் சாதிப்பிடிப்பைக் 'குமரிக்கோட்டத்தி'ல் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

**நான்வைசியகுலம்**
**நீ உப்பிர ஜாதி**

> உப்பிர ஜாதியில் பெண் கொள்ளும் வழக்கம் வைசியக் குலத்தில் கிடையாதே. பரம்பரை பரைம்பரையாக வாழ்ந்த குடும்பம் எங்கள் குடும்பத்திலே ஜாதியை விட்டு ஜாதியில் கல்யாணம் செய்வதில்லையே.

என இறுமாப்புடன் பேசிய குழந்தை வேலுச் செட்டியார் சூழ்நிலையின் நெருக்கடியால் உப்பிர சாதிப் பெண்ணை மணந்து கொள்கிறார். சாதி வெறி கொண்ட செட்டியார் உப்பிர சாதிப்பெண்ணை மணந்து கொண்டதற்குக் காலமும் துணைபுரிந்ததைக் குமரிக்கோட்டத்தின் முன்னுரையில் அண்ணா:

> காலம் மாறுகிறது என்பதை அறிய மறுக்கும் வைதீகர்களின் சிலருக்குத் தமது சொந்த வாழ்க்கையிலே நேரிடும் சிலபல சம்பவங்கள் மனமாற்றத்தை ஆச்சரியகரமான விதத்திலும் வேகத்துடனும் தந்து விடுகின்றன

எனக் குறிப்பிட்டுள்ளார்.

சாதி ஒழிப்புக் கதைகள் என்றவுடனே பார்ப்பன எதிர்ப்பை மட்டுமே முன்நிறுத்தவில்லை. பார்ப்பனத் தமிழர்களும் தம்மைத் தாமே சாதி நிழலில் மறைத்துக் கொண்டு ஏமாற்றி வருவதை எடுத்துக்காட்டுகின்றார். அண்ணாவின் கதைகளில் பார்ப் பனர்களைவிட முதலியார் பிள்ளைமார் செட்டியார் முதலான கதை மாந்தர்களே அதிகம் இடம் பெற்றுள்ளனர். சாதி ஒழிப்பில் தீவிரம் கொண்ட அண்ணா சாதியமைப்புக் குலையாமல் நிலை பெற்றிருப்பதன் காரணத்தைப் புலப்படுத்துகின்றார்.

> பேதம் வெறும் மன உணர்ச்சியால் மட்டுமே ஏற்படுவதல்ல. பேதம் இலாபம் தருகிறது எனவேதான் அதனை விட்டுவிட மனமில்லை. பேதத்தால் பிழைப்பவர்களுக்கு, ஓநாய்க்கு இரத்தபானத்தில் சுவையிருக்கு மட்டும் ஜீவகாரண்யத்தை அது எப்படி வரவேற்க முடியும்? பேதமும் பலகாலமாக இலாபம் தரும் சாதனமாக இருப்பதாலேயே அதற்கு 'சாகாவரம்' தருகின்றனர்,

அதனால் இலாபம் பெறுகிறவர்கள். பேதத்தால் வரும் இலாபம் ஒழிக்கப்பட்டால்தான் தோழமை இருக்க முடியும். இந்தத் தோழமைதான் சமத்துவத்தின் கனி, சமதர்ம மணம்.

(சி.என். அண்ணாதுரை, சமதர்மம், ப.10).

அண்ணா நோய்க்குரிய காரணத்தைத் தெளிவாக அறிந்ததால் அதனைப் போக்கும் வழியில் கதைகளைப் படைத்துள்ளார்.

'தீட்டுத்துணி' என்ற கதையில் மேல்வகுப்பினரின் ஆணவத்தையும் தீண்டப்படாதவர்களின் அவலநிலையையும் எடுத்துக் காட்டியுள்ளார். சுப்பிரமணிய ஐயர் வீட்டில் வேலை பார்க்கும் அந்தோணி என்ற தீண்டத்தகாத வகுப்பைச் சார்ந்தவனை அவ்வீட்டில் தீட்டுத் துணியைத் திருடிவிட்டான் எனக்கூறி ஒரு மரத்தில் இருகைகளையும் இருகக் கட்டி அடித்தனர். ஊரில் உள்ள பெரியவர்களும் ஐயருக்கு ஆதரவு தந்து அந்தோணியைக் கண்டித்தனர். உழைப்பை நம்பி வாழும் இனம் தாழ்த்தப்படுவதும் உழைப்பை உறிஞ்சும் இனம் ஏற்றம் பெறுவதையும் இக்கதையில் காட்டியுள்ளார்.

## மூடநம்பிக்கைகள்

மனித வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையில், பட்டறிவால் சிறப்பது. அதில் அச்சங் காரணமாகப் பிறந்த சில நம்பிக்கைகளே, ஆராய்ச்சிக்கும் அறிவியலுக்கும் இடந்தராத எண்ணங்களே, உண்மைக்கு மாறானவைகளே, சமூகத்தில் மூடநம்பிக்கைகளாகக் கல்லாதவர்களிடத்தும் கற்றும் எதனையும் ஆய்ந்து பார்க்காது கண்மூடிப் பின்பற்றுவோரிடத்தும் காணப்படுகின்றன. 'மனிதனுக்குச் சில பொருட்களோ நிகழ்ச்சிகளோ விளங்காவிட்டால் அச்சமடைகின்றான். அறியாமையினால் எழுந்த இத்தகைய நம்பிக்கை மூடநம்பிக்கை எனப்படும்' (கலைக்களஞ்சியம், தொகுதி 8, ப.466).

அறியாமையே மூடநம்பிக்கைக்கு அடிப்படையாகும். அது நம்பிக்கையை மேல்தளமாகக் கொண்டது. வீண்கனவே அதன் கோபுரக்கலசமாகும். அறியாமையென்ற தாய் பெற்ற குழந்தையே மூடநம்பிக்கையாகும். (Colonel R.G. Ingersoll, Lectures and Essays, Second Series,p.141). மூடநம்பிக்கை பற்றிய இங்கர்சாலின் கருத்துக்கள் அண்ணாவுக்கு வழிகாட்டியாக அமைந்தன. சிங்கார வேலரின் பகுத்தறிவுக் கருத்துக்களும் துணைபுரிந்தன. முடநம்பிக்கைகளை அறிந்து முறியடிக்கக் கதைகளைப் படைத்தார். மக்கள் சாதகம், சோதிடம் ஆகிய இவற்றை

நம்பிக் கெடுவதையும், மந்திரவாதிகளின் புரட்டையும், அட்டூழியங்களையும் வெளிப்படுத்தினார். மாந்திரீகம், பில்லிசூனியம் ஆகிய மூடநம்பிக்கைகளையும் வெறுத்தார். ஆடுமாடுகளைப் பலியிடுவதையும் சாடினார்.

அறுபது வயது நிரம்பிய மாரியப்ப பிள்ளைக்குப் பதினாறு வயதே நிரம்பிய சாரதாவைப் பெற்றோர்கள் மணம் முடித்துக் கொடுக்க இருப்பதை அறிந்து சாரதா நோய் வாய்ப்பட்டாள். அவள் உடல் இளைக்க ஆரம்பித்தது. உண்மையான காரணத்தை அறியாத அவளது பெற்றோர் ஐம்பதுமைலுக்கு அப்பாலுள்ள மாரிக்குப்பம் என்ற ஊரிலுள்ள பூசாரியிடம் குளிகை பெற அழைத்துச் சென்றனர். அப்பூசாரி கட்டிய மாளிகையும் அவர் வைத்துள்ள நிலபுலன்களும் அவருக்குள்ள செல்வாக்கும் மக்களின் பேதைமையைக் காட்டுவதாக உள்ளதைக் 'கபோதிபுரக்காதலி'யில் கூறியுள்ளார். தருமலிங்க முதலியாரின் முதல் மனைவி ரங்கம் தன் கணவனின் பொருளாசையால் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாள்; உடல் மெலிவுற்றாள். இதனையே காரணமாகக் கொண்டு அவளுக்குப் பேய் பிடித்து விட்டதாகக் கூறி மந்திரவாதியிடம் அழைத்துச் சென்றனர்; அவளது தந்தையையும் கணவர் நம்பவைத்தார். ரங்கம் வேதனையால் துடித்தாள். மக்களின் அறியாமையை மூலதனமாகக் கொண்டு பேய், பிசாசு என்று ஏய்த்துப் பிழைக்கும் எத்தர்களின் போக்கை ரங்கோன் ராதாவில் எள்ளி நகையாடுகிறார். பேயோட்டும் மந்திரவாதிகள் பெற்றுள்ள செல்வத்தையும், செல்வாக்கையும் ரங்கம் வாயிலாக அண்ணா விரித்துரைத்துள்ளார்.

> மகாராஜாக்களும் மிட்டாதாரர்களும் ஐகோர்ட் ஜட்ஜுகளும் தந்த சட்டிபிகேட்டுகள் ஒரு கத்தை வைத்துக் கொண்டிருக்கிறான். பெயர்தான் பக்கிரியே தவிர, ஆள் ஜமீன்தாரைப் போலத்தான் கையிலே காப்பு, காதுகளிலே கடுக்கன், கழுத்திலே தங்கச் சங்கிலி அதிலே ஏதோ ஒரு பெரியரட்சை, கல்லிழைத்தது. பூசை அறையிலே வெள்ளிப் பாத்திரங்கள் இவ்வளவு வைபம் இருந்தன.

மந்திரவாதிகள் மக்களிடம் புதையல் தேடித் தருவதாகக் கூறி நரபலியிடச் செய்த கொடுமையை 'மூன்று கடிதங்கள்' என்ற கதையிலும், சிறையிலிருந்து தப்பிய குற்றவாளி பில்லி, சூனியம், மாயமந்திரீகத்தால் மக்களை ஏமாற்றும் தீமையை 'அன்னதானம்' என்ற கதையிலும் போலிச் சாமியார் வேடத்தில் மக்கள் ஏமாற்றிய குற்றவாளி பகுத்தறிவாளர்களின் கருத்துக்களால் மக்கள் விழிப்புற

ஊரைவிட்டு ஓடியவனைப் பற்றிய பல உண்மைகளைத் 'தேடியது வக்கீலை' என்ற கதையிலும் காட்டியுள்ளார். அறிவியல் உண்மைகள் பரவப்பரவ மூடநம்பிக்கைகள் மறையத் தொடங்குகின்றன என்ற பேருண்மையை 'விழுப்புரம் சந்திப்பு' என்ற சிறுகதையில் எழுதினார். மருத்துவப் பட்டம்பெற்ற மகனைப் பெற்ற சோமசுந்தரம் தன் மகளுக்கு ஏற்பட்ட நோயைப் போக்க நவீன மருத்துவத்தை நம்பாமல் துறையூர்ப் பாதையில் உள்ள மாந்திரீகத்தில் செல்வாக்குப் பெற்ற திரிசூலம் பிள்ளையை நாடிச் சென்னையிலிருந்து தொடர் வண்டியில் சென்றார். திரிசூலம்பிள்ளையின் மகன் தன் தந்தைக்கு வந்துள்ள இருதயநோயைக் குணப்படுத்தச் சோமசுந்தரம் பிள்ளையின் மகன் மருத்துவரை நாடித் தொடர் வண்டியில் சென்னை சென்றான். சோமசுந்தரமும் திரிசூலம் பிள்ளையின் மகனும் விழுப்புரத்தில் சந்தித்து உரையாடினர். மாயமந்திரம் எல்லாம் இக்காலத்திற்குப் பொருந்தாதெனத் திரிசூலம் பிள்ளையின் மகன் சோமசுந்தரத்திடம் கூறினான். மந்திரவாதியின் மகன் கூறியதைக் கேட்ட சோமசுந்தரம் மனமாற்றம் பெற்றார். அறிவியல் வளர்ச்சியே மூடநம்பிக்கையைச் செயலிழக்கச் செய்யும் சாதனமாகும். பகுத்தறிவு பரவுவதே மூடநம்பிக்கையை ஒழிக்க ஏற்றவழியாகும் எனக் கண்டார். அவ்வழியிலேயே இக்கதையைத் தீட்டியுள்ளார். யார் மீது கோபித்துகொள்வது? என்ற வினா வடிவக்கதை மூடத்தனத்தின் முத்தாய்ப்பாய் உள்ளது.

பேய் பூதம் பிசாசு என்பவை அனைத்தும் மனிதனின் மனக்கோளாறின் காரணமாக ஏற்பட்ட மாற்றங்களே என்பது இன்றைய அறிவியலாரின் கருத்தாகும். தொல்காப்பியரும்,

> **பேய்நாம் உரும் எனவரூஉங் கிளவி**
> **ஆமுறை மூன்றும் அச்சப் பொருள**

என்றார். (தொல்காப்பியம், உரியியல், 67). அச்சம் தெளிவின்மை ஆகியவற்றால் ஏற்படும் மருட்கையே பேய் என உருவகிக்கப் பட்டது. நோகச் செய்வதெல்லாம் நோயெனப்பட்டன. அச்சப்படுவதெல்லாம் பேயாக உருவகிக்கப்பட்டன. பேய்க்கு என்று தனி உருவம் இல்லை. ரங்கோன்ராதாவில் அண்ணா,

> பேயைக் கண்டவர்கள் கிடையாது. ஆனால் அதனைக் கண்டு, அதன் குணங்களைத் தெரிந்து கொண்டவர்களைப் போல் ஜனங்கள் பேசிக் கொள்கிறார்கள். பேயின் உருவம் தெரியா தென்றும் அதுமனிதர்களைப் பிடித்துக் கொண்டால் அவர்கள் செய்யும் சேட்டைகளின் மூலம் பேயின்போக்கைத் தெரிந்து கொள்ள

> முடியும் என்றும் பேசுகிறார்கள். இந்தப் பைத்தியக்காரத்தனமான எண்ணம் எவ்வளவு விபரீதமான நடவடிக்கைகளுக்கு இடம் தருகிறது.

என விளக்கியுள்ளார். (சி.என். அண்ணாதுரை, ரங்கோன் ராதா, ப.72)

மூடநம்பிக்கையின் பெயரால் நடக்கும் மோசடிகளைப். பார்வதி பி.ஏ. எனும் புதினத்தில் பார்வதியின் கூற்றில்,

> பொன்னி, கந்தசாமியின் பல மனைவிகளிலே ஒருத்தி. அதாவது கந்தசாமி கோயில் தாசி. கந்தன் கல் உருவமாக இருந்ததால், அவருக்குப் பொட்டுக் கட்டிக் கொண்ட பொன்னிக்குத் தினசரிமாலை வேளைகளிலே கந்தனைச் சேவிப்பது மட்டுமே பதி பக்தியாக இருந்தது. கந்தக் கடவுளின் மனைவியாகும் கடாட்சம் பெற்றாள் என்பதற்காகக் கலவிதேடி அலையும் காளைகள் பொன்னியைச் சும்மா விடுவார்களா?

என வேதனைப் படுகிறார்.

காலவெள்ளம் எதையும் மாற்றிக் கொண்டு செல்லக் கூடிய ஆற்றல் நிறைந்தது. பழைமைப் பற்றில் தம் வாழ்வின் நலன்களைப் பெருக்கிக் கொண்டவர்கள் தாம் தெளிவு பெற்றாலும் பிறர் தெளிவு பெறுவதை விரும்புவதில்லை. அதற்குக் காரணம் தன்னலம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும் முயற்சியில்லாமலேயே அறிவியல் வசதிகள் நமக்குக் கிடைப்பதுமாகும். இதனை அண்ணா ஒரு சொற்பொழிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

'பத்தியமில்லாத மருந்துபோல உரித்த சுளைபோல நிபந்தனையற்ற நிலையில் சகல விஞ்ஞான வசதிகளும் பாடுபடாதவருக்கும் மிகமிகச் சுலபத்திலே தரப்பட்டு விட்டதால், அவைகளின் பயனை அனுபவிக்கும் நேரத்திலும் கூடப் பழமையைப் பாராட்டும் போக்கும் இருந்து வருகிறது. பாடுபட்டுத் தேடாத பொருளின் அருமை தெரியக்காரணம் இல்லையல்லவா? இதனாலேதான் புத்தறிவை அலட்சியமாகப் பேசும் புல்லறிவு தலைவிரித்தாடுகிறது.

> இரயிலேறி இராமேஸ்வரம் போவதும், ரோடரி மிஷினில் ரமணர் நூல் அச்சாவதும், ரேடியோவில் சங்கராச்சாரியார் பேசுவதும், காமிரா கொண்டு கருடசேவையைப் படம்பிடித்துக் காட்டுவதும்,

டெலிபோன் மூலம் தெப்ப உற்சவத்தை விசாரிப்பதும், இவைபோன்றவைகள் இங்கு நித்திய நிகழ்ச்சிகள் அல்லவா? இந்த நிலை சரியா? பல்துலக்குவதற்குத் தயாரிக்கப் பட்ட பசையைப் பாத்திரம் துலக்கப் பயன் படுத்தினால், கல் உடைக்கும் கருவியைக் கொண்டு கனியை எலியைக் கொல்லக் கிளம்பினால் என்ன எண்ணுவர்? என்ன கூறுவர்? புத்தறிவு, புதிய வாழ்வுக்கு வழி செய்ய ஏற்பட்டிருக்க அந்தப் புத்தறிவு தரும் சாதனங்கள் கொண்டு பழைய வாழ்க்கையை நடத்த முற்படுபவரைப் பற்றி என்ன எண்ணுவது? என்ன கூறுவது?

எனக் கூறியுள்ளார். சொல்லின் செல்வர் ராபிசேதுப்பிள்ளை,

தமிழ்க் குலத்தை அரிக்கும் வேர்ப்புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்குமாறில்லை. ஊழ்வினையே பேசி ஆள்வினையற்றிருக்குமளவு நாம் உய்யுமாறில்லை.

என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர் என அண்ணாவை மதிப்பீடு செய்வது குறிப்பிடத்தக்கதாகும். விதியை நம்பி வினையாற்றும் மக்களுக்கு மனிதனின் முன்னேற்றம் அவனது தலை விதியில் இல்லை; அவனது தளராத உழைப்பிலேயே நிறைந்திருக்கிறதென்பதனைச் சுட்டிக் காட்டியுள்ளார். மூடநம்பிக்கை மறையப் பகுத்தறிவு பரவுவதே வழியென விழைந்தார். அந்த விழைவின் விளைவாக அவர் படைப்புகள் அமைந்துள்ளன.

## போலித்தன்மைகள்

பொருளும் சமயமும் ஒரு சிலரின் வாழ்வுக்கும் வயிற்றுப் பிழைப்பிற்கும் வழியாக இருக்கும் சமுதாயத்தில் வேடதாரிகளை, போலிகளைக் காணலாம். உளுத்த எண்ணங்களும், புரையோடிய சிந்தனைகளும் நிறைந்த சமூகத்தில் விதைப்பின்றியே தோன்றிவிடும் களைகளைப்போலப் போலிகள் தோன்றிவிடுவர். இவர்கள் எந்த நாட்டின் மேலான ஆட்சிக்கும் சமயத்திற்கும் தங்களை நெருங்கிய உறவாக்கிக் கொண்டு வாழ்வர். ஆளும் அதிகார இனத்துடன் நாளும் ஒத்துழைப்பாக இருப்பர். சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் இந்தப் போலி மனிதர்கள் ஊடுருவி இருப்பதால், வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணுகின்ற கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளத்தினர் ஏமாற்றப்படுகின்றனர். சுரண்டப் படுகின்றனர். பலநேரங்களில்

சாய்க்கவும், மாய்க்கவும் படுகின்றனர். இவர்கள் சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பட்டவர்கள்.

> **கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு**
> **சொல்வேறு பட்டார் தொடர்பு**

என்றார் வள்ளுவர்.

> **உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்**
> **உறவு கலவாமை வேண்டும்**

என்றார் வள்ளலார்.

> ஊரை அடித்து உலையில் போட்டுக் கொண்டு அந்த வேலையும் ஒருவருக்கும் தெரியாமல் செய்து விட்டுப் பெரிய மனிதராய் வாழ்வு நடத்தும் நயவஞ்சகர்கள்.

என வேடதாரிகளை இனங்காட்டினார் அண்ணா.

சமுதாய நிலத்தில் வெண்ணெய் போல் மினுக்கிப் பலரின் வாழ்வை வீழ்த்தி, அட்டைகளைப்போல், புல்லுருவிகளைப் போல் உயிர் உறிஞ்சுபவர்களை இனங்காட்டும் கதைகள் பலவற்றை அண்ணா தீட்டினார். *பார்வதி பி.ஏ.;* என்ற புதினம் பல்வேறு துறைகளில் உள்ள பெரிய மனிதர்களின் போலித் தனத்தை எடுத்துக் காட்டுகிறது. ஆலால சுந்தரனார், பார்த்திபன், 'அம்பக்' ஆறுமுகம் ஆகிய மனிதர்கள் போலித்தனத்தின் மூலவர்களாகவே காட்டப்பட்டுள்ளனர். இக்கதையில் வரும் முக்கியமாந்தர் பார்த்திபன் என்பவர். இவர் தன்னலம் நிறைந்த அரசியல் வாதிகளுக்குச் சான்றாக இருக்கிறார். நாட்டு மக்களின் வறுமையைப் போக்குவதாகக் கூறி ஏமாற்றும் போலிகளின் போக்கைப் பார்த்திபன் வாயிலாக உணரச் செய்கிறார். ஆலால சுந்தர முதலியார் சமீன்தார்களின் போலித்தனத்திற்கு எடுத்துக்காட்டாகப் படைக்கப்பட்டுள்ளார். உறவினர்கள் பக்கத்துக் கிராமத்திலிருந்து வந்தால் அவர்களுக்கு விருந்தளிக்கச் சீற்றம் கொள்ளும் சமீன்தார் தாசி தமயந்தி வீட்டில் பொருளை அள்ளிக் கொடுத்துக் கேளிக்கையில் ஈடுபடுவதை அண்ணா கிண்டல் செய்கிறார். சமீன்தார்களின் போலிக் கௌரவத்தை 'வண்டிக்காரன் மகன்' என்ற புதினத்தில் புலப்படுத்துகின்றார். சமீன்தார் ஐம்புலிங்க பூபதி, ஆங்கிலேயரிடம் கொண்டுள்ள விசுவாசத்தின் போலித் தனத்தை இவ்வாறு கூறியுள்ளார்.

'அந்நியருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம் என்ற வருத்தமும் வெட்கமும் துளியும் அவர்களுக்கு இல்லாததையும் ஆங்கிலேயர்களைப் போலத் தாமும் கோலத்தை ஆக்கிக்

கொள்வதிலேயே நாட்டம் கொண்டிருப்பதையும் அறிந்து வருந்தினான். மேலை நாட்டாரிடம் நம்மவர்கள் மதிப்பைப் பெறப் போலித்தனத்தைமேற்கொள்வதைச் 'சம்புலிங்க முதலியார்' என்ற கதை மாந்தர் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார்.

செல்வர்களின் இருவேறு எண்ணப்போக்கை 'நாடோடி' என்ற கதையில் எடுத்துக் கூறியுள்ளார். வேலை தேடித் தோட்டக் காரன் மகன் பல ஊர்களுக்குச் செல்வதைக் குற்றமாகக் கடிந்து கொண்ட முதலாளி வியாபாரத்தின் மூலம் ஊரெல்லாம் அலையும் நிலையை ஒப்பிட்டு 'நாடோடி'க் கதையை வரைந்துள்ளார். ஊரை ஏய்த்துப் பொருள் திரட்டித் தருமகர்த்தாப் பதவியில் ஒருவன் இருக்க அவனது சூழ்ச்சியால் அப்பாவி சிறைத்தண்டனை பெறுவதுமான சமுதாய அவலத்தைக் 'கைதிகள்' என்ற கதையில் காட்டுகிறார். லட்சுமிராஜ் காமதேனு காந்தா முதலிய ஷேர்களைச் சீட்டுக் களாகக் கொண்ட சூதாட்டக்காரர்கள், பொழுது போக்கிற்காக இஸ்பேட், கிளாவர் போன்ற சீட்டுகளை ஆடும் ஏழைகளைக் கண்டிக்கும் போலித்தனத்தைச் 'சூதாடி' என்ற கதையில் விளக்கியுள்ளார். செல்வர்கள் தம் பொருளைக் காப்பாற்றிக் கொள்ளக் காலத்திற் கேற்பக் கட்சிமாறும் போலித்தனத்தைப் 'பிரமநாயகம்' என்ற சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். தம் கடையில் வருமான வரிக் கணக்கை மறைப்பதற்காகத் தம் ஆட்களை வைத்தே கணக்குப் புத்தகங்களைத் திருவிழாக் கூட்டத்தில் எடுத்துக் கொண்டு ஓடி விடுமாறு செய்துவிட்டுக் கணக்குப் புத்தகத்தை யாரோ கூட்டத்தில் திருடிவிட்டார் களெனக் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து உண்மையான பக்தனைப்போல் நடிக்கும் வணிகர்போக்கைப் 'பக்த பக்காத் திருடன்' என்ற கதையில் வெளிப்படுத்தியுள்ளார். நல்லவர்கள் போல் தங்கள் பணத்தால் நடித்துச் சுரண்டும் செல்வர்களின் நயவஞ்சகப் போக்கைக் 'கனவான்' என்ற சிறுகதையில் தீட்டியுள்ளார்.

பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் மறைந்து தவறுபுரியும் சமுதாயத் திருடர்களை இனங்காட்டும் கதைதான் 'குற்றவாளி யார்?' என்பது. குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் செல்வத்தாலும், செல்வாக்காலும் தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளாகக் கிராமங்களில் காட்சியளிக்கும் சமுதாயத்தின் போலித்தனமான போக்கைக் கண்டிக்கிறார்.

பார்ப்பனர்கள் தன்னலத்திற்காக எந்தச் செயலையும், குறிப்பாகத் தன்மான உணர்வையுங்கூடப் பொருட்படுத்த

மாட்டார்கள் என்பதனைச் 'சொல்வதை எழுதேண்டா'வில் சொல்லிச் செல்கிறார். பல்வேறு அமைப்புகளின் தலைவர்களாக இருப்பவர்கள் நடிக்கும் நாடகத்தை 'உண்ணாவிரதம் ஒரு தண்டனை' என்ற சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என்ற மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்தபோது நடந்த நிகழ்ச்சியாகும். அக்கதையில் சொத்துரிமை மசோதாவை எதிர்த்துச் சர்மாவும் எதிர்வீட்டுக் குப்பு சாஸ்திரியும் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்தனர். எதிர் வீட்டுக் குப்பு சாஸ்திரியின் பேச்சைக்கேட்டுச் சர்மா உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். தன் மனைவியிடம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் கூறிச் சர்மா உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டார். இவரை உண்ணாவிரதம் இருக்குமாறு தூண்டிய குப்பு சாஸ்திரிகள் வயிறு புடைக்க உணவை உண்டுவிட்டு உறங்கிக் கொண்டிருந்தார். உண்ணா விரதத்தை முடித்துவிட்டுக் குப்பு சாஸ்திரியின் வீட்டிற்குச் சர்மா சென்றார். குப்பு சாஸ்திரிகள் குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தார். உறங்கிக் கொண்டிருந்த குப்பு சாஸ்திரியின் தோளைப்பிடித்துச் சர்மா உலுக்கினார். 'அக்கார அடிசிலுக்கே கொஞ்சம் மயக்கம் ஊட்டும் சுபாவம் உண்டு போலிருக்கு. அதைக் கொஞ்சம் இரண்டு கை அதிகமாகச் சாப்பிட்டுட்டேன். ஒரே மந்தமாக இருக்கு. சித்தே கண்ணை மூடினேன்' என்று கூறினார். திடீரென விழித்துக் கொண்டு குப்பு சாஸ்திரி சர்மாவைப் பார்த்தார். சர்மா சினங்கொண்டார். வழிகாட்டுவதாகக் கூறும் சிலரின் போலித்தனத்தைத் தோலுரித்துக் காட்டியுள்ளார்.

உழவின் வளர்ச்சியை மேம்படுத்த வெளிநாடு சென்ற குழுவில் உழவின் பெருமையை அறியாதவர் இடம்பெற்றதைச் சுட்டிக்காட்டி 'அறுவடை' என்ற கதையை வரைந்துள்ளார். உழவுத் தொழிலை மேம்படுத்த உழவர்களையல்லவா அனுப்பவேண்டும். உழவைப் பற்றி அறியாதாரை அனுப்பும் அவலத்தை ஓவியமாக வரைந்து காட்டியுள்ளார். சமூகச் சேவை என்ற பெயரால் பெரிய இடத்துப் பெண்கள் செய்யும் தொண்டின் போலித்தனத்தை நையாண்டி செய்து 'சமூகச் சேவகி சாருபாலாவை ' வரைந்துள்ளார்.

சமயத்தின் பெயரால் மக்களை ஏமாற்றும் செயலைக் 'கடைசிக் களவிலும்' 'ஜெபமாலை'யிலும் வெளிப்படுத்தி யுள்ளார். காவியுடை கட்டிய துறவிகள் வாழ்வில் போலிகளாக இருப்பதைக் 'கபோதி புரக் காதலி'ல் காட்டியுள்ளார். கபோதி புரக்காதலில் வரும் கருணானந்தயோகிகள் சாமியார் வேடத்தில் மறைந்து திருட்டுப் 'போகி'யாக இருப்பதைக் காட்டுகிறார்.

பெரிய ஆதினங்களில் அமர்ந்து கொண்டு மக்களுக்கு மெய்ந் நெறியை ஊட்ட வேண்டிய மடாதிபதிகள், மங்கையர் கற்புக்குப் பங்கம் விளைவிக்கும் கழிகாமச் செயலைக் 'கடைசி களவில்' புலப்படுத்தியுள்ளார். பகலில் சாமியார் வேடத்திலும், இரவில் பெண் இன்பத்திலும் மூழ்கிக் கிடக்கும் போலிகளை 'வேலைபோச்சு'வில் சாடியுள்ளார். சிங்கப்பூரில் கொள்ளை யடித்துவிட்டுச் சிறையிலிருந்து தப்பிய சொக்கன் என்பவன் சாதுவேடத்தில் மறைந்து மக்களை ஏமாற்றி மோசடி செய்யும் போக்கை 'அன்னதானம்' என்ற கதையில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். புலவர்களின் இருவேறு நிலைகளில் நடந்து கொள்ளும் போலித் தனத்தைப் 'பிரசங்க பூஷணம்' என்ற சிறுகதையில் கூறியுள்ளார். புலவர்கள் ஓர் இடத்தில் நாட்டியக் கலையின் சிறப்பையும், மற்றொரு இடத்தில் அதனால் விளையும் கேடுகளையும் விளக்கிப் பேசும் இருவேறு நிலையைக் கண்டித்துத் தீட்டியதே 'பிரசங்க பூஷணம்'.

## எழுத்தாளர்களின் போலித்தனம்

மூன்றுபேர் வழுக்கிவிழுந்த சம்பவத்தை 'வழுக்கி விழுந்தவர்'களில் காட்டியுள்ளார். ஒருவன் வறுமையின் கொடுமையால் பிழைக்க வழியின்றித் திருடுவதற்கு முயன்றபோது வீட்டின் சுவரின் மேலேறிக் கீழே விழுந்து விடுகிறான். மற்றொருவன் மேஸ்திரி சின்னான். ஏணியில் ஏறும்போது கால் நடுக்கம் ஏற்பட்டுக் கீழே விழந்து விடுகின்றான். அவனுக்குக் காலில் வலுவில்லை என்று கூறி வேலையிலிருந்து நீக்க ஆணை பிறப்பிக்கப்படுகிறது. பிறிதொருவன் எண்ணெய் வியாபாரி ஏகாம்பரம் செட்டியார். சிலோனிலிருந்து வந்த கள்ளச் சரக்கை ஏகாம்பரம் செட்டியார் பதுக்கி வைத்திருப்பதை அறிந்து அதனைக் கைப்பற்ற இன்ஸ்பெக்டர் வந்தபோது அவரை அந்த அறைக்குள் செல்லவிடாமல் தடுப்பதற்கு எண்ணெய் டின்களை ஓட்டை செய்து எண்ணெய் அறையெங்கும் செல்லுமாறு வேலையாளை ஏற்பாடு செய்தார். முதலாளி சொல்லியபடி வேலையாள் செய்தான். அறை யெங்கும் எண்ணெய் நிறைந்திருப்பதைக் கண்டு இன்ஸ்பெக்டர் சோதனையிடாமல் திரும்பிவிட்டார். பதுக்கப்பட்டிருக்கும் சரக்கனைத்தும் காப்பாற்றப்பட்டன. எதிர்பாராமல் அங்கு வந்த ஏகாம்பரம் செட்டியார் எண்ணெய்யில் வழுக்கி விழுந்தார். மூன்று வழுக்கல்கள்- மூன்று நிலைகள். மூன்றாவதாகச் செட்டியார் வழுக்கி விழுந்த நிலையைத் தனிக் கட்டணம் பெற்றுக் கொண்டு திருக்கோயில் பத்திரிகையின் நிருபர் தர்மதாதா என்ற பத்திரிகையில் 'சிறந்த பக்திமானும் தர்மசிரேஷ்டரும் பிரபல

குடும்பத்தைச் சேர்ந்தவருமான எண்ணெய் வியாபாரி ஏகாம்பரம் செட்டியார் அனுமார் கோயில் அபிஷேக சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது கால் வழுக்கிக் கீழே விழுந்து விட்டார். உண்மையில் அவர் காலேஜ் நிதிக் கமிட்டிக்காரர்கள் வருவதற்கு அஞ்சி ஒருவாரம் மருத்துவ மனையில் போய்ப் படுத்துக் கொண்டார். அதனைப் பற்றிப் பத்திரிகை நிருபர், 'எனக்குள்ள ஒரே கவலை காலேஜ் நிதி சேர்க்கும் சிலாக்கியமான காரியத்திலே பங்கு எடுக்க முடியாமல் போய் விட்டதே என்பதுதான். செட்டியார் (பாரதியார்) அவர்கள் நம் நிருபரிடம் சொன்னது மனதை உருக்குவதாக இருந்தது என எழுதியுள்ளார். செல்வரின் போலி வாழ்க்கையையும் அவர்களிடம் கையூட்டுப்பெற்று உண்மையை மறைத்து எழுதும் ஏடுகளின் இழிதன்மையைப் பற்றியும் எடுத்துக்காட்டி இடித்துரைத்துள்ளார்.

பிறர் எழுத்தைத் திருடிப் பொருளையும் புகழையும் பெற்று எழுத்தாளர்களாக உலாவரும் போலிகளின் முகத்திரையை 'ரொட்டித் துண்டு' என்ற கதையில் விளக்கிக் காட்டியுள்ளார். உண்மையை மறைத்தும் செல்வர்களின் பொய் வாழ்வையும் போலித் தனத்தையும் போற்றி வயிறு வளர்க்கும் எழுத்தாளர்களின் இழிசெயலைத் 'தழும்பு' என்ற சிறுகதையில் கூறியுள்ளார். 'பல்லிளிக்கும் பரப்பிரம்பங்கள்' என்ற கதை, செல்வர்களின் கயமைத் தனத்திற்குத் துணைபோகும் ஏடுகளை இடித்துரைக்கிறது. மிராசுதார் பண்ணையில் ஊழியஞ் செய்பவன் வறுமையால் வயிற்றுப் பிழைப்புக்காக ஆறுமூட்டை நெல்லைத் திருடினான். நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டான். ஏழை திருடியது தவறென்னும் அவனைச் சிறைக்கனுப்பியது சரியென்றும் ஓர் ஏடு எழுதியது. மிராசுதார் இலங்கைக்குக் கள்ளத்தோணி வழியாக நெல் ஏற்றி அனுப்புகையில் பிடிபட்டுத் தண்டமும் தண்டனையும் வழக்கு மன்றம் கொடுத்தது. ஏழையைத் தண்டித்தபோது பாராட்டி எழுதிய ஏடு மிராசுதாரைத் தண்டித்த போது கண்டித்து எழுதியது. ஏடுகள் கொள்கையில்லாமல் காசுக்காக விலைபோகும் கயமைத் தனத்தை வெளிப்படுத்துகின்றார்.

### அரசியல் வாதிகளின் போலித்தனம்

அரசியலில் நுழைந்து கட்சிமாறும் பச்சோந்திகளை 'அம்பக் ஆறுமுகம்' என்ற கதைமாந்தர் வாயிலாகப் பார்வதி பி.ஏ.வில் விளக்குகிறார். ஆறுமுகம் காங்கிரசில் இருந்தபோது நடந்து கொள்ளும் முறையை அண்ணா நயம்படக் கூறுகிறார்.

> ஆறுமுகம் காங்கிரஸ் வேடத்திலே காட்சி தரும் வேளையிலே, மாற்றுக் கட்சிகளை அவன் தனது கால் தூசுக்குச் சமமாகக் கூடக் கருதாதவன் போலக் காணப்படுவான். சுயராச்சியம் பெறுமுன்பு, தூங்க இஷ்டமில்லாதவன்போல இருந்ததாக நடித்துக் காட்டுவான். எதிர்க்கட்சியிலே எவ்வளவு பெரிய மனிதராக இருப்பினும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையிலே பேசுவான்; ஏசுவான். கதர்ஜிப்பாவும் கைராட்டையும் பொறித்த தொப்பியுடன் பளிச்செனத் திரிவான்.

காங்கிரசு வாதியாகத் திகழ்ந்த ஆறுமுகம் சிலநாளில் வேறு கட்சியில் பெற்றிருக்கும் சிறப்பிடத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

இப்போது நினைத்தால் கூட வருத்தமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது நான் மகாபாவி. இனத்துரோகி. பார்ப்பனரல்லாதவருக்குத் தீங்கு செய்துவிட்டேன்.எங்கள் வீட்டுத் தோட்டத்திலே சர் தியாகராயர் உலவினார் என்று கூறுகிறார்கள். குடும்பம் முன்னுக்கு வந்ததே ஜஸ்டீஸ் கட்சியால் தானாம். அந்தக் கட்சிக்கே கேடு செய்துவிட்டேன், பார்ப்பனர் பேச்சைக் கேட்டு என்று உருக்கமாகப் பேசி ஏமாந்த அப்பாவிகளை வலையிலே சிக்கவைப்பான்.மெல்லமெல்ல ஜஸ்டீஸ் கட்சித்தலைவர்களுடன் பழக ஆரம்பிப்பான். அழையாமலேயே அவர்கள் கூட்டங்களிலே நுழைவான். ஆதாயம் பெறுவான்.

'அம்பக் ஆறுமுகம்' என்ற பாத்திரத்தை யாரும் மறந்துவிட முடியாது. எல்லாக் கட்சி மேடைகளிலும் எந்த நேரத்திலும் தன் விருப்பத்தையும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ளத் தோன்றி மறையும் அரசியல் பச்சோந்திகளின் வாரிசு அவன் என்பது ஆய்வாளரின் கூற்று (நாகை தருமன், *இலக்கிய உலகில் அண்ணா*, ப.204).

ஒருமனிதர் இருவேறு இடங்களில் இருவேறு உடைகளில் எப்படி வாழ்கிறார். அவரது அகவாழ்வும் புறவாழ்வும் எவ்வாறு முரண்பட்டிருக்கின்றன என்பதை 'உடைபோட்டதும்' என்ற கதையில் விளக்குகிறார். வழக்கறிஞர் விசுவநாதம் தாம்பட்ட கடனைத் திருப்பித்தர முடியாத நிலைக்கு வேதனைப் படுகிறார். அவர் வேதனையை அறியாமல் வேண்டுமென்றே கடனைத் தராமல் காலந் கடத்துவதாக அவர் மனைவி வசந்தா கடிந்து கொள்கிறாள். அதற்கு அவர் கொடுத்த கடனைத் திருப்பித் தர முடியாது என்று வாதாடச் சட்டம் இருக்கிறது என்று

மனைவியிடம் பதிலுரைத்தார். பின்னர் அதே வழக்கறிஞர் விசுவநாதம் கருப்புடை அணிந்து நீதிமன்றத்தில் நின்று, கடனை வாங்கியவர் தவணைகள் கேட்டு வாங்கிக் கொண்டே காலத்தைக் கடத்திக் கொண்டு இருந்துவிட்டுக் கடனைத் திருப்பித் தராமல் ஏமாற்ற நினைக்கையில் கடன் வாங்கியவரின் வீட்டைக் கைப்பற்ற நீதிமன்ற ஆணை பிறப்பிக்குமாறு வாதாடுகிறார். இருவேறு நிலைகளில். ஒரே மனிதர் இருவேறு நிலைகளில் இருவேறு உடைகளில் இருவேறு உரைகள் நிகழ்த்துகிறார். போலீஸ் கான்ஸ்டபிள் பொன்னு ரங்கம் தம் மகனை அவர் மனைவி அடித்தபோது குழந்தையை அடிக்காமல் புத்தி சொல்லித் திருத்த வேண்டுமென்று அறிவுரை கூறுகிறார். காக்கியும் சிகப்புத் தொப்பியும் அதிலே 84 என்ற எண்ணும் கையிலே தடியும் கொண்ட கான்ஸ்டபிள் பொன்னுரங்கம் போக்கிரியை அடிக்கப் பலமான அடி கொடுத்தாக வேண்டும் என்று பேசுகிறார். வீட்டிலிருந்த பொன்னு ரங்கத்திற்கும் உடைமாறியவுடன் மாற்றம் ஏற்படுகிறது. இவ்விருவரது செயலிலும் நியாயம் இருக்கிறதென்பதைவிட அந்த இருவரும் இருவேறு விதமாகப் பேசவேண்டிய தேவை நிரம்ப இருக்கிறது என்பதை ‘உடைபோட்டதும்’ காட்டுகிறது. சமுதாயத்தில் இதுபோன்ற இருவித வாழ்வு நிலைகள் இருப்பதால் இத்தகைய கதைகளைத் தீட்டினார்.

ஏமாற்றுக்காரர்களும் வேடதாரிகளும் போலி மதிப்பில் மிதப்பவர்களும் சந்தர்ப்பவாதிகளும் சமூக உறுப்பினர்களில் மிகவும் தீங்கானவர்கள். மனித இயற்கைக்கும் அன்புக்கும் உண்மைக்கும் மாறாக இரண்டகம் செய்பவர்கள். மக்களை நம்பவைத்து நாட்டைக் கெடுப்பவர்கள். இவர்களின் சொல்லையும் செயலையும் ஆழ்ந்து பார்த்தால் இவர்களுடைய ஏமாற்றுகள், புரட்டுகள், பொய்கள் அனைத்தும் ஒரு நல்ல காரியத்திற்காக அல்லாமல், தீய எண்ணத்துடனும் தன்னலத்துடனும் செய்யப்படுகின்றன என்பது புலனாகும். இவர்களையே திருவள்ளுவர், கயமை அதிகாரத்தின் கீழ் வெளிப்படுத்துகின்றார். தேசீயக்கவி பாரதியும் ‘நடிப்புச் சுதேசிகள்’ என்ற நயமிகுந்த பாடல்களில் போலிகளை இனங் காட்டியுள்ளார். அண்ணாவும் இவர்களை நிலைக்கேற்ற நினைப்பில்லாதவர் என்ற சொற்றொடரால் குறிப்பிட்டுள்ளார். அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்த மனிதர் பலர் சமூகத்தில் இருந்து வருகின்றனர். இவர்கள் சூழ்நிலைக் கேற்ப மாறிச் சமூக அரசியல் சமய இயக்கங்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக, தடைச் சுவராக அமைகின்றனர். தங்களின் தன்னலத்தைத்

திறம்படப்பயன்படுத்திக் கொள்ளும் போக்கை அண்ணா தம்முடைய சிறுகதைகள், புதினங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். அண்ணா விரும்பிய சமுதாயம், சமூகச் சீர்திருத்தம் மேம்போக்கானதன்று; ஆழமானது. முழுமையானது. மக்கள் நன்மைக்காகப் போராடும் ஓர் எழுத்தாளரின் கடமையென எண்ணினார். 'ஒவ்வொரு காலக்கட்டத்திலும் புதுப்புதுப் பிரச்சினைகளும் தொல்லைகளும், துன்பங்களும், தீமைகளும் சமுதாயத்திற்கு ஏற்படுவதுண்டு. அவற்றை வெளிப்படுத்துவதும் அவற்றொடு பேனா முனையால் போராடுவதும் எழுத்தாளனின் கடமையாகும்' (அகிலன், கதைக்கலை, ப.96) என்பதனை உணர்ந்து எழுத்துப் பணியில் ஈடுபட்டவர் அண்ணா. அதனால்தான் சமூகப் போலிகளை இனங்காட்டிச் சாடியுள்ளார்.

## பொருளியல் சிந்தனை

காட்டில் விலங்காக அலைந்த மனிதனின் தேவைகள் பெருகப்பெருக ஆசைகள் உருவெடுத்தன. அதன் விளைவாகப் பொருளாசை பெருக்கெடுத்தது. பொருள் நிலமாகவும் நாணயமாகவும் மாற உழைப்போர் பலராகவும் உழைக்காது உண்போர் சிலராகவும் ஆயினர். இதுவே பொருளுடையோர் இல்லார் என்ற நிலை ஏற்படக்காரணமானது. ஒருபக்கம் செல்வச் செழிப்பும் காரணமாகும். மற்றொரு பக்கம் வறுமை. செல்வத்தால் உடையார் இல்லார் என்ற இருநிலை ஏற்பட்டது. இத்தகைய ஏற்றத்தாழ்விற்கு மதமும் முடியாட்சியும் எருவும் நீருமாயின. வேறுஎந்த மதத்தையும் விட இந்துமதம் பொருளுடைமைக்கும், இன்மைக்கும் காரணம் முற்பிறவியில் செய்த பாவ புண்ணியங்களே எனக் கூறியது. தலைவிதியென விளக்கம் தந்தது. அதற்குத் துணையாகக் கடவுளர்களும் இதிகாசங்களும் படைக்கப்பட்டு மக்களின் மதியைச் சிறைப்படுத்தின. வங்கத்தில் கொடும் பஞ்சம் ஏற்பட்டபோது எண்ணற்றோர் இறந்தனர். அங்குப் புரட்சி ஏற்படாமல் செய்தவை நாட்டில் பரவியுள்ள பாவ புண்ணிய நம்பிக்கைகளே என அண்ணா குறிப்பிட்டுள்ளார்.

> வங்கத்தில் பஞ்சம் ஏற்பட்டது. பட்டினியால் பல இலட்சம் பேர் மடிந்தனர். அவர்களது பிணத்தை நாயும் நரியும் இழுத்தன என்ற இந்தக்காட்சி, இந்த நிலை, மேல்நாடுகளிலே, வேறுநாடுகளிலே மட்டும் ஏற்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும். அப்பொழுதே புரட்சி நடந்திருக்கும். ஆனால் துர்ப்பாக்கியமான இந்நாட்டிலே அதுகிடையாது ஏன் ஏற்படவில்லை? ஆங்கிலேயனுடைய ஆயுதங்களுக்கஞ்சியா? இல்லை புரட்சி மனப்

> பான்மையையே நமது கவிதைகளும் காவியங்களும் அடக்கி விடுகின்றன.

எனக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு நாட்டின் நிலைமையைப் படம் பிடித்துக்காட்டிப் பழைய முறைகளில் உள்ள கேடுகளைக் களைந்து, புதிய பொருளாதாரக் கோட்பாட்டை உருவாக்கும் எண்ணத்தில் அண்ணாவின் கதைகள் படைக்கப்பட்டுள்ளன. பொருளியல் சமநிலையைப் பெறுவதற்காக மேலை நாடுகளில் கையாளும் சிறந்த முறைகளையும் தம்கதைகளில் கையாண்டுள்ளார். சோவியத் நாட்டில் ஏற்பட்ட பொது வுடைமைப் புரட்சியின் வெற்றி, பொருளில் ஏற்றத் தாழ்வின் மேடுபள்ளங்களை இடித்துத் தள்ளியது. ஒளியும் காற்றும் நீரும் எப்படி அனைவருக்கும் பொதுவோ அதைப்போலவே நிலமும் அதில் விளையும் பொருள்களும் மக்களுக்கே உரியதாகும் என்ற கருத்து உருவாக்கப்பட்டது. தனி உடைமைக்கு இடமில்லை யென்ற கருத்து உலகுக்குப் புதுவிதியைத் தந்தது. அறிஞர் காரல்மார்க்சுவின் எண்ணங்களை இலெனின் உருசிய நாட்டில் செயல்படுத்தினார். அந்தச் செயல்பாட்டின் எதிரொலி உலகெங்கும் கேட்டதுபோல் இந்தியாவிலும் கேட்டது. பாரதி உருசியப் புரட்சியை வாழ்த்தினான். அவன் வாழ்த்திய நாட்டைக்காணும் பேறு பெரியார் ஈ.வெ.ரா.வுக்கு வாய்த்தது. அவர் அந்நாட்டைக்கண்டு திரும்புகையில் சோவியத் நாட்டின் ஐந்தாண்டுத் திட்டத்தையும் தன்னோடு கொண்டு வந்தார். தமது குடியரசுப் பதிப்பகத்தின் வாயிலாக அதனை வெளியிட்டார். அந்தக் காலக் கட்டத்தில்தான் இங்கிலாந்து நாட்டின் பேராசிரியரர்கத் திகழ்ந்த லாஸ்கியின் மாணவர் சி.டி. இராசேசுவரன் பச்சையப்பன் கல்லூரியில் அண்ணாவுக்குப் பொருளாதாரப் பேராசிரியராக வந்தார். பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தொடர்பும் அண்ணாவுக்கு ஏற்பட்டது. ‘பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம் புனிதமோடு அதை எங்கள் உயிரென்று காப்போம்’ என்ற முற்போக்குக் கருத்தைப் பாவேந்தர் பாரதிதாசன் வடித்துத் தந்தார்.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நகர்கின்ற இந்த வையம் எனப் புரட்சிக் கவிஞர் வடித்துத் தந்த குறிக்கோளையும் தம் சிந்தனைக்கு முன்வடிவமாகக் கொண்டார். இருப்பவன் இல்லாதவன் போராட்டமே உலகப் போராட்ட வரலாறாகக் கண்டார். அக்காட்சியின் வளர்ச்சியாகப் பின்னாளில், ‘ஜமீன்இனாம் ஒழிப்பு’, ‘பணத்தோட்டம்’,

'சமதர்மம்' முதலான நூற்களைப் படைத்தார். 'இன்றைய உலகத்திலுள்ள பணம் சிறு குட்டையில் தேங்கிய நீரைப் போலல்லவா இருக்கிறது. குடிப்பதற்கு இந்த நீர் பயன் இல்லை. ஊர்ந்து செல்லும் சதுசதுப்பான விஷக்கிருமிகளின் முட்டைகள் மட்டுமே இதில் நன்றாக வளர்கின்றன. இந்தக் கிருமிகள் பரவியவுடன் இதன் அக்கம்பக்கத்தில் உள்ள மக்கள் நொடி நேரத்தில் பொட்டு பொட்டென்று சாவதில் வியப்பேது எனும் காண்டேகரின் (திராவிடநாடு, காண்டேகர், 21.7.46) கருத்தைச் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சிலபேர்கள் கையில் உருளும் பணம்தான் எனக் கண்டார். அளவுக்கு மிஞ்சிய செல்வம் பலரை விலங்காக்குகிறது; அதேபோல அளவுக்கு மிஞ்சிய வறுமையும் தம்மைத்தாமே அழித்துக் கொள்ளும் குற்றவாளி யாக்குகிறது. ஒரு சிலர் இருக்கும் நிலைமாற்றக் கிளர்ந்தெழுந்தனர். ஆனால் அவர்களின் எழுச்சியைச் செல்வர்களின் செல்வாக்கு சீரழிக்கிறது. பொய்யும் புரட்டும் செல்வரின் ஏவலராகிப் பொருளுடையார்க்கும் மேலும் பொருளையும் புகழையும் தேடித்தருகின்றன; பலரை வறுமையில் உழல வைத்துச் சமூகத்தில் ஏற்படும் பலதவறுகளுக்கு ஆளாக்குகின்றன. அவற்றையெல்லாம் எடுத்துக்காட்டும் வகையில் அண்ணாவின் புனைகதைகள் அமைந்துள்ளன.

## வறுமைக் கொடுமை

வறுமை, செல்வம் படைத்தவர்களால் உருவாக்கப்பட்ட நோய். மதத்தின் மாற்றாந்தாய்ப் பிள்ளை. ஆதிக்க அதிகாரத்தின் ஆலையில் பிழிந்தெடுக்கப்பட்ட சக்கை. செல்வர்கள் தாங்கள் பெற்றுள்ள செல்வத்தால் உலகிலுள்ள எல்லா நலன்களையும் அனுபவிக்கிறார்கள். வறுமைக்கு ஆட்பட்டவர்கள் எவ்வளவு தகுதி உடையவராக இருந்த போதிலும் துன்புறுகிறார்கள். உழைக்கும் திறன் இருந்தும் வறுமையையே வாழ்வாகக் கொண்டு வாழ்கின்றனர். இன்றைய சமுதாய அமைப்பில் வறுமையே எல்லாத் துன்பங்களுக்கும் தோற்றுவாயாக அமைவது. வறுமையில் விளையும் தீங்கு அவர்களுக்கு மட்டுமன்றிப் பொதுவாகச் சமுதாயம் அனைத்தையும் வாட்டுகிறது.

அண்ணா எளிய குடும்பத்தில் பிறந்ததால் வறுமையின் கொடுமையை அனுபவத்தில் முற்றும் உணர்ந்தவராக இருந்தார். அதனால்தான் அவரது கதைகள் கற்பனையாக இல்லாமல், வாழ்வில் பல்வேறு கூறுகளை வரைந்து காட்டும் ஓவியமாக அமைந்துள்ளன. தான் பெற்ற மழலைச் செல்வத்தைக் காப்பாற்ற வழியின்றி நெசவாளர் குடும்பத்தில் பிறந்த ஏழைத்தாய் நூலை விற்பதுபோல் குழந்தையை விலை கூறிவிற்பதைச் 'சரோஜா

ஆறணா' என்ற கதையில் கூறிச் செல்கிறார். வாழவழியின்றி இறப்பதையும் வறுமைத் துயரால் பெற்ற தாயைக் கொன்று அவளது மகனும் இறக்க முயல்வதையும், (ஒருவன் தான் பிடிபட்டான்) வறுமையால் திருடுவதையும் (கள்ளன்), கொலை செய்து கொள்வதையும் தம் கதைகளில் உருக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார். இக்கதைகள் வறுமையின் கொடுமையைக் காட்டி வறுமையே எல்லாத் துன்பங்களிலும் கொடியது என்ற நிலையைச் சித்திரிக்கின்றன.

வறுமைக் கொடுமையால் திருடுகின்றனர். 'சமுதாயத்தில் ஏற்படும் இதுபோன்ற தவறுகளுக்குத் தனிமனிதன் பொறுப்பன்று; சமுதாயமே குற்றவாளியாகும். வறுமையால் தவறு செய்பவர்களைத் தண்டித்து விடுவதால் மட்டும் குற்றவாளியைத் திருத்தி விடமுடியாது. குற்றங்களையும் குறைத்துவிட முடியாது. குற்றங்கள் குறையவேண்டுமானால் குற்றம் செய்வதற்குக் காரணமான வறுமை போக்கப்படவேண்டும். வறுமை ஒழிக்கப் படாதவரை இத்தகைய தவறுகள் நடந்து கொண்டு தாம் இருக்கும்' என்பதைப் '*பார்வதி பி.ஏ.*'வில் கூறுகின்றார். பார்வதி தன் தோழி உத்தமியிடம் பெரும்பாலானவர்களின் மூளை குழம்பியதற்குக் காரணம் வறுமை. 'பைத்தியக்காரச் சாலை', அதன் விளைவு. கோர்ட்டு, போலீஸ், சிறை, தூக்குமேடைபோல் பைத்தியக்காரச் சாலையும் வறுமையை ஒழிக்காததால், இருக்கவேண்டி நேரிட்ட இடங்கள். மூலத்தை முறியடிக்காமல் மேல் பூச்சு, இவைகள் பலிக்காது' என்று கூறுவது சிந்திக்கத்தக்கதாகும். (அண்ணா, *பார்வதி, பி.ஏ.*, ப.32)

## ஏழையின் உள்ளம்

வறுமையின் கொடுமையால் செல்வந்தன் ஒருவனைக் கொன்று ஒருவன் வெளிநாட்டிற்குத் தப்பிச் செல்கிறான். அங்குப் பெரும் பொருளைச் சம்பாதித்துக் கோடீசுவரனாக வாழ்கிறான். ஆனாலும் அவன் செய்த தவறால் அவன் மனச்சாட்சி உறுத்திக்கொண்டே இருக்கிறது. கொலை செய்யத் துணிந்ததற்கு அவனது வறுமையே காரணமாகும். ஏழைகள் தவறு இழைத்த போதிலும், அவர்களது மனச் சாட்சி வருத்துவதை 'நெஞ்சில் நெருப்பு' என்ற சிறுகதையில் கூறுகிறார்.

## வறுமையின் கொடுமை

இளம்பெண்கள் வயோதிகர்களை மணப்பதற்கும் வாழ்விழந்து விதவைகளாக வாடுவதற்கும் வறுமையே வித்தாக

அமைகிறது. அழகான பெண்கள் வறுமையால் வயோதிகர்களை மணந்து வேதனைப் படுவதைக் 'கபோதிபுரக் காதலி'லும், 'குமஸ்தாவின் பெண்ணி'லும் வெளிப்படுத்துகிறார். அறுபது வயது நிறைந்த மாரியப்பா பிள்ளை பதினாறு வயதே நிறைந்த சாரதாவை வறுமையால் மணந்து கொள்வதைக் 'கபோதிபுரக்காதல்' காட்டுகிறது. வரதட்சணைக் கொடுமையால் இளைஞரை மணக்க முடியாது, வயோதிகர் கணபதி சாஸ்திரிக்குக் காந்தா நான்காவது மனைவியாக வாழ்க்கைப்பட்டு வேதனையுறுவதைக் 'குமாஸ்தாவின் பெண்தான் அல்ல கொலைக்காரியின் குறிப்புகள்' புலப்படுத்துகின்றன. வறுமையின் துயரத்தையும் அதன் வழியாகத் தோன்றும் ஒழுக்கக் கேட்டையும் கொலைபுரியும் கொடுமையையும் 'குமாஸ்தாவின் பெண்தான்' என்று கதையின் மூலம் வெளிப்படுத்துகிறார். பெண்கள் கற்பை இழப்பதற்கு வறுமை வலுவான காரணமென 'அவள்' விபச்சாரியானாள்' என்ற சிறுகதையிலும் குறிப்பிட்டுள்ளார். கணவனை இழந்த வள்ளி வறுமை தாங்காமல் வேறு ஒருவனின் மனைவியாக மாறினாள். பெண்கள் கற்பை இழப்பதற்கு வறுமையே காரணமென்பதைக் 'கோமளத்தின் கோபம்' என்ற கதையிலும் எடுத்துக் காட்டியுள்ளார்.

**சமயப்பணி**

மக்களின் பசிப்பிணியைப் போக்குவதே சமயப்பணியென முன்னோர்கள் கண்டனர். மக்கள் வயிற்றுப் பசியோடு போராடும்போது ஆண்டவனின் பெருமையையோ, ஆலயங்களின் சிறப்பையோ எண்ண நெஞ்சம் இடந்தருமா? இதனையே சுவாமி விவேகாநந்தர், 'பட்டினியால் வருந்துகிற மக்களுக்குச் சமயபோதனை செய்யப்படுவது பெரிய அவதூறு ஆகும். பசித்து வாடிக் கிடக்கின்ற மனிதனுக்குத் தத்துவஞானம் போதிக்கப்படுவது அவரை நிந்திப்பதாகும். (சுவாமி விவேகாநந்தர், ஞானதீபம், சுடர், (மொழி.பெ.) ப.24). கலிதீர்த்த பெருமாள் என்று கடவுளுக்கு ஒரு பெயர் உண்டு. ஆனால் அந்தக் கலிதீர்த்தவன் மக்களின் கலியை, வறுமையைப் போக்கவில்லையே யெனக் 'கலிதீர்த்தபெருமாள்' என்ற சிறுகதையில் கேட்கிறார். வறுமையால் வாடிய ஒருவன் தன் மனைவியையும், குழந்தையையும் சினந்து கொள்கிறான். தன் வறுமையைப் போக்காத ஆலயத்தை அண்ணாந்து பார்த்துப் பெரு மூச்சுவிடுகின்றான். அவன் வறுமையை அந்தக் கலிதீர்த்தவன் போக்கவில்லையேயெனக் கவலை தெரிவிக்கிறார். மதுரைக்கு

டிக்கெட் இல்லை என்ற சிறுகதையில் சமயப் பணியைவிட வயிற்றுப் பசியைப் போக்குவதே சமயத்தின் முதற் பணியாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார். மில் தொழிலாளி மதுரை, பெரிய நாயகியை மணந்தான். அவளும் நான்கு குழந்தைகளைப் பெற்றுவிட்டு இவ்வுலகை விட்டே போய்விட்டாள். இன்பங்காண இல்லறத்தில் நுழைந்த மதுரை ஏமாற்றத்திற்கு ஆளானான். பிள்ளைகளைத் தன்னுடைய தமக்கையார் வீட்டில் சேர்த்துவிட்டுச் சாமியார் கூட்டத்தில் சேர்ந்தான். எங்கெங்கெல்லாம் ஓடி ஆடித்திரிந்தும் அவன் வறுமை நீங்கவில்லை. மரணத்தைத் தழுவினான். அவனுக்கு வேண்டியது வயிற்றுப் பசிக்கு உணவு. அதை விடுத்து ஆன்மிக நெறியை உயிரினும் மேலாகப் போற்ற வேண்டுமென்ற அருளுரை மதுரை போன்ற ஏழைகளுக்கு இன்பம் அளிக்க வில்லை என்பதை 'மதுரைக்கு டிக்கெட் இல்லை' என்பதில் கூறியுள்ளார். இந்து சமயத்திற்கு அதன் பக்தர்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்தனர். ஆனால் இந்து சமயம் மக்களின் வறுமையைப் போக்க என்ன செய்தது என்ற வினாவை அண்ணா தொடுத்துள்ளார்.

வறுமையைப் போக்க நாட்டம் கொள்ளாத சமயத்தை வெறுத்தது போலவே வறுமையால் திருடினவனைத் தண்டிக்கும் சட்டத்தையும் அண்ணா வெறுத்தார். ஒருவனைச் சட்டத்தால் தண்டித்து விடுவதால் மட்டும் அவனைத் திருத்திவிட முடியாது. ஏன் அவன் அத்தகைய தவறைச் செய்தான்? அவன் அத்தவறைச் செய்வதற்குரிய சூழ்நிலை எவ்வாறு உருவாகியது என்பதை அறிவது மிகமிகத் தேவை யென்று 'தீர்ப்பளியுங்கள்' என்ற சிறுகதையில் கூறியுள்ளார். மகாலிங்கம் என்பவன் பித்தளைச் சங்கிலியைப் பொன் என்று கூறி விற்றதாக வழக்கு தொடரப் பட்டது. பர்மாவிலிருந்து வந்த அகதி ஒருவன் தன் அவசரத் தேவைகளுக்குப் பணம் வேண்டுமென்று மகாலிங்கத்திடம் கூறிச் சங்கிலியை அடகு வைத்துப் பணம் பெற்றுச் சென்றான். அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்த நூறு ரூபாயை மகாலிங்கம் அந்தப் பர்மாக்காரனிடம் கொடுத்துச் சங்கிலியை வாங்கினான். தங்கச் சங்கிலி யென்று நினைத்து மார்வாடி கடைக்கு விற்கச் சென்றான். மார்வாடியால் போலி நகையை விற்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு மகாலிங்கம் வழக்கில் சிறைத்தண்டனை பெற்றான். இந்தக் கதையில் நீதிபதியின் வாயிலாக ஓர் உண்மையை வெளிப்படுத்துகிறார்.

### நீதிபதி வழங்கிய தீர்ப்பு

'ஒரு வழக்கு மட்டுமல்ல, பொதுவாகவே அதாவது ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக் காரணம் அவர்களின் ஏழ்மை.

ஆகவே தண்டிக்கப்பட வேண்டியது ஆட்களல்ல. பொருளாதாரப் பேத அமைப்பு முறை'. அண்ணா குற்றங்கள் புரிவதற்குக் காரணமான பொருளாதார அமைப்பு முறையைச் சாடுகிறார்.

'குற்றவாளி தண்டிக்கப்படுகிறான். சட்டம் வேலை செய்கிறது. ஆனால் ஏன் குற்றவாளியானான் என்பதை அறியும் முயற்சியோ அவனைத் திருத்தும் முயற்சியோ நாட்டில் இல்லை ஏன்? பாம்பு தேள் போலக் குற்றவாளி என்று ஒருவகை மக்கள் இருக்கிறார்கள் என்று முடிவு செய்துவிட நாடு கற்றுக் கொண்டிருக்கிறதே யொழிய இன்று குற்றவாளியாய் உள்ளவன் நேற்றுவரை ஒரு குற்றமும் செய்யாது இருந்திருக்கிறான். இன்று செய்ய வேண்டிய நிலை ஏன்? என்று ஆராய முயற்சிக்கவில்லை. அவன் குற்றவாளி; ஆகவே சிறைக்குத் தள்ளு. பாம்பு அடித்துக் கொன்று விடு என்று மிகமிகச் சுருக்கமாக நீதி ஒரு முறையைச் செய்து கொண்டது எனச் செய்யாத குற்றத்திற்கு ஜென்மத் தண்டனை என்று நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். 'சூழ்நிலையே மனிதரில் சிலரைக் குற்றவாளியாக்குகிறது. சமுதாய நிலை, கள்ளனை, காமுகனை, கொலைகாரனை, குடியனை, வெறியனை, பித்தனை, எத்தனை, பிச்சைக்காரனை உண்டாக்குகிறது' என அதே நூலுக்கு அளித்துள்ள உரையில் கூறியுள்ளார். நூலாசிரியனின் எழுதுகோல் குற்றம் செய்தவனின் சூழநிலையை விளக்க முயலவேண்டுமெனும் அண்ணாவின் விருப்பம் அவரது கதைகளிலே விளைவாகியிருக்கின்றது.

### சமீன்தார்களின் தன்னலப் போக்கு

அண்ணா கதை எழுதிய காலத்தில் சமீன்தார் முறை நாட்டில் இருந்தது. அவர் சேர்ந்து, பணியாற்றிய நீதிக்கட்சியிலும் நிலக்கிழார்கள் நிறைந்திருந்தனர். அவர்களது இயல்பையும் இறுமாப்பையும் அனுபவத்தில் காணுகின்ற வாய்ப்பினையும் அண்ணா பெற்றிருந்தார். அவரது தொடக்ககாலக் கதைகளில் பெரும்பாலானவை மிட்டாமிராசுகளைப் பற்றியதாகவே இருந்தன. ஏறத்தாழப் பதினெட்டுக் கதைகள் சமீன்தார்களைப் பற்றியனவாகவே உள்ளன. அக்கதைகளில் சமீன்தார்களின் ஆடம்பர வாழ்க்கையையும் பரத்தையர் உறவையும் காட்டிப் பின்னர் அவர்கள் செல்வத்தை இழந்து சீரழிவதையும் காட்டியுள்ளார்.

சமீன்தார் முறையால் சமுதாயம் அடைந்த கேட்டினை, அண்ணா 'மற்ற பல முதலாளித்துவத்தைவிட நிலமுதலாளித்துவ

மிருக்கிறதே அது மனிதத் தன்மை மாய்ப்பதிலே முதல் தரமானது. குடும்பம் குடும்பமாக இந்த முதலாளித்துவத்துக்கு அடிமையாகி, தலைமுறை தலைமுறையாக, 'காலில் வெள்ளை எலும்பு முளைத்த நாள் முதலாய் அடிமைக்காரனையே' என்று நந்தனார் பாடினார் என்கிறார்கள். வாழ்க்கையில் இதைப் பாடிச் சொல்வதில்லை. ஆனால் உண்மை நிலை என்னவோ இதுதான். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அண்ணா. நீதிக்கட்சியில் இருந்த போதிலும் அவர் மனம் சமதர்மச் சார்புடையதாகவே இருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'உங்கள் சொற்பொழிவில் சமதர்மம் (Socialism) காணப்படுகிறது. ஆனால் நீங்கள் ஏன் அந்தப் பதவி வேட்டையாடும் பிற்போக்கான கட்சியாகிய நீதிக்கட்சியில் இருக்க வேண்டுமென மாணவர்கள் கேட்டனர். அண்ணா அதற்குப்பதில் உரைக்கும்போது, அந்தக் கட்சியில் ஏன் நான் இருக்கின்றேன் என்றால் அந்தப் பணக்காரக் கட்சியைச் சனநாயக சமதர்மக் கட்சியாக மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான்' எனக் கூறினார். கூறியவண்ணமே வெள்ளையர் ஆட்சியில் தரப்பட்ட சர் இராவ்பகதூர், திவான் பகதூர், இராவ் சாகிப் போன்ற கௌரவப் பட்டங்களைப் பெற்றவர்கள் அந்தப் பட்டங்களைத் துறக்க வேண்டும். மீண்டும் அவர்களோ மற்றவர்களோ அத்தகைய பட்டங்களையும், விருதுகளையும் வெள்ளை யரிடமிருந்து பெறக் கூடாது எனச் சேலம் மாநாட்டில் 'அண்ணாதுரை தீர்மானம்' என்ற பெயரில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேறச் செய்தார்.

தொடக்ககாலக் கதைகளில் சமீன்தார்களைக் குறித்து வரைந்தார். நிலக்கிழார்களால் பெண்கள் கற்பழிக்கப்பட்டுக் கைவிடப்பட்டதைப் 'பிரார்த்தனை', 'சொல்லாதது' ஆகிய கதைகளில் வேதனையோடு குறிப்பிட்டுள்ளார். சமீன்தார் முறை சட்டத்தால் ஒழிக்கப்பட்ட பின்னரும், 'வண்டிக்காரன் மகன்', 'அப்போதே சொன்னேன்' ஆகிய இரண்டு குறும் புதினங்களில் சமீன்தார் பற்றி எழுதியுள்ளார். அண்ணாவின் வெறுப்புக்கு ஆளானவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சமீன்தார்களேயாவர்.

**செல்வர்களின் வாழ்க்கை முறை**

பொருளால் சிலர் செல்வராகவும் பலர் வறியராகவும் சமுதாயத்தில் தோன்றியவுடன் அவர்களது உழைப்பிலும் வேறுபாடு ஏற்பட்டது. நாளெல்லாம் உழைக்கும் ஏழையின் உழைப்பு புறக்கணிக்கப்பட்டது. உழைக்காத செல்வரின் உழைப்பு பெருமைப் படுத்தப்பட்டது. இந்நிலையிலுள்ள குறைகளைச்

சுட்டிக் காட்டி, 'தனபாலச் செட்டியார் கம்பெனி' என்ற சிறுகதையில் வரைந்துள்ளார். முதலாளி, தொழிலாளி ஆகிய இருவரின் இருவேறு நிலைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறார். கதையின் தொடக்கத்தில், 'கற்பனைதான்! ஆனால் இந்தப் புள்ளிகளின் வாழ்க்கை வேறு விதமாக இருக்கும்? முதலாளி செட்டியாரின் முடுக்கும், பாட்டாளியின் அலுப்பும் இருசாராரின் மனோநிலையும் இருப்பதைத்தான் தீட்டினேன்' எனப் பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையில் இருக்கும் பேதத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

> செட்டியார் காலை 7.30 மணிக்குள் கண்விழித்தார்
>
> 7.45க்குப் படுக்கையை விட்டு எழுந்தார்
>
> 8.30க்குள் காலைக் கடன்களை முடித்தார்
>
> 9.30 வரை வீட்டிலே இருந்தார்
>
> காலை டிபன் வகையறா சாப்பிட்டார்

வேலையாள் காலை 4.30க்கு எழுந்திருந்தான். நடவுவேலைக்கு வேண்டிய தொழிலாளியிடம் சென்று வேலைக்கு வருமாறு சொல்லித் திரும்பினான். நெல் மண்டிக்குப் போனபின் தன்குடிசைக்குச் சென்று கட்டை பிளந்துவிட்டு முதலாளி வீடுவந்தான். செட்டியார் வீட்டைவிட்டு 11 மணிக்குப் புறப்படும்போது தொழிலாளியைப் பார்த்து, 'அடே சோம்பேறி என அழைக்கிறார். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உழைப்பில் உள்ள பாகுபாட்டைத் 'தனபாலச் செட்டியார் கம்பெனி' என்ற சிறுதையில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

மனிதர்களுக்குள் ஏற்படும் பேதங்கள் பொருளால் ஏற்படுவனவேயன்றிச் சாதியால் அல்ல என்பதனை 'இருபரம்பரைகள்' என்ற கதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

> ஒரு சமுதாயத்தில் உடையான் -இல்லான் என்ற இரு வேறு வர்க்கங்கள் இருக்கிறவரை வறுமையும் இருந்தே தீரும் என்பதை, சி.என். அண்ணாதுரையின் இரு பரம்பரைகள் தொனிப் பொருளாகப் புலப் படுத்துகிறது.

எனக் கூறியுள்ளார் ஒரு திறனாய்வாளர். (மா. இராமலிங்கம், விடுதலைக்குமுன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், ப.120.)

சுகானந்தமும் தனபாலச் செட்டியாரும் ஒன்றாக இணைந்து கடைவைத்து வியாபாரம் செய்தனர். காலமாற்றத்தால் சுகானந்தர் ஏழையானார். ஆயினும் இருவருக்கிடையே நட்பு

இருந்து வந்தது. தனபாலச் செட்டியாரிடமிருந்து சுகானந்தர் ஒரு நாய்க்குட்டியை வாங்கி வந்தார். மற்றொரு நாய்க்குட்டி தனபாலச் செட்டியார் வீட்டிலே வளர்ந்தது. செல்வர் வீட்டில் வளர்ந்த நாய்க்குட்டிக்கும் ஏழை வீட்டில் வளர்ந்த நாய்க்குட்டிக்கும் எவ்வளவோ பேதங்கள் இருந்தன. அவை வளர்கின்ற இடத்தால் ஏற்பட்டவை. ஒரே வயிற்றில் பிறந்த இருநாய்க்குட்டிகளுக்குள் வளர்கின்ற இடத்தால் பேதம் இருப்பதைப் போல ஒரே சாதியில் பிறந்த இருவருக்குள் பொருளால் பேதம் உண்டென்பதனை அண்ணா இவ்வாறு கூறியுள்ளார்.

'மனிதர்களில் மட்டுமல்ல, சகலஜீவராசிகளிலும் இரண்டு வகையான 'பரம்பரை' இருப்பதைச் சிங்காரம் தெரிந்து கொண்டான்; தெளிவு பெற்றான். சாதி ஒன்றாக இருந்தாலும் பொருளாதாரத்தால் அடிப்படையாகவுள்ள வேறுபாடே மனிதர்களிடையே மிக அகன்ற இடைவெளியை ஏற்படுத்துகிறது' என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். உழைப்பின் பயன் உழைப்பவனுக்குக் கிடைக்காமல் போகும் துயரநிலையைச் 'செவ்வாழை' என்ற சிறுகதையில் எடுத்துக் காட்டியுள்ளார். பிள்ளையைப்போல் வளர்த்த செவ்வாழை வளர்த்தவனுக்கும், அவன் குழந்தைகளுக்கும், குடும்பத்திற்கும் பயன்படாமல் போகும் துன்பநிலையை அவல ஓவியமாகச் 'செவ்வாழை' என்ற கதையில் சித்திரித்துள்ளார். இன்றைய சமூக அமைப்பில் பொருளாதார ஏற்றத்தாழ்வு உள்ளவரை, உழைப்பவனின் உழைப்பு வஞ்சகர்களால் சுரண்டப்படும் கொடுமை இருந்தே தீருமென்பதை இக்கதை மூலமாக உணர்த்துகிறார். தொழிலாளர் உலகில் இத்தகைய நிகழ்வுகள் மிக இயல்பானவையாக இருப்பதைக் காட்டி உழைப்பாளர் உழைப்பின் முழுப் பயனையும் அடையும் நாள் எந்நாளோ? என்பதைச் 'செவ்வாழை' என்ற சிறுகதையின் உட்பொருளாகத் தெரிவித்துள்ளார். செல்வர்களின் தன்னலத்தைப் 'பிரம நாயகம்' என்ற சிறுகதையிலும், வணிகர்கள் தங்கள் நலத்திற்காக எச்செயலையும் திட்டமிட்டுச் செய்ய அஞ்சமாட்டார்களென்பதைப் 'பக்த பக்காத்திருடன்' என்ற சிறுகதையிலும் புலப்படுத்தியுள்ளார்.

பணம் கிடைக்க வேண்டுமென்பதற்காக எத்தகைய இழிசெயலிலும் இறங்கத் தயங்கமாட்டார்கள் செல்வர்கள் என்பதனை 'ரங்கோன் ராதா'வில் படம்பிடித்துக் காட்டியுள்ளார். தருமலிங்க முதலியார் தன் மனைவி ரங்கத்தின் வீட்டு மிட்டா கிடைக்க வேண்டுமென்பதற்காக ரங்கத்தின் தங்கை

தங்கத்தையும் மணந்துகொள்கிறார். கேட்டதெல்லாம் கொடுக்கும் சிந்தாமணி லேகியம் தேடி அலைகிறார். செல்வர்கள் தங்கள் வருவாயைப் பெருக்குவதில் எவ்வளவு கவனமாக இருக்கிறார்கள் என்பதை 'வரவு -செலவு' என்ற சிறுகதை சுட்டிக்காட்டுகிறது. ஜவுளிக்கடை, பலசரக்குமண்டி, காண்டிராக்ட், கமிஷன் ஏஜென்ட் போன்ற பல்வேறு வருவாய் வரும் வழியைப் பெற்ற சீமான் நந்தகோபாலர் ஒருநாள் தமது மாளிகையில் தொலைபேசியில் மற்றொரு செல்வரோடு பேசிய பேச்சுக்களைக் குறிப்பது 'வரவு செலவு'. இந்தப் பேச்சு செல்வர்களின் போக்கைக்காட்டுகிறது. காசைச் செலவிடாமலே காரியத்தைச் சாதித்துப் பிறர் உழைப்பைச் சுரண்டிப் பிழைக்கும் செல்வர் போக்கை விளக்குவதாகும், 'வரவு செலவு'.

## செல்வர்களின் இயல்பு

செல்வர்கள் தம்மை ஒத்த செல்வரை வெல்வதில் ஏழைகளைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துவர். பின்னர்ச் செல்வர்கள் தங்களுக்கிடையேயுள்ள பகையை மறந்து கொள்வினை கொடுப்பினைகளில் ஈடுபட்டு நட்பை வளர்த்துக் கொள்வர். செல்வரை ஒழிக்கப் பயன்பட்ட ஏழைகளைத் தாமே வேலையிலிருந்து நீக்கிவிடுவர். ஏழைகளோ செல்வர்களுக்குக் கருவியாக யிருந்து பணக்காரர்கள் ஏவிவிட்ட ஏழைகளோடு தம் உறவை மறந்து பகைகொள்வர். ஏழைகள் காரணங்களை ஆராயாமல் தம் சச்சரவுகளைப் பெரிதாக எண்ணித் தமக்குள் கொலை செய்து கொள்ளவும் தயங்க மாட்டார்கள். இதனைச் சிற்றூர்ப் பின்னணியில் தீட்டியுள்ளார். இக்கதையின் தலைப்பு சிலேடைப் பொருளில் அமைக்கப்பட்டுள்ளது. பொருளுடையார் தமக்குள் காட்டும் பகையெல்லாம் வெறும் போலித்தனம் என்பதையும் அவர்கள் என்றும் உடையமாட்டார்கள் என்பதையும் 'உடையார் உள்ளம்' உணர்த்துகிறது. இச் சிறுகதையில் வரும் மாந்தர்கள் உடையார் சாதியைச் சார்ந்தவர்களாகப் படைக்கப் பட்டிருப்பது தலைப்புக்கு சாதி, செல்வம் எனும் இருபொருளைத் தந்து நிற்கிறது.

'ரொட்டித் துண்டு' என்ற சிறுகதை செல்வர்கள் புரட்சிக் கருத்துக்களைக் கண்டு அஞ்சுவதைக் குறித்துக் காட்டுகிறது. தன் மகனே புரட்சிக் கருத்துக்களைப் பரப்புவனாக அறிந்தபோது முதலாளி ஆத்திரங் கொள்கிறார். தன்மகன் தன் கருத்திற்கு எதிரானவன் இல்லையென்பதை அறிந்த தந்தை எல்லையில்லா மகிழ்ச்சியடைகிறார். காலத்திற்கேற்பப் பணக்காரர்கள்

சமதருமத்தின் காவலர்களாகக் காட்சியளிப்பதை 'முகம் வெளுத்தது' என்ற சிறுகதையிலும் காட்டியுள்ளார். சமதருமத்திற்கு எதிராக முதலாளிகள் பேசும் சமதருமம் மக்கள் வாழக்கைக்குப் பயன்தராது. சீமான்கள் பேசும் சமதருமம் எத்தகையதென்பதைப் 'பார்வதி பி.ஏ.' வில், பார்வதி 'சீமானின் சமதர்மப் பிரச்சாரம் ஓய்வுநேர உல்லாசம், ஏழைக்கோ அது ஒன்றுதான் வாழ்க்கைத்தோணி எனக் குறிப்பிடுகிறாள்.

மாறிவரும் உலகத்தில் மக்களிடம் காணப்படும் எழுச்சியைக் கண்டு சமீன்தார்கள் கலக்கமுறுவதைப் 'பூபதியின் ஒருநாள் அலுவல்' என்ற சிறுகதையில் காட்டியுள்ளார். முன்னாளில் சமீன்தார்கள் செல்வாக்கோடு வாழ்ந்தார்கள். மக்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள். காலமாற்றத்தால் விளைந்த புரட்சி என்ற சொல்லே அவர்களுக்கு நில நடுக்கமாகியது. வானொலியில் சோவியத்து நாட்டுப் புரட்சியைக் கேள்விப்பட்டவுடனே வானொலிப் பெட்டியை உடைக்க முந்தும் சமீன்தார்களின் ஆத்திர உணர்ச்சியை நையாண்டி செய்கிறார். செல்வர்கள் தங்கள் பணத்தால் தாம் நாடினவற்றை அடையப் பல தீய வழிகளையும் மேற்கொள்ளுவதை அண்ணா தம் கதைகளில் காட்டியுள்ளார். வெட்டியூர் மிராசுதார் குட்டப்ப பூபதி பக்கத்துக் கிராமத்திலுள்ள ஒரு பெண்ணைத் தேடி வண்டியில் சென்றார். வண்டியை ஓட்டிச்சென்ற மாகாளி மாடுகளை அவிழ்த்துவிட்டு மிராசுதார் வருகைக்காக ஒரு மரத்தடியில் காத்திருந்தான். பலர் மிராசுதாரைத் துரத்தி வர, மிராசுதார் வண்டியை நோக்கிப் பரபரப்போடு ஓடி வந்தார். மாகாளி வண்டியைப் பூட்டி மிராசுதாரை அமரவைத்து விரைந்து செலுத்தினான். வண்டி சென்று கொண்டிருந்தபோது மாகாளிடம் மிராசுதார் ஒரு பெண்ணைத் தான் ஏமாற்றிவிட்டு ஓடி வந்ததாகக் கூறினார். அதைக் கேட்ட மாகாளி வண்டியை அக்கிராமத்திற்கே ஓட்டிவந்து ஊராரைக் கூட்டி அப்பெண்ணின் கழுத்தில் கோயிலில் வைத்துத் தாலி கட்டச் செய்தான். இந்த ஏற்பாடு நடந்து கொண்டிருக்கும்போது காரிலும், லாரியிலும் பலர் வந்து மிராசுதாரை அழைத்துச் சென்று விட்டனர். மாகாளி பல இன்னல்களுக்கு ஆளானான். இறுதியாக மாகாளி நஞ்சூட்டிக் கொல்லப்பட்டான். செல்வர்கள் செய்யும் தகாத செயலையும் அதனை எதிர்த்தால் ஏழைகள் நஞ்சூட்டிக் கொல்லப்படுவதையும் 'தழும்பு' என்ற குறும்புதினத்தில் வரைந்து காட்டியுள்ளார்.

செல்வர் வீட்டுப் பெண்ணை ஏழை காதலித்த குற்றத்திற்காக அவன் மீது பொய்க்குற்றம் சாட்டிச் சிறைக்கு

அனுப்பிக் கொடுமை விளைவித்ததை 'நீதிபதி வக்கீலானார்' எனும் கதையில் உணர்த்தினார். செல்வர்கள் தவறு செய்துவிட்டு ஏழைகளைக் குற்றவாளியாக்கும் கொடுமையைக் 'கைதிகள்' என்ற கதையில் கூறியுள்ளார்.

செல்வர்கள் வணிகத்துறையில் நுழைந்து மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் பதுக்குவதும் கள்ளச்சந்தையில் விற்பதும் தண்டனைக்குரியதை அண்ணா தம் கதையில் வலியுறுத்தியுள்ளார். இதனைக் 'கடவுள் தண்டிப்பார்' என்ற சிறுகதையில் விளக்கிச் செல்கிறார். செல்வர்கள் தங்களிடம் உள்ள பணத்தால் பத்திரிகைகளைத் தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டு உண்மையை விலைக்கு வாங்கிவிடும் போக்கைப் 'பல்லிளிக்கும் பரப்பிரம்மங்கள்', 'வழுக்கி விழுந்தவர்கள்', 'தழும்பு' முதலான கதைகளில் கண்டித்துள்ளார். ஏடுகளை நடத்தும் எழுத்தாளன் செல்வர்களின் ஆதிக்கத்திற்குக் கீழ்ப்படிந்துவிடாமல் உண்மையை உரைக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தை 'மக்கள் தீர்ப்பு' எனும் கதையில் கூறியுள்ளார்.

செல்வர்கள் இலாபம் ஈட்டுவதற்காகத் தங்களை மறைத்துக் கொண்டு பேரம் பேசும் வேடத்தைப் 'பொய் இலாப நஷ்டம்' என்ற கதையில் வெளிப்படுத்தியுள்ளார். ஒரு சொத்தைத் தன் பேரில் வாங்காமல் தம் ஏஜன்ட் பெயரில் வாங்குமாறு செய்கிறார், உண்மையான உரிமையாளர் வேலாயுதம். 'புளுகு பேசிப் பிழைப்பது ஏழைக்கு ஆபத்து. ஆனால் வேலாயுதங்கள் வாழும் முதலாளி உலகிலே அது அவர்களின் உரிமை'யென முதலாளிகளின் மனப்போக்கைத் தெளிவு படுத்துகின்றார். பொருள் ஒருவரிடத்தே குவிந்திருப்பதே தீமைகள் அனைத்திற்கும் காரணம் என்பதனை, 'செல்வம் சிலரிடம் சென்று குவிந்திடுவது வெள்ளத்திற்கு ஒப்பானது. அது கொண்டவனையும் அழித்திடும்' எனத் தம் இறுதிக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் (காஞ்சி, 14.1.1969). ஏற்றத் தாழ்வற்ற, பொருளியல் சமநிலையுள்ள சமுதாயம் உருவாகவே அண்ணா தம் புனைகதைகளைக் கருவியாகக் கொண்டார்.

# கதைக்கலை

## *கதை அமைப்பு*

கதையின் கருப்பொருளுக்கேற்பக் கலை வடிவம் தந்து, கதை அமைப்பு, கதைத் தலைப்பு, தொடக்கம், முடிவு போன்ற ஒவ்வொரு கூறிலும் படைப்பாளன் கவனம் செலுத்தினால் கதை திறம்பட அமையும். சமுதாய விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட அண்ணா தம்முடைய படைப்பில் கலைத்திறன்களை செம்மையுற அமைத்துள்ளார்.

கதையின் பல்வேறு கூறுகளையும் ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவரும் திறமே அமைப்பு எனப்படும். இவ்வமைப்பு கதையினுள் கூறப்படும் கருப்பொருள், கதைமாந்தர், உருவம், உத்தி இவற்றைத் தன்னகத்தே கொண்டது. கதை அமைப்பு எனும் வடிவம் செறிந்த கலைகளே கற்றோரால் பெரிதும் விரும்பப் படுகின்றன. கதைக்கு அமைப்பு தேவையெனினும் கதையின் அமைப்பை வரையறுப்பதில் எழுத்தாளர்களுக்குள் வேறுபாடு உண்டு. அவ் வேறுபாட்டிற்குக் காரணம் மனிதனின் எண்ணப்போக்கேயாகும். வாழ்க்கை அனுபவம் மாறுபடச் செய்கிறது. சிறுகதையின் அமைப்பு எவ்வாறு இருக்கலா மென்பதைப் புதுமைப்பித்தன்,

> சிறுகதையின் ரூபம், கதை எழுதுபவனின் மனோதர்மத்தைப் பொறுத்தது.

என்பார் புதுமைப்பித்தன். (புதுமைப்பித்தன் கட்டுரைகள், ப.33)

எழுத்தாளன் தான் விரும்பும் கருப்பொருளைப் படைத்துக் காட்டத் தொடக்கம், வளர்ச்சி, உச்சநிலை, விடுவிப்பு, முடிவு என்று ஐந்து கூறுகளை மேற்கொள்ளுகிறான். இவ்வமைப்பு முறையை உலகிலுள்ள சிறந்த இலக்கியங்கள் அனைத்தும் பெற்று விளங்குகின்றன. முதலில் ஒரு நிகழ்ச்சி அல்லது சிக்கல் படிப்போரை ஈர்க்கும் வகையில் தொடங்கி விறுவிறுப்பாகத் தொடர்ந்து உச்சநிலையடைந்து, பின்னர்ச் சிக்கலை விடுவித்து முடிந்து விடுகிறது; ஒரு சிக்கலின் ஐவகை நிலைகளையும் விளக்கலாம்; ஒரு மனிதனின் மனப் போராட்டம்

அல்லது இருவருக்குள் ஏற்படும் முரண்பாடு இவற்றை விளக்கலாம். தனி மனிதனுக்கு ஏற்படும் துன்பங்கள், சமுதாயச் சிக்கல்கள் இவற்றைப் படைக்கின்ற எழுத்தாளன், அப்பொருள்களின் தன்மையை விளக்கி, மக்களைச் சிந்திக்குமாறு தூண்டலாம்; சில வேளைகளில் அச்சிக்கலுக்கு முடிவையும் காட்டலாம். அது எத்தாளனின் தனி உரிமை; அவனின் உரிமையில் தலையிடுவது சிறப்பில்லை.

> எழுத்தாளன் ஒரு சட்டத்தின் துணைகொண்டு இது சரி இது தப்பு என்று தீர்ப்பும் தண்டனையும் அளிக்கும் ஒரு சாதாரண நீதிபதியல்ல.

என்பது ஜெயகாந்தன் கருத்தாகும்.

எதிலும் புதுமையைப் படைக்க விரும்பிய அண்ணா, காலமாற்றத்திற்கேற்பப் புனைகதைகளைப் படைத்தார். வெறும் இலக்கண விதிகளை மட்டுமே கருத்தில் கொள்ளாமல், கதை அமைப்பில் கருத்துச் செலுத்தியதனால் எண்ணற்ற வாசகர்களின் நெஞ்சில் நிலையான இடம் பெற்றார். சிறந்த இலக்கியத் தன்மை வாய்ந்த 'சொல்லாதது', 'காமக் குரங்கு', 'சுடுமூஞ்சி', 'பேரன் பெங்களூரில்', 'உடையார் உள்ளம்', 'விழுப்புரம் சந்திப்பு', 'சொல்வதை எழுதேண்டா', 'தழும்புகள்', 'குமரிக் கோட்டம்', 'குமஸ்தாவின் பெண்தான்' அல்லது 'கொலைகாரியின் குறிப்புகள்' ஆகிய புனைகதைகளை வரைந்தார். கதைப் படைப்பில் உருவம், உத்திகளைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

இராஜாஜி, அண்ணா ஆகிய இருவரின் படைப்புகளை மதிப்பிடும் அகிலன்,

> சிறுகதைகளுக்குரிய உருவ அமைதியும் பிற பண்புகளும் உள்ள கதைகள் சிலவற்றையும் கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கும் கதைகளை மிகுதியாகவும் இவ்விருவரும் எழுதியிருக்கிறார்கள்.

எனக் குறிப்பிட்டுள்ளது சிந்திக்கத்தக்கதாகும்.

அவர் எழுதியுள்ள புனைகதைகளுள் 'ரங்கோன்ராதா' என்ற புதினம் சிறப்பிடம் பெறுகிறது.

### ரங்கோன்ராதா

சப்பானியக் குண்டு வீச்சுக்குத் தப்பிய ஒரு குடும்பத்தின் கதையோடு 'ரங்கோன் ராதா' தொடங்குகிறது. கதையின் தொடக்கத்தில் பரந்தாமன் கதை கூறுவதாக அமைந்துள்ளது; பின் பகுதி ரங்கம் தன் கதையைக் கூறுவது போல் செல்கிறது.

பரந்தாமன் தன் நண்பன் நாகசுந்தரத்தின் அழைப்பை ஏற்று அடுத்த வீட்டில் உள்ள பெண்ணைக்காண ஆவலோடு சென்றான். நாக சுந்தரம் கவலை தோய்ந்த முகத்தோடு இருந்தான். பெண்ணைக் காணலாமென ஆவலோடு சென்ற பரந்தாமனிடம் நாகசுந்தரம் தன் தாயின் அவலநிலையையும் தன் தாய்க்கும் நாயுடுவுக்குப் பிறந்த மகளே ராதாவென்றும் கூறுகின்றான்.

தருமலிங்க முதலியாரின் ஆசை மனைவியாக ரங்கம் இருந்தாள். தருமலிங்க முதலியாரின் பேராசை வளர்ந்தது. ரங்கத்திற்கும் அவள் தங்கை தங்கத்திற்கும் பொதுவாக உள்ள 'மிட்டாவை' அடையத் தங்கத்தை மணக்க விரும்பினார். ரங்கம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தாள். தனக்கும் தங்கத்திற்கும் நடைபெற இருக்கும் திருமணத்திற்கு இடையூறாக ரங்கம் இருப்பதால், அவளுக்குப் பேய் பிடித்து விட்டதென்ற வதந்தியைத் தருமலிங்க முதலியார் பரப்பிவிட்டார். உற்றாரும் ஊராரும் நம்பினர். ரங்கம் பேய் பிடித்தவளாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கயிற்றினால் கட்டப்பட்டுத் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டாள். இதற்கிடையில் தருமலிங்க முதலியார் ரங்கத்தின்மீது பரிவு காட்டுகிறார். கணவன் மனைவியிடையே இரண்டு ஆண்டுகளாக அறுந்துபோன உடலுறவு ஏற்படுகிறது. அவளுக்குப் பிடித்துள்ள பேயை ஓட்டப் பக்கத்து ஊரிலுள்ள மந்திரவாதியிடம் ரங்கம் அனுப்பி வைக்கப்படுகிறாள். அங்கிருந்து கணவருக்கு ரங்கம் தான் 'முழுகாமல் இருக்கும்' செய்தியைக் கடிதம் மூலம் தெரிவிக்கிறாள். கணவனிடமிருந்து 'தலை முழுகிவிட்டேன்' என்ற செய்தியைத் தாங்கி அவளுக்குக் கடிதம் வருகிறது. நோய் குணமடைந்த ரங்கம் வீடு திரும்புகிறாள். வீடு திரும்பிய ரங்கம் ஒரு குழந்தைக்குத் தாயாகிறாள். தான் பெற்ற மகனைக் கணவன் வந்து காணவில்லையே யெனக் கவலை கொள்கிறாள். தன் சொந்தக் கணவனாலேயே விபச்சாரி எனப் பழிக்கப்படுகிறாள். பூனைபோல் கணவனுக்கு அடங்கிக் கிடந்தவள் புலிபோல் சீற்றங்கொள்ளத் தொடங்குகிறாள். பொருளாசையால் கேட்டதெல்லாம் தரும் 'சிந்தாமணி'க் குளிகை தேட ஒரு முரடனின் வலையில் தருமலிங்க முதலியார் சிக்குகிறார். சிந்தாமணியைத் தேடப் புறப்பட்ட அவர் மீது அவர் வீட்டிலுள்ள கிழவியைக் கொலை செய்ததாக அவரோடு வந்த முரடன் பழி சுமத்தி மிரட்டுகிறான். புழக்கடைப் பக்கம் வந்த ரங்கம் அம்முரடனை அடித்துக் கொல்கிறாள். தான் இறந்ததாக ஊராருக்குக் கூறுமாறுச் சொல்லி அங்கு நடந்த சம்பவங்கள் அனைத்தையும் தருமலிங்க முதலியார் கைப்பட எழுதி வாங்கிக் கொள்கிறாள். வீட்டை விட்டு வெளியேறுகிறாள். வெளியேறுவதற்குமுன் தனக்குப் பிறந்த குழந்தையைத் தங்கம்

சுவீகாரமாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமென எழுதி வாங்கிக் கொண்டு அம்மை நோயால் தான் இறந்துவிட்டதாக ஊராருக்குக் கூறுமாறு சொல்லிவிட்டு ஆண் வேடத்தில் வீட்டை விட்டு ரங்கம் வெளியேறுகிறாள். ஆண் வேடத்தில் சத்திரத்தில் தங்கிய ரங்கம் காய்ச்சலால் அவதிப்பட்டாள்.

அங்கிருந்த சாமியார் அவளைப் பெண் என அறிந்து கொள்கிறார். அவளை விபச்சார விடுதியில் கொண்டு போய் சேர்க்கிறார். சூழ்நிலையால் விபச்சாரியாக்கப்படுகிறாள். விபச்சார விடுதியில் சந்தித்த நாயுடு, ரங்கத்தை ரங்கோன் அழைத்துச் சென்றான். சப்பானின் குண்டுக்கஞ்சித் தாயகம் திரும்பிய ரங்கம் தனது பழைய கணவன் வீட்டிற்குப் பக்கத்திலேயே புதிய கணவனோடு வீடெடுத்துத் தங்குகிறாள். தருமலிங்கத்தின் மகன் நாகசுந்தரம், பக்கத்து வீட்டிலுள்ள ரங்கத்தைத் தன் தாயென அறிகிறான்; தாயின் மூலம் பழைய வரலாற்றை அறிந்த நாகசுந்தரம் முதலியாரை மிரட்டுகிறான்; கருத்து வேறுபாடு பெருகுகிறது. நாகசுந்தரத்தின் நண்பன் பரந்தாமன் ரங்கத்தின் மகள் ராதாவைக் காதல் மணம் புரிந்துகொள்கிறான். செல்வர்களின் பொருளாசையும், ஆடவர்கள் பெண்களைப் படுத்தும் கொடுமையும் விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன. மந்திரவாதிகளின் செயலால் மூடத்தனம் வளர்வது கண்டிக்கப்படுகிறது.

கலப்புமணத்தைப் போற்றும் இப்புதினம் தோன்றிய காலத்தில் சமுதாயத்தில் பெரிய புரட்சியை விளைவித்தது. காதல் மணமும் கலப்பு மணமும் பெருகத் தொடங்கின. ஆண்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் பெண் தொடுத்த புதிய சிலப்பதிகாரமாக, 'ரங்கோன் ராதா' விளங்குகிறது.

அவர் எழுதி முடித்த புதினங்களுள் 'ரங்கோன்ராதா' புதினத்திற்குரிய கதையின் கருப்பொருள், கதை அமைப்பு, சொன் முறை ஆகியவற்றுள் சிறந்து விளங்குகிறது. இப்புதினம் மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டது. பலபதிப்புகளாக வெளிவந்து புதினக்கலைக்குப் புதிய வரலாற்றைத் தோற்றுவித்தது. தலைப்பு ரங்கம் பெற்ற மகள் பெயரால் அமைந்துள்ளது. கதை ராதாவின் கலப்பு மணத்தைக் கூறி முடிவதால் முடிவை வைத்துத் தலைப்பை அமைத்துள்ளார். இக்கதையில் 'அண்ணா செய்யும் பிரச்சாரம்' 'பாலினுள் வெண்ணெய்போல் உள்ளடங்கியே நிற்கிறது' என்ற மா. இராமலிங்கத்தின் கணிப்பு, அண்ணாவின் கதைகளில் பிரச்சாரமே மேலோங்கி நிற்கிறது என்பவரின் குற்றச்சாட்டைப் பொய்யாக்கியுள்ளது.

'சௌமியன்' எனும் புனைபெயரில் திராவிடநாடு வார இதழில் 21-4-46 முதல் 25-1-48 வரை தொடர்கதையாக அண்ணா எழுதி வந்தார். 21-4-46இல் தொடங்கிய இக்கதை 15-6-47இல் முடிவுறாமல் நின்றது. 'ரங்கோன் ராதாவின் கதி என்ன?' என 28-12-47இல் ஒரு வாசகர் வினா எழுப்பினார். அதற்கு அண்ணா

> நண்பரின் நியாயமான கேள்விக்கு விடையொன்றும் கூறுவதற் கில்லை. ராதாவின் விஷயத்தைத் தொடர்ந்து எழுதுவது தவிர, அந்தத் தொடர்கதை இடையில் வெளிவர முடியாமல் போனதற்காக வருந்துகிறேன். இதைத்தொடர்ந்து வெளியிட்டுவர ஏற்பாடாகி இருக்கிறது. பழைய பகுதி அறியாதவர்களுக்குச் சற்றுச் சிரமமாக இருக்கும். இனித் தொடர்ந்து வெளிவரப் போகும் பகுதியின் அளவு சிறியதுதான். அது முடிந்ததும் புதிய வாசகர்களுக்கும் திருப்தி ஏற்படும் முறையில் புதிய தொடர்கதை வெளியிட இருக்கிறோம். உண்மையாகவே அது தொடர்கதையாக இருக்கும். இடையிடையே நின்றுவிடாது. இப்போது ஏற்பட்ட சங்கடமான நிலைமைக்காக வருந்துகிறேன். பொறுத்தருள வேண்டுகிறேன்.

என விரிவாக விடை எழுதினார்.

> 25-1-48 திராவிட நாட்டில்,
>
> நீண்ட நாட்களுக்குப் பிறகு ராதா மன்னிப்புக் கோருகிறேன். தொடர்பு அற்றுப் போயிருக்குமோ என்று அஞ்சுகிறேன். எனினும் ஓர் நம்பிக்கை - கதையின் முக்கியப் பகுதியான ராதாவின் தாயாரின் துயர் மிக்க வரலாறு முழுவதும் வெளியாகி ராதாவின் கல்லூரி வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பு எழுதத் தொடங்கிய போது தொடர் கதை வெளிவருவது நிறுத்தப்பட்டது. அதனை நினைவூட்டினால் தொடர்பு விளங்கி விடக்கூடும் என்பது என் நம்பிக்கை.

என எழுதினார். முன்கதையை நினைவூட்டிய அதே இதழிலேயே கதையையும் முடித்து விட்டார். கதையின் முடிவைக் கண்ணுற்ற வாசகர்கள் மனத்தில் எழும் ஐயப்பாடுகளையெல்லாம் அகற்றும் முறையில் நீண்ட விளக்கமளித்து அண்ணா 25-1-48 திராவிடநாடு இதழில் இவ்வாறு எழுதினார்.

'ரங்கோன் ராதா முடிந்தது நிஜமாகத்தான்'. அட பாவி, ஆசைகாட்டி மோசம் செய்கிறாயே, கதையைத் திடீரென முடித்து விடுகிறாயே, கல்யாணம் நடக்கிறதா? இல்லையா? ராதாவின் தாயார் கதி என்ன? கொடுமைப்படுத்திய மாஜி கணவன் என்ன கதி? விபச்சாரம் செய்த தாயாரை நெடுநாட்களுக்குப் பிறகு கண்டுபிடித்த மகன் பிறகு என்ன செய்தான்? ராதாவைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு அந்த நண்பனின் பெற்றோர் இசைந்தார்களா? இவை எதனையும் கூறாமலேயே கதை முடிந்தது என்கிறாயே என்னப்பா இது? என்று கேட்கத் தோன்றும். உங்களுக்கு இத்தனை விஷயங்களும் முற்றுப்பெறாமல் தான் உள்ளன. கல்யாணம் நடைபெறத்தான் இல்லை. காதலர்கள் பேசிக்கொண்டு உல்லாசமாக இருக்கும் நிலையிலேயேதான் கதை முடிகிறது. ஏனெனில் சில பல கற்பனைப் பெயர்களுடன் தீட்டப்பெற்ற இக்கதை சமுதாயத்தில் உள்ள ஒரு விசித்திரமான நிலைமையை விளக்கும் முயற்சிதானே யொழிய, ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான் என்பது போன்ற கதை அல்ல - சகல அம்சங்களையும் பூர்த்தியாக்கி, சம்பூர்ண ராமாயணம் ஆக்க! ஒரு சம்பவம், ஒரு பழம் கதை! இது புதிய உறவு! இவைதான் கதையின் அங்கங்கள். இரு நண்பர்கள் ஒரு அழகிய பெண்ணைக் கண்டனர். சம்பவம் அந்தப் பெண்ணின் தாயார் மூலம் ஒரு நண்பன் தன் குடும்பத்தின் பழைய வரலாறு தெரிந்து கொள்கிறான். பழம்கதை அதன் விளைவாக ராதாவை நண்பன் காண்கிறான் - நேசம் ஏற்படுகிறது. புதிய உறவு இவ்வளவுதான்! இனிக் கதையைத் தொடரவேண்டிய அவசியம் நமக்கு இல்லை. அதோ செல்கிறார்கள். களிப்புடன். மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது பற்றிக் கவலையற்று ராதாவும் அவள் காதலனும், அந்த உல்லாசப் பயணம் அவர்களின் இன்பம் - அது வெற்றிகரமாக முடியட்டும். இது நமது அன்புரை, அவ்வளவுதான் நமது பொறுப்பும்கூட!

இதழில் வெளிவந்தபோது பெற்றிருந்த முடிவும் பின்னர் நூல்வடிவம் பெற்றபோது வந்த முடிவும் சிறிது மாறுபாடு கொண்டிருந்தன.

> 'நண்பா, நான் ராதாவைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறேன்' என்ற பகுதியிலிருந்து பின்னர், 'பிறகு நான் ராதாவை அடிக்கடி சந்திக்கவும், அவள் மனதை அறியவும் முயற்சிகளைத் துவக்கினேன். தோல்வி இல்லை. வெற்றிப் பாதையிலேதான் செல்கிறேன். ராதா என்னை உள்ளன் போடுதான் நேசிக்கிறாள். ஆனால் நண்பர்கள் சிலர் இரகசியமாகப் பேசிக் கொள்வதும் என் செவி புகாமல் இல்லை. பாம்புடன் விளையாடுகிறான்' என்று பேசுகிறார்கள்.

என்ற தொடரோடு திராவிட நாட்டில் முடித்துள்ளார். புத்தகவடிவில் வெளிவந்த 'ரங்கோன் ராதா' நூலில் கதை தொடர்கிறது. ராதாவின் தகப்பனார் நாயுடு மிரட்டிப் பணம் பறிப்பது, நாகசுந்தரம் தன் தகப்பனார் தருமலிங்க முதலியாரை மிரட்டுவது, பின்னர் ராதாவுக்கும் பரந்தாமனுக்கும் திருமணம் நடப்பது, அதன்பின் காதலர்கள் இன்பமாக இருப்பது, நாகசுந்தரம் அனாதை விடுதியிலிருந்து எடுத்து வளர்க்கப் பட்டவன் என்ற உண்மையை அறிவது, இவ்வாறு கதை மேலும் தொடர்கிறது. இறுதியில் பரந்தாமனுக்கும் ராதாவிற்கும் கலப்பு மணம் இனிதே நடைபெறுகிறது. திரைக்கதையிலும் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

**கடைசிக் கனவு**

1957ஆம் ஆண்டு 'திராவிட நாடு' பொங்கல் மலரில் இக் குறும் புதினம் வெளிவந்தது. துறவிகளைச் சமுதாயத்தின் தீமையாகக் கருதும் அண்ணா, வெள்ளைவேட்டித் துறவியை இக்குறும்புதினத்தில் போற்றியுள்ளார். வெள்ளை வேட்டித் துறவி மருதூரில் தங்கி, மக்களுக்கு மருந்துகளைக் கொடுத்து அவர்களது நோய்களைக் குணப்படுத்தி வந்தார்.

அவரது பெயர் மருதூர் வட்டாரத்தில் பரவியது. மருதூருக்கு வருவதற்கு முன் குறிஞ்சிபுரத்தில் சில ஆண்டுகள் வெள்ளி அம்பலத்து மடாதிபதியாக வரப்போகிறார் என்ற பேச்சு எங்கும் பரவியிருந்தது. வெள்ளி அம்பலத்துப் பெரிய மடாதிபதியும் இவர்மீது அன்புள்ளவராக இருந்தார். ஆயினும் வெள்ளை வேட்டித் துறவிக்குப் பதவி அளிக்கப்படவில்லை. அதனால் வெறுப்புற்ற வெள்ளைவேட்டித் துறவி மடத்தைவிட்டு வெளியேறி மருதூரில் வைத்தியராகத் தொண்டு செய்துவந்தார்.

கொள்ளைக்காரன் மாடசாமி என்பவன் சிறையிலிருந்து தப்பிக் காயங்களுடன் வெள்ளை வேட்டித் துறவியின் மருத்துவமனைக்கு வந்தான். காயங்களுக்கு மருந்துபோட்டுக் கொண்டு அங்கே தங்கியிருந்தான். வெள்ளைவேட்டித் துறவி மக்கள் மீது பெரு நம்பிக்கை வைத்திருந்தார். மாடசாமி அவர் கருத்துக்கு எதிராக இருந்தான். இது குறித்துப் பல நேரங்களில் இருவருக்கும் சண்டை நிகழ்ந்ததுகூட உண்டு. தனக்கு வந்த கடிதத்தை மாடசாமியிடம் காட்டித் தான் அவசரமாகப் பக்கத்தூருக்குச் செல்ல வேண்டுமென வெள்ளை வேட்டித் துறவி கூறினார். தன்னைக் காட்டிக் கொடுக்கக் காவல் நிலையத்திற்குச் செல்வதற்காகத் தான் துறவியார் வெளியூர் செல்கிறாரெனத் தவறாக நினைத்து மாடசாமி அவரைத் தடுத்தான். மாடசாமியைக் கட்டிலில் இறுக்கிக் கட்டிப் போட்டு விட்டுத் துறவி மருத்துவமனையை விட்டு வெளியேறினார். எழிலூர் வந்த பெரிய மடாதிபதி வெள்ளியம்பல தேசிகரைத் தனியிடத்தில் வெள்ளை வேட்டித் துறவி சந்தித்தார். பேச்சினிடையே பெரிய மடாதிபதி முத்துரத்தினம் என்ற பெயரை உச்சரித்தார். இப் பெயர்களைக் கேட்ட வெள்ளைவேட்டித் துறவி வேதனையடைந்தார். கோபத்தோடு அங்கிருந்து வெளியேறினார். செந்திலாண்டியினிடத்துத் தாம் சிலம்பம் பயின்றபொழுது, அவரது மூத்த மகள் முத்துவைக் காதலித்ததையும், முத்துவின் தங்கை இரத்தினம் சாமுண்டி எனும் சர்க்கஸ்காரனோடு ஓடியதையும் வெள்ளை வேட்டித் துறவி நினைத்துக் கொண்டு வீடு வந்தார்.

தம் காதலி முத்து வாதநோயினால் துன்புற்றதையும் அதன்பின் இறந்ததையும், அவள் நினைவால் வாழ்க்கையை வெறுத்துத் துறவியானதையும் எண்ணி மனங்கலங்கினார். பழைய நினைவுகளைச் சுமந்த நெஞ்சோடு துறவி மருத்துவமனை வந்து சேர்ந்தார். மாடசாமியை நல்ல மனிதராக மாற்றத் துறவி விரும்பினார். உத்தண்டி என்பவரின் ஒன்பது வயதுப்பெண் பாலா ஒரு சிறு புறாக் குஞ்சை மாடசாமியிடம் கொடுத்து நன்கு வளர்த்துத் தருமாறு கூறினாள். மனிதர்கள்மீது பற்றோ பாசமோ இல்லாத மாடசாமியின் மனத்தில் இச்சிறிய புறாக்குஞ்சு மாற்றத்தைத் தருமென்று வெள்ளை வேட்டித்துறவி நம்பினார். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. மருத்துவமனையைத் தேடி வருபவர்களுக்கு மாடசாமி மருந்து கொடுக்கத் தொடங்கினான். மாடு துரத்தியதால் சேற்றில் விழுந்த ஒரு பெண்ணைக் கொண்டுவந்து மருத்துவமனையில் தங்கவைத்து மருந்தளித்தான். அந்தப் பெண்ணைக் கண்ட வெள்ளைவேட்டித் துறவி துடித்தார்.

தன்னுடைய காதலி முத்துவின் தங்கை இரத்தினம், என அறிந்து வேதனைப்பட்டார். அவளின் புத்தி தடுமாற்றத்திற்கு யார் காரணமென அறிய ஆவல் கொண்டார். இரத்தினம் என்ற அப்பெண்ணிடம் மாடசாமி பக்குவமாகப் பேசி அவளின் இந்த நிலைக்கு யார் காரணமென அறிந்து கொண்டான்.

பெரிய மடாதிபதியின் மூலமாக இரத்தினத்திற்குப் பிறந்த குழந்தையைக் கொல்லத் தண்டவாளத்தில் எறிந்தது முதலான உண்மைகளை அறிந்து கொண்ட வெள்ளைவேட்டித் துறவி கடுஞ்சினங் கொண்டார். இரத்தினம் பெற்ற அன்பு மணியை அனாதை ஆசிரமத்திலிருந்து அழைத்துக்கொண்டு வெள்ளை வேட்டித் துறவி பெரிய மடாதிபதியிடம் சென்றார். மடாதிபதியின் காமச்சேட்டையால் பிறந்தது இக்குழந்தையென நினைவூட்டினார். வெள்ளைவேட்டி ஆதினத்திற்கு அஞ்சிக் கிடந்த காலம் மலையேறிவிட்டதென வெள்ளை வேட்டி மடாதிபதியை எச்சரித்தார். நான்கு முரடர்கள் அச்சிறுமியைத் தூக்கிக் கொண்டு ஓடினர்.

வெள்ளைவேட்டி தடுக்க முயன்றபோது தாக்கப்பட்டார். சிறுமிக்கு என்ன நிகழுமோ என்ற கவலையோடு துறவி மருத்துவமனை திரும்பினார். வெள்ளைவேட்டி தாக்கப் பட்டதையும் சிறுமியை முரடர்கள் தூக்கிச் சென்றதையும் கேள்விப்பட்ட மாடசாமி கோபத்துடன் புறப்பட்டான். 'களவாடப் போகிறாயா' என வெள்ளைவேட்டி மாடசாமியைக் கேட்டார். கடைசிக்களவு, நல்லதோர் காரியத்திற்காக ஒரே ஒரு இரவு மட்டும் என்றான். மடாலயச் சூழ்நிலைகளை அறிந்தபின் திட்டமிட்டபடி கடைசிக்களவை மாடசாமி நிறைவேற்றினான். ஆபாசம் நிறைந்த அந்த ஏட்டைத் தேடி எடுத்தான். அந்த ஏட்டிலுள்ள ஆபாசக் காட்சிகளை அருவருப்புடன் பார்த்துக் கொண்டிருந்தபோது அவனைப் பாம்பொன்று தீண்டியது. வாயில் நொப்பும் நுரையும் தள்ள ஓடிய மாடசாமி, அந்த ஏட்டினை வெள்ளை வேட்டியிடம் ஒப்படைத்துவிட்டு உயிர் துறந்தான். 'எதிர்பாருங்கள் திருவிளையாடற்புராணம் புதிய ஏடு' வெள்ளைவேட்டிப் பண்டாரத்தின் விளக்க உரையுடன் என்றொரு விளம்பரம் தினத்தாள்களில் வெளிவந்தது. இச்செய்தி வெளிவந்த மறுநாள் தினத்தாளில் பெரிய மடாதிபதி ஆதினப் பதவியைத் துறந்தார் என்ற செய்தி வெளிவந்தது. மடாலயச் சொத்துக்களை அரசு தன் நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வந்தது.

மடாதிபதிகளின் களிகாமச் செயல்களையும் அவர்களால் பெண்கள் படும் துன்பங்களையும் விரிவாகக் கூறியுள்ளார். நல்லவர்களின் தூய தொண்டு தீயவர்களையும் நல்வழிப்படுத்தும்

என்ற நற்கருத்தை வெள்ளைவேட்டித் துறவி, மாடசாமி மூலமாக வெளிப்படுத்துகிறார். மடாலயங்கள் அரசுடைமையாக்கப்படும் முற்போக்குக் கருத்துக்களை இக்குறும்புதினத்தில் குறித்துச் சொல்கிறார். அவர் படைத்த குறும் புதினங்களில் முதல் இடம் இக்குறும்புதினத்திற்கே உண்டெனக் கூறலாம். நல்ல கதை அமைப்பும், கட்டுக்கோப்பும் கொண்டு விளங்குகிறது.

### *ரொட்டித்துண்டு (14.1.53 'திராவிட நாடு')*

இச்சிறுகதை செல்வர்களின் ஆணவப் போக்கைக் காட்டுகிறது. செல்வனின் மகன் பாரத் பூஷண் ஓர் ஏழை எழுத்தாளனின் எழுத்தைத் திருடித் தொழிலாளர்களிடையே செல்வாக்கையும் பாராட்டையும் பெறுகிறான். பாரத்பூஷணின் தந்தை ராவ்பகதூர் ரங்கநாதபூபதி ஓர் ஆலை முதலாளி. அவர் தன் மகன் ரொட்டித்துண்டு என்ற கதையை எழுதியதைக் கேட்டுத் தன் மனைவியிடம் சினந்து கொண்டார். தனக்கு இரண்டு கடிதங்கள் வந்திருக்கக் கண்டு அவற்றைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார். முதற்கடிதம் பாரத் பூஷணின் தமிழாசிரியராக இருந்தவர் வரைந்தது. அக்கடிதத்தில் பாரத் பூஷணின் முற்போக்குக் கருத்துக்களையும் அவன் உலகம் போற்றும் அறிவாளியாக வருவானென்று முன்னே கூறியுள்ளதையும் நினைவுபடுத்தி வரைந்துள்ளார். இரண்டாவது கடிதம் பாரத் பூஷண் வரைந்தது. இக்கடிதத்தைக் கண்டவுடன் தந்தையின் சினம் தணிந்தது.

'ரொட்டித்துண்டு' என்ற கதை தான் எழுதியது இல்லையென்றும், தன்னோடு படித்த கதிர்வேல் என்பவன் பணநெருக்கடியால் தன் பெட்டியைத் தனக்கு விற்றதாகவும் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது ரொட்டித்துண்டு என்ற கதை இருந்ததாகவும் எழுதியிருந்தான். அக்கதையைப் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு மாணவன் அதனைப் பார்த்து அம்மாணவனின் தந்தை அச்சகம் வைத்திருந்ததால் அச்சடித்து நூல் வடிவில் கொடுத்தான். அக்கதை என் பெயரில் வெளிவந்தது. பொருளும் சேர்ந்தது. தொழிலாளிகளின் பேராதரவும் பெருகியது. வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கிடைத்தது என எழுதியிருந்தான். பாரத் பூஷண் பேரும்புகழும் பெற்றுக் கொண்டிருந்தபோது அக்கதையை எழுதிய கதிர்வேல் என்ற 1மாணவன் பாரத் பூஷணின் திருட்டுப் புகழைக் கண்டு ஆத்திரம் கொண்டான். தான் பொய் கூறிப் புகழடைந்த செய்தி வெளிக்குத் தெரிந்தால் தனக்கு அவமானம் ஏற்படும் என்றும், அந்த மாணவனைப் பைத்தியம் என்று கூறிப் பைத்தியக்கார மருத்துவமனையில் சேர்க்கத் தந்தை உதவிட வேண்டுமென்று

வரைந்தான். இக்கடிதத்தைப் படித்ததும் தந்தை முகம் செந்தாமரையாக மலர்ந்தது.

'துப்பாக்கிக்குப் பிறந்தது பீரங்கியாகத் தானே இருக்கும். சுப்புத்தாயீ! சுப்புத்தாயீ!' என்று கூறி மகிழ்கிறார். தன் குடும்பத்தினர் ஏழைகளுக்குப் பரிந்து பேசுவதைக் கூடச் செல்வந்தர்கள் விரும்புவதில்லை என்ற செல்வர்களின் மனப்போக்கை இச்சிறுகதையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

பாரத் பூஷணனைப் பெற்றதற்காகத் தன் மனைவி சுப்புத்தாயை முன்னர்ச் சினந்து கொண்டவர், முதலாளிகளின் போக்கிற்கு எதிராக இல்லாமல், ஏழையின் வாரிசாகத் தன் மகன் நடித்துப் பொருளும் புகழும் ஈட்டியதைக் கண்ட ஆலை முதலாளி, தம் மனைவியைப் பாராட்டுகின்றார். இச்சிறுகதை எல்லாச் சிறப்புக்களையும் பெற்று விளங்குகிறது. ஒரே நோக்கமும் ஒரே விளைவுந்தான் எதிர்பார்க்கப்படுகின்றன என்ற சிறுகதையின் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது 'ரொட்டித்துண்டு' என்ற சிறுகதை அண்ணாவின் சிறந்த சிறுகதைகளுள் ஒன்றாக விளங்குகிறது. இச்சிறுகதையையே பின்னாளில் திராவிடநாட்டில் ஓரங்க நாடகமாக வரைந்துள்ளார்.

அண்ணாவைப் பொறுத்தவரையில் தேவையை ஒட்டி இலக்கிய வடிவங்களைக் கையாண்டார். அதனால்தான் அண்ணாவின் படைப்புகள் நிரந்தரமான இலக்கிய அந்தஸ்தைப் பெறக்கூடியவை என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாத ஒருநிலை உருவாகியிருக்கிறது. (பி.சி. கணேசன், அண்ணா எனும் ஓர் இலக்கியவாதி, தமிழரசு, 11.4.1978) எனும் ஆய்வாளர் குறிப்பிடுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று; 'ரொட்டித்துண்டு' என்ற சிறுகதையினைப் படித்திருப்பாரே யாகில் அவர் கருத்தில் மாற்றம் விளைந்திருக்கும். சொல்லும் முறை, எடுத்துக்கொண்ட தலைப்பு, கையாளும் உரைநடை ஆகிய அனைத்தும் தமிழகத்தில் சிறுகதை உலகில் அண்ணா பெற்றுள்ள சிறப்பிடத்தை வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**கதைத் தலைப்புகள்**

கதையைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் முதற் கருவியாக இருப்பது; கதையின் மொத்தக் கருவையும் செறிவாகக் கொண்டு விளங்குவது; கதை ஆசிரியரின் கற்பனை வளத்தையும், கருத்தின் தெளிவையும் புலப்படுத்துவது கதையின் தலைப்பே எனலாம். கதையின் தலைப்பு, ஆசிரியரின் உள்ளத்தை

வெளிப்படுத்துவதோடு, கதையின் வெற்றி தோல்விகளுக்கும் ஏதுவாக அமைந்து விடுகிறது.

> கதையின் தலைப்பு கதையின் உள்ளீட்டை ஒருவாறு சுருக்கித் தருவதாக இருக்க வேண்டும். அவ்வுள்ளீட்டில் சுவை குன்றாக் குறுக்கமே தலைப்பாக அமைய வேண்டும் (சாலை இளந்திரையன், *தமிழில் சிறுகதை*, ப.75)

என்பர் திறனாய்வாளர். கதைத் திறனின் ஆற்றலை வெளிப்படுத்தத் தலைப்பு இன்றியமையாதது எனலாம்.

அண்ணா தொடக்கக் காலத்தில் தம் கதைக் கருத்துக்கள் வெளிப்படையாகப் புலப்படும் வகையில் அக்கதைகளுக்குத் தலைப்பிடுவதில் நேரடி முறையையே கையாண்டுள்ளார். பின்னரே அக்கதைகளைப் புத்தகமாக வெளியிடும் போது முன்னர்த் தலைப்புத் தருவதில் பின்பற்றிய நேரடி முறையை மாற்றிக் கலைநயம் வெளிப்படும் வகையிலும் அங்கதச் சுவை பொருந்தவும் அமைத்துள்ளார். அதற்குத் தக்க சான்றுகள் :

| பழைய தலைப்பு | புதிய தலைப்பு |
|---|---|
| 1. அவள் மிகப் பொல்லாதவள் | பாமா விஜயம் |
| 2. புரோகிதரின் புலம்பல் | பேரன் பெங்களூரில் |
| 3. நாட்டில் காடு | குற்றவாளி யார்? |
| 4. சிக்கலான பிரச்சினை | தீர்ப்பளியுங்கள் |
| 5. அவள் விபசாரியானாள் | நெற்றியில் நெஞ்சில் |
| 6. இம்சைக்கு ஆளான இலட்சியவாதி | கள்ளன் |
| 7. வீங்கிய உதடு | என் வாழ்வு |
| 8. சொல்லாதது | தாய் மகளுக்குக் கட்டிய தாலி |

அண்ணாவின் 'மேலதிகாரி' 'வரவு செலவு' போன்ற கதைத் தலைப்புகள் தம் காலச் சமுதாய அரசியல் சிக்கல்களை வெளிப்படுத்தும் போக்கில் அமைந்துள்ளன. அவரது பல தலைப்புகள் கவர்ச்சியும் அழகும் கருதி இன்றைய திரைப் படங்களின் பெயர்களாக வந்துள்ளன. அண்ணா வைத்த கதைத் தலைப்புகள் அவரின் புதுமை நாட்டத்தையும், முன்னோக்கும் திறத்தையும் புலப்படுத்துவனவாக உள்ளன. மேலும் பல தலைப்புகள் சமூக மனப்பான்மையை வெளிப்படுத்தும் பாங்கிலே

அமைந்துள்ளன. தம் காலச் சமுதாயத்தின் நலிவைக் குறித்து எள்ளி நகையாடும் முறையிலும் அமைத்துள்ளார்.

## பொருளடிப்படை

### புராணத்தலைப்பு

மக்களுக்கு மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள பக்தி, தெய்வம் இவற்றை அடித்தளமாகக் கொண்டு தலைப்பிட்டுள்ளார். அவ்வாறு அமைந்த தலைப்புகள் 'கலிதீர்த்த பெருமாள்', 'கிருஷ்ண லீலா', 'கடவுள் தண்டிப்பார்', 'பிரார்த்தனை', 'ஜெபமாலை', 'புதிய நாயனார்', 'அன்னதானம்', 'பக்த பக்காத் திருடன்', 'திருமலை கண்ட திவ்யஜோதி', 'தசாவதாரம்', 'பிடிசாம்பல்', 'வள்ளி திருமணம்' முதலியன. மக்களிடத்துப் பரவியுள்ள புராணக் கருத்துக்களைத் தலைப்பாக அமைத்துச் சமுதாயத்தில் மறுமலர்ச்சி காணக் கதைகளைப் பயன்படுத்தினார்.

### மூடநம்பிக்கைத் தலைப்புகள்

மக்களிடையே மலிந்துள்ள மூடப்பழக்க வழக்கங்களையே தலைப்புகளாகத் தந்துள்ளார். அவை 'தீட்டுத் துணி', 'பேய் ஓடிப் போச்சு', 'பலாபலன்' என்பன. இவற்றால் ஆசிரியர் என்ன கூறப் போகிறார் என்ற ஆர்வத்தைத் தூண்டும் பாங்கு வெளிப்படுகிறது.

### இயல்பு மாற்றத் தலைப்புகள்

கன்னியாக இருப்பவள் விதவை ஆக முடியாது. கணவன் தான் மனைவிக்குத் தாலி கட்டவேண்டும். இவை உலக நடைமுறைக்கு ஒத்த நிகழ்ச்சிகள். ஆனால் உலகில் நடைமுறையில் காணப்படும் போக்கிற்கு மாறாக இருப்பதைச் சுட்டுவனவாகச் சில தலைப்புகள் உள்ளன. திருமணமாகிய பெண் தன் கன்னித்தன்மை அழியாமலே, கணவனை இழந்து நிற்பதை விளக்குவது 'கன்னி விதவையான கதை'. கணவன் கட்ட வேண்டிய தாலியைத் தாய் கட்டியதைக் காட்டுவது 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி'. இந்நெறியில் செல்வது 'மதுரைக்கு டிக்கெட் இல்லை' யென்பது.

### பிறிதுணர்த்தும் தலைப்புகள்

தலைப்பில் சுட்டும் பொருள் ஒன்றாக இருக்க, அதனுள் உட்பொருள் செறிந்து வேறு பொருளைக் காட்டுமாறு அமைக்கிறார். வறுமையால் வாடிய ஒருவன் தன் தாயைக் கொன்று தானும் தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது, கைது செய்யப்பட்டான். இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி

'இது போன்ற வழக்கில் ஒருவனைப் பிடித்துத் தண்டித்து விடுவதால் மட்டும் குற்றத்தைக் குறைத்து விட முடியாது; இக்குற்றத்தைச் செய்யக் காரணமானவர்கள் பலர் இருக்கிறார்கள். இத்தகைய குற்றங்களுக்குத் தண்டனை பெற வேண்டியது இன்றைய சமூக அமைப்பே தவிர, தனி மனிதனல்ல என்பதை 'ஒருவன்தான் பிடிபட்டான்' என்ற கதை மூலம் காட்டுகிறார். இதனால் சமூகத்தில் உண்மைக் குற்றவாளிகள் பலர் பிடிபடாமல் உள்ள நிலையை உணர்த்துகிறது இத்தலைப்பு.

தாசியை நாடிச் சென்ற ஒருவன், கையில் காசில்லாமல் தன் மனைவியின் கழுத்துச் சங்கிலியை எடுத்துச் சென்றதால் அந்நகை போலி நகையாக இருக்கலாம் என்ற ஐயத்தால் அவனைத் தாசி வெளியே விரட்டி விடுகிறாள். தாசி வீட்டை நாடிச் சென்றும் இன்பம் பெற முடியாத வேதனையைக் 'கைக்கெட்டியது' வாய்க்கெட்டவில்லையேயென்று வெளிப்படுத்துகிறார். உண்மை நகையைப் போலி நகை என்று தாசி கருதியதால், அவன் உண்மை இன்பம் என்று நாடிச் சென்றதைக் 'கைக்கெட்டியது' என்ற கதையில் காட்டியுள்ளார்.

சமதர்மத்திற்கு எதிராகச் செயல்படும் வேலு, மக்களிடையே சமதர்மத்தைப் பேசுவதைக் கேட்டுச் சிங்காரத்தின் 'முகம் வெளுத்தது' எனக் காட்டுகிறார். சமதர்மக் கொள்கைகளைக் கேட்டு மலர வேண்டிய சிங்காரத்தின் முகம், சமதர்மத்தின் பகைவர்கள் அக்கொள்கையில் மறைந்து கொண்டு, மக்களை ஏமாற்றும் நிலை கண்டு வெளுக்கிறது.

நடைமுறையில் ஒன்றை எதிர்பார்த்துச் செயல்படுத்தும் நிலை அதற்கு எதிர்மாறான விளைவை உண்டாக்கி வியப்பிற்கு இடமளித்தல் கூடும். அதனால் சமூகக் குறைபாடுகளும் அவற்றிற்குரிய காரணங்களும் வெளிப்பட அவற்றை வெறுத்துப் புதிய மறுமலர்ச்சி தோன்ற வேண்டும் என்ற ஆர்வ எழுச்சிக்கும் சில தலைப்புகள் இடம் அளிக்கின்றன. வயோதிகர் இளம் பெண்ணை மணப்பதால் அவள் வாலிபரை நாடி இன்பம் துய்ப்பதை 'வாலிப விருந்து' தலைப்பு உணர்த்துகிறது. உழைத்தவன் அறுவடை செய்வதற்கு மாறாக, அவன் நிலத்தில் இறங்கி உழைக்காதவன் பயன் துய்ப்பதை 'அறுவடை' என்ற தலைப்பு மறை பொருளாக உணர்த்துகிறது. செல்வர்கள் உள்ளம் செல்வமுடையார் உறவையே நாடிச் செல்லும். அவர்களுக்குள் ஏற்படும் பகையெல்லாம் நிரந்தரமானவையல்ல. செல்வர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து தங்கள் நலத்தைக் காத்துக் கொள்வார்களே தவிர, தங்களுக்குள் உள்ள உறவை உடைத்துக் கொள்ள மாட்டார்களென்பதை 'உடையார் உள்ளம்' படம்

பிடித்துக் காட்டுகிறது. நூல் மார்க்கெட்டில் விற்பனையாகும் சரோஜா என்ற குழந்தை விற்பனை செய்யப்படும் கொடுமையை 'சரோஜா ஆறணா' எனத் தலைப்பிட்டுள்ளார். இத்தலைப்பு நூலைக் காட்டாமல் வறுமையின் கொடுமையை விளக்குகிறது.

### ஒழுக்கச் சிதைவைக் காட்டும் தலைப்புகள்

ஒழுக்கங் கெட்டவர்கள் சமூகத்தில் பலர் உள்ளனர். அவர்களை மக்கள் வெறுக்கின்றனர். அவற்றைச் சுட்ட 'அவள் விபச்சாரியானாள்', 'காமக் குரங்கு', 'கள்ளன்', 'சூதாடி', 'கைதிகள்', 'வழுக்கி விழுந்தவர்கள்', 'கடைசிக்களவு' என்ற தலைப்புகளை அண்ணா சில கதைகளுக்குச் சூட்டியுள்ளார். ஆனால் அவர்கள் ஒழுக்கம் சிதைய இன்றைய சமூகநிலை காரணம் என்பதை அறிவுறுத்தத் தவறவில்லை.

### வாசகரை உட்படுத்தும் தலைப்புகள்

ஏழைகள் வறுமையால் தவறிழைத்து வழக்கு மன்றத்தால் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் செல்வர்கள் தவறிழைத்து விட்டு நீதிபதிகளாக இருக்கிறார்கள். குற்றவாளியே நீதிபதியாக இருக்கும் சமுதாயச் சீர்கேட்டை, 'குற்றவாளி யார்?' என்ற தலைப்பு வெளிப்படுத்துகிறது. இத்தலைப்பு படிப்போரை நோக்கிக் கேள்வி கேட்கும் நிலையில் அமைந்து அவர்களையும் உட்படுத்துகிறது. வறுமையால், இவ்வுலகில் வாழ வழியின்றிக் கோயில் குளத்தில் அண்ணனும் தங்கையும் மடிகின்றனர். இவர்களது மரணத்திற்கு வறுமையே காரணமென்று வாசகருக்குக் காட்டிச் சிந்திக்க வைக்க 'எதனால்?' என்று தலைப்பிட்டுள்ளார். 'யார் மீது கோபித்துக் கொள்வது?' 'தீர்ப்பளியுங்கள்' முதலிய கதைகளும் தலைப்பின் வாயிலாகத் தாம் கூற எடுத்துக் கொண்ட பொருள் பற்றிச் சிந்தித்து அத்துடன் ஒன்றும்படி வாசகரை உட்படுத்துகின்றன.

### வரலாற்று அடிப்படையில் தலைப்புகள்

பழங்கால வரலாற்றையும் தற்கால வரலாற்றையும் பிணைக்கும் வகையில் சில தலைப்புகள் அமைந்துள்ளன. சான்றாக, 'தஞ்சை வீழ்ச்சி', 'கலிங்கராணி', 'பிடிசாம்பல்', 'புலிநகம்', '1938-40 ஒரு வசீகர வரலாறு' ஆகியன. இவற்றிலும் வெறும் வரலாறு மட்டும் வெளிப்படவில்லை. அக்காலத்தில் அமைந்த மூட நம்பிக்கையின் கொடுமைகளை வெளிப்படுத்தும் குறிக்கோள் புலனாகிறது.

### பழைய பாணியில்

பழங்காலப் புதினங்களில் இரட்டைத் தலைப்புகளைக் 'கமலாம்பாள் சரித்திரம் அல்லது ஆபத்துக்கிடமான அபவாதம்'

எனக் காணலாம். அந்நெறியில் 'குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்' எனும் இரட்டைத் தலைப்புகளை அண்ணாவின் படைப்புகளில் காண முடிகிறது.

### பொருளாதார ஏற்றத்தாழ்வைக் காட்டுவன

பொருளாதாரத்தின் அடிப்படை இலாபம் நஷ்டம், பொருள் சேர்க்கும் இன்றைய சமூக நிலையில் செல்வத்தை அளவின்றிச் சேர்க்கும் பாங்கும் அதனால் எண்ணற்றவர் ஏழைகளாக அமையும் பாங்கும் புலப்படும் வகையில் 'இருபரம்பரைகள்', 'வரவு-செலவு', 'பொய்-இலாபநஷ்டம்', 'கனவான்', 'ஏழை' போன்ற கதைத் தலைப்புகளைத் தந்து மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போக்கும் உணர்வு எழுமாறு கதைகளைப் படைத்துள்ளார்.

### மாந்தர் பெயரையே தலைப்பாகக் கொள்ளுதல்

சிற்சில சமயங்களில் புனைகதையில் காணும் மாந்தர்கள் படிப்போர் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றுவிடுவர். அதனை வெளிப்படுத்தும் போக்கில் 'சொக்கி', 'பிரமநாயகம்', 'பார்வதி பி.ஏ.', 'ரங்கோன்ராதா' போன்றவை கதை, மாந்தரின் பெயரையே தலைப்பாகக் கொண்டுள்ளன. இவற்றிலும் குறிப்பாகப் பெண்களின் பெயரே மிகுதியாகத் தலைப்பில் இடம் பெற்றுள்ளதைக் காணும்போது பெண் விடுதலை இயக்கத்தில் அண்ணா கொண்டுள்ள பற்று நன்கு வெளிப்படுகிறது.

### பாத்திரப் பண்புகளைக் காட்டும் தலைப்புகள்

மாந்தரின் பெயரைத் தலைப்பாக அமைக்கும்போதும் அவர்தம் பண்புகளைக் கோடிட்டுக் காட்டும் வகையில், சுடுமூஞ்சி, 'சுமார் சுப்பையா', 'உபகாரி உலகநாதன்', 'புதிய நாயனார்', 'பூபதியின் ஒருநாள் அலுவல்', 'கோமளத்தின் கோபம்' எனத் தலைப்புகள் அமைந்துள்ளன. சிலரின் தொழிலும் இடம் பெறுகின்றன. தொழிலால் பெற்ற பெயர் 'பிரசங்க பூஷணம்', 'சிங்களச் சீமாட்டி', என்னும் நாடகத்தில் மங்கம்மாள் நடித்ததால் அவளுக்குச் 'சிங்களச் சீமாட்டி' என்ற பெயர் வழங்கப்பெற்றது. 'மேலதிகாரி', 'சமூக சேவகி சாருபாலா' போன்றவை இவற்றுடன் எண்ணத்தக்கன. அண்ணாவின் தலைப்புகள் மாந்தரின் பெயர்களைப் பெற்றிருப்பதைவிட மாந்தரின் பண்புகளையும் செயல்களையுமே சுட்டிக்காட்டுகின்றன. இதனால் சமூகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திடும் மனப்பாங்கு நன்கு புலப்படுகிறது.

### தொடக்கம்

கதையின் தொடக்கம் மிகச் சிறப்பாக அமைந்து, படிப்பவரின் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். கதையின்

நோக்கத்தைப் புலப்படுத்தும் வகையில் தொடக்கம் சுருக்கமாகவும், சுவையாகவும் அமைய வேண்டும்.

> கதையைத் தொடங்குவதற்குப் பொருத்தமான இடம் இருப்பினும் படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டும் இடம் எதுவோ அங்கிருந்தே கதை தொடங்கப்பட வேண்டும். (Evelyn May Albright, The Story : Its Principles and Structure, p.58)

அண்ணாவின் தொடக்கங்கள் அமைந்துள்ள முறையைக் கொண்டு அவற்றை அறிமுகத் தொடக்கம், உரையாடல் தொடக்கம், அஃறிணைப் பொருள்களோடு உரையாடும் தொடக்கம், மன ஓட்டத் தொடக்கம், மடல்வழித் தொடக்கம் எனப் பலவகைளாகப் பகுக்கலாம்.

### அறிமுகத்தொடக்கம்

அறிமுகத் தொடக்கம் என்பது கதையில் வரும் கதை மாந்தரையோ, கதையில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியையோ அறிமுகம் செய்வதாக அமையும். அண்ணாவின் கதைகள் பெரும்பாலும் அறிமுகத் தொடக்கத்தையே கொண்டுள்ளன. ‘சமூகசேவகி சாருபாலா’ என்னும் சிறுகதை,

> சமூகசேவகி சாருபாலாவுக்குச் ‘சளி ஜுரம்’. சாந்திபவனம் அல்லோல கல்லோலப்பட்டது. இன்கம்டாக்ஸ் ஆபீசர் கோதண்டராம ஐயருடை ஏகபுத்திரி சாருபாலா; அமர்க்களமாகத்தானே இருக்கும். அதிலும் சாருபாலா, சமூகசேவை செய்து பிரபல்யமடைந்து கொண்டிருந்த குமாரி: முகிலுக்கிணையான குழல்; அது தழுவியிருந்த வட்ட நிலவு முகம்; பிறை நெற்றி, பேசும் கண்கள், துடிக்கும் அதரம், அங்கம் தங்கம்; நடை நாட்டியம்; பேச்சோ கீதம்-வயது இருபத்திரண்டு; படிப்பு இண்டர், அலங்கார மூக்குக் கண்ணாடி, அலங்காரப் பை; அதியலங்கார பூட்ஸ், வைரத்தோடு, கையில் ரிஸ்ட் வாட்சு, கழுத்தில் மெல்லிய சங்கிலி-எப்போதும் புன்னகை; எவரிடமும் இன்முகம்-சாருபாலா அந்த நகரில் ஒரு காட்சியாகி விடாமலிருக்க முடியுமா?
> (சி.என். அண்ணாதுரை, அண்ணாவின் சிறுகதைகள்-சமூக சேவகி சாருபாலா, ப.187)

அண்ணா கதை மாந்தர்களைத் தொடக்கத்தில் அறிமுகம் செய்கிறபோதே நகைச்சுவையும், எள்ளலும் கலந்து கற்போரைத் தம்பால் ஈர்த்து விடுகிறார். அவரது கதைகளில், ‘பார்வதி, பி.ஏ.’,

'பிரசங்க பூஷணம்'; 'உபகாரி உலகநாதன்','பேரன் பெங்களூரில்', 'செங்கரும்பு', 'வாலிப விருந்து' முதலிய அறுபதிற்கும் மேற்பட்டவை அறிமுகத் தொடக்கமாகவே அமைந்துள்ளன. நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்வதைவிட, கதை மாந்தரின் பண்பையே மிகுதியும் அவர் கதைகளில் அறிமுகம் செய்து தொடங்குகிறார்.

சில அறிமுகத் தொடக்கங்களில் பின்னே என்ன நிகழப் போகிறதென்பதைக் குறிப்பாக வெளிப்படுத்தி விடுவதும் உண்டு. அதற்கு நல்ல எடுத்துக்காட்டு: 'காமக்குரங்கு', 'சொல்லாதது' ஆகிய கதைகளாகும்.

'சொல்லாதது' என்ற கதை அண்ணாவின் கதைகளில் தலைசிறந்தது எனலாம். அவளுக்கு, சுந்தரி என்ற பெயர் காரணப் பெயராகவே அமைந்தது என்று எந்த இலக்கணப் பண்டிதரும் சொல்லவில்லை. சொல்வானேன்? மலரை எடுத்து வைத்துக் கொண்டு 'ஆஹா!' என்ன மணம், எவ்வளவு இன்பம்!' என்று சொல்லாமலே, எவ்வளவோ பேர் முகந்து இரசிக்கவில்லையா? சுந்தரியின் சிறுபிராயமுதலே அவளுடைய அழகைக் கண்டவர் களித்தனர். கடைவீதி போய் வீடு திரும்புவதற்குள், கன்னத்திலே, எத்தனையோ முத்தம், கையிலே பலவகைப் பண்டம் அப்பெண்ணுக்கு. பள்ளியிலே பலநாள் ஆசிரியருக்குக் கோபம், பாடத்திலே அந்தப் பாவை நினைவைச் செலுத்தாததால், அப்படிப்பட்ட மாணவியை, 'முட்டாள்', 'தடிக்கழுதை', 'உதைக்கிறேன் பார்', என்று எவ்வளவோ வசைமொழி சொல்லலாம். ஆசிரியருக்கு அகராதியா தெரியாது? ஆனால் அவர் ஒரு நாளாவது, சொல்ல வேண்டுமென்று எண்ணியதைச் சொன்னதேயில்லை. புன்சிரிப்புடன் தலையை அசைப்பார், சுந்தரியின் முகத்திலே கொஞ்சம் பயம் தட்டுப்படும். அது ஒரு புதுவிதமான களையைத் தரும் அதை இரசிப்பார் ஆசிரியர். வேறு மாணவியின் காதை இழுப்பார், கன்னத்தைக் கிள்ளுவார், தலையைக் குட்டுவார், சுந்தரி மீது சுடுசொல் வீசமாட்டார். அந்த மலர் வாடி விடுமோ என்று நினைத்து குட்டி பெரியவளானால். மகாரூபவதியாக இருப்பாள். கண்களே போதும் ஆளை மயக்க. அந்தப் புன்சிரிப்பு இருக்கிறதே, அதுபோல நான் கண்டதேயில்லை. சுருண்டு கருத்து அடர்ந்து, காற்றிலே அலையும் அவளுடைய கூந்தல் இருக்கிறதே, அடடா என்ன நேர்த்தி! என்ன இலாவண்யம்! என்று சுந்தரியின் பாலப் பருவ இரசிகர்கள் சொல்லவில்லையே தவிர, அவ்விதமும் அதற்கு மேலும் நினைக்காதவர்களே கிடையாது.

இக்கதை தொடக்கத்தைப் போலவே சொல்ல முடியாத பல நிகழ்ச்சிகளை இறுதிவரை கொண்டு விளங்குகிறது. (சி.என். அண்ணாதுரை, சிறுகதைகள், (சொல்லாதது, ப.3).

### உரையாடல் தொடக்கம்

உரையாடல் தொடக்கம் என்பது கதை மாந்தர் உரையாடலோடு கதைகளைத் தொடங்குவது. இருகதை மாந்தர்கள் பேசுவதாகத் தொடங்கிப் பின் அது பற்றிய விளக்கம் அளிப்பதாக அமையும் முறையும் படிப்போரின் கவனத்தை முற்றிலும் கவரும் தன்மையுடையது.

> *சூரியனுடைய பார்வை மட்டாகப் பதினைந்து நாள் பிடிக்கும். அப்போதுதான் இந்தக் காய்ச்சல் குறையும். நெருப்பு வீசுதுங்க அவர்பக்கத்திலே உட்கார்ந்தாலே.*
>
> *'வீசும் வீசும் தீட்சணியமாகத்தான் இருக்கும். சூரியனுடைய பார்வை அப்படிப்பட்டது. அதற்கென்ன செய்வது?'. ஆனாலும் பாதகமில்லையே, உயிருக்குப் பயமில்லை - சனி இப்போது இருக்கிற இடத்திலே இராமல், வேறு இடம் அஷ்டமத்துக்குப் போயிருந்தா... அடடா...*
>
> *கமலம்மா! உன் புருஷனுடைய ஜாதகத்தை முதலில் பார்த்ததும், சத்யமாகச் சொல்றேன், நான் பயந்துதான் போனேன். ஏன்-சூரியனுடைய பார்வை அப்படி வந்தது. பிறகு, சனி எங்கே இருக்கிறான் - அதுதான் முக்கியம் - அதனாலே, சனியைக் கவனிச்சேன் - அவன், நல்லவேளை - உன் மாங்கல்ய பலத்தாலே அஷ்டமத்திலே இல்லை- அப்பா-பரவாயில்லை உயிருக்கு ஆபத்து இராது என்று மனசு 'நிம்மதியாச்சு'. என்னமோ போங்க, அந்த வெங்கடேசப் பெருமாள் வாயிலே இருந்து வந்து சொல்ற மாதிரி இருக்குதுங்க உங்கபேச்சு.*
> *(சி.என். அண்ணாதுரை, மதுரைக்கு டிக்கெட் இல்லை (பலாபலன்) பக்.17-18)*
>
> *'அவன் கிடக்கிறான், திருட்டுப் பயல்', என்றான்.*
>
> *செ! என்னடா, அந்த ஆசாமியைப் போய் அப்படி திட்டுகிறே?' என்று கேட்டான்.*
>
> *'ஏண்டா! என்றாவது அவன் கோயிலிலே சமாராதனை செய்கிறானே, அந்தச் சமயம் உனக்கும் ஒரு இலை கிடைத்தது போலிருக்கு. அதனாலேதான் அந்தத் திருட்டு*

*ஆசாமியைத் தூக்கி வைச்சிக்கிட்டு ஆடற' என்று விளக்க முரைத்தான்.*

'போடா, போ! ஆளைப்பார்த்தாலே நல்லவனென்று தெரிந்து கொள்ளலாம்....'

'கோயிலுக்கு வருகிறபோது பார்த்திருப்பே.....டே! அவனைத் தெரிந்து கொள்ள வேணும்னா கோபுர வாசற்படியண்டை பார்க்கக்கூடாது. அங்கே வருகிறபோது முலாம் போட்டுக் கொண்டுதான் வருவான்... *(சி.என். அண்ணாதுரை, வாழ்க்கைப் புயல் கைதிகள், பக்.17-18)*

'கைதிகள்' எனும் கதை மேற்கண்டவாறு தொடங்குகின்றது.

அண்ணாவின் கதைத்தொடக்கங்கள் சமுதாயத்தின் மேல்நிலையிலுள்ள பெரிய மனிதர்களின் போலித்தனங்களைக் காட்டுவதாக இருக்கின்றன. என்பதற்குச் சான்றாக இவ்வுரையாடல் இருக்கிறது. இத்தகைய உரையாடல் தொடக்கங்கள் 'கலிங்கராணி', 'பலாபலன்', 'உண்ணாவிரதம் ஒரு தண்டனை', 'கைதிகள்', 'நாடோடி' முதலிய பல கதைகளில் அமைந்துள்ளன. இது 'பலாபலன்' எனும் சிறுகதையின் தொடக்கம்.

### அஃறிணைப் பொருள்களோடு தொடக்கம்

கதை மாந்தர்கள் குதிரை, நாய் போன்ற அஃறிணை உயிர்களோடு பேசுவதாக அமைந்த கதைத் தொடக்கங்களையும் அமைத்துள்ளார். 'கபோதிபுரக் காதல்',

ஜல் ஜல் ஜல ஜல, ஜல் ஜல் ஜல் ஜல்
உம் கொஞ்சம் வேகமாக நட வேகாத
வெய்யில் வற்றதுக்குள்ளே ஊர்போவோம்
ஜல் ஜல் ஜல ஜல, ஜல் ஜல் ஜல ஜல
'சும்மா போக மாட்டாயே, நீ, உன் வாடிக்கையே
அதுதானே, சவுக்கடி கொடுத்தால்தான போவ, உம்'
(அண்ணா, கபோதிபுரக் காதல், 3)

எனத் தொடங்குகிறது. பரந்தாமன் வண்டியை ஓட்டிக் கொண்டு குதிரையுடன் பேசுகிறான்.

ஜுலியா? என்ன கண்ணு, கோபம்? ஜிம்மி துஷ்டன் நீ போ! போய்ச் சமாதானம் செய் ஜுலியாவை, ஜுலி ஜுலி! இதோ பார் இப்படி! அடடா! புருஷன் மேலே கோபம்

> வந்து விட்டால் நம்ம ஜுலியா செய்கிற அட்டகாசம் இருக்கே, சொல்லி முடியாது எப்படி முறைத்துப் பார்க்கிறான், பார்! ஜிம்மி, பாவம், கெஞ்சிப் பார்த்துத் தோற்றுப்போய், ஜுலியாவின் கோபம் தானாகத் தணியட்டும் என்று போய்விட்டான். என்ன இருந்தாலும், ஜுலி! உனக்கு இவ்வளவு கோபம் ஆகாது (அண்ணா, அண்ணாவின் சிறு கதைகள்-இரு பரம்பரைகள், ப.1)

இது 'இரு பரம்பரைகள்' என்ற கதையில் பணக்காரப் பெண் தேவா, குச்சு நாயோடு கொஞ்சிப்பேசுவது.

### மன ஓட்டம் பற்றிய குறிப்புத் தொடக்கம்

கதை மாந்தரின் மன உணர்வை வெளிப்படுத்தும் வகையில் தொடக்கம் அமைவது உண்டு. 'கள்ளன்' என்ற சிறுகதை இவ்வாறு தொடங்குகிறது.

'தொல்லை மிகுந்த வேலை; கடினமானது என்று கூற முடியாது; அவ்விதம் நான் சொன்னால் சிரிப்பார்கள்; கையிலே இருப்பது கடப்பாறை அல்ல, மண் வெட்டியுமல்ல, பேனா! தலையிலே மூட்டையுமில்லே! மண் சட்டியுமில்லை, தொப்பி அணிந்திருக்கிறேன், உடலிலே கோட்டு; உத்யோகம் செய்கிறேன், ஆனால் உள்ளம் என்னமோ உலைக்கூடத்தில் சிக்கிய இரும்பு போலிருந்தது; ஓயாத விசாரம்; தீராத்தொல்லை மட்டுமல்ல, நாளாக ஆக ஆகத் தொல்லை வளர்ந்து கொண்டே வரலாயிற்று. எவ்வளவோ முயன்றும் அந்தத் தொல்லையைக் குறைக்க முடியவில்லை. (அண்ணா, வாழ்க்கைப்புயல், (கள்ளன்), ப. 49).

இவ்வாறு ஒரு காண்ட்ராக்டரிடம் பணியாற்றும் படித்த இளைஞனொருவன் எண்ணுகிறான். அவனே,

'என் மனப் போராட்டம் மேலே நான் தீட்டியது' எனப் பின்னர்க் கூறுவது குறிப்பிடத்தக்கது (மேலது, ப.60).

### மடல்வழி

மடல் வாயிலாகக் கருத்தை விளக்கும் தொடக்கமாக அமைந்தவை. 'அவர் எழுதிய இரு கடிதங்கள்', 'சமயபுரத்து அம்மன் தொடுக்கும் மான நஷ்ட வழக்கு', 'பொங்கல் பரிசு', 'திருமலை கண்ட திவ்யஜோதி', 'தங்கத்தின் காதலன்' முதலியனவாகும்.

### நாட்குறிப்பு

நாட்குறிப்பின் தொடக்கமாக அமைவது, குமாஸ்தாவின் பெண்தான் அல்லது 'கொலைகாரியின் குறிப்புகள்', 'தனபாலச் செட்டியார் கம்பெனி' முதலானவை.

**கதையின் முடிவு**

அண்ணாவின் புதினங்களும் குறும் புதினங்களும் இன்ப முடிவையே கொண்டு விளங்குகின்றன. அவரது சிறுகதைகள் சரிபாதிக்கு மேல் இன்ப முடிவைக் கொண்டுள்ளன. அவர் கதைகளனைத்தும் சமுதாயத்திலுள்ள தீய சக்திகளின் மீது தொடுக்கப்பட்ட போராக அமைந்ததால் கதை முடிவில் 90 விழுக்காடு கதை ஆசிரியரின் கூற்றுடனே முடிந்துள்ளன. கதை முடிவில் அண்ணா மிகுந்த நாட்டம் காட்டியுள்ளார் என்பதற்குச் சான்றாக விளங்குவது அவரது 'குமாஸ்தாவின் பெண் தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகளே' யாகும்.

'குமாஸ்தாவின் பெண்' என்ற டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகத்தைப் பலமுறை அண்ணா பார்த்திருந்தார். அதன் பயனாகத் தம் கருத்தை டி.கே. சண்முகத்திடம் தெரிவித்தார். 'நாடகத்தின் முடிவு எனக்குப் பிடிக்கவில்லை' என்றார் அண்ணா. 'எப்படியிருக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்?' என்று டி.கே. சண்முகம் கேட்டார்; அண்ணா சற்றுச் சிந்தித்தார். 'என்னுடைய முடிவை வைத்து நானே ஒரு புதுக்கதை எழுதலாமென்று கருதுகிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?' 'எழுதுங்கள்' என்றார் சண்முகம். விரைவில் அண்ணா அந்தக் கதையை எழுதினார். அதற்குப் பெயர் 'குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்' என்பதாகும் (நவீனன், அண்ணாவின்கதை, ப.39)

அண்ணா தம் கதையின் சுருக்கத்தை முடிவிலே தந்து விடுவதுண்டு. 'குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்' என்ற கதையின் சுருக்கத்தைக் கதை முடிவிலே அவர் கூறுவதாவது:

> கன்னியாக இருக்கையில் காதல் கொண்டு, அது கனியாததால் வெம்பிய வாழ்வு பெற்று, விதவையாகி, விதவைக் கொடுமையிலிருந்து விடுதலை பெற, விபசாரியாகி, விபசார வாழ்க்கையிலே ஆனந்தம் பெற ஆசை நாயகனைப் பெற்று, அவனது துரோகத்தால் துயருற்று அவனைக் கொன்ற காந்தாவின் கதை இதுவே. (அண்ணா, குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள், ப.93).

சில வேளைகளில் கதையின் முடிவை இடையிலேயே சுருக்கிச் சொல்வதைக் 'கபோதிபுரக் காதலி'ல் அமைத்துள்ளார்.

> *தன் வீட்டின் கடனைத் தீர்க்கத்தான், சாரதாவின் தகப்பன், பணக்காரனுக்குத் தன் பெண்ணை மணம் செய்து கொடுத்தார். வேதவல்லியும் தன் மகள், நல்ல நகை நட்டுடன் நாலுபேர் கண்களுக்கு அழகாக வாழ வேண்டும் என்ற விருப்பத்துக்காகத் தான் சாரதாவை மணம் செய்ய ஒப்பினாள். ஆனால் அந்த மணம் மரணத்தைத்தான் கணவனுக்குத் தந்தது. மணமற்ற செத்த வாழ்வைத்தான் சாரதாவுக்குத் தந்தது. என்ன செய்வது? ஓட்டைப் படகேறினால் கரை ஏறுமுன்னம் கவிந்தாக வேண்டுமல்லவா! சாரதாவுக்கு அவள் பெற்றோர்கள் அமைத்துக் கொடுத்த வாழ்க்கைப் படகு ஓட்டை உள்ளது. அதில் எத்தனை நாளைக்குச் செல்ல முடியும். அந்த ஓட்டைப் படகுக்குக் கருப்பையா ஒட்டுப் பலகை! ஆனால் அந்த ஒட்டுப்பலகைதான் எத்தனை நாள் தாங்கும். அதுவும் பிய்த்துக் கொண்டு போய் விட்டது ஒருநாள். பிறகு படகே கவிழ்ந்து விட்டது. கணவனோ மாண்டான். இனி சாரதா கரைசேருவது எப்படி முடியும். (அண்ணா, கபோதிபுரக்காதல், பக்.76-77)*

கதையின் முடிவு பற்றிய நிலையான கோட்பாடு வரையறுக்கப் படவில்லையாயினும், கதை முடிவு கற்போர் நெஞ்சில் ஒரு பாதிப்பை உண்டாக்க வேண்டுமென்பதில் கருத்து மாறுபாடில்லை.

> *கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல். கதை முடியும் பொழுது அதைப்பற்றிய சிந்தனை முடிவடைந்து விடாது. இப்படிப்பட்ட கதைகள் முடிந்த பிறகுதான், ஆரம்பமாகிறது என்று சொன்னால் விசித்திரமாகத் தோன்றும். ஆனால், அதுதான் உண்மை. (புதுமைப் பித்தன், புதுமைப் பித்தன் கட்டுரைகள், ப.35)*

என்பார் புதுமைப்பித்தன். அண்ணா தம் கதைகளில் பல முடிவுகளை மேற்கொண்டுள்ளார்; ஆயினும் அவர் விரும்பிப் போற்றிய முடிவு ஆசிரியரின் கருத்தோடு முடிவதேயாகும்.

அண்ணா தம் புதினங்களைப் பத்திரிகைகளில் தொடர்கதையாக எழுதி வந்ததால் திடீரென முடித்து விடுவதும் உண்டு. புதினங்களின் முடிவுகளைப் பின்னர்த்தாம் மாற்ற எண்ணியிருந்ததாக அவரது நூலின் பதிப்பாசிரியரே குறிப்பிட்டுள்ளார். தொடக்கக் காலத்தில் எழுதிய 'தசாவதாரம்' முடிவுறவில்லை. விடுதலையில் எழுதிய 'வீங்கிய உதடு' என்ற

முடிவுறாத கதையைப் பின்னர்த் 'திராவிட நாடு' வார ஏட்டில் 'என் வாழ்வு' என எழுதினார் அதுவும் முடிவுறவில்லை. இறுதியாக 'இன்ப ஒளி' என்ற வரலாற்றுப் புதினத்தைத் தொடங்கினார். அதுவும் முற்றுப் பெறவில்லை. அவர் புதினங்கள் மூன்றும் முற்றுப் பெறாததற்குக் காரணம் அவரது ஓயாத அரசியல் பணியேயாகும். சிறந்த இலக்கியப் படைப்புகளை உருவாக்க முடிய வில்லையே யென்று அவர் வருந்தியதும் உண்டு (நவீனன், மு.நூ.ப. 117).

### கதை மாந்தர் கூற்றுடன் முடிவு

படிப்பவரைச் சிந்திக்க வைப்பதற்கும், கதையின் கருப்பொருளுக்கு அழுத்தம் தருவதற்கும் கதை மாந்தர் கூற்றுடன் முடிவது சிறந்ததாகும். இதனை அண்ணா சில கதைகளில் விரும்பிப் போற்றியுள்ளார்.

> நான்தான் கோழை, ஐயா! என் தங்கை, தங்கம் மிகுந்த தைரியமுள்ளவள், லெப்டிணன்டின் மனைவி அல்லவா! என்ன பதில் தந்தாள் தெரியுமா தங்கம்! நாட்டுப் பாதுகாப்புக்காகக் காலிழந்தவரைக் கணவராகக் கொள்வதிலே நான் பெருமை அடைகிறேன் என்றாள். அதற்கு மேல் அவனாலும் பேச முடியவில்லை. என்னாலும் முடியவில்லை. இருவரும் நகர்மன்றம் சென்றோம். சோமு ஊன்றுகோல் இல்லாமல் கூட நடப்பான் போலிருந்தது. அப்படி ஒரு புதிய பொலிவு, எழுச்சி, உற்சாகம், பெருமிதம் (காஞ்சி, காலிழந்தான், 14.1.65)

இவ்வாறு கதை மாந்தர் கூற்றாகக் 'காலிழந்தான்' முடிவுறுகின்றது.

### கதை மாந்தர் எண்ண ஓட்டத்துடன் முடிவு

கதை மாந்தரின் மன உணர்வை வெளிப்படுத்துமாறு சில கதைகளில் முடிவு அமைத்துள்ளார்.

> நான் இம்சைக்கு ஆளான இலட்சியவாதி! கூண்டுக்குள்ளே இருந்து கொண்டு வெளியே தப்பிச் செல்ல முயன்று, இரும்புக் கம்பிகளின் மீது சிறகுகளை அடித்துக் கம்பி அசையாத நிலையில், சிறகுகள் ஒடிந்த சிறுபறவை! என்னைப் போல் எவ்வளவு பேர் உளரோ? (அண்ணா, வாழ்க்கைப்புயல்(கள்ளன்), ப.76) இது 'கள்ளன்' எனும் சிறுகதையின் முடிவு.

### ஆசிரியர் கூற்றுடன் முடிவு

ஆசிரியர் கூற்றாகத் தம் கதைகள் பெரிதும் முடிவதையே அண்ணா போற்றியுள்ளார். சமுதாய உணர்வைத் தூண்ட இம்முறையே சிறந்ததென எண்ணினார் போலும். 'தஞ்சை வீழ்ச்சி' எனும் கதையில் இவ்வாறு முடிக்கிறார்.

> வெங்கண்ணா, இருமுறை அரசுகளைக் கவிழ்த்தான். நாட்டை நாசப்படுகுழியில் தள்ளினான்! இதுபோலப் பரந்த இந்தத் துணைக்கண்டத்தில், வஞ்சகம் வென்றதைக் காட்டும், வேதனை தரும் நிகழ்ச்சிகள் பலப்பல நடைபெற்றன! அரசுகள் அழிக்கப்பட்டன. அறம் அழிக்கப்பட்டது. நாடு சீரழிவு பெற்றது. சுயநலமும், சூழ்ச்சித் திறனும், இனவெறியும் வைதீக வெறியும் கொண்டவர்கள் நாட்டுக்கு ஏற்படுத்திய நாசம் ஒன்றிரண்டு அல்ல. உள்ளத்தைக் குலுக்கக் கூடிய சம்பவங்கள் பலப்பல. தஞ்சை வீழ்ச்சி அது போன்ற சம்பவங்களிலே ஒன்று! சரிதம் தரும் எச்சரிக்கை.
> (அண்ணா, அண்ணாவின் சிறுகதைகள், தஞ்சை வீழ்ச்சி, ப.352).

### களத்துமுறை

கதை இரண்டு முறையில் எடுத்துரைக்கப்படலாம். அவற்றில் ஒன்று ஆசிரியரே கதையை நடத்திச் செல்வது. மற்றொன்று ஆசிரியர் கதையினுள் நுழைந்து தானும் ஒரு பாத்திரமாக அமைவது.

ஆசிரியரே கதை சொல்லும் முறை படர்க்கைக் கூற்று முறையாகும். அண்ணாவின் புதினங்களாகிய 'பார்வதி, பி.ஏ.,', 'கலிங்கராணி', 'என்வாழ்வு', 'தசாவதாரம்', 'இன்பஒளி' முதலியன படர்க்கைக் கூற்றிலேயே அமைந்துள்ளன. 'குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்' என்ற குறும்புதினம் நீங்கலாக ஏனைய ஒன்பது குறும்புதினங்களும் படர்க்கைக் கூற்று முறையிலே அமைந்துள்ளன. அண்ணாவின் பெரும்பாலான சிறுகதைகள் படர்க்கைக் கூற்று முறையிலேயே படைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியரே கதையினுள் ஒரு பாத்திரமாக அமைந்து பேசும் முறையில் அமைவது தற்கூற்று முறை அல்லது கதை மாந்தர் கூற்று, துணை மாந்தர் கூற்று, நாட் குறிப்பு முறைக் கூற்று, மடல்வழிக் கூற்று எனப் பல்வேறு பிரிவுகள் உண்டு.

கதை மாந்தர்களில் ரங்கமும் பரந்தாமனும் கூறுவதுபோல் அமைந்தது 'ரங்கோன் ராதா'. நாட்குறிப்பு முறையில் அமைந்த குறும்புதினம் 'குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்' என்பதாகும். மடல் வழிக் கூற்றில் அமைந்த சிறுகதைகள் 'அவர் எழுதிய இரு கடிதங்கள்', 'பொங்கல் பரிசு', 'சமய புரத்து அம்மன் தொடுக்கும் மான நஷ்ட வழக்கு' முதலியன. கதை மாந்தர் கூற்றில் அமைந்தவை 'இருவர் காலிழந்தான்', 'வேலைபோச்சு' முதலியன. தொலைபேசியில் பேசும் புதிய உத்தியில் கதையை நடத்திச் செல்வதைக் காட்டுவது 'வரவு செலவு'. எஞ்சியுள்ள அனைத்துச் சிறுகதைகளும் ஆசிரியர் கூற்றாகவே-படர்க்கை முறையிலேயே அமைந்துள்ளன.

அண்ணா விரும்பிப் போற்றிய கிளத்தல் முறை படர்க்கை நிலையேயாகும்.

### பின்னோக்கு முறை

கதைகளை அவை நடந்தவாறு இயல்பாக எழுதாமல், முன் பின்னாக மாற்றிப் படிப்போரைச் சிந்திக்க வைக்கும் முறையில் எழுதுவது பின்னோக்கு முறையாகும். 'ரங்கோன் ராதா', 'தேடியது வக்கீலை', 'பேய் ஓடிப்போச்சு', 'சாது' முதலிய கதைகள் இம்முறையிலே அமையப்பெற்றன.

இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த கதையை, ரங்கம் தன் மகனிடம் கூறுவதுபோல் பின்னோக்கு முறையில் அமைந்துள்ளது 'ரங்கோன் ராதா'.

இருதய நாதன் தாக்கப்பட்டுப் பலத்த காயத்தோடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். இருதயநாதனுக்கு இந்நிலை ஏற்பட்ட சம்பவத்தை அவன் நண்பன் எம்பெருமாள், மருத்துவமனையில் கம்பவுண்டருக்குப் பின்னோக்கு முறையில் எடுத்துரைப்பதைக் காட்டுவது 'தேடியது வக்கீலை' எனும் கதையாகும்.

உண்மையை அறியாமல் தன்மகளுக்குப் பேய் பிடித்த தென்றே செங்கோடன் எண்ணினான். பூசாரி பொன்னனை அழைத்துப் பேயோட்டச் செய்தான். செல்லாயியின் மனமாற்றத்திற்கு உண்மையான காரணம் அங்குக் 'கிராமக் காதல்' என்ற படம் எடுக்க வந்தவர்கள் செய்த சதியென்பதைச் செங்கோடன் அறியான். அவளது நோய்க்கு உண்மையான காரணத்தை அவள் அண்ணன் அறிந்தான். அதனைத் தன் தங்கைக்கும் அவள் காதலனுக்கும் விளக்கினான். அவளைப் பிடித்திருந்த பேய் அகன்றோடியது; இந்த உண்மையை அறியாத

அவள் தந்தை பூசாரி பொன்னனால்தான் பேய் விரட்டப்பட்டு விட்டதாக நம்பினான். அவன் பூசாரியைப் பாராட்டும் முறையில் தொடங்கிப் பின்னோக்கு முறையில் 'பேய் ஓடிப்போச்சு' என்ற கதையை நடத்திச் செல்கிறார். அண்ணாவின் கதைகளில் 60 விழுக்காடுகள் பின்னோக்கு முறையிலே அமைந்துள்ளன.

**புதிர்போக்கு**

கதையைப் படிப்போர்க்கு விருப்பம் ஏற்படுத்த ஆசிரியர் கையாளும் உத்திமுறை இது. அடுத்து என்ன நிகழுமோ என்று படிப்போரின் உணர்ச்சியைத் தூண்டி, நிகழ்ச்சிகளை அடுக்கிச் செல்வது. புதிர்போக்கின் விளைவு, கற்போர் எதிர்பாராத நிலையில் சென்று கதை முடிவது. 'அப்போதே சொன்னேன்', 'கடைசிக் களவு', 'நீதிபதி வக்கீலானார்', 'கனவான்', 'ஏழை', 'குற்றவாளி யார்?', 'கபோதிபுரக் காதல்', 'பார்வதி பி.ஏ.', முதலிய கதைகளில் இந்த உத்திமுறையைக் காணலாம். பொதுவாக அண்ணாவின் கதைகளில் பெரும்பாலானவை ஆர்வ நிலையைத் தோற்றுவிப்பனவாகவே உள்ளன.

'கபோதிபுரக் காதலி'ல் கள்ளக் காதலைப் படம் பிடித்து வைத்துக் கொண்டு, அதனாலேயே கருப்பையா, சாரதாவை மிரட்டிப் பணம் பறிப்பது; கருணானந்த யோகி என்ற பெயரில் சாமியார் வேடத்தில் மறைந்து கோகிலம் என்ற பெண்ணோடு கள்ள உறவு கொண்டிருப்பது, பின்பு பரந்தாமனால் அச்சாமியாருடன் கள்ள உறவு கொண்டிருப்பது, கண்டுபிடிக்கப் படுவது போன்ற ஆர்வ நிலைகளையும், எதிர்பார்ப்புகளையும், உண்டாக்குகின்றன.

வைரக் கடத்தலை மையமாக வைத்து எதிர்பார்ப்பு நிலையில் வளர்ந்து செல்கிறது 'கனவான்' என்ற கதை.

'ஏழை' என்ற கதை தன்னோடு படித்தவன் வைரம் கடத்துதலை அறிந்து, போலீஸ் அதிகாரி ஏழை போல் வேடம் தாங்கி, அக்கடத்தலைக் கண்டுபிடிப்பதைக் கூறுகிறது.

**ஒருங்கிணைப்பு**

ஒரு கதையில் எழுப்பிய சிக்கலுக்கு, மறுகதையில் எங்கேனும் தீர்ப்பு காண்பதாகக் கதை எழுமாயின் இரண்டு கதைகளும் ஒன்றுடன் ஒன்று இணைவதில் ஒன்றுபடுகின்றன. இரு கதைகளும் அதனதன் அளவில் தனித்தனிக் கதை என்றாலும் இரண்டிலும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஆழ்ந்து படிப்பவர்க்கு ஒன்றின் தொடர்ச்சி மற்றொன்று என்பது எளிதில் விளங்கும். இவ்வகையினை ஒருங்கிணைப்புக் கதைகள் என்று

குறிப்பிடலாம். ஒரு கதையில் இடம் பெற்ற கதைமாந்தர் மற்றொரு கதையில் இடம் பெறுவதாக அமைவது ஒருவகை. மற்றொரு வகை ஒரு கதையின் முடிவிலிருந்து மற்றொரு கதை உருவாகி முதல் கதையில் எழுப்பிய சிக்கலுக்கு இரண்டாவது கதையில் வேறொரு கோணத்தில் தீர்வு காண்பதாகவோ, அதன் தொடர்பாக மற்றொரு சிக்கல் உருவாவதாகவோ அமைவது. இவ்வகைக்கு 'முகம் வெளுத்தது', 'இரு பரம்பரைகள்' என்ற இரு கதைகளும் நல்ல சான்றாகும். 'முகம் வெளுத்தது' என்ற கதையில் வரும் ஏழை சிங்காரம் பணக்காரன் சமதர்மம் பேசுவதைக் கண்டு வியப்புற்றான். அதே 'சிங்காரம் பின்னாளில், மனிதர்களில் மட்டுமல்ல, சகல ஜீவராசிகளிலும் இரண்டு வகைப் பரம்பரை இருப்பதைத் தெரிந்து கொண்டான். தெளிவு பெற்றான்' என்பதை 'இரு பரம்பரைகள்' என்ற கதையில் கூறுகிறார். இவ்விரண்டு கதைகளிலும் ஒரே மாந்தர் இடம் பெறுவதோடு, வாழ்வுச் சிக்கல் பற்றிய அணுகுமுறையும் காட்டப்படுகிறது. இரண்டு கதைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு ஒருங்கிணையும் கதைகளாகின்றன.

### கதைமாந்தர்

இளங்கோ, கம்பன், காளிதாசன், மில்டன், தாந்தே போன்ற கவிஞர்கள் தங்கள் காப்பியங்களில் தன்னேரில்லா மாந்தர்களைப் படைத்தனர். அக்கதை மாந்தர்கள் காலம் இடம் மொழி ஆகியவற்றைக் கடந்து வாழ்கின்றனர். இன்றைய மக்களாட்சிக் காலத்தில் கதைத் தலைவர்களாக இன்னார் தாம் இடம்பெறவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லை. இன்றைய கதைகளில் தோன்றும் மனிதர்கள் நம்மிடையே நடமாடும் சாதாரண மக்களாகவே இருக்கின்றனர். மானிட இனத்தின் சிக்கலுக்கும் சீரழிவிற்கும், எங்குப் பார்த்தாலும் போராடும் நிலைக்கும் நம்கால மக்கள்தாமே காரணமாக இருக்கின்றனர். அதனால்தான் எழுத்தாளர்கள் தம்காலச் சமூகமக்களையே கதைமாந்தர்களாகத் தம் படைப்புகளில் படைத்துள்ளனர். நோபெல் பரிசுபெற்ற எமிங்வே, 'சிறந்த எழுத்தாளர்கள் கதைமாந்தர்களைப் படைப்பதில்லை. வாழும் மக்களையே படைத்து விடுகின்றனர்' எனக் கூறியுள்ளார். 'A writer should create living people, people not characters' (The Realities of Fiction, p.93). உண்மையான வாழ்க்கையில் காணப்படும் மாந்தர்களிடம் நிறைகளும் உண்டு, குறைகளும் உண்டு. இன்றைய கதைகளில் தன்னேரில்லாத் தலைவரென யாரும் குறிப்பிடப்படுவதில்லை.

அண்ணா தம்முடைய கதைகளில் கற்பனை மாந்தர்களைப் படைத்ததை விடத் தம்மைச் சூழ்ந்துள்ள சமுதாயத்தில், தாம்

அறிந்த மனிதர்களையே கதைமாந்தர்களாகப் படைத்துள்ளார். குமரிக் கோட்டத்திற்கு எழுதிய முன்னுரையில் அண்ணா, 'இதிலே காணப்படும் வாதிடும் மகன், வசீகர மங்கை ரோஷம் நிரம்பிய அண்ணன் இவர்களை நீங்கள் எங்குவேண்டுமானாலும் காணலாம். பெயர்கள் குழந்தைவேலர் என்றிராது. குமரி என்று இருக்காது. ஆனால் இவ்விதமான நிலைமையுள்ளவர்களை நாட்டிலே காணமுடியும்' என்று குறிப்பிட்டுள்ளார். அண்ணாவின் கதைகளில் வரும் கதைமாந்தர்கள் பல்வேறு வகையினர் -வாழ்வில் இன்பத்தையே காணாது ஏங்குபவர்களும் உண்டு. வாழ்வின் சூழ்ச்சிக்கும் சுரண்டலுக்கும் பலியான மகளிரும் உண்டு. மனித வடிவில் கொடும் புலிகளும் சமயப் போர்வையில் வஞ்சக நரிகளும் பெண்மையை அழிப்பதற்கென்றே பிறந்த புல்லுருவிகளும், போலி வேடப் பச்சோந்திகளும் கதை மாந்தர்களாக அண்ணாவின் கதைகளில் இடம்பெற்றுள்ளனர். சமூக வாழ்வின் விழிப்புணர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் அண்ணாவின் கதைகள் முன்னுரிமை அளித்துள்ளன. 'வாழ்க்கையைவிட உயர்ந்தமனிதனை, வாழ்வை முதன்மைப் படுத்தக்கூடிய மனிதனை உருவாக்குவதே கலையின் நோக்கம்' The person, larger than life - the type that is the aim of Art (Alexi Tolstoy, on the art and craft of writing, p.163) என்றார் சோவியத் நாட்டின் புதின ஆசிரியர் அலெக்சி டால்ஸ்டாய். இக்கருத்தே அண்ணாவின் குறிக்கோளாகும். அண்ணாவின் கதை மாந்தர்களில் நினைவில் நிற்பவர்கள் பெரும்பாலும் பெண்களேயாவர். இரண்டாம் இடம்பெறுபவர் ஆண்களே யாவர்.

அண்ணா புதிய சமூகத்தையும் புதிய மனிதரையும் காணக் கதை வடிவங்களை மேற்கொண்டார். அதனால்தான் ஒரு ஆய்வாளர்

> அண்ணாவின் கதையில் உலவும் பாத்திரங்கள் வெறும் கற்பனைப் பாத்திரங்களாக இருக்க மாட்டார்கள். உண்மைப் பாத்திரங் களாகவே நம்முன் நடமாடுவதை நிதர்சனமாக உணர முடியும்.

எனக் கூறியுள்ளார். (சேரன், அறிவுலகமேதை, அண்ணா, ப.94)

அண்ணாவின் கதைகளின் நோக்கத்தை எழுத்தாளர் இராதா மணாளன் இவ்வாறு அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

> வாழ்க்கையில் உதாசீனம் செய்து ஒதுக்கித் தள்ளப்பட்ட உருவங்களை நம்முன் கொண்டு வந்து

> நிற்கவைப்பார். வாழ்க்கையில் அவர்கள் அந்தக் கதிக்கு ஆளான காரணத்தை அவர்களின வாயினாலேயே கூறச் செய்வார். விபசாரி, விதவை, ஏழை, தொழிலாளி இவர்களின் பக்கம் நின்று வாதாடுவார். அவர்களின் கட்சியை விளக்கிக் கூறி நல்ல தீர்ப்புத் தாருங்கள் என்று நம்மைக் கேட்பார்.

(தி. சடகோபன் & கனகசபை (தொகு.); அறிஞர் அண்ணாதுரை (தொகுப்பு நூல்) ப.106).

பல எழுத்தாளர்கள் புறக்கணித்த, பார்க்க மறுத்த ஏழை எளிய மக்களை அண்ணா தம் கதைகளில் கருப்பொருளாகக் கொண்டார். அண்ணாவின் விரிந்த வாழ்க்கை அனுபவத்தின் காரணமாகப் பலர் கதைமாந்தர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். செல்வர்களின் கொடுமையில் சிக்கித் தவிக்கும் மாந்தர்களின் துன்பங்களைப் படைக்கின்ற ஆற்றல் கதைக் கலைக்கே உரியதென்பதை நன்கு தெரிந்து கொண்டார்.

அண்ணாவின் கதைகளில் பாத்திரங்களாக அமைந்துள்ள மாந்தர்கள்,

1. மேல்நிலையிலுள்ள பெருநிலக்கிழார்கள், வணிகர்கள்
2. கடைநிலையிலுள்ள ஏழை எளிய மக்கள்

என இருபெரும் பகுப்புகளுக்கு உட்படுவர்.

துர்கனேவ் கதைகளில் உழவர்கள், மாப்பசான் கதைகளில் பரத்தையர், செக்காவ் கதைகளில் மருத்துவர், ஆசிரியன்மார் இடம்பெறுவதைப் போல அண்ணாவின் கதைகளில் பெருநிலக் கிழாரும், ஏழை எளிய மக்களும் இடம் பெறுகின்றனர். வசதி படைத்தவர்களில் பலவகையினரையும், வாழ முடியாதவர்களில் பலவகையினரையும், தம் கதைகளில் படைத்துள்ளமை பற்றியும், படிப்போர் அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அண்ணா அவர்களே கூறுகிறார்.

> இங்கு நீங்கள் பலரைப் பார்க்கப் போகிறீர்கள். வாழ்க்கையின் பல கோணங்களுக்கு அவர்கள் சான்றளிக்கப் போகிறார்கள். இவர்களை நீங்கள் வெறுக்க வேண்டுமா, நேசிக்க வேண்டுமா என்ற கேள்வியை நான் இங்கு எழுப்பவில்லை. இவர்களைப் புரிந்து கொள்ளுங்கள் என்று மட்டுமே கேட்டுக் கொள்கிறேன்.

என 'மதுரைக்கு டிக்கெட் இல்லை' என்னும் கதைத்தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

### பெயரீடு

அண்ணா தம் கதை மாந்தர்களுக்கு, மக்களுக்கு நன்கு தெரிந்த பழைய பெயர்களையே வைத்துள்ளார். ஆண்களின் பெயர்களாக, ஆலாலசுந்தர முதலியார், ஆறுமுக முதலியார், இருதய நாதன், இருளப்பன், ஏகாம்பரம் கணபதி சாஸ்திரி, கந்தன், கிருஷ்ணன், குமரகுருபரர், குமார், சங்கரன், சடையப்பன், சடையாண்டி, சிங்காரம், சொக்கலிங்கம் செட்டியார், சோணாசலன், தம்பி முதலியார், தருமலிங்க முதலியார், தனபாலச் செட்டியார், நரசிம்மன், பரமசிவம்பிள்ளை, பழநி, பார்த்தசாரதி ஐயங்கார், மார்க்கண்டன், வடிவேலன், வேலப்பன், வேலாயுதம் வைத்தீஸ்வர ஐயர் முதலியோர் இடம்பெறுகின்றனர். பெண்களின் பெயர்களாக அன்னம், ஆண்டாள், உத்தமி, உமா, ஊர்மிளா, ஏமலதா, கமலம், கருப்பி, காந்தா, காமாட்சி, குப்பி, கோகிலா, கோமளம், சாரதா, சுந்தரி, செல்லாயி, செல்லி, சொக்கி, தங்கம், தமயந்தி, தாயம்மாள், நாகவல்லி, பார்வதி, மருதவல்லி, மாரி, மீனாள், ரங்கம்மாள், ராதா, லலிதாகுமாரி, லீலா, வள்ளி, வேதம், வேதவல்லி, ஜீவா, ஜோதி முதலியவை அமைந்துள்ளன. இவற்றைக் கூர்ந்து நோக்கினால் அண்ணாவின் கதைகளில் வரும் பெரும்பாலான பெயர்கள் புராணங்களில் வரும் பெயர்களாகவும், மக்களிடையே பெருவழக்கில் வழங்கப் படுவனவாகவும் இருப்பதைக் காணலாம்.

புதிய பெயரிட்டுக் கதை மாந்தர்களை அழைப்பதைவிட மக்களுக்கு நன்கு அறிமுகமாகிய பெயர்களை வழங்கியதன் நோக்கம், தாம் விரும்பும் கருத்துக்கள் எளிதாக மக்களைச் சென்று சேர வேண்டுமென்று எண்ணியதேயாகும். புதிய கருத்துக்களை மக்களிடையே பரப்பப், பழைய பெயர்களைப் பயன்படுத்துவது அக்கருத்துகள் மக்களிடம் எளிதில் சென்று சேரத் துணை செய்யுமென எண்ணினார்.

அண்ணாவின் கதைகளில், சில பெயர்கள் மீண்டும் மீண்டும் வந்துள்ளன. அதற்குக் காரணம், இவரின் கதைகள் விற்பனைக்குரிய மூலதனமல்ல - வாழ்க்கைக்குரிய மூலதனம் என்பதேயாகும். 'செல்லி' எனும் பெயர் 'புதிய பொலிவு', 'நீதிபதி வக்கீலானார்', 'கன்னி விதவையான கதை', 'செல்லி' ஆகிய நான்கு கதைகளில் வரும் வெவ்வேறு பெண்களுக்குப் பெயராக இடப் பெற்றுள்ளது. 'பார்வதி' எனும் பெயர் 'கைதிகள்', 'பார்வதி பி.ஏ.', 'செவ்வாழை' ஆகிய மூன்று கதைகளில் வரும் வெவ்வேறு

பெண்களுக்குப் இடப்பெற்றுள்ளது. 'செங்கோடன்', 'கரியன்' என்ற இரண்டு பெயர்களும் 'பேய் ஓடிப்போச்சு', 'செவ்வாழை', 'செங்கரும்பு' ஆகிய மூன்று கதைகளிலும் இடம்பெற்றுள்ளன. 'கோகிலா எனும் பெயர் 'கபோதிபுரக் காதல்', வண்டிக்காரன் மகன் எனும் இரு கதைகளில் வந்துள்ளது.

"டாக்டர் ரகுமான்' எனும் பெயர் 'சமூகசேவகி சாருபாலா', 'வாலிப விருந்து' ஆகிய கதைகளில் வரும் வெவ்வேறு ஆண்களுக்கு இடப்பெற்றுள்ளது. 'தனபாலச் செட்டியார்' எனும் பெயர், 'இருபரம்பரைகள்', 'முகம் வெளுத்தது', 'நீதிபதி வக்கீலானார்' ஆகிய மூன்று கதைகளில் இடம் பெற்றுள்ளது. 'தருமலிங்க முதலியார்' என்னும் பெயர் 'ரங்கோன் ராதா' 'கள்ளன்' ஆகிய இரு கதைகளில் இடம் பெற்றுள்ளது. 'பிரமநாயகம்' என்ற பெயர் 'பார்வதி பி.ஏ.', 'பிரமநாயகம்'ஆகிய இரு கதைகளில் இடம் பெற்றுள்ளது. 'வேலாயுதம்' எனும் பெயர் 'முகம் வெளுத்தது', 'பொய்-இலாப நஷ்டம்' ஆகிய இரு கதைகளில் இடம் பெற்றுள்ளது. ஒரு கதையில் இடம் பெறும் பாத்திரத்தின் பெயரையே அக்கதைக்குத் தலைப்பாக இட்டு வழங்கும் முறை அண்ணாவிடம் மேலோங்கியிருக்கிறது.

அண்ணா தம் கதை மாந்தர்களுக்கு இயற்பெயரோடு சாதிப் பெயர்களையும், ஊர்ப் பெயர்களையும், பட்டப் பெயர்களையும், தொழில் பெயர்களையும் இணைத்தே பெயரிட்டுள்ளார். அவரது கதை மாந்தர்களைச் சாதிப் பெயரிட்டே அழைப்பதைக் காணலாம்.

அருணாசல ஐயர், ஆறுமுகம் பிள்ளை, எல்லப்ப முதலியார், கருடாழ்வார் முதலியார், குழந்தைவேல் செட்டியார், தருமலிங்க முதலியார், தனபாலச் செட்டியார், பரமசிவம் பிள்ளை, மாரியப்ப பிள்ளை, முகுந்தராஜ முதலியார், ராகவாச்சாரியார், லோகாமிர்த ஐயர், லோகு முதலியார், வீராசாமி பிள்ளை, வேதகிரி முதலியார், வேதாந்தாச்சாரி, வேணுகோபாலாச்சாரியார், வைத்தீஸ்வர ஐயர், வைடூரியம் செட்டியார் எனக் குறிப்பிட்டுள்ளார். சாதி வேற்றுமையைத் தகர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த அண்ணா தம் கதை மாந்தருக்குச் சாதிப் பெயரையும் இணைத்துப் பெயரிட்டிருப்பதன் நோக்கம் சாதிமதப் பிடிப்பாளர்கள் செய்யும் தவறான செயல்களை எளிதில் படிப்போர் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே. இவ்வாறு பெயர் பெற்றுள்ளவர் மேல்சாதிக் காரர்களாகவும் பெரும்பாலும் முதியவர்களாகவும் இருப்பது

சிந்திக்கத்தக்கது. இவற்றில் முதலியாரும் பிள்ளையுமே அதிக இடம்பெற்றுள்ளனர். அடுத்தபடி செட்டியார் ஐயர், ஆச்சாரியார் வருகின்றனர்.

அண்ணா பாத்திரங்களின் பெயர்களை மோனை நயம் தோன்ற அமைத்துள்ளார். அவரது தனித்தன்மையான அடுக்குமொழி, பாத்திரப் படைப்பிலும் வெளிப்படுகிறது.

அகவல் அம்பலவாணக் கவிராயர், அம்பக் ஆறுமுகம், ஆடுவெட்டி ஆண்டியப்பன், 'உபகாரி' உலகநாதம் பிள்ளை, எஜமானர் எம்பெருமான் பிள்ளை, காரியஸ்தன் கருப்பையா, சந்தைப்பேட்டை சமீன்தார், 'சமூக சேவகி' சாருபாலா, 'சுமார்' சுப்பையா, 'சுருள் கத்தி' சுந்தர வாத்தியார், தாசி தமயந்தி, பண்ணை பரமசிவம்பிள்ளை, 'பிரசங்க பூஷணம்', புலவர் பூலோகநாதர், பூசாரி பொன்னன், மலர்புரி அரசி மருதவல்லி, மிராசுதார் மீனாட்சி சுந்தரம், மன்னன் மார்த்தாண்டன், ராவ்பகதூர் ரங்கநாத பூபதி, ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர், ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதி எனவும் சில மாந்தர்களின் பெயர்கள் உள்ளன. அண்ணா தம் பாத்திரங்களுக்குக் கேலியும் கிண்டலும் செறிந்த அங்கதச் சுவையோடு இவ்வாறு பெயரிட்டுள்ளார் என்பதை மோனை நயத்தோடு அமைந்த இப்பெயர்களே சான்றாக விளங்குகின்றன. தனித்தமிழை ஆதரித்தவர் என்றாலும், பிறமொழிச் சொற்களையே பெரும்பாலான பெயர்களாக வைத்துள்ளார். ஊர்ப்பெயரோடு, இயற்பெயரும் சேர்ந்து சில பாத்திரங்கள் அமைகின்றன. அவற்றில் சில, இலுப்பப்பட்டி மிட்டாதார், ஒய்வூர் மிட்டாதார் ஒயிலானந்த பூபதி, கோட்டையூர் தருமலிங்க முதலியார், சந்தைப்பேட்டை சமீன்தார் சிங்காரவேலர், சந்திபுரம் ஜமீன், திரிபுரம் ஜமீன், மாகாளிப்பட்டி மிட்டாதார், மாகாளிப்பட்டி மகாலிங்க ஐயர்.

வேறு சில பாத்திரங்கள் அவர்கள் மேற்கொண்டுள்ள தொழிலோடு இயற்பெயரையும் சேர்த்து அழைக்கப்படுகின்றனர். அரிசிமண்டி ஆறுமுக முதலியார், ஆப்பக்கடை அன்னம்மாள், ஆலை முதலாளி ராவ்பகதூர் ரங்கநாத பூபதி, கணக்கப்பிள்ளை கபாலமூர்த்தி, குமாஸ்தா குமரப்பன், தாசி தமயந்தி, டாக்டர் சுதர்சன், டாக்டர் ரகுராம், பூசாரி பொன்னன், மாஜிஸ்திரேட் மருதவாணம்பிள்ளை, மிலிடரி ஓட்டல் சின்னான், மில் தொழிலாளி மதுரை, வக்கீல் வேணுகோபாலாச்சாரியார்.

### பெருநிலக்கிழார்களும் வணிகர்களும்

அண்ணா கதைகளில் பெருநிலக்கிழார்களும், வணிகக் கோமான்களும் செல்வர்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

பெருநிலக்கிழார்கள் காமப்பித்துக் கொண்டவர்களாகவும், வணிகர்கள் பொருளை ஈட்டுவதில் நெறியில்லாதவர்களாகவும் விளங்குகின்றனர். அண்ணா பெருநிலக்கிழார் நிறைந்த பகுதியில் வாழ்ந்ததால் சமீன்தார்களின் ஆணவப் போக்கையும் அட்டூழியத்தையும் நேரில் அறிந்திருந்தார். அண்ணாவின் சீற்றத்திற்கு முற்றிலும் ஆளாகியவர்கள் பெருநிலக் கிழாரேயாவர். வணிகர்களைவிட மக்களைக் கசக்கிப் பிழியும் கொடுமை நிறைந்தவர்கள் பெருநிலக்கிழார்களேயென்பது அவரது கருத்தாகும். அண்ணாவின் தொடக்ககாலக் கதைகளில் பெரும்பாலானவை பெருநிலக்கிழார்களின் ஆதிக்கத்தையும் அவர்களது சீரழிவையும் சுட்டுவனவாகவே உள்ளன. அண்ணாவின் கதைகளில் பெருநிலக்கிழார்களாக வரும் மாந்தர்கள் இயல்பாகவே படைக்கப்பட்டது போல் தோன்றும். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, அண்ணா வாழ்ந்த பகுதி பெருநிலக்கிழார்கள் நிறைந்தது. அதனால் பெருநிலக் கிழார்களின் ஆணவப் போக்கையும் காமவெறியையும் நேரிலே காணும் வாய்ப்பைப் பெற்றார். அவரது கதைகளில் வரும் பெருநிலக்கிழார்களும், பெயர்களும் உண்மையான உருவங்களாக இருப்பதால், படிப்போர் நெஞ்சில் அவர்களது கொடுஞ் செயல்களை வெறுக்கும் உணர்வைத் தூண்டி விடுகின்றன. இரண்டாவது, அவர் முதன்முதலில் தொடர்பு கொண்டிருந்த நீதிக்கட்சியில் சமீன்தார்களே நிறைந்திருந்தனர். அக்கட்சியில் உள்ள சமீன்தார்களின் பணச்செருக்கையும், அட்டூழியங்களையும் நேரில் காணும் வாய்ப்பைப் பெற்றிருந்தார் எனலாம்.

பெருநிலக்கிழார்கள், வயோதிகராக இருந்தபோதிலும், பல மணங்கள் புரிந்து கொள்வதைக் 'காமக்குரங்கு', 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி', 'பூபதியின் ஒருநாள் அலுவல்', 'குமாஸ்தாவின் பெண் தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்', 'கபோதிபுரக்காதல்' ஆகியவற்றில் காட்டுகிறார். பெருநிலக் கிழார்கள், காமப் பித்தர்களாக, தாசி உறவு கொண்டவர்களாக இருப்பதைப் 'பார்வதி பி.ஏ.' வில் வரும் ஆலாலசுந்தரம், 'கபோதி புரக்காத'லில் வரும் ஆறுமுகம் பிள்ளை முதலியோர் வாயிலாகக் காட்டுகிறார். பெருநிலக் கிழார்கள் காமவெறி கொண்டு அலைவதைக் 'காமக்குரங்கு' என்ற கதையில் தெளிவாகக் காட்டுகிறார். மாகாளிப்பட்டி மிட்டாதார் மீனாட்சிசுந்தரம் சதிர் ஆட வந்தவர்களை நள்ளிரவில் தேடிச்சென்று பெண் பித்துக்கொண்டு அலைவதை எள்ளி நகையாடுகிறார். பெருநிலக்கிழார்கள் பெற்றிருந்த ஆதிக்கத்தின் காரணமாக அழகிய இளம் பெண்கள்

காதலிக்கப்பட்டுக் கைவிடப்படுவதற்கும், அவர்களை எதிர்த்துப் போராட முடியாமல், அப்பெண்கள் ஊரைவிட்டே வெளியேறு வதற்கும் மலையப்பன் (பிரார்த்தனை), கனகு (தாய் மகளுக்குக் கட்டிய தாலி) போன்ற பெருநிலக் கிழார்களின் பிள்ளைகளே காரணமாகின்றனர்.

**வணிகர்கள்**

சுகானந்த முதலியார், தன்னோடு ஒரு காலத்தில் வாணிபம் செய்த தனபாலச் செட்டியாரைத் தனக்குச் செல்வம் மிகுந்தவுடன், சற்றுப் புறக்கணிப்பது போலவே நடந்து வந்தார். தனபாலச் செட்டியார் தனக்கு நாய்க்குட்டி வேண்டுமென்று கேட்டபோது, சுகானந்த முதலியார் வருமான வரி அதிகாரிக்கும், துணைக் கலெக்டருக்கும் நாய்க்குட்டியைத் தருவதற்கு விரும்பினரேயன்றித் தனபாலச் செட்டியாருக்குத் தருவதில் விருப்பம் காட்டவில்லை. சுகானந்த முதலியார் என்ற பாத்திரம், பழைய நட்பைப் போற்றாமல், பணத்தால் குணம் மாற்றம் பெறுவதை விளக்குகிறது. கள்ளக் கடத்தலைத் திறமையாகச் செய்து பொருள் ஈட்டி மாற்றாரைக் கலங்க வைக்கும் பாத்திரமாகச் செல்லப்பன் விளங்குகிறான். பொருளையே குறியாகக் கொண்டு, தவறான வழியில் ஈடுபடும் மனிதர்களின் பிரதிநிதியாகப் படைக்கப்பட்டுள்ளான். சிறிய திமிங்கலத்தைப் பெரிய திமிங்கலம் உண்டு கொழுப்பதைக் 'கனவான்' என்ற கதையில் வரும் 'சேட் திரிபுரதாஸ்' மூலம் காட்டுகிறார். சிறிய அளவில் கள்ளக் கடத்தலைச் செய்து தங்கத்தைக் கொண்டு வந்த, மனிதர்களிடமிருந்து அதனை அபகரித்துக் கொண்டு, போலியை மாற்ற முற்பட்டதாகக் கூறிக் குற்றம் சாட்டிய பெரிய வியாபாரியாகச் 'சேட் திரிபுரதாஸ்' உருவாக்கப்பட்டுள்ளார். 'சேட் திரிபுரதாஸ்' தம் நாணயத்திற்காக அரசாங்க விருதையும் பெறுகிறார். பணத்தினால் மக்களையும் அரசையும் ஏமாற்றிப் பெரிய மனிதராக நடமாடும் வணிகர்களின் பிரதிநிதியாகச் சேட் திரிபுரதாஸ் உருவாக்கப்பட்டுள்ளார்.

வணிகர்கள் எந்தச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தித் தங்கள் கணக்கை - காரியத்தைச் சாதிப்பதில் கண்ணாயிருப்பர் என்பதைப் 'பக்த' பக்காத் திருடன்' என்ற கதையில் கருப்பண்ணச் செட்டியார் மூலம் காட்டுகிறார். பணம் படைத்த மாணிக்கம் பிள்ளை, தமக்கு எதிராகத் தோன்றிய புதுப் பணக்காரர் தாண்டவ மூர்த்தியை ஒழிக்கத் திட்டம் தீட்டினார். தன்னிடம் கடன் பெற்ற பக்கிரியைப் பயன்படுத்தி, தாண்டவமூர்த்தியின் களஞ்சியம் நிறைய இருந்த கிச்சிலிச் சம்பாவை நெருப்புக்கு இரையாக்க முயன்றார். செல்வர் மாணிக்கம் பிள்ளையின் திட்டத்தைச்

செயல்படுத்தச் சென்ற பக்கிரி அங்குள்ள காவல்காரனால் துரத்தப்பட்டு ஊரை விட்டே ஓடிவிட்டான். மாணிக்கம்பிள்ளை தன் மகளைத் தாண்டவ மூர்த்தியின் மகனுக்கு மணமுடித்து விழாவைச் சிறப்பாக நடத்தினார். தனக்கெதிராகத் தாண்டவ மூர்த்தி செல்வராக விளங்கியபோது எதிர்த்த மாணிக்கம்பிள்ளை என்ற பாத்திரம், செல்வர்களின் தன்னலத்திற்குச் சான்றாக விளங்குகிறது.

செல்வர்கள் தங்களுக்கு எதிராக வரும் புரட்சிக் கருத்துக்களைக் கண்டு அஞ்சுவதை 'ரொட்டித்துண்டு' என்ற கதையில் வரும் ராவ்பகதூர் ரங்கநாதபூபதி மூலம் காட்டுகிறார். செல்வர்கள் தங்கள் வாழ்வுக்காக எக்கட்சியிலும் சேர்ந்து வளம் பெறுவதைப் 'பிரமநாயகம்' மூலம் காட்டுகிறார். தன் மனைவியின் வழியிலுள்ள மிட்டா கிடைக்க வேண்டுமென்பதற்காகக் கட்டிய மனைவிக்குத் துரோகம் செய்து பின்பு கேட்டதெல்லாம் தரும் சிந்தாமணிக் குளிகை தேடும் செல்வர்களின் பொருளாசையை 'ரங்கோன் ராதா'வில் தருமலிங்க முதலியார் வாயிலாகக் காட்டுகிறார். அண்ணாவின் செல்வர்கள் அவரது அனுபவ எல்லைக்கு உட்பட்டவர்களேயாவர். அவர் கதைகளில் வழங்கப் படும் செல்வர்களின் பெயர்களும் அவருக்கு நன்கு தெரிந்தவர்களின் பெயர்களேயாகும்.

### கடைநிலையிலுள்ள ஏழை எளிய மக்கள்

அண்ணாவின் கதைகளில் வரும் ஏழை எளிய மக்கள் செல்வர்களால் சுரண்டப்பட்டு, வறுமையால் வாடி வதங்குபவர்கள். தங்களது நியாயமான உரிமைகளைக் கூட வெளியிடத் தெரியாத எளியவர்கள். வறுமையின் கொடுமையால் தம்மையே அழித்துக் கொள்ளும் அப்பாவித்தன்மை வாய்ந்தவர்கள்.

'செவ்வாழை'யில் வரும் செங்கோடன், தன் பிள்ளையைப் போல் வளர்த்த வாழையைத் தன் முதலாளி வீட்டிற்குக் கொடுத்து விட்டு வருந்தும் துயர நிலையைக் காட்டுகிறார். உழைத்தும் பயனை அனுபவிக்க முடியாத ஏழையின் பிரதிநிதியாகச் செங்கோடன் காட்டப்படுகிறான். செல்வர்களின் கையாட்களாக இருந்துகொண்டு தங்களுக்குள் மோதிக் கொள்ளும் அறியாமை நிறைந்தவர்களாக ஏழைகள் இருப்பதை 'உடையார் உள்ளம்' என்ற கதையில் விளக்குகிறார். 'மதுரைக்கு டிக்கெட் இல்லை' என்ற கதையில் வரும் மதுரையும், 'இருவர்' என்ற கதையில் வரும் சோமுவும், வறுமைத் துயரால் மடிகின்றனர். மதுரையும், சோமுவும் வாழ்வில் அன்றாடம் காணும்

மனிதர்களாகவே விளங்குகின்றனர். ஏழைகள், தவறான வழியில் பொருள் ஈட்டுவதற்குத் தயங்கும் மனச்சாட்சி கொண்டவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் 'கள்ளன்' என்ற கதையில் குமாரசாமி இருப்பதைக் காட்டுகிறார். அண்ணாவின் ஏழை எளிய மக்கள் உழைத்துப் பயன் காணாதவர்களாக, பொருள் படைத்தவர்களின் வஞ்சகத்திற்கு ஆளாகியவர்களாக, வறுமையில் வாழ்வை மாய்த்துக் கொள்பவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். பொருள் ஆதிக்கம் நிறைந்த சமுதாயத்தில் ஏழைக்கு வாழ்வு கிடைப்பது வினாக்குறியாகவே இருக்கிறது என்பதை அவரது படைப்புகள் புலப்படுத்துகின்றன.

### பெண் கதை மாந்தர்கள்

அண்ணாவின் புதினங்களில் வரும் பெண்கள் நம்முடன் வாழ்பவர்களே. அன்றாட வாழ்வில் நம்மைச் சூழ்ந்துள்ளவர் களாகவே தோன்றுவர். செல்வக்குடியில் பிறந்த பெண்களும் சரி, வறுமையில் வாடும் ஏழைப் பெண்களும் சரி, மிகையான கற்பனை சிறிதும் இன்றிச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். அவர் கதைகளில் வாழ்விழந்து, வஞ்சிக்கப்பட்டு, இறுதியில் விபசாரியான பெண்களும் உண்டு. ஆனால் அவர்களைச் சமுதாயத்தின் 'சிவப்பு விளக்காகச்' கொச்சைப்படுத்தி அவர்களது கழிகாமத்தை வெளிப்படுத்துவது போல எந்த ஒரு கதையிலும் அவர் காட்டவில்லையெனலாம். பாவத்தின் சின்னங்களாக அவர்களைப் படைக்கவில்லை. அவர் கதைகளில் வரும் பெண்கள் செல்வர்களின் திமிர்த்தனத்தினால் சீரழிக்கப்பட்டு, உடலால் கெட்டு, உள்ளத்தால் கெடாதவர்களாகவே காட்டப்படுகின்றனர். அண்ணாவின் கதையில் வரும் விபசாரிகள் ஆடவர்களால் விலைக்கு வாங்கப்பட்டவர்களேயன்றித் தம்மை விற்றுக் கொள்பவர்கள் அல்லர். இவ்விபசார மகளிரின் அந்த நிலைக்குக் காரணம் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் - காதலில் ஏமாற்றம்-தம்மைப்பற்றி இச்சமுதாயம் கவலைப்படாத-கவனிக்காத அக்கறையற்ற நிலைதான் என்பதை இம்மகளிர் வாழ்வு நிலையே காட்டுகிறது.

அண்ணா தம் கதைகளில் இருவகை மகளிரைப் படைத்துள்ளார். ஒரு சாரார், கல்வி கற்று உலக அனுபவம் பெற்றவர்கள். இவ்வகைக்கு எடுத்துக்காட்டாகப் பார்வதி (பார்வதி பி.ஏ.), நாகவல்லி (குமரிக் கோட்டம்), சூடா ('தசாவதாரம்') முதலியவர்களைக் குறிப்பிடலாம். பார்வதி தன் ஆற்றலால் சூழ்ச்சியும் வஞ்சனையும் கொண்டு ஏமாற்றும் பார்த்திபனின் உண்மை உருவத்தை வெளிப்படுத்துகிறாள். அதற்காக அவள் ஏற்ற இன்னல்கள்கொஞ்சமல்ல. எனினும்

உண்மையை அறிய ஓயாது போராடுகிறாள்: குமரிக் கோட்டத்தில் வரும் நாகவல்லி தாழ்ந்த குலத்தில் பிறந்த கிறித்தவப் பெண்ணாக இருந்த போதிலும் சமூகப் பணியில் தன் கணவனோடு இணைந்து நிற்கிறாள். தன் கணவன் மீது பொய் வழக்குத் தொடர்ந்த தன் அண்ணனின் சூழச்சிகளைச் சூடா வெளிப்படுத்துகிறாள். இப் பெண்மணிகள் உண்மையை வெளிப்படுத்துவதற்காக அயராது பாடுபட்டு வெற்றி காணுகின்றனர்.

மற்றொரு வகையினர் கல்வி அறிவு நிரம்பப் பெறாதவர்கள். முற்றிலும் பாசத்திற்கு அடிமையாக இருப்பவர்கள். இவ்வகைக்கு எடுத்துக்காட்டாக ரங்கத்தைக் (ரங்கோன் ராதா) குறிப்பிடலாம். 'ரங்கோன் ராதா'வில் வரும் ரங்கம் கணவனையே கண்கண்ட தெய்வமாக வழிபடும் இயல்பினள்; தன்னைக் கணவன் வஞ்சித்து மறுமணம் செய்து கொண்டபோது எதிர்த்துப் போர்க்குரல் தொடுக்கிறாள்; அது பயனற்றுப் போய் விடுகின்றது. 'கபோதிபுரக் காத'லில் வரும் சாரதா பெற்றோர்களின் ஏற்பாட்டிற்கு இணங்கி அறுபது வயது நிறைந்த மாரியப்பப் பிள்ளையை மணந்து கொள்கிறாள். தன் மனத்தில் காதலனாகக் கொண்ட பரந்தாமனைப் பெற முடியாமல் துடிக்கிறாள். அவளது பலவீனத்தைக் கருப்பையா பயன்படுத்திக் கொண்டு அவளை விபசாரப் படுகுழியில் வீழ்த்துகிறான். சமுதாயக் கட்டுகளைத் தகர்த்தெறிந்துவிட்டு வெளிவர முடியாமல் சாரதா வேதனைப் படுகிறாள். 'என் வாழ்வி'ல் வரும் விமலா பரத்தையர் குலத்தில் பிறந்தபோதும், ஒருவனை மணந்து வாழ விரும்புகிறாள்; ஆனால் அவள் இந்தச் சமுதாயத்தில் பலரால் ஏமாற்றப்படுகிறாள்; செல்வர்களாலும் நிலக் கிழார்களாலும் காமப்பொருளாகக் கசக்கி எறியப்பட்ட பெண்கள், வாழ்வு தேடி விபசாரத்தில் ஈடுபட வேண்டிய வேதனையான நிலையை விமலா என்ற பெண் பாத்திரம் வாயிலாகக் காட்டுகிறார்.

புதினங்களில் பெண்கள் அடிமைப் பொருளாக ஆண்களால் மதிக்கப்படுவதையும், அந்நிலை மாற, பெண்கள் போர்க்குரல் எழுப்ப வேண்டுமென்பதையும் தம் புதினங்களில் குறிப்பாக உணர்த்துகிறார். குறும்புதினங்களில் படைக்கப் பட்டுள்ள பெண்கள் ஆண்களின் காமப்பசிக்கு இரையாகிறவர் களாகவே உள்ளனர். முத்துரத்தினம் ('கடைசிக்களவு') மடாதிபதியால் கற்பழிக்கப்பட்டுப் பைத்தியமாக்கப்படுகிறாள். குமரி, குழந்தைவேலுச் செட்டியாரால் கற்பழிக்கப்படுகிறாள் (குமரிக்கோட்டம்). தன் கணவன் வேசியோடு வாழ்ந்தபோதும்,

எதிர்த்துப் போராடாது பொறுமையாக வாழ்ந்தாள் செல்வி ('புதிய பொலிவு').

சிறுகதைகளில், படித்த பெண்கள், சமுதாயக் கட்டுப்பாடுகளைச் சூறாவளிபோல் எதிர்த்துப் போர்க்குரல் கொடுத்து வெற்றி பெறுகின்றனர். 'பாமா விஜய'த்தில் வரும் பாமா, சந்தைப்பேட்டைச் சமீன்தாருக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப்பட மறுத்துத்தான் விரும்பிய கணவனைத் தானே தேடிக் கொள்கிறாள். தனக்கு மணமகள் தேடிய புரோகிதர் சுப்பய்யர் வீட்டில் அவர் மகள் விதவை கமலாவின் காதலையும் வெளிப்படுத்துகிறாள். தன்னை உண்மையாகச் சங்கரன் காதலிக்கவில்லையென்று தெரிந்ததும் 'சிங்களச் சீமாட்டி'யில் வரும் படித்த பெண்ணான மலர்க்கொடி அவனைப் புறக்கணித்து விடுகிறாள். அவள் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தவுடனே அவன் அன்பை ஏற்றுக் கொள்கிறாள். அண்ணாவின் பெண் பாத்திரங்கள் அன்றைய சமுதாய அமைப்பில் அழுத்தி வைக்கப்பட்டவர்களாகவே காட்டப்படுகின்றனர். பெண் விடுதலையைக் கருத்தில் கொண்ட அவர், பெண்களின் அவல நிலையை வெளிப்படுத்திச் சமுதாய விழிப்பு உணர்வைத் தூண்டினார்.

### வரலாற்று மாந்தர்கள்

அண்ணா வரலாற்றுக் கதைகளில், வரலாற்றில் மறைக்கப்பட்ட உண்மைகளையே வெளிப்படுத்தும் பணியில் ஈடுபட்டார். அவர் காட்டும் வரலாற்று மாந்தர்கள், வரலாற்று வல்லுநர்களால் கோடிட்டுக் காட்டப்பட்டவர்களேயாயினும், அண்ணா அவர்களைத் தம் கொள்கையைக் காட்டும் குறியாகவே பயன்படுத்தியுள்ளார். அவரின் வரலாற்றுக் கதைகளில் வேதியர் வெங்கண்ணா ('தஞ்சை வீழ்ச்சி'), சந்திர சேகர பட்டாச்சாரியார் ('திருமலை கண்ட திவ்யஜோதி'), கோபிநாத் பண்டிட்ஜி, கிருஷ்ணாஜிபாஸ்கர் ('புலிநகம்') போன்ற ஆரியர்களின் தன்னலமும் இரண்டகச் செயலும் எடுத்தியம்பப் படுகின்றன. வரலாற்றுக் கற்பனைக் கதைகளில் வரும் கதை மாந்தர்களும் அவர்கள் காலத்தில் நாட்டில் வாழ்ந்த அரசியல் தலைவர்களும், மக்களுக்கு நன்கு தெரிந்தவர்களுமாகவே இருக்கக் காணலாம்.

### அரசியல் மாந்தர்கள்

அண்ணா சமுதாயச் சீர்திருத்தவாதியாக மட்டும் இல்லாமல், அரசியல்வாதியாகவும் இருந்ததால் அவரது எழுத்தில் அரசியல்வாதிகளின் பேச்சுகள் கதைக் கருவாக இடம் பெறலாயின. அவர் கதைகளில் நேரடியாகவே இராசாசி

('அறுவடை'), படேல் ('கடவுள் தண்டிப்பார்'), ஷேக் அப்துல்லா ('சாது') முதலியோரது பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. சுயமரியாதை இயக்கம் ('பேரன் பெங்களூர்'), 'பார்வதி பி.ஏ.' 'மேலதிகாரி' காங்கிரசு மாநாடு ('புதிய பொலிவு') போன்ற இயக்கச் செய்திகளைச் சுட்டுவதும், கட்சி மாறும் பணக்காரர்களின் போக்கைச் சுட்டுவதும் ('என்வாழ்வு', 'பிரம நாயகம்') குறிப்பிடத்தக்கன. 'பார்வதி பி.ஏ.,வில் வரும் பார்த்திபனும், 'அம்பக்' ஆறுமுகமும் அவர்கள்காலத்தில் கண்ட போலி அரசியல்வாதிகளேயாவர். 'கலிங்கராணி' என்ற வரலாற்றுக் கற்பனைக் கதையில் வரும் கரியனின் ஆசிரியரான காலக்கிழவரும், பகீரதிகோவில் பூசாரியும் கற்பனைப் பாத்திரங்கள் என்பதைவிட அவர் காலத்தில் வாழ்ந்த அரசியல் மாந்தர்களே என்பதில் ஐயமில்லை. அண்ணாவின் கதைகளில் வரும் அரசியல்வாதிகள் அனைவரும் அவர் காலத்தில் நாட்டில் வாழ்ந்த, அவர் அறிந்த உண்மை மனிதர்களேயாவர்.

## மொழி நடை

ஓர் எழுத்தாளரின் கருத்துக்குக் கலைவடிவம் தரப் பயன்படும் நடை அவ் எழுத்தாளரின் தனித்தன்மையைக் காட்டுவதோடு, அவரின் மொழிப் புலமைக்கும் சான்றாக விளங்குவதாகவும் அமையும். நடை, எழுத்தாளருக்கு எழுத்தாளர் வேறுபாடு கொண்டதாக அமையும், நடையின் சிறப்புக் குறித்து நோபல் பரிசு பெற்ற சோவியத்து எழுத்தாளர் ஷோலகோவ்,

> எழுத்தாளர்களாகிய நமது பலம் நம்முடைய எழுச்சி மிக்க சொற்களிலே இருக்கிறது. இவை மனித சிந்தனையையும் உள்ளத்தையும் கிளரச் செய்து உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பித் தன்னம்பிக்கையை யூட்டி, மனிதனுக்காக, மனித குலத்திற்காகப் போராட அவனை அறைகூவி அழைக்கிறது.

எனக் குறிப்பிடுகிறார்.

அண்ணாவின் எழுத்து நடை, தனித்தன்மை வாய்ந்தது. உணர்ச்சியின் ஊற்றிலிருந்து, அறிவின் தெளிவோடு இசை நிரம்பிய சிந்தனை அருவியாகக் கொட்டுவது. கட்டுரை யாயினும் கதையாயினும் நாடகமாயினும் கடலலைபோல எதுகையும், மோனையும் எண்ணத்தின் உள்ளொளியைச் சுமந்து வருவது. அண்ணாவின் அறிவு வேட்கை எல்லையின்றி விரிந்திருந்தது. சென்னையிலுள்ள பல்வேறு நூலகங்கள் அவரின் அறிவுப் பசிக்கு நல்ல உணவாக அமைந்தன. கற்கும் நூல் மட்டுமன்றிக் காலமும் ஓர் எழுத்தாளரின் எண்ண ஓட்டங்களுக்கு ஏற்ப மொழியை

மாற்றுவதெனலாம். அண்ணா எழுதத் தொடங்கிய காலத்தில் மூவகைத் தமிழ் உரைநடைகள் நிலவின.

1. புலவர்கள் தம்மைப்போல் கற்றார்க்கன்றி மற்றவர்களைப் பற்றிச் சற்றும் எண்ணாமல் எழுதிய நடை.
2. பேசுவது போலவே எழுதுவது என்று சிலர் எழுதிய நடை.
3. காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் தேசியத் தமிழ் என்ற வகையில் கையாண்ட மணிப்பிரவாள நடை.

இவ்வாறு எழுதும் மூவகையினரும் தத்தம் வாசகரை மட்டுமே எண்ணினர். இவர்களில் சற்றே வேறுபட்டு மக்களை நினைத்தவர் தமிழ்த்தென்றல் திரு.வி.க.வும், பாரதி வழிவந்த வ.ரா.வும், வெ. சாமிநாத சர்மாவுமே ஆவர். ஆனால் இவர்களுள் வ.ரா.தவிர ஏனைய இருவரும் கதை இலக்கியம் படைத்தவரல்லர். புதுமைப் பித்தன் போன்ற சிலர் கதை, கட்டுரை ஆகிய துறைகளில் எழுதினாலும், கதைகளில் திருநெல்வேலித் தமிழையும், கட்டுரைகளில் இயல்பான தமிழையும் கையாண்டனர்.

இந்தக் காலக்கட்டம்தான், அண்ணாவின் எழுத்தில் புது மெருகினை ஏற்றி வைத்தது:

> ஒவ்வொரு காலமும் அது அறியாமலேயே அதற்கெனத் தனி நடையை வளர்த்துக் கொள்கிறது. ஒவ்வோர் எழுத்தாளனும் தன் ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில், அந்த நடையைத் திருத்தியமைக்கிறான்.

என்பார் அறிஞர் இராபர்ட் ஆர். ரோகர்ஸ். சுயமரியாதை இயக்கமும் காங்கிரசுக் கட்சியும் ஒன்றை ஒன்று முரண்பட்டு நின்ற காலம் அண்ணாவின் நினைப்பிலும் எழுத்திலும் புதிய சிந்தனை அலைகளை ஏற்படுத்தியது. அதனால் தமிழ்மொழியின் எல்லைகள் எவ்வளவோ விரிவடைந்தன.

### ஆங்கிலச் சாயல்

மக்களின் வாழ்வுச் சிக்கல்களைத் தீர்க்கும் ஆர்வம் மனிதாபிமானத்துடன் செழித்தது. இதற்கு அண்ணாவுக்குப் பழந்தமிழ் இலக்கியத்திலும், எண்ணத்திலும் ஆங்கிலப் பகுத்தறிவு நூற்கள் பெருந்துணை புரிந்தன; அதனால் தீந்தமிழோடு, உலக உறவை ஊட்டும் ஆங்கிலமும் வழிகாட்டியாக அமைந்தது. அவரது நடப்பியல் பாங்கும், கலைத்திறனும், அறிவுக் கூர்மையும் மொழிக்கொரு விழிப்புணர்ச்சியைத் தந்தன.

> அண்ணாவின் எழுத்தை, பேச்சை இரசிக்கவும் புரிந்து கொள்ளவும், ஆங்கிலம்தான் திறவுகோல். மலை

> மலையாக ஆங்கில நூல்களைப் படித்து, ஆங்கில உத்திகளைத் தமிழில் கையாண்டதுதான் அண்ணாவின் வெற்றியின் இரகசியம். அகில உலகையும் அளக்க ஆங்கிலமும் அவருக்கு உதவியது.

என அண்ணாவின் மொழிநடை வெற்றிக்கு ஆங்கிலம் துணை செய்ததைத் திரு. ஏ.பி. சனார்த்தனம் சுட்டுகிறார்.

> பாடுபட்டோம் பலனைப் பெறப்போகிறோம். இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப்பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும். செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம் கூட இராது-ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால், பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும்பகுதி. இதோ இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது - எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது. இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா? உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம்-பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா? என்றெல்லாம் கூட இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். 'செவ்வாழை' இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில்.

இந்தக் கருத்துச் செறிந்த இந்நடை, ஆங்கில மொழியின் தாக்கத்தை வெளிப்படுத்தும். ஆங்கில நூற்களைக் கற்றதால், புலவர்கள் போல் பழைய முறையைப் பின்பற்றாமல், வினைச் சொற்களை முன்பின்னாக மாற்றிப் புதிய திருப்பத்தை அளித்து மொழிக்குப் புத்துயிர் ஊட்டினார். கிப்பனின் ஓசைநயமும், செஸ்டர்டனின் வருணனைத்திறனும் இங்கர்சாலின் வசனக் கவிதையும், பெர்னாட்சாவின் சமுதாயக் கிண்டலும், அவர் நெஞ்சைக் கவர்ந்ததால், அச்சிறப்புக்களைத் தம் எழுத்தில் வெளிப் படுத்தினார்.

**எதுகை-மோனை நடை (கவிதை நடை)**

சொல்லின் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை; இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை. மோனையும் எதுகையும் அளவோடு பொருந்த அமையுமாயின்,

நடை இனிய ஓசையின்பம் பயக்கும் எனலாம். அண்ணாவின் உரைநடை, எதுகையும் மோனையும் பொருந்தக் கவிதைத் துணுக்குகளாக நின்று கற்போர்க்கு கழிபேரின்பம் நல்கக் கூடியவை. சொல்லையே வலையாகக் கொண்டு, கற்போரைப் பிணிக்கும் ஆற்றல்மிக்க மொழிநடை இவர்பால் அமைந்தமையால், இவரைச் 'சொல்வலை வேட்டுவன்' என்ற தொடரால் குறிப்பிடலாம். இவரின் உரைநடை தமிழ்நாட்டின் எழுத்துலகில் பெரிய மாற்றத்தையும், தோற்றத்தையும் உருவாக்கிப் பேச்சினைப் போலவே பலரையும் பின்பற்றச் செய்தது. இவர் நடை தாக்க வேண்டியவற்றைப் புயலாகத் தாக்கும்; கற்பார் நெஞ்சில் புதுப்புதுப் பொருளும் சொல்லும் பொலிந்து, ஒன்றியே நின்று தென்றலாகத் தவழ்வதும் உண்டு. இவரது கவிதைநடைச் சிறப்பைப் புலவர் குழந்தை,

> ஆற்றொழுக்குப் போன்ற நடை, அழகிய நடை, விறுவிறென்ற நடை, பொன்போலப் போற்றக் கூடிய நடை, புலவர் புகழ் நடை, படிப்போர் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் பண்புடை நடை என்று எவ்வளவு வேண்டுமானாலும் அடுக்கிக் கொண்டே போகலாம். அண்ணாவின் சொல் நடைக்குச் சில இடங்களில் செய்யுள் நடையினுஞ் சிறந்த தொடையழகுடைய நடை, கருத்தை எளிதில் விளக்கும் சொற்றொடர்கள், புத்தம் புதிய சொல்லாட்சி.

என்று போற்றுகின்றார். எழுத்தாளர் அகிலனும் இதனையே வலியுறுத்துகிறார்.

> நாட்டின் விடுதலைப் போர்க்காலத்தில் கல்கி பொது மக்களுக்கான தமது தனி நடையழகை இயல்பாக எழுதி வந்தாரென்றால் 1940குச் சற்று முன்பின் நாட்டின் சமூகப் போராட்டத்துக்காகத் தமது எழுத்தைப் பயன்படுத்த முனைந்தவர்களில் சி.என். அண்ணாத்துரை குறிப்பிடப்பட வேண்டியவர். அருவியின் சலசலப்பைப் போல் ஓர் அழகு நடையைத் தமக்கென உருவாக்கியவர் இவர். கற்றோரையும் கல்லாதவரையும் கவருவது இவரது எழுத்து நடை. இவரது நாவல்கள், நாடகங்களின் ஓசை நயமிக்க சொற்றொடர்கள் அடுக்கடுக்காக அமைந்து எளிமையும் இனிமையும் தருகின்றன. இவரது நடையையும் பின்பற்றிச் பல இளைஞர்கள் இன்று எழுதி வருகிறார்கள்.

டி.கே. சண்முகமும், 'இவரது அழகிய உரைநடையைக் 'கவிதைநடை' என்றே கூறலாம் எனக் குறிப்பிட்டு அண்ணாவின் நடையைப் பாராட்டுகிறார் மா. இராமலிங்கம்.

> படைப்பிலக்கியத் துறையில் மற்றொரு உயிர்த்துடிப்பான நடையைக் கையாண்டு, பெரும் பரபரப்பையும், பாதிப்பையும் உண்டாக்கியவர் அறிஞர் அண்ணா. மோனையும் எதுகையும் 'நான் முந்தி' 'நான் முந்தி' என்று போட்டி போட்டுக் கொண்டு வந்து நிற்கும். தென்றலின் இனிமையும், புயலின் வேகமும், கடலின் ஓலமும், எரிமலையின் குமுறலும் மாறி மாறி வந்து மறையும்; உணர்ச்சிநாதத்தை மீட்டுகிற இனிய நடை அண்ணாவின் நடை. அடுக்கடுக்கான சொல்லலங்காரங்கள், படிப் போரை மயக்கித் தன் வசப்படுத்தும்; வனப்பும் இளமையும் நிறைந்த அவர் நடையால் தமிழ் நாவல்கள் புதிய கோலத்தைப் பூண்டு நின்றன.

எனப் பாராட்டியுரைத்துள்ளார். மோனை, எதுகை பொருந்த இனிமை பயக்க அவர் நடை அமைந்த சிறப்பை 'இன்ப ஒளி' எனும் புதினத்தில் காணலாம்.

> என்நாடு-என்ன உண்டு இங்கே! இரும்பில்லை; கரும்பில்லை; இஞ்சியில்லை, மஞ்சள் இல்லை; இருப்பு இல்லை; யானை மருப்பு இல்லை; எழில் இல்லை-பாழில் இல்லை என்று கூறி ஏங்கிடக்கூடச் செய்வர் சிற்சில வேளைகளில். ஆங்கொரு நாடுண்டாம், அதில் அளவற்ற செல்வமும், செழிக்கின்றதாம். வான்முட்டும் கூட கோபுரமாம், வண்ண வண்ண அமைப்புகளாம். வலிமைமிக்க படைபலவாம். வருகின்றாராம் வையத்து மாந்தர் பல்லோர், வாணிபத்தால் வளம் மிகுதி காணுகின்றனராம். அருவி அழகு அணி தேர் புரவி அழகு, ஆடலரங்கும், பாடற்கூடமும் கற்றறிவாளர் கலந்துரையாடும் வித்தக மாடமும், பூவையர் உலவிடும் சோலையும் சாலையும் கேட்டிடுவோர் சொக்கிடுவாராம். சொன்னார்கள் சேதியினை என்று வேறுநாடு பற்றி வியந்து பேசிடவும் செய்வர் சிற்சிலபோது; ஆயினும் அளவு வளம் என்பனவற்றில் மிகச்சிறிய அளவினது என்ற போதிலும் இது வளமற்ற நாடு எனவே எவர் பிடியில் சிக்கினால் என்ன; நாமாண்டால் என்ன, வேற்றுநாட்டான் ஆண்டாலென்ன என்று கூறிடும்

இழிந்த மனப்பான்மை எவருக்கும் ஏற்படாது; ஏற்பட்டதில்லை.

மராட்டிய எழுத்தாளர் காண்டேகரை, 'உரைநடைப் பாரதிதாசன்' என்று அண்ணா போற்றினார்; அண்ணாவுக்குள்ளேயும் மறைந்திருந்த பாவலன் உரைநடையில் கதைகளை எழுதினார் என்று கூறுவது மிகையாகாது; பின்னாளில் வால்ட்விட்மன் எனும் கவிஞனின் நடையில் அண்ணா பாடல்களையும் வரைந்தார். சிலர் அண்ணாவின் மீது கொண்ட பொறாமையால், அவர் நடை செயற்கைத் (artificial)த் தன்மை கொண்டதென்றும் வெற்றாரவாரச் சொற்சாலம் நிறைந்த தென்றும் எதுவை மோனையின் கலப்பில் பிறந்த அலங்கார நடையென்றும், ஓசைக்கு முதலிடம் தரும் ஆசையுடையது என்றும் குறை கூறினர். அத்தகையோருக்கு மறுமொழி தரும் வகையில் அண்ணா பலமுறை பேசியும் எழுதியும் வந்துள்ளார்.

அலங்கார நடை புகழுரை வாங்கித்தரும். ஆனால் இந்த வானவில் அதிகநேரம் இராது. நடையை விட நினைப்பு, நோக்கம் முக்கியம். இலட்சியமில்லா எழுத்து மணமில்லா மலர்.

ஓசைநயம்-அடுக்குத் தொடர்-இரட்டைக்கிளவி போன்றவைகள், பூங்காவிலுள்ள கவின் மலர்கள் போன்றவை.

தாமாக மலர வேண்டும்-மணமுள்ள மலர்களைப் பதமாகப் பறித்துப் பக்குவமாக மாலை தொடுக்க வேண்டும். அப்போதுதான் கவர்ச்சி கிடைக்கும்.

ஓசை நயத்தை எப்படியும் பெற்றுத் தீர வேண்டும் என்று முயற்சித்தாலோ, காது குடைச்சல் ஏற்படுவது மட்டமல்ல மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருமதிப்பும் குன்றும்; குறையும் குலையும்.

ஓசைநயம் தேடுவதும், தருவதும் குற்றமல்ல. இசைக் கலையே ஓசை நயத்தைத் தரப்படுத்தித் தரப்படுவது தானே! ஆனால், சிலர் ஓசைநயம் என்பது ஏதோ ஓர் இழுக்கான செயல் போலவும், அதன் பயனாக மாபெருங்கேடு மனித இனத்துக்கு ஏற்படுவது போலவும் பேசுவர். ஆராய்ந்து பார்த்தால், அவர்தம் போக்குக்குக் காரணம் கோபம் என்பதும் அந்தக் கோபத்துக்குக் காரணம் கவலை என்பதும், கவலைக்குக் காரணம் அவர்கள் ஓசைநயம் காட்ட முயன்று ஏற்பட்ட தோல்வி என்பதும் விளங்கிவிடும்.

> ஓசைநயம் தமிழில் நிரம்பக் கிடைக்கும். ஆனால் அதை மட்டுமே நம்பி, 'நடை' காட்டினால், சிறிது நாட்களில் தமிழின் இனிமை பற்றி, அனைவரும் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே, அதற்கே கூட ஊனம் வந்து விடும்.
>
> ஆலயமணியோசை, ஆலைச்சங்கொலி, சோலைக் குயிலின் கூவல், காலையில் காகம் கரைதல், கன்று தாயை அழைத்தல்-ஓசைநயம் ஒவ்வொன்றில் ஒவ்வொருவருக்கும் அவரவர் இயல்புக்குத் தக்கபடி கிடைக்கத்தான் செய்கிறது. எனவே 'ஓசைநயம்' என்பது வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய ஒன்றல்ல.

இவ்வளவும் அண்ணா தம்மைப் பற்றிக் கூறிக் கொண்டதாகா. மக்கட்காக எழுதுகிறோம் என்ற மனச்சான்று உள்ள எழுத்தாளர்கள் அனைவரின் மொழி நடையின் வெற்றிக்குக் காரணங்கள் இவை என்பதை விளக்கிக் காட்டினார். மொழி, எழுத்தாளரின் குணத்தின் குறியீடு என்பதை நன்கு தெரிந்துள்ளார். சிந்தனையே வாழ்க்கை என்பது போல், சிந்தனையே மொழியும் நடையும் என்பதை ஆய்ந்தறிந்து, மக்கள் மொழியை இலக்கிய மொழியாக வாழ்க்கையில் இயங்கக் கூடிய ஒன்றாக மாற்றினார்.

**பழகுதமிழ் நடை**

அண்ணாவும் எளிய, பழகுதமிழில் அரசியல் சமூகப் பொருளாதாரச் சிக்கல்களைப் பாமரமக்களும் அறிந்து கொள்ளுமாறு எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்தார். மக்களை மனத்தில் கொண்டு, தாம் விரும்பிய சில கொள்கைகளைப் பரப்ப எழுதியதால், அவர் நடை அறிவில் குறைந்த மக்களும் புரிந்து கொள்ளும் பான்மையில் அமைந்தது. இதனை ஆய்வாளர் ஒருவர்,

> *அண்ணாவின் தமிழ்நடையைப் பைந்தமிழ் அல்லது*
> *பழகுதமிழ் நடை எனச் சிறப்பாகக் கூறலாம்*
> *(பி.ஸ்ரீ. நான் அறிந்த தமிழ் மணிகள், ப.91)*

எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

இராமி என்பவள் ஏகாம்பரத்தைக் காதலித்தாள்; ஏகாம்பரமும் அவளை மணந்து கொள்வதாக உறுதி அளித்தான். அந்தச் சூழ்நிலையைப் பழகுதமிழில் 'சுடுமூஞ்சி' என்ற கதையில் அண்ணா படம்பிடித்துக் காட்டுகிறார்.

> இராமி தாய்வீட்டிலே 'கோபக்காரி' என்ற பெயரெடுத்ததே இல்லை. ஒரு சமயம் இராமியின் தகப்பனார் கோபால முதலியார், சொல்லத்தகாத வார்த்தையெல்லாம் சொல்லித் திட்டினார். தாயார்: பவிஷு கெட்டவளே! குலத்தைக் கெடுத்தவளே! என்றெல்லாம் ஏசினாள். இராமி, 'மரம் போல' நிற்பாள் அல்லது 'மலமல' வென்று கண்ணீர் வடிப்பாள். எதிர்த்து ஒரு பேச்சுப் பேசினதில்லை. பேசுவது நியாயமல்ல என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்வாள். அவ்வளவுக்கும் காரணம், அந்த 'எதிர்வீட்டுப் பிள்ளையாண்டான்'தான். அவனிடம் இராமி, உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள்! பெற்றோர் களுக்குக் கொஞ்சம் 'வாடை' அடித்தது. பெண்ணைத் திட்டி அடக்கினார்கள். அந்தச் சமயத்திலே திட்டும் போதெல்லாம் இராமி, கோபித்துக் கொண்டதே இல்லை. புருஷன் வீட்டுக்கு வந்த பிறகுதான், அவளுக்கு அந்தக் 'கோபம்' ஏற்பட்டது.

அண்ணாவின் நடையைக் கொண்டு பாத்திரங்களின் பண்பு, ஊர், சுற்றுச் சார்பு இவற்றை அறியலாம். அண்ணாவின் கதைமாந்தர்கள், தம் இயல்பான போக்கிலே உரையாடுகின்றனர். அதற்குப் பேச்சு மொழியே பெரிதும் துணைபுரிகின்றது. பாட்டாளி மக்கள், பார்ப்பனர் முதலியோர்களைத் தங்களது பேச்சு முறையாலே இனம் பிரித்துக் காட்டுவது போல் சிறப்பாக அமைத்துள்ளார். ஓரூர் கிராமத்தில் உழவன் செங்கோடனுக்கும் ஊர்ப் பெரியவர் கரியனுக்கும் நடந்த உரையாடலாகப் 'பேய் ஓடிப் போச்சு' என்ற கதையில் பாட்டாளிகள் மொழியைக் கையாளுகிறார்.

> ஆமா! அந்தப்பய, தூக்கு போட்டுக்கிட்டவன், உசிரோட இருக்கச்சய ரொம்பப் பொல்லாப் பயலாச்சே, பிசாசு ஆனா கேட்கோணுமா சேஷ்டையை. சரி, சுகமாயிடுத்தேல்லோ, போவுது சொக்கிம்மாவுக்கு அடுத்த வெள்ளிக்கு ஒரு சேவலை அறுத்துப் படையலைப் போட்டுப் போடு. நான் வர்றேன். அதுசரி! உம் மகளுக்குதான் இப்ப, பேய் இல்லையே, இனிக் கண்ணால விஷயத்தை முடிச்சிட வேணுமோல்லோ-
>
> ஆமாண்ணெ! முடிச்சிடத்தான் வேணும். என் மவன், அதுக்காகத்தானே, இங்கேயே தங்கி இருக்கான்.
>
> இடம் எங்கே பார்த்தே.

நம்ம வேலந்தான்.

மறந்து போனேன். போன வருஷமே, அவளைத் தானே உன் மவளுக்கு ஏற்பாடு செஞ்சிருந்தே.

ஆமாம் பய கண்ணைக் காட்டிப் பல்லைக்காட்டி என் மவளுக்கு ஆசை ஊட்டிட்டான்.

பரவாயில்லெ. பய்யன் நல்லவன்.

ஆமாம்! நம்ம கொல்லைக்கு அடுத்த கொல்லையை அவன் குத்தவைக்கு எடுக்கறப்பவே எனக்குச் சந்தேகம். பய்யன் பக்கத்திலே வர்றது பயிர் பண்ண இல்லென்னு. . .

குத்தவே பணங்கூட அதிகமால்லா கொடுத்தனாம்.

ஆமாண்ணெ! இந்த வருஷத்தோட தீந்ததுன்னு வையி. குத்தவைதான் எடுத்தானே, மடப்பய மவன். ஒரு கத்தரி, முள்ளங்கி ஏதாச்சும் போட்டா நாலுகாசு வருமா? அதெ உட்டுப்பொட்டு, ரோஜா வெச்சிட்டான்.

சரித்தான். செல்லாயிக்குத்தான் பூவுன்னா உசிரு இந்தக் காலத்துப் பசங்க சாமார்த்தியத்தெப் பாரெண்ணெ. போவுது, பசங்க சந்தோஷமா இருக்கட்டும். நான் பயந்து போயிருந்தேன், பேய் பிடிச்சுட்டுதே, அதுகதி என்னாவுதோ, ஏதாவுதோன்னு.

ஒனக்கு ஒரு கொறையும் வராது. போய் வாப்பா!

ராகவாச்சாரியார், மருமான் உறவு முறையுள்ள வரதனை வேலை வாங்கித் தருவதாகத் தம் வீட்டிற்கு அழைத்திருந்தார். அந்த மருமானிடம் கடிதம் வரையுமாறு கூறும்போது,

'சொல்வதை எழுதேண்டா!' என்ற கதையில் அவர்களது மொழியிலே உரையாட விடுகிறார்.

'டே மண்டு! சாட்டாச்சோன்னோ? சரி கொஞ்சம் கொஞ்சம் உட்கார். நேக்குக் கொஞ்சம் கையை வலிக்கிறது. நான் சொல்லிண்டு வர்ரேன். சமத்தா எழுது, தெரியறதோ'.

'ஆகட்டும் மாமா! லெடரா?'

'ஏதா இருந்தா என்னடா நோக்கு, சொல்வதை எழுதேண்டா'

'ஆஹா! இதோ லெடர் பேப்பர் எடுத்துண்டு வர்ரேன்'

'பார்க்கணும் உன் சாமர்த்தியத்தை. எந்த லெடர் பேப்பர் எடுத்துண்டு வர்ரே'.

ஏன், 'ஜர்னலிஸ்டு' லெடர் பேப்பர்தான்'.

'மண்டுன்னா சரியா இருக்கு. இப்ப திவான்பகதூர் தீர்த்தகிரி முதலியாருக்கு லெடர் எழுதணும். அதற்கு இந்த லெடர் பேப்பர் ஆகாது. போய், ராகவாச்சாரியார், பிரசிடெண்ட், ராமபக்த ஜன சபான்னு இருக்கே. அந்த லெடர் பேப்பர் எடுத்துண்டு வாடா'.

'அனுமார் பிளாக் போட்டிருக்கே'.

'அதுதாண்டா மண்டு' அதுதான்.

பார்ப்பனத் தமிழைக் கையாளுவதில் அண்ணா தனக்கு நிகரில்லையென விளங்குவதை இவ்வுரையாடலே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் உணர்த்தும்; 'பழைய வார்த்தைகளால் புதிய கருத்தைப் பின்னுவதில் கைதேர்ந்தவர் அண்ணா'. எனக் **கண்ணகி** *(16-11-53)* ஏடு எழுதியுள்ளது சாலவும் பொருந்துவதாகும்.

### கலப்புத் தமிழ்நடை

அண்ணாவின் தொடக்கக் காலக் கதைகளில் வடமொழிச் சொற்கள் மிகுந்து காணப்பட்டன.

> நடை என்பது, கேவலம் தூய சொற்களினால் மட்டும் உண்டாவதன்று. அது சொற்களின் சேர்க்கையினாலும், அச்சேர்க்கையிலும் கலப்பிலும் பிறக்கும் வேகத்தினாலும் உண்டாவதாகும்
>
> (கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப.169)

என்று ஆய்வாளர் தெரிவிக்கும் கருத்து சிந்திக்கத் தக்கதாக உள்ளது. மற்றொரு ஆய்வாளரும்,

> முன்னைய தலைமுறையில் பிறந்து எழுதத் தொடங்கியது இதற்கு ஒரு காரணம் ஆகாது. தான் நினைப்பவற்றை இயல்பான முறையில் சொல்லி விளக்க, வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்கள் மேம்பட்ட வாய்ப்பினை வழங்குகின்றன என்பதால்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக அண்ணாத்துரை சொற்களைக் கையாள்கிறார்.
>
> (சுப. ஞானவடிவேலன், அண்ணா தமிழும் முற்காலத் தமிழும், 70-71)

எனக் குறிப்பிடுகிறார். அண்ணாவின் மணிப்பிரவாள நடையை, தொடக்கக் காலக் கதையான 'குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்பு'கள் இவ்வாறு காட்டுகின்றது.

என்மீது கிருபை வைக்கக் கோருகிறேன். தங்களுக்குப் பணிவிடை செய்து வாழ்வதைவிட எனக்குப் பாரினில் பரமானந்தம் வேறு இல்லை. எனது அன்பை உமக்கு அபிஷேகித்து உம்மை வணங்குகிறேன். ஒரு ஏழைப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வது கேவலம் என்று மற்ற பணக்காரர்கள் கருதுவர். தாங்கள் அவ்விதமான குணமுடையவரல்ல. நான் தங்களின் பணத்தைக் கண்டதில்லை. தங்களைக் கண்டேன், தங்கள் திருமுகத்தில் தாண்டவமாடும் தேஜசில் சொக்கினேன். சொர்ணரூபா! என்னைத் துடுக்குக்காரி என்று துப்பி விடாதீர். நான் பணக்காரர் குடும்பத்தினளாக யிருந்தால், என்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படி, அநேகர் தங்களிடம் சொல்லியிருப்பார்கள். நானோ ஏழை, எனக்கு துணை யார் வரமுடியும்? இப்போது என் மனோபீஷ்டம் நிறைவேறுவதற்கு வேறு மார்க்கம் இல்லை. என்னைப் பற்றிச் சற்று ஈவு இரக்கங் காட்டுங்கள்.

பிற்காலத்தில் அவர் நடையில் வடமொழிச் சொற்கள் குறைந்தே காணப்பட்டன. திரு.வி.க. மறைமலையடிகள், பாவேந்தர் பாரதிதாசன், பாவாணர், அப்பாத்துரையார், சோம சுந்தர பாரதியார் போன்றோரின் தொடர்பிருந்தும், தம்மால் அவர்களைப் போல் பிறமொழி கலவாத செந்தமிழில் எழுத முடியவில்லையே என்று ஏங்கினார். மேலும் தனித்தமிழை எழுதுவதற்கு இளம் எழுத்தாளர்களை ஊக்கினார்.

> மேதைகள்' பலர்பிறமொழிச் சேர்க்கையும் பிறமுறைகளின் சேர்க்கையும் தமிழ்மொழியை வளமாக்கும் என்று காரணம் காட்டி இந்தத் தீயசெயலைச் செய்துவருகின்றனர். இதனை அறிந்து தடுத்திட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பணியாற்றும் நம்மாலேயே கூட (சற்று அதிகமாகவே என்னால்!)ப் பிறமொழிச் சேர்க்கையையும் பிறமுறைகளின் சேர்க்கையையும் நீக்கிப் பேசவும் எழுதவும் முடியாமலாகி விட்டிருக் கிறது.ஏனெனில் நாம், தூய தனித்தமிழ் சித்திரவதை செய்யப்பட்டு பிறமொழியும் பிறமுறையும் கலந்து பேச்சும் எழுத்தும் 'மணிப்பிரவாளம்' என்ற வடிவு கொண்டு தமிழும் வடமொழியும் குழைத்து வழங்கப்பட்ட நாட்களில் பயின்றவர்கள் எனினும் புலவர்பெருமக்களின் அறிவுரை கேட்டதால், இந்தக் 'கலவை' தீது பயப்பது என்று தெரிந்து,

> தமிழ்மொழிக்கு மீண்டும் தனியானதோர் ஏற்றம் தேவை என்ற தூய நோக்குடன் பணியாற்றி வருகிறோம். எனவே நம்மாலே முற்றிலும் 'தனித்தமிழ்' எழிலைக் காட்ட இயலவில்லை.

மொழிப் புலவர்கள் கலப்புத் தமிழை எழுதுவதைத் தமக்கே உரிய நகைச்சுவையுணர்வோடு நயமாகத் தாக்கினார்.

> இந்தத் தமிழ் இனிமைபெற, இரவல் எற்றுக்குப் பெற வேண்டும்? புள்ளிக் கலாபம் படைத்த மயிலுக்கு வான்கோழிச் சிறகாலான தோகை தர வேண்டுமா? கிளி அழகுபெற அதற்குப் பச்சை வண்ணம் பூச வேண்டுமா?
> (திராவிடநாடு, 18.3.56)

1931ஆம் ஆண்டு எழுதத் தொடங்கிய அவர் எழுத்துப் பணியில், 1946, 1947ஆம் ஆண்டுகள் குறிப்பிடத் தக்கனவாக அமைந்தன. மொழிநடையிலும் மாற்றம் காணப்பட்டது. தொடக்கக் காலத்தில் கலப்புத் தமிழில் அமைந்த அவர்நடை இறுதிக் காலத்தில் செந்தமிழ் நடையாக மலர்ந்தது. இம்மாற்றம், படிப்படியான வளர்ச்சியாகவே தென்படுகிறது.

**கால நடை**

ஒரு எழுத்தாளரின் நடைக்குக் காலமும் காரணமாக அமையும் என்பதை எழுத்தாளர் அகிலன்,

> நடை, அழகு என்பது ஆசிரியரின் தனிச்சொத்து என்று நாம் கருதினாலும், ஆசிரியர் அவர் வாழ்ந்த காலத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதை நம்மால் மறுக்க முடியாது. காலத்தின் சிந்தனைகள், எண்ணங்கள் அவற்றை வெளியிடும் பேச்சு மொழி, எழுத்துமொழி இவ்வளவையும் அவர் ஜீரணித்துக் கொண்டுதான், பிறகு தம்முடைய அழகுநடையில் படைப்பை வெளியிடுகிறார்.

எனக் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கதாகும். அண்ணாவின் நடையில் காலத்தின் பாதிப்பு இருந்தது. முதல் சிறை வாழ்க்கையை மொழிப் போரில் தொடங்கி அவர் மொழி வளம் பெறக் காலமெல்லாம் உழைத்தார். தம் காலத்தில் வடமொழியின் ஆதிக்கம் நிறைந் திருந்ததையும், அப்பாதிப்பால் தனித்தமிழை எழுத முடியாத அவலநிலை இருந்ததையும் தம் பேச்சில், எழுத்தில் சுட்டிக் காட்டினார். அவர் கதைகளின் உரையாடல்களில், வருணனைகளில் காலத்தின் பாதிப்பு இருப்பதைத் தெள்ளிதின் உணரலாம்.

> ஹலோ! யாரு. . . ஓ! நமஸ்காரம், ஆமா, நான் தான், நந்தகோபால் தாங்க... வணக்கம், வணக்கம்.... அது எத்தனை நாளா, உங்களுக்கு இந்த வழக்கம். . .இதுதாங்க, வணக்கம், ஆமா. . .பெரியவங்க சொன்னது நமஸ்காரம்... என்னங்க. . .அது சரி அதுசரி... எத்தனையோ மாறுதல்... சும்மா சொன்னேங்க, எனக்கும் தமிழ்னா பிரியம்தான்... நாம் மட்டும் தமிழனில்லையா... ரொம்பசரி... ஒண்ணுமில்லிங்க... நம்ம அரிசி. . .அதுதாங்க, நாம சப்ளை செய்கிற அரிசி... ஆமா... வருஷம் பத்து ஆகுதுங்களே... நாமதான் வழக்கமா, காண்ட்ராக்ட்.... அதுதாங்க... நம்ம அரிசி என்னமோ புழுத்துப்போனது, கெட்டுப்போனது, வயத்துக்கு ஆகாது, கெடுதலு என்றெல்லாம் என்னதுங்க.... அதைத்தாங்க சொல்றேன்... அதற்காக இருக்கிற அதிகாரி... கேள்விதானுங்க, பெரிய டாக்டருன்னு. . . அவருதான், நம்ம அரிசியைப்பற்றி, குறை சொன்னதாகக் கேள்விப் பட்டேன்... என்னங்க... ரிப்போர்ட்டா?... எழுதியனுப்பி யிருக்கிறாரா... உங்களிடம்தான் வந்திருக்குது... என்னங்க. ... கண்டிப்பான ரிப்போர்ட்டா? (திராவிடநாடு, வரவு செலவு, 20.9.64)

வணிகர் நந்தகோபாலர் தொலைபேசியில் அதிகாரியோடு பேசிய உரையாடல் கால நடைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

### நீண்ட தொடர்நடை

அண்ணாவின் நடையில் குறிப்பிடத்தக்க ஒன்று, நீண்ட தொடர் அமைப்பு என்பதாகும். நீண்ட தொடர் நடை எழுத்தாளனின் சிந்தனை ஓட்டத்தைக் காட்டுவதாக அமையுமென்பர் ஆய்வாளர் வ.சுப. மாணிக்கம்.

> நல்ல உரைநடையைப் படிக்க மக்கட்குப் பயிற்சி கொடுப்பது எழுதுவோர் பொறுப்பு. இன்று பலர்தம் உரைநடை ஆற்றொழுக்காக, நெடுந்தொடராகச் செல்லவில்லை. ஓட்டம் அற்றதாக, அடிக்கடி முற்றுப்புள்ளியுடையதாகச் சிறுசிறு தொடர்த் துணுக்குக்களாக, தொடக்கப் பள்ளி நூல் உடையதாக முடிந்து முடிந்து பிறக்கின்றது. சிந்தனை நீளத்துக் கேற்றவாறு, உம்மையும் எச்சமும் படத் தொடர் நீளாமல், சிறுசிறு தொடர்களை எண்ணி அந்த அளவிற்குச் சிந்தனையை வெட்டிக் கொள்வது. ஒரு தொடர், எவ்வளவு நீள வேண்டுமென்பது, சிந்தன்னயளவைப் பொறுத்தது. ஒரு சொல்லும் தொடராகலாம். ஒரு

> தொடர் பத்து வரியாகவும் நீளலாம். எழுத்தாளன் கருத்தினை ஆள, கருத்துத் தொடரினை ஆள வேண்டும். இதுவே படிமுறை. இது செய்யுட்கும் உரை நடைக்கும் பொது.

அண்ணாவின் நீண்ட தொடர்கள் கொண்ட நடையை ஞானவடிவேலன் மதிப்பிடுவதாவது:

> அண்ணாவின் நடையில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம், நீண்ட தொடர்கள் (Phrases) கொண்ட சொற்றொடர்கள் (Sentences) மிகுதி என்பதாம். ஆயினும் அவை பொருளழகு கெடுவதில்லை. நிறுத்தக்குறிகள் (Punctuation marks), பத்தி அமைப்பு (Paragraph) போன்றவற்றையும் அவர் பொருட்படுத்துவ தில்லை. மிக விரைவாக எழுதும் அவர், இந்தச் செயற்கையான உத்திகளை விரும்பி ஏற்காததால் குறிப்பிட்ட கட்டுரை தம் இயல்பான மதிப்பை இழப்பதில்லை.

'தஞ்சை வீழ்ச்சி' என்ற சிறுகதையில் வேதியர் வெங்கண்ணாவின் இரண்டகச் செயலை ஆத்திரத்தோடு குறிப்பிடுகிறார். இம்மாதிரி சமயங்களில், அண்ணா நடை நீண்ட தொடர்களைக் கொண்டு உணர்ச்சியை வெளிப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளது. இந்நடையில் அண்ணாவின் சிந்தனை வேகம் பட்டுத் தெறிக்கிறது. கருத்துக்கள் கனலாக வெளிப்படுகின்றன.

> நாடு உரிமையாளரிடம் இருக்கிறதா, அந்நியனிடம் ஆட்பட்டுக் கிடக்கிறதா என்பது பற்றிய கவலையற்று, கொடுங்கோலா, செங்கோலா என்பதைப் பற்றிய கவலையுமற்று அந்தஸ்து உயர்வு உண்டா, நமது இனத்துக்கு மேலான நிலை இருக்கிறதா, பாடுபடாமல் பிழைக்கவும், பரிமளமிக்க வாழ்வு பெறவும், மேற்குலத் தோன் என்ற நிலை இருக்கவுமான, முறையிலே நாடு நடத்தப்படுகிறதா என்ற சுயநல வெறி உணர்ச்சி கொண்டு வெங்கண்ணா, இருமுறை அரசுகளைக் கவிழ்த்தான் நாட்டை நாசப்படு குழியிலே தள்ளினான்! இதுபோல பரந்த இந்தத் துணைக் கண்டத்தில், வஞ்சகம் வென்றதைக் காட்டும், வேதனை தரும் நிகழ்ச்சிகள் பலப்பல நடை பெற்றன! அரசுகள் அழிக்கப்பட்டன-அறம் அழிக்கப் பட்டது-நாடு சீரழிவு பெற்றது. சுயநலமும் சூழ்ச்சித் திறனும், இனவெறியும், வைதீக வெறியும் கொண்டவர்கள் நாட்டுக்கு ஏற்படுத்திய நாசம், ஒன்றிரண்டு அல்ல உள்ளத்தைக் குலுக்கக் கூடிய சம்பவங்கள் பலப்பல

> தஞ்சை வீழ்ச்சி, அது போன்ற சம்பவங்களிலே ஒன்று! சரிதம் தரும் எச்சரிக்கை.
>
> (அண்ணாவின் சிறுதைகள், தஞ்சை வீழ்ச்சி, ப.352)

தாய்மொழி மீது நீங்காத பற்றுக் கொண்ட அண்ணா, தம் கதைப் படைப்புக்களில் பலவகையான நடைகளைக் கையாண்டுள்ளார். அவர் மேற்கொண்ட நடையினைப் பிறிதொரு முறையில் ஐந்து வகையாகப் பகுக்கலாம்.

**எடுத்துரை நடை**

ஒரு நிகழ்ச்சியைத்தொடர்வண்டியின் இணைப்பைப் போல் ஆற்றொழுக்கான போக்கில் எடுத்துரைப்பது. இந் நடையில், பொருளும் சொல்லும் பருந்தும் நிழலுமாகச் செல்லும். மற்ற உரைநடையைவிட இந்த வகையான உரைநடையையே மக்கள் பெரிதும் விரும்பிப் படிப்பர். இவ்வகையில் அமைந்து நிற்பவையே துப்பறியும் கதை போன்றனவாகும். படைப்பில் சிறந்து நிற்கும் எல்லாக் கதைகளும், இவ்வகை நடையையே போற்றியுள்ளன.

> ரங்கு இருப்பதும் இல்லாது போவதும் கம்பெனியை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதை நிரூபித்தாக வேண்டிய பெரும் பொறுப்பு குருமூர்த்திக்கு ஏற்பட்டது. முதலிலே அவருக்குத் தோன்றிய யோசனை, சோமுவையோ, தாமுவையோ, 'தூக்கிவிட்டு'-'விளம்பரம் செய்து' இடத்தை அமைக்க வேண்டும் என்பதுதான். பிறகு, அதனால் ஏற்படும் சிரமமும், அதன் விளைவும் எப்படியாகுமோ என்ற கவலையும் ஏற்படவே, அந்த யோசனையைக் கைவிட்டு விட்டு, கம்பெனியில், கண் கவரும் சீன்கள்-புதிய உடைகள்-கலர் லைட்டுகள்-டர்னிங் சீன்கள் - இவைகள் உண்டு என்பதையே அதிகமாக விளம்பரப்படுத்தி, யார் வேண்டுமானாலும் எந்த வேஷம் வேண்டுமானாலும் போடக் கூடிய விதமான, 'தசாவதாரம்' நாடகத்தைத் தயாரித்து, கம்பெனியில் வலிவையும் வனப்பையும் வளர்க்கலானார். சோமு ஒரு நாளைக்கு மகாவிஷ்ணுவாக வருவான்-ஒரு நாளைக்கு துவார பாலகனாவான்-ஒரு நாளைக்கு தாமு கிருஷ்ணனாவான், மறுநாள் அவனே ருக்மிணி வேஷம் போடுவான். கம்சன் வேஷத்துக்குக் 'கேட்'கந்தனே பொருத்தம் - அவனுக்குப் பேசத் தெரியாது - ஆகவே அவன் வாய் அசைக்கட்டும் -'மைக்'கிலே சொக்கன் பேசிவிடட்டும் - என்று இப்படிப்பட்ட ஏற்பாடுகளுடன்,

'தசாவதாரம்' நடைபெற்று வந்தது. ரங்கதுரை இல்லாமல் கம்பெனி நடைபெற முடியும் என்பதை நிரூபித்து விட்டார், குருமூர்த்தி. ரங்கதுரையால் கம்பெனியில் இல்லாமல் நான் இருக்க முடியும்? என்று மட்டுந் தானே காட்ட முடியும்? அவன் வேறு கம்பெனியில் சேர முடியாது- மற்ற எந்தக் கம்பெனியிலும் அவன் விரும்பும் நிலைமை கிடையாது - அவனாகப் புதிய கம்பெனி வைக்கவும் முடியாது - அவனுக்கு அதற்கு வேண்டிய ஆற்றல் கிடையாது; அவசியமும் ஏற்படவில்லை. இந்த நிலைமையிலே தான் ரங்கதுரையின் பூர்வோத்திரத்தைப் பற்றிக் குருமூர்த்தி காலட்சேபம் செய்யலானார். அதற்கு ரசமான பக்கவாத்தியக்காரர்களும் சேர்ந்தனர் (அண்ணாவின் சிறுகதைகள், ராஜபார்ட் ரங்கதுரை, ப.55-56)

குருமூர்த்தி நாடகக் கம்பெனியில் ராஜபார்ட் வேடம் தாங்கி நடித்து வந்த ரங்கதுரை விடுமுறை பெற ஊர் சென்ற பின்னர்த் தன்னை முதலாளி கம்பெனிக்கு அழைக்காததைக் கண்டு வருந்திக் கூறியது. இதனை எடுத்துரை நடையில் 'ராஜ பார்ட் ரங்கதுரைபாகவதர்' என்ற உருவக் கதையில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

**வினா-விடை நடை**

இந்நடை வழக்காடும் போக்கில் அமையும். இந்நடை சிக்கல்களை எடுத்து ஆய்ந்து கற்போர்க்குத் தெளிவைத் தரும். படிப்போரைத் தம்முடன் அழைத்துச் சென்று, அவர்களின் எண்ணங்கள் வேறு பக்கம் சிதறா வண்ணம் நின்று, சிந்திக்கத் தூண்டுவது. தொழிலாளி கந்தனுக்கும் அவன் மனைவி குப்பிக்கும் நடந்த வினா விடை நடை

'என்னா இது எழவாய்ப் போச்சு. ஒத்தெ ரூபாயைக் குடுத்தா, எதுக்குன்று ஆகும்.'

'போடி', இந்தப் பணத்தை வாங்க அந்தப் பய கிட்ட நான் பல்லைக் காட்டினது உனக்கென்னா தெரியும்.'

'அப்பாணெயா சொல்லுவானேன்? ஒத்தெ ரூபா தானா கொடுத்தார்?.'

'ஆமாண்டின்னா. . .'

தெரியுமே லட்சணம், சொல்லுவானேன்? நீங்க நின்ன நிலையிலேயே ஆடறது சொல்லுதேன்னே?'

'ஈட்டுக்காரனுக்குக் கடனைக் கொடுத் திட்டிங்களா,

'விடுவானா? எட்டணா வாங்கிட்டான்'

'மிச்சம்'

'மிச்சம் இருக்குது'

'எங்கே'

'இருக்குதுன்னா விடுவாயோ, சும்மா மனுஷனைப் பிடுங்கறேயா'

'எங்கேன்னா சொல்லுங்களேன்?'

'முடியாது போடி' சொல்ல முடியாது. காட்டவும் முடியாது.

(அண்ணா, மதுரைக்கு டிக்கெட் இல்லை, ப.67)

**விளக்க உரை நடை**

ஒரு கருத்தை, விளக்கிக் கூறுவதையே நோக்கமாகக் கொண்டு எழுதப்படுவது அனைத்தும் விளக்க உரைநடையெனலாம். அறிவியல் நூல்கள், கலைக் களஞ்சியங்கள் முதலியன விளக்க உரைக்கு நல்ல எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன. மனிதனின் அறிவுப்பசிக்கு நல்ல உணவாக அமைவது இந்நடை.

> வாதாபி, சாளுக்கியத்தின் தலைநகரம் -எழில் மிக்க இடம், பல்லவப்படை, அந்த அழகு நகரை அடியோடு அழித்து விட்டது. வாதாபியின் அழிவுபோல, வேறெந்தப் போரிலும், வேறெந்த நகருக்கும் அழிவு நேரிட்டதில்லை என்று கூறுவர்-அவ்வளவு பயங்கரமான அழிவு. சாளுக்கியனின் படைகள், சண்டமாருதத்தில் சிக்கிய கலம், சுக்கு நூறாவது போல, சின்னாபின்னமாயிற்று. ஊர் உருத்தெரியாது அழிந்தது. மன்னனும் களத்திலே பிணமானான். பல்லவப் படையின் தாக்குதலால், சாளுக்கிய சாம்ராஜ்யமே படு சூரணமாகி விட்டது. வாதாபி இன்றைய பம்பாய் மாநிலத்திலே உள்ள இடம். அதனை அழித்த பல்லவப் படையோகாஞ்சியிலிருந்து கிளம்பிச் சென்றது-பல்லவ சாம்ராஜ்யத் தலைநகரம் காஞ்சிபுரம், காஞ்சிபுரம் - வாதாபி; இடையே, எவ்வளவு தொலைவு! இடையே, எவ்வளவு ஆறுகள், காடுகள், நாடு, நகரங்கள்! இவ்வளவையும் தாண்டிச் சென்று தாக்கிக் கொன்றிடும் வீரம்போல, பல்லவனின் படை, மாற்றானின்

*மணிபுரிக்குச் சென்று தாக்குதலை நடத்தி, வெற்றி பெற்றது. சாளுக்கியன், சொந்தநாட்டுக்குள்ளிருந்து கொண்டு போர் நடத்தினான்- பல்லவனோ, எதிரிநாட்டுக்குள் நுழைந்து கடும் போரிட்டு வெற்றி பெற்றான். மகத்தான வெற்றி! சாளுக்கிய மக்களின் மனதை மருட்டி விட்டது. பல்லவ மாவீரர்களின் பேராற்றல்! எங்கும் நாசம் நர்த்தனமாடிற்று! அழிவு எனும் அந்தகாரம் கப்பிக் கொண்டது சாளுக்கியத்தை.*

*(**அண்ணாவின் சிறுகதைகள்** (பிடிசாம்பல்), ப.265,266)*

வாதாபி நகரத்தின் சிறப்பையும், காஞ்சிபுரத்திற்கும் அதற்கு இடையிலுள்ள தூரத்தையும் சுட்டி, வாதாபி அழிவு பல்லவர் வெற்றியாகத் திகழ்ந்ததை விளக்கிக் காட்டுகிறார்.

**நாடக உரைநடை**

நாடகத்தில் கதை மாந்தர்கள் உரையாடுவது போன்று கதைகளிலும் கட்டுரைகளிலும் வாழ்வின் எல்லாக் கூறுகளையும் எடுத்தியம்பி, கற்போர் கண்ணெதிரே முன்னிறுத்திக் காட்டுவது நாடக உரைநடை எனப்படும். இவ் உரைநடை, பேச்சு வழக்கை ஒட்டி, இயல்பு நவிற்சிப் பாங்கில் அமையும்.

*'சந்தோஷமான செய்தி! பெண் பார்த்தாய் விட்டதோ?'*

*'பார்வதி! கேலியா செய்கிறாய்?'*

*'என்னைக் கலியாணம் செய்து கொள்ளுங்களேன்!'*

*'வேடிக்கை செய்கிறாள். எனக்கு மட்டும் உண்மையில் அந்தப் பாக்கியம் கிடைத்தால். . . '*

*'எனக்கு ஒரு விரதம் இருக்கிறது. யார் இந்த மாகாணத்திலே பொதுக் காரியத்துக்கு அதிகமான பொருள் செலவிடுகிறார்களோ, அவர்களையே கலியாணம் செய்து கொள்வதென்று நான் சபதம் செய்திருக்கிறேன்.'*

*'அது நிறைவேறவும் உங்கள் ஆசை நிறைவேறவும் உங்களிடம் சொத்து இருக்கிறது'.*

*'நிசமாகவா, பார்வதி; நிச்சயமாகச் சொல்'. என்னென்ன கோயிலுக்கு என்னென்ன செய்ய வேண்டும் சொல், இந்த வினாடியே செய்கிறேன்!*

*'கோயிலுக்கு என்ன குறை வந்துவிட்டது! குடிசைகளைக் கவனியும் முதலிலே. ஏழைகளுக்கு வழி செய்ய வேண்டும். நான் நாளைக்கு ஒரு லிஸ்டு அனுப்புகிறேன். அதன்படி*

தருமம் செய்யுங்கள். ஆறு மாதமான பிறகு நான் உம்மைக் கலியாணம் செய்து கொள்ளுகிறேன்'.

(அண்ணா, பார்வதி பி.ஏ., ப.34)

மிராசுதார் ஆலாலசுந்தரம் முதலியாருக்கும், பார்வதி, பி.ஏ.க்கும் நடந்த உரையாடலே மேலே சுட்டியுள்ள பகுதி. இந்நடை படிப்போரைப் பிணிக்கும் பேராற்றல் செறிந்து விளங்குகிறது.

**அணி நயம்**

அண்ணாவின் நடைப்பாங்கிலே மற்றொரு சிறப்பு அணிநலன்கள் அடுக்கடுக்காக வந்து மனத்தைக் கவர்வதாகும். அணியென்பது எழுத்தாளரின் எண்ணங்களுக்குக் கலைவடிவம் தருவதென்பதேயாகும். அவை பல திறத்தனவாகும். அண்ணாவின் எழுத்தில் உவமைகள் உவந்தோடி வரும். உருவகங்கள் பெருமிதத் தோடு கருத்துத்தணலாகும். முரண் தொடைகள் அலைபோல் திரண்டு வரும். கற்பனைகள் தந்தச் சிற்பம்போல் அற்புதம் தந்து நிற்கும். இவ்வளவும் அவரின் பட்டறிவின் மின்னலாகக் கட்டுரைகளில் மட்டுமன்றிக் கதைகளிலும் ஒளிரும்; இவையனைத்தையும் கருத்துப் புரட்சியின் ஊர்திகளாகப் பயன் படுத்தினாரேயன்றித் தம் எழுத்துக்கு அழகு செய்ய அன்று.

**உவமைகள்**

சங்ககாலப் புலவர்களைப் போலவும், மராட்டிய எழுத்தாளர் காண்டேகரைப் போலவும், தாகூர், பாரதிதாசன் இவர்களைப் போலவும் அண்ணாவின் உவமைகள் புதுமையும் பொருட்செறிவும் கொண்டவைகளாக விளங்குகின்றன. அண்ணாவின் உவமைகள், காலங்காலமாகப் புலவர்கள், பண்டிதர்கள் கையாண்ட புளித்துப் போன பழைய உவமைகள் அல்ல. அவை பேச்சு வழக்கினை இலக்கிய வழக்காக்கும் தன்மை செறிந்தவை. காட்சி விளக்கத்தை விடக் கருத்து விளக்கத்துக் காகவே எதிரொலிக்கும் குரலாக இயங்கும் பெற்றியையுடையவை. அண்ணாவின் உவமைகள் எளிமையானவை; பாமரர்க்கும் எளிதில் புரியும் தன்மை கொண்டவை. பெண்ணை நிலவோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். நிலவுக்கு ஒளிதரும் சூரியன் இயற்கையின் நியதிக்குட்பட்டு இயங்குகின்றான். ஆனால் ஆணோ எந்த நியதிக்கும் கட்டுப்படாதவனாக இருக்கின்றானே என்று ராதா கூறியதாக ரங்கம் கூறுகிறாள்.

நிலவுக்கென்று தனி ஒளி இல்லை; அது போலவே நமக்கென்று தனி வாழ்வு இல்லை; அண்ணன், அப்பா, புருஷன், மகன், பேரன் என்று இப்படித்தானே இரவல்

வெளிச்சத்தில் வாழ வேண்டி இருக்கிறது. ஆடவரிடமிருந்து நம் வாழ்வுக்கு ஒளி தேடுகிறோம். எனவே அவர்கள் இஷ்டப்பட்டு எந்தெந்தச் சமயத்தில் எந்தெந்த அளவு வெளிச்சம் தருகிறார்களோ அந்த அளவுக்குத் தாம் நாம் பிரகாசிக்க முடியும்.

நிலவுக்கு ஒளி தரும் சூரியன் இயற்கை நியதின்படி, அளவும் காலமுமறிந்து ஒளி தருகிறான். பெண்ணுக்கு வாழ்வு அமைக்கும் ஆடவனோ எந்த நீதிக்கும் கட்டுப்பட்டவனல்ல - அவன் இஷ்டம். இது மாறவேண்டுமானால், பெண்களுக்குத் தங்கள் வாழ்வைத் தாங்களே அமைத்துக் கொள்ளக் கூடிய திறமை, வசதி, உரிமை ஏற்பட வேண்டும். சுலபத்தில் ஏற்படக் கூடியதா?
(அண்ணா, **ரங்கோன் ராதா**, ப.184-186)

குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலை காரியின் குறிப்புகள் என்ற குறும்புதினத்தில் மிராசுதார் காந்தாவுக்கு 'அலாவுதீன் தீபமானார்' எனப் புதிய உவமையைத் தந்துள்ளார். வறுமைக்குக் காட்டும் உவமைக்கு எடுத்துக்காட்டு:

சரிந்து போன சுவர்-பிய்ந்து போன கூரை அதன் நிலைமையும் கிழவியின் கோலமும் ஒரே விதம்
(அண்ணா, யார் மீது கோபித்துக் கொள்வது?, ப.120 )

சோதிடர்கள் தம் அனுபவத்தை வாய்மொழியாகக் காட்டும் ஓர் உவமை,

காரணமில்லாத விவகாரமா? மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்ந்தா, இரத்த நிறமாகிறது போலத்தான் கிரஹங்கள் ஒன்றோடொன்று கொள்கிற சம்பந்தா சம்பந்தத்தாலேயே பலாபலன் உண்டாகும்.
(அண்ணா, அண்ணாவின் சிறுகதைகள் (பலாபலன்), ப.144)

ஏழை எளியவர்கள், தமக்கு மேல் நிலையில் உள்ளவரிடத்துக் கொண்ட கோபத்தைக் காட்ட முடியாது. தம் குடும்பத்திலுள்ள மனைவியரிடத்துக் காட்டுவதை எளிய உவமையால் விளக்குகிறார்.

சேலம் 'ஒகனக்கல்' அருகே, ஆடுதாண்டும் அளவுள்ள காவேரி, பிறகு அகண்ட காவேரியாகிறதே வேறு ஜில்லாவில். அது போல, இடபேதம், இயல்பு பேதத்துக்குள்ளே பல காரணங்களிலே ஒன்று. ஒரு இடத்திலே கோபத்தைக் காட்ட முடிவதில்லை. ஆனால்

கோபமே ஏற்படவில்ல என்று பொருள் அல்ல. அது பிறகு கொதித்துக் கிளம்புகிறது வேறோர் இடத்தில்.

(அண்ணா, சாது முதலிய 3 சிறுகதைகள், (சாது), ப.6

மிலிடரி ஓட்டல் சின்னானிடம் கொண்டான், கோழிகளை வாங்கி வியாபாரம் செய்து வந்தான். கொண்டான், நாணயம் தவறும்போது, மீனா சென்று மிலிடரி ஓட்டல் சின்னானிடம் அன்பாகப் பேசிக் கோழிகளைக் கொடுக்குமாறு வேண்டிக் கொள்வாள். அவனும் கொடுப்பான்.

> மீனாவின் நடை நொடி பாவனை, முகவெட்டு எல்லாம் சின்னானுக்குப் பிடித்திருந்தது - ஆனால் 'அண்ணேன்' என்று கூப்பிடும்போது மட்டும் அவனுக்குக் கண்ணில் 'சால்னா'த்துளி விழுந்த மாதிரி எரியும்
>
> (அண்ணா, வாழ்க்கைப் புயல் (அவள் விபச்சாரியானாள்), ப.36 )

மிலிடரி ஓட்டல் சின்னானுக்கும் மீனாளுக்கும் பழக்கப்பட்ட 'சால்னா'வையே உவமையாகக் கூறுகிறார். இடமறிந்து ஏற்ற உவமைகளைக் கையாளும் திறம் இவரது தனிச்சிறப்பாக அமைந்துள்ளது. உருவக அமைப்பில்,

> முதல் போகம் ஆயிற்று; அறுவடை முடிந்தது; இனி இரண்டாம் போகத்துக்கு, விதை தூவ வேண்டியது தான் என்று விவசாயிகள் எண்ணினர் - மும்முரமாக அதிலே ஈடுபட்டனர் - பயிர் செழித்தது

என்று 'ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர்' என்ற கதையில் புறங் கூறுவோரின் போக்கினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**நகைச்சுவை**

அண்ணாவின் நகைச்சுவை பொருளாழமிக்கது. அங்கதச் சுவை கொண்டது. அண்ணா தம் எழுத்தில் வெற்றாரவாரப் பயனற்ற நகைச்சுவையைத்தருவதில்லை. இடியும் மின்னலும் கூடிய மழையைப் போல் அவரது நகைச்சுவை இடித்துரைத்தலும் இன்பம் நல்குதலும் கொண்டதாகும். அதனை ஐவகையாகப் பாகுபடுத்திக் காணலாம்.

1. அறிவு வழிப்பட்டது (Wit)
2. சீர்திருத்த நோக்கங்கொண்டது (Satire)
3. குத்தல் தன்மையுடையது (Sarcasim)
4. முரண்பொருளிணைந்தது (Irony)
5. தாக்குதல் செறிந்தது (Lampooning)

### அறிவு வழிப்பட்டது

சிந்தனையைத் தூண்டக்கூடிய அரிய கருத்துக்களை எடுத்துரைப்பது.

> ராதாவுக்கும் எனக்கும் காதல் எவ்வளவு வேகமாக வளர்ந்து வந்ததோ, அதைவிட வேகமாக நாகசுந்தரத்துக்கும் அவன் தகப்பனாருக்கும் மனபேதம் வளரலாயிற்று

என்று 'ரங்கோன் ராதா'வில் பேசுகிறார். 'சுந்தரியின் வளர்ச்சியும் வீட்டிலே வறுமையின் முதிர்ச்சியும் ஒன்றை ஒன்று போட்டியிட்டன. இந்த அமளியின் இடையே அவளுடைய அழகு வளர்ந்தபடி இருந்தது எதையும் சட்டை செய்யாமல்' என்று 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி'யில் பேசுகிறார்.

### சீர்திருத்த நோக்கங்கொண்டது

சமுதாயத்தைத் திருத்தும் நோக்கோடு குறைகளைக் குத்திக் காட்டுவது. தாசி விமலா அவள் சார்ந்த வாழ்வைச் செம்மைப் படுத்த விரும்பாத உலகின் போக்கை,

> எங்கள் உலகமே அலாதியானது. அதைப் பற்றிய கவலை மற்ற உலகத்துக்குக் கிடையாது. கோழி மனிதனுக்குப் பண்டம் பலகாரமாகிறது. ஆனால் அது பிழைத்து வளருவது குப்பை மேட்டைக் கிளறி, புழு பூச்சி தின்றுதான்.

என்று கூறுவதை 'என் வாழ்வு' எனும் கதையில் காணலாம்.

### குத்தல் தன்மையுடையது

தனிமனிதரிடமோ, சமுதாயத்திடமோ உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி எள்ளி நகையாடுவது, பெண்ணென்றால் ஆண்கள் எவ்வளவு இழிவாக நடந்து கொள்கிறார்களென்பதை இக்கூற்று வாயிலாக உறுதிப்படுத்துகிறார்.

> மின்னல் கொடியாளுக்காகப் போட்டியிட்டவர்கள் பலர் -ஏழாவது கீர்த்தனை முடிவதற்குள் பாட்டு வாத்தியாருக்கும் பக்க்வாத்தியக்காரருக்குமே பலமான போட்டி-சங்கீத விஷயமாக அல்ல - மின்னல் கொடியாள் விஷயமாகத்தான்.

என்று 'அவள் விபசாரியானாள்' என்ற கதையில் குத்தல் தன்மையோடு கூறுகிறார்.

## முரண் பொருளிணைந்தது

மேலோட்டமாகப் பார்க்கும்போது ஒரு பொருளையும், அதனையே ஆழ்ந்து நோக்கும்போது எதிர்மாறான பொருளையும் தரும் வகையில் எழுதப்படுவது முரண் பொருளிணைந்தது எனப்படும்.

> முதல் தரமான குதிரை! கால் சுத்தமாக இருக்கிறது. சவுக்கு எடுக்கவே தேவையில்லை. 'டிராட்' கம்பீரமாக இருக்கிறது. பக்கத்திலே வண்டிவரும் சத்தம் கேட்டால், கண்களிலே ஒரு மிரட்சி. கால்கள் துடிக்கின்றன. காற்று வேகமாகக் கிளம்புகிறது. முகத்திலே களையும் இருக்கிறது. குதிரை சிலாக்கியமானதுதான். ஆனால் வண்டி மட்டும், ஏற்றதல்ல. ரப்பர் டயர் இருக்கிறது. ஆனால் குதிரையின் போக்கைச் சமாளிக்கும் சக்தி இல்லை வண்டிக்கு. வேறே வண்டியாக மட்டும் இருந்தால் ஜோர்தான்.

முதல் தரமான குதிரைக்கு ஏற்ற வண்டியில்லை யென்பதைக் 'காமக்குரங்கு' என்ற சிறுகதையில் கூறுகிறார். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, குதிரைக்கேற்ற வண்டியில்லை யென்பதை விளக்குவதுபோல் தோன்றும். ஆனால் உள் நுழைந்து பார்த்தால் மிக ஆழமான பொருளைத் தாங்கி நிற்கும். ஐம்பது வயதுக் கிழவரான மிராசுதார் மீனாட்சிசுந்தரர் இருபதாண்டு நிறைந்த பெண்ணான மதுரவல்லியை மணந்து கொண்டார். அவர்களது மணவாழ்வுப் பொருத்தமின்மையைக் குதிரையையும் குதிரைவண்டியையும் கூறுவதன் மூலமாகக் காட்டுகிறார். அண்ணாவின் கதைகளில் இவ்வணி நிறைந்து காணப்படுகிறது. இவ் அணியே எழுத்தாளனின் திறமையை வெளிப்படுத்துவதற்குச் சிறந்த கருவியாக விளங்குவது. காவியப் புலவர்களும் கற்றோரும் பெரிதும் விரும்பிப் போற்றுவது. எழுத்தாளனின் நுண்மாண் நுழைபுலத்தையும், கருத்துச் செறிவையும் புலப்படுத்துவது.

## தாக்குதல் செறிந்தது

சமுதாயப் பயிரை அழிக்கும் நச்சுப்புழுக்களின் தீய தன்மைகளை வெளிப்படையாக எடுத்துரைத்துக் கேலி செய்வது, காவியுடை அணிந்தவர்களின் காமச்செயலை 'வேலை போச்சு' என்ற கதையில் நகைச்சுவையும் நையாண்டியும் அமைய வெளிப்படுத்துகிறார்.

> சாமி சாவடியானந்தருக்குத் தூக்கம் வரவில்லை. படுத்துக் கொண்டே பாடிக்கொண்டிருந்தார். பனிரண்டு மணி

சுமாருக்கு யாரோ வரும் சத்தம்! 'ஏது பாட்டு, பலே ஜோராக இருக்குதே!, என்று ஒரு குரல் கேட்டது. திடுக்கிட்டுப் போனேன், பெண் குரல்! பேசியது பச்சை! எனக்குத் தெரிந்தவள்! பல சரக்குக் கடையைக் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்பவள்; அவள் வருகிறாள் சாவடிக்கு நடுநிசியில்! சாமி சாவடியானந்தனே தான் இவன்! இதிலே கூட நான் அச்சடித்ததிலே என்ன தவறு? செச்சே! அதற்கு மேலே, அங்கே நடந்த பேச்சை நான் எப்படிச் சொல்ல முடியும். சாமியாராம்! சாவடியானந்தராம்! சாமி, சாவடியிலே ஆனந்தராக இருந்தார். தேவாரமா பாடினார்! தில்லானா பாடினார்! பச்சை சாமியாரிடம் விபூதிப் பிரசாதமா கேட்டாள். 'எடு எடு! பணத்தை! ஏழு நாளா ஏச்சிக்கிட்டே வாராயே! என்றாள். விபூதிப் பையிலே இருந்து கலகலவென்று ரூபாயைக் கொட்டினான். அந்தச்சாமி, ஐந்து ரூபாயைக் கொடுத்தான் பச்சையிடம், 'மிச்சத்தை இப்படிப் போடு சாமி' என்று கூறிக்கொண்டே நான் போய் நின்றேன் பக்கத்திலே. அலறிப் போனான் அந்த ஆண்டி. அவளும் ஆந்தை போல் விழித்தாள். சாமியாரை நான் பேசவிடவில்லை.

வண்ணனை நடை எழுத்தாளர்தம் நுகர்வுகளை, காட்சி யுணர்வுகளை, படிப்பவர்க்குக் கலைப்பாங்கோடு உவமை உருவகங்களோடு கற்பனைச் சித்திரம் புலப்படுமாறு தீட்டுவது வண்ணனைநடை.

இருண்ட சுருண்ட கூந்தல், பிறைநுதல், சிலைப்புருவம், நெஞ்சைச் சூறையாடும் சுழற்கண்கள், அரும்பு போன்ற இதழ், முத்துப்பற்கள், பிடி இடை. இவைகண்டு கரும்பு ரசமெனும் அவள் மொழிச் சுவை உண்டு. கண்படைத்தோர்க்குக் காட்சியென விளங்கும் நடன நேர்த்தியைக் கண்டு மையல் கொண்ட வீரமணி நடனராணியிடம் நெருங்கிப்பழகியதும் சீரிய குணத்தின் பெட்டகமாகவும் இருப்பதையும் கண்டு களிகொண்டு அவளையன்றிப் பிறிதோர் மாதைக் கனவிலுங் கருதேன் என்று கூறிவிட்டான்.

கலிங்கராணியில் வரும் வீரமணி தன்காதலி நடனராணியின் பேரழகைக் கண்டு வேறொரு பெண்ணை நாடாததை ஆசிரியர் வண்ணனை நடையில் நயம்தோன்றக் கூறுகிறார்.

மனித முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள கட்டுப் பாடுகளை அகற்றிப் பகுத்தறிவையும் சீர்திருத்தக் கருத்துக்

களையும் தம் எழுத்தில் ஊட்டி, மக்களை உணர்ச்சி பெறச் செய்தார். தம் கருத்தைத் தெள்ளிதின் புலப்படுத்த அவருக்கு இயல்பாக அமைந்த நடை தமிழின் மறுமலர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கியது. தமிழ் அவர் எழுத்தால் புதிய நிலையை அடைந்தது. மக்கள் போற்றும் வண்ணம் எளிமையும் அழகும் ஆழமும் செறிந்ததாக மிளிர்ந்தது.

## பாலியல் புனைவு

அண்ணா நடப்பியல் சார்ந்த ஓர் இலட்சிய எழுத்தாளர். மக்களை நாள்தோறும் வருத்தும் சிக்கல்களைத் தெளிவோடு நோக்கினார். வறுமையை, அறியாமையை, பொருளியல் ஏற்றத் தாழ்வை, மூடநம்பிக்கையைக் கருப்பொருளாகக் கொண்டு கதைகள் வரைந்தது போலவே, ஆண் பெண்களின் உறவுகளை, அவர்களது மன உணர்வுகளை எடுத்துக் காட்டுகிறார். ஆண் பெண்களின் உள்ளுணர்வுகளை எடுத்துக்காட்டுவதை அவர் தவறென்று எப்போதும் எண்ணியதில்லை. சிலர் அவர் கதைகளில் பாலியல் உணர்ச்சி மிகுந்திருப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

> பாலுணர்ச்சியைக் கிளறிவிடும் சந்தர்ப்பங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு, சமுதாய இன்னல்களை எடுத்துக்காட்டும் பல கதைகள் இக்குழுவினரால் எழுதப்பட்டன. அண்ணாத்துரையின் 'சிறுகதைகள்' என்ற தொகுதியிலும், கருணாநிதியின் 'ஓடிப்போனவள்' என்ற தொகுதியிலும் வருகின்ற கதைகள் இதற்கு உதாரணமாக அமைகின்றன. (கா.சிவத்தம்பி, தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், பக்.87-88).

இக்கூற்று ஏற்புடைத்தன்று என அவர் அணியினர் மறுத்துள்ளனர்.

> அண்ணாவின் கதைகளில் பாலுணர்ச்சித் (Sex) தூண்டுதல் இல்லை. பெண்களைப் பற்றிய வருணனை மட்டுமே உண்டு

என்பர் டிகே. சீனிவாசன்.

அண்ணா பாலுணர்ச்சியை மிகுவிக்கும் கதைகளைக் கண்டனம் செய்தே வந்துள்ளார். இராமனின் தெய்வத் தன்மையைச் சிறக்கப் பேசும் கம்பன் காப்பியத்தில் ஆபாசம் நிறைந்திருப்பதாகக் குற்றம் சாட்டினார். அத்தெய்வக் காதையில் காமரசக் கலப்பு இருப்பதை வெளிப்படுத்தினார். கம்பனது காப்பியத்தில் பெண்களின் உறுப்பு நலன்களை வெளிப்

படையாகக் கூறியதையும், ஆபாசம் நிறைந்த சொற்கள் அமைந்திருப்பதையும் எதிர்த்தார். அதன் விளைவாக எழுந்த நூற்களே 'கம்பரசம்', 'தீ பரவட்டும்' என்பன. தேவர்களின் ஒழுக்கமின்மையையும், ஆபாசம் நிறைந்த கதைகளையும் எள்ளி நகையாடி, 'தேவலீலைகள்' என்ற ஏட்டினைத் தீட்டினார். இத்தகைய போக்குடைய அண்ணாவின் கதைகளில் பாலியல் கவர்ச்சி மிகுந்து காணப்படுகின்றதென்ற கூற்று பொருந்தாக் கூற்றேயாகும்.

அண்ணாவின் கதைகளில் ஆபாசம் நிறைந்திருக்கிறது என்பது சிலரின் மேலோட்டமான கருத்து. இக் கருத்துக்கு அரணாகப் பலரும் 'ரோமாபுரி ராணிகள், ஏட்டினைக் காட்டுகின்றனர். அந்நூலின் முன்னுரையிலேயே,

> நவரசம் ததும்பும் அவர்களது வரலாற்றைப் படிப்போர், ரோம் சாம்ராஜ்யம் சிதைந்ததற்கு அந்த ரசவல்லிகளால் நேரிட்ட சதிகள், சச்சரவுகள், சமர்கள் ஆகியவைகள் காரணமாக இருந்திருக்க வேண்டுமென்பதை உணருவர் என நம்புகிறோம். (சி.என். அண்ணாத்துரை, **ரோமாபுரி ராணிகள்**, முன்னுரை, ப.6)

என்று அண்ணா குறிப்பிட்டுள்ளார். மேலும் தம் '*திராவிட நாடு*' *(23-9-56)* இதழில்,

> ரோம சாம்ராஜ்யம் அழிந்துபட்டதற்கு வேல்விழி மாதரிடம் வாள் ஏந்திய வீரர்கள் அடிமைப்பட்டது ஒரு காரணம் என்று எச்சரிக்கை செய்ய நான் அந்த ஏடு எழுதினேன்....மேலிடத்தில் உள்ளவர்கள் ஒழுக்கத்தைத் துணைக் கொண்டால் தான் நாடு உருப்படும் என்ற உண்மையை உணர்த்தும் ஏடுகள் (*திராவிடநாடு, 23-9-56*)

என்று ஏடு எழுதியதன் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

அண்ணா எப்போதும் ஒழுக்க நெறியையே வற்புறுத்தி வந்துள்ளார். பெண்கள் கற்புநெறி தவறும்போது, அவர்களின் ஒழுக்கக் கேட்டிற்குக் காரணமாக அமைந்துள்ள சமுதாயத்தைச் சாடினார் என்பதே அவரது ஒழுக்கக் கோட்பாட்டைத் தெளிவு படுத்தும். முதியவர்களுக்கு இளம் பெண்களை மணமுடித்துக் கொடுப்பதைக் கண்டு இளம் பெண்களின் ஏக்கத்தை, எதிர்பார்ப்பை வேதனையோடு புலப்படுத்தினாரே யன்றிப் பாலுணர்ச்சியைப் பரப்பும் கதைகள்ளையும், கருத்துக் களையும் புறக்கணித்தே வளர்ந்துள்ளார்.

ஆபாசம் நிறைந்ததென்று வழக்கு மன்றம் சென்ற டி.எச். லாரன்சின் 'சாடர்லி சீமாட்டியின் காதலன்' என்ற நூல் தடை செய்யப்பட்டதை யொட்டித் தொடரப்பட்ட வழக்குப் பற்றிய புத்தகத்தைப் படித்துவிட்டு, அவர் உள்ளக் கருத்தை 'கைதி எண் 6342' என்ற கடிதத்தில் தெளிவுபடுத்துகிறார்.

> படிப்போரை மகிழ்ச்சியும், பயனும் கொள்ளச் செய்யும் விதமான ஏடு, இந்த வழக்கு பற்றிய ஏடு. இந்த வழக்கு பற்றிய ஏடு எல்லாவற்றையும் விட என் மனதைப் பெரிதும் ஈர்த்த பகுதி. மிகப் பெரிய இலக்கிய மேதையான லாரன்சு இதுபோல் எழுதியுள்ளாரே என்பதற்காக, பேனா பிடித்தவனெல்லாம் இது போன்ற கதையையும், நடையையும் எழுத முற்பட்டுவிடக் கூடாது என்று லாரன்சின் ஏட்டுக்காக வாதாடிய வழக்கறிஞரே அறிவுரை கூறியிருக்கும் பகுதிதான். (காஞ்சி, 20.12.64)

ஆபாசத்தைக் கண்டிக்கும் அவரது நல்லியல்பை இது காட்டுவதாக அமைந்துள்ளது. தொடக்கக் காலத்திலிருந்தே பாலுணர்ச்சியைத் தோற்றுவிக்கும் கதைகளை வெறுத்தே வந்துள்ளார். தொடக்கக்காலக் கதைகளில் பெண்ணைப் பற்றிய வருணனைகள் இடம் பெற்றன. பிற்காலக் கதைகளில் பாலியல் உணர்வை வெளிப் படுத்துவதைவிடப் பாவையர் பண்பைப் புலப்படுத்துவதிலே மிகுந்த நாட்டம் காட்டினார்.

# முடிவுரை

அண்ணா இந்தியநாடு அடிமைப்பட்டிருந்தபோது பிறந்தார். நாடு விடுதலை பெற்றபின் இருபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்தார். 1931இல் தொடங்கிய அவர் எழுத்துப்பணியை இறுதி மூச்சு உள்ளவரை (1969) தொடர்ந்து கொண்டே இருந்தார். கல்லூரிப் பருவத்திலேயே செங்கற்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டில் கலந்து கொண்டார். பின்னர், சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்புகளில் இருந்து கொண்டே எழுத்துப் பணியைத் தொடர்ந்தார். இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் தம்முடைய சுவடுகளைப் பதித்துச் சென்றுள்ளார். தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்களையும், தன்னம்பிக்கையை ஊட்டும் ஏடுகளையும், மதியைப் பெருக்கி விதியைத் கெடுத்திடும் நூல்களையும் படைத்தார். அவரது எழுத்துக்கள் படிப்பவர் நெஞ்சிலும் கேட்பவர் செவியிலும் கருத்துப்புரட்சியை விளைவித்தன.

தன்னைச் சூழ்ந்துள்ள சமுதாயத்தில் பெண்கள் எல்லா நிலைகளிலும் அடிமைப்பட்டிருப்பதைக் கண்டார். பெண் விடுதலைக்காகத் தம்முடைய புனைகதைகளைப் படைத்தார். அதனால் பெண்ணினம் விழிப்புற்றது. சமயக் காவலர்கள் காவியுடையில் மறைந்து கொண்டு மக்களை ஏமாற்றும் கயமைத்தனத்தையும் வேற்றுச் சமயங்களைச் சாடும் சிறுமைகளையும் வெறுத்தார். மூடநம்பிக்கையால் பேய் பூதம், பிசாசு இவற்றை நம்பிக்கெடுவதைக் கண்டு வருந்தினார். சாதகம், சோதிடம் இவற்றால் மக்கள் கெட்டொழிவதைக் கண்டு மனம் வெதும்பினார். மக்களை நல்வழிப்படுத்த அமைந்த சமயம் மாசுபடிந்து மக்களை ஏமாற்றுவதைக் கண்டு கலங்கினார். மக்களை வாழ்விக்கவும், வழிகாட்டவும் சமயம் பயன்படக் கதைகளைக் கருவியாகக் கொண்டார். சமுதாயத்தில் சாதி பெற்றுள்ள ஆதிக்கத்தை எடுத்துக் காட்டி அக்கொடுமை நீங்கக் கலப்பு மணமே சிறந்த வழியென எடுத்துரைத்தார். பொய் வேடமிட்டு மக்களை ஏமாற்றும்போலி மனிதர்களை

இனங்காட்டினார். செல்வர்கள் மக்களைச் சுரண்டும் தீமையிலிருந்து காப்பாற்றவும், வறுமையை ஒழிக்கவும் பொருளியல் சமநிலையை உருவாக்கவும் புனைகதைகளைப் புனைந்தார். சமுதாயத்தில் மலிந்துள்ள எல்லாத் தீமைகளுக்கும் வழிகாணக் கதைகள் வாயிலாகக் களம் அமைத்தார். 'அண்ணா தம் கதைகளில் நோயை மட்டும் காட்டிவிட்டுச் செல்லாமல் அந்நோயை அகற்றும் வழிகளையும் காட்டிச் சென்றுள்ளார்.

சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை,

> தமிழ்நாட்டைப் பிடித்த பீடைகள் ஒழிய வேண்டுமானால் 'நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்று வள்ளுவர் வகுத்த மருத்துவ முறையைத் தயங்காது தமிழர் கையாளுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. புண்ணுற்ற மேனியைப் புறம் பொதிந்து மூடுதலால் பயன் என்ன? என்பது அவர் கேள்வி'.

என எழுதியுள்ளது அண்ணாவின் எண்ணப் போக்கைத் தெளிவுபடுத்துவதாகும்.

சமூக விடுதலை இயக்கத்துக்காக, சி.என்.அண்ணாத் துரையும் தம் சிறுகதைகளைக் கருத்துக் கணைகளாக்கி யுள்ளார். சாதி ஒழிப்பு, கைம்பெண் மறுமணம், கலப்பு மணம், சம்பிரதாயச் சடங்குகளின் மறுப்பு போன்றவை சி.என். அண்ணாத்துரையின் சிறு கதைகளில் தலைதூக்கி நிற்கின்றன (அகிலன், **கதைக்கலை,** ப.31)

என அண்ணாவின் சமுதாயச் சீர்திருத்த எண்ணத்தை அகிலன் எடுத்துரைத்துள்ளார்.

கஸ்தூரி ரங்கன் என்ற மூத்த இதழாசிரியர்

> இன்றைய சிறுகதை, நாவல் இலக்கியம் மணிக்கொடி மரபு, கல்கிமரபு, அண்ணாத்துரை மரபு என மூன்று பிரிவுகளில் அடங்கும்.

எனப் போற்றியுள்ளார்.

> அண்ணா புனைகதை உலகில் பெற்றுள்ள இடத்தை இது நன்கு புலப்படுத்துவதாகும்.
> (கஸ்தூரி ரங்கன், தீபம், நவம்பர்-தீபாவளி மலர், 75)

அண்ணாவின் புனைகதைகள் இருநிலை விளக்கமாக அமைந்துள்ளன. அவர் கதைகள் பழமைக்கும் புதுமைக்கும் உள்ள போராட்டங்களையும், ஏழை, பணக்காரர் ஏற்றத்தாழ்வையும் ஏழைகளின் அன்பையும் செல்வர்களின் செருக்கையும் எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

அண்ணாவின் தொடக்கக்காலக் கதைகள் சிக்கல்களுக்குத் தீர்வு காட்டின. பொய், இலாப நஷ்டம், கபோதிபுரக் காதல் ஆகியவற்றைச் சான்றாகக் கூறலாம். இடைக்காலத்தில் எழுந்த கதைகள் மனிதர்களுக்குள் ஏற்படும் சிக்கல்களை விளக்கின. யார்மீது கோபித்துக் கொள்வது? பல்லிளிக்கும் பரப்பிரம்மங்கள் ஆகியவை சான்றாக அமைந்துள்ளன. பிற்காலக் கதைகளில் படிப்போரின் சிந்தனையைத் தூண்டிச் செயல்படுமாறு கருத்துக்களை விதைத்துள்ளார். 'விழுப்புரம் சந்திப்பு', 'கடைசிக்களவு' ஆகிய கதைகள் இதற்குச் சான்றாக விளங்கு கின்றன.

தொடக்கக்காலத்தில் பெருவிருப்போடு ஆறு புதினங்களை எழுதினார். அவர் எழுதியவற்றுள் மூன்று புதினங்களான 'வீங்கிய உதடு' (என் வாழ்வு), 'தசாவதாரம்', 'இன்ப ஒளி' ஆகியவை முடிவுறாமலே நின்றுவிட்டன. வீங்கிய உதடு பின்னர் 'என் வாழ்வு' என்ற பெயரில் வந்தும் முற்றுப்பெறவில்லை.

> இந்தியாவில் உயர்தரமான சிந்தனையாளர் பட்டியலில் அண்ணாத்துரைக்கு உள்ள இடத்தை எவரும் இல்லை என்று தள்ளி விடமுடியாது.

எனத் தேசிய ஏடான **கண்ணகி** (16.11.1953) குறிப்பிட்டுள்ளது.

ஞானப்பீடப்பரிசு பெற்றுள்ள மராட்டிய எழுத்தாளரான காண்டேகரைத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்து வைத்துள்ள கா.ஸ்ரீ.ஸ்ரீ.

> ஆழ்ந்த மனத் தத்துவப் பயிற்சியும் உயர்ந்த நோக்கமும் முதிர்ந்த அனுபவ ஞானமோ இல்லாத எந்த ஆசிரியரின் நூலும் என் உள்ளத்திற்கோ அறிவுக்கோ இன்பமளிப்பதில்லை. தமிழிலே என்னைச் சுற்றிப் பல மகாரதிகள் விளங்குகின்றனர். மகாகவி பாரதியார், வ.ரா. தி.ஜ. ரங்கராஜன், ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், சி.என். அண்ணாதுரை, கு.ப. ராஜகோபாலன் முதலிய பல

> அறிஞர்கள் தம் சிந்தனைக்கு விருந்தளிக்கிறார்கள். எத்தனையோ இடுக்கண்களுக்கு நடுவே அவர்கள் செயலாற்றி முன்னேறியது நமக்குத் தெரியும். (கா.ஸ்ரீ.ஸ்ரீ., மீனாட்சி, முன்னுரை)

எனப் புகழ்ந்துள்ளார்.

அண்ணாவின் புனைகதைகள் உருவம், உத்தி ஆகிய கூறுகளில் சிறந்து விளங்குகின்றன. கதைமாந்தர் படைப்பும், மொழிநடையும் ஏற்றம் தரும் வகையில் அமைந்துள்ளன: சமுதாய விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட அண்ணாவின் புனைகதைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனிஇடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன.

# பின்னிணைப்பு

## அகரவரிசையில் அண்ணாவின் சிறுகதைகள்

1. அவர் எழுதிய இரு கடிதங்கள், 'காஞ்சி', 14-1-65.
2. அவள் மிகப் பொல்லாதவள், 'குடியரசு', 18-6-39.
3. அவள் விபச்சாரியானாள் 'திராவிட நாடு', 17-11-46.
4. அறுவடை, 'திராவிடநாடு', 14-1-55.
5. அன்னதானம், 'திராவிடநாடு', 3-6-45.
6. இம்சைக்கு ஆளான இலட்சியவாதி, 'திராவிடநாடு', 23-2-47.
7. இரு பரம்பரைகள், 'திராவிடநாடு', 6-1-46.
8. இரும்பாரம், 'திராவிடநாடு', 13-6-48.
9. இருவர், 'திராவிடநாடு', 5-7-53.
10. உடைபோட்டதும், 'காஞ்சி', 14-1-65.
11. உடையார் உள்ளம், 'காஞ்சி', 14-1-66.
12. உண்ணா விரதம் (ஒரு தண்டனை), 'திராவிடநாடு', 24-10-43.
13. உபகாரி உலகநாதன், 'காஞ்சி', 26-7-64.
14. 'எங்கும்' அவன், 'காஞ்சி', 3-10-65.
15. எதனால்?, 'திராவிடநாடு', 21-2-54.
16. ஏழை, 'திராவிடநாடு', 14-1-62.
17. ஒருவன் தான் பிடிபட்டான், 'திராவிடநாடு', 25-7-54.
18. ஒளியூரில், 'திராவிடநாடு', 12-2-56.
19. கடவுள் தண்டிப்பார், 'திராவிடநாடு', 26-12-48.
20. கருப்பண்ணசாமி யோசிக்கிறார், 'திராவிடநாடு', 4-2-51.
21. கலிதீர்த்த பெருமாள், 'திராவிடநாடு', 19-1-47
22. கனவான், 'திராவிடநாடு', 14-1-56.
23. கன்னி விதவையான கதை, 'திராவிடநாடு', 14-1-61.
24. காமக்குரங்கு, 'திராவிடநாடு', 28-1-45.
25. காலிழந்தான், 'காஞ்சி', 14-1-65.
26. கிருஷ்ணலீலா, 'திராவிடநாடு', 12-11-44.
27. கைக்கு எட்டியது, 'திராவிடநாடு', 4-4-43.
28. கைதிகள், 'திராவிடநாடு', 12-1-47.
29. கொக்கரக்கோ, 'ஆனந்த விகடன்', 11-2-34.
30. சமயபுரத்து அம்மன் தொடுக்கும் மான நஷ்ட வழக்கு, 'திராவிடநாடு', 16-5-54.
31. சமூகசேவகி சாருபாலா, 'திராவிடநாடு', 18-9-55.
32. சரோஜா ஆறணா! 'திராவிடநாடு', 25-4-43.
33. சாது, 'திராவிடநாடு', 16-11-47.
34. சிக்கலான பிரச்சனை, 'திராவிடநாடு', 21-1-45.

35. சிங்களச் சீமாட்டி, 'குடியரசு', 20-8-39, 3-9-39. 10-9-39.
36. சுடுமூஞ்சி, 'திராவிடநாடு', 3-2-46.
37. சுமார் சுப்பையா, 'காஞ்சி', 10-9-39.
38. சூதாடி, 'திராவிடநாடு', 12-1-47.
39. செங்கரும்பு, 'திராவிடநாடு', 5-2-56.
40. செவ்வாழை, 'திராவிடநாடு', 1-5-49.
41. சொக்கி, 'காஞ்சி', 13-6-65.
42. சொல்லாதது, 'திராவிடநாடு', 22-10-44.
43. சொல்வதை எழுதேண்டா!'திராவிடநாடு', 24-2-46.
44. தங்கத்தின் காதலன், 'குடியரசு', 9-7-39.
45. தஞ்சை வீழ்ச்சி, 'திராவிடநாடு', 14-1-53.
46. தனபாலச் செட்டியார் கம்பெனி, 'திராவிடநாடு', 27-5-45.
47. திருமலை கண்ட 'திவ்ய ஜோதி', 'திராவிடநாடு', 13-1-52.
48. தீட்டுத்துணி, 'திராவிடநாடு', 12-1-44.
49. தேடியது வக்கீலை! 'திராவிடநாடு', 3-3-36.
50. நாடோடி, 'திராவிடநாடு', 17-11-46.
51. நாட்டில் காடு, 'திராவிடநாடு', 2-3-47.
52. நீதிபதி வக்கீலானார், 'திராவிடநாடு', 14.1.61.
53. நெஞ்சில் நெருப்பு, 'திராவிடநாடு', 14.1.61.
54. 'பக்த' பக்காத் திருடன், 'திராவிடநாடு', 11.6.50.
55. பலாபலன், 'திராவிடநாடு', 25.1.48.
56. பல்லிளிக்கும் பரப்பிரம்மங்கள், 'திராவிடநாடு', 14.1.55.
57. பவழ பஸ்பம், 'திராவிடநாடு', 14.1.54.
58. பிடி சாம்பல், 'திராவிடநாடு', 18.5.47.
59. பித்தளை அல்ல பொன்னே தான், 'காஞ்சி', 14.1.65.
60. பிரசங்க பூஷணம், 'திராவிடநாடு', 4.2.45.
61. பிரம நாயகம், 'திராவிடநாடு', 2.7.50.
62. பிரார்த்தனை, 'திராவிடநாடு', 14.3.43.
63. புதியநாயனார், 'திராவிடநாடு', 4.6.50.
64. புலிநகம், 'திராவிடநாடு', 20.1.46.
65. புரோகிதரின் புலம்பல், 'குடியரசு', 1939.
66. பூபதியின் ஒருநாள் அலுவல், 'திராவிடநாடு', 7.7.46.
67. பேய் ஓடிப்போச்சு, 'திராவிடநாடு', 31.8.47.
68. பொங்கல் பரிசு, 'காஞ்சி', 14.1.66.
69. பொய் இலாப நஷ்டம், 'திராவிடநாடு', 18.11.45.
70. மதுரைக்கு டிக்கெட் இல்லை, 'திராவிடநாடு', 4.3.45.
71. மரத்துண்டு, 'திராவிடநாடு', 13.6.48.
72. மனித மந்தை, 'திராவிடநாடு', 18.3.51.
73. மாடி வீடு, 'திராவிடநாடு', 16.3.47.
74. முகம் வெளுத்தது, 'திராவிடநாடு', 8.9.46.

75. மூன்று கடிதங்கள், 'திராவிடநாடு', 14.1.56.
76. மேலதிகாரி, 'திராவிடநாடு', 14.1.56.
77. யார் மீது கோபித்துக் கொள்வது? 'திராவிடநாடு', 30.1.55.
78. ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர், 'திராவிடநாடு', 6.6.48.
79, ரொட்டித்துண்டு, 'திராவிடநாடு', 14.1.53.
80. வரவு செலவு, 'காஞ்சி', 20.9.64.
81. வள்ளி திருமணம், 'திராவிடநாடு', 28.3.43.
82. வள்ளியின் தேவி, 'திராவிடநாடு', 19.2.61.
83. வள்ளிநாயகியின் கோபம், 'திராவிடநாடு', 14.1.49.
84. வழுக்கி விழுந்தவர்கள், 'காஞ்சி', 14.1.65.
85. வாலிப விருந்து, 'குடியரசு', 1939.
86. விழுப்புரம் சந்திப்பு, 'காஞ்சி', 14.1.65.
87. வேலை போச்சு, 'திராவிடநாடு', 17.2.46.
88. 1938-40 ஒரு வசீகர வரலாறு, 'திராவிடநாடு', 14.1.45.
89. ஜெபமாலை, 'திராவிடநாடு', 12.5.46.

## கால வரிசையில் அண்ணாவின் சிறுகதைகள்

1. கொக்கரக்கோ, 'ஆனந்த விகடன்', 11-2-34.
2. அவள் மிகப் பொல்லாதவள், 'குடியரசு', 18-6-39.
3. தங்கத்தின் காதலன், 'குடியரசு', 9-7-39.
4. சிங்களச் சீமாட்டி, 'குடியரசு', 20-8-39, 3-9-39, 10-9-39.
5. புரோகிதரின் புலம்பல், 'குடியரசு', 1939.
6. வாலிப விருந்து, 'குடியரசு', 1939.
7. பிரார்த்தனை, 'திராவிட நாடு', 14.3.43.
8. வள்ளி திருமணம், 'திராவிட நாடு', 28.3.43.
9. கைக்கு எட்டியது, 'திராவிட நாடு', 4-4-43.
10. சரோஜா ஆறணா!, 'திராவிட நாடு', 25-4-43.
11. சொல்லாதது, 'திராவிட நாடு', 22-10-43.
12. உண்ணாவிரதம் ஒரு (தண்டனை!), 'திராவிட நாடு', 24-10-43.
13. கிருஷ்ண லீலா, 'திராவிட நாடு', 12-11-44.
14. 1938-40 ஒரு வசீகர வரலாறு, 'திராவிட நாடு', 14-1-45.
15. சிக்கலான பிரச்சனை, 'திராவிட நாடு', 21-1-45.
16. பிரசங்க பூஷணம், 'திராவிட நாடு', 4-2-45.
17. காமக்குரங்கு, 'திராவிடநாடு', 28-1-45.
18. மதுரைக்கு டிக்கெட் இல்லை, 'திராவிடநாடு', 4-3-45.
19. தனபாலச் செட்டியார்கம்பெனி, 'திராவிடநாடு', 27-5-45.
20. அன்னதானம், 'திராவிடநாடு', 3-6-45.
21. பொய் இலாப நஷ்டம், 'திராவிடநாடு', 18-11-45.
22. இரு பரம்பரைகள், 'திராவிடநாடு', 6-1-46.
23. புலிநகம், 'திராவிடநாடு', 20-1-46.

24. சுடுமூஞ்சி, 'திராவிடநாடு', 3-2-46.
25. வேலை போச்சு, 'திராவிடநாடு', 17-2-46.
26. சொல்வதை எழுதேண்டா!'திராவிடநாடு', 24-2-46.
27. தேடியது வக்கீலை! 'திராவிடநாடு', 3-3-36.
28. ஜெபமாலை, 'திராவிடநாடு', 12-5-46.
29. பூபதியின் ஒருநாள் அலுவல், 'திராவிடநாடு', 7-7-46.
30. முகம் வெளுத்தது, 'திராவிடநாடு', 8-9-46.
31. அவள் விபச்சாரியானாள் 'திராவிட நாடு', 17-11-46.
32. நாடோடி, 'திராவிடநாடு', 17-11-46.
33. கைதிகள், 'திராவிடநாடு', 12-1-47.
34. சூதாடி, 'திராவிடநாடு', 12-1-47.
35. தீட்டுத்துணி, 'திராவிடநாடு', 12-1-44.
36. கலிதீர்த்த பெருமாள், 'திராவிடநாடு', 19-1-47.
37. இம்சைக்கு ஆளான இலட்சியவாதி, 'திராவிடநாடு', 23-2-47.
38. நாட்டில் காடு, 'திராவிடநாடு', 2-3-47.
39. மாடி வீடு, 'திராவிடநாடு', 16-3-47.
40. பிடி சாம்பல், 'திராவிடநாடு', 18-5-47.
41. பேய் ஓடிப்போச்சு, 'திராவிடநாடு', 31-8-47.
42. சாது, 'திராவிடநாடு', 16-11-47.
43. பலாபலன், 'திராவிடநாடு', 25-1-48.
44. இராஜபார்ட் ரங்கதுரை பாகவதர், 'திராவிடநாடு', 6-6-48.
45. இரும்பாரம், 'திராவிடநாடு', 13-6-48.
46. மரத்துண்டு, 'திராவிடநாடு', 13-6-48.
47. கடவுள் தண்டிப்பார், 'திராவிடநாடு', 26-12-48.
48. வள்ளிநாயகியின் கோபம், 'திராவிடநாடு', 14-1-49.
49. செவ்வாழை, 'திராவிடநாடு', 1-5-49.
50. புதியநாயனார், 'திராவிடநாடு', 4-6-50.
51. பக்த' பக்காத் திருடன், 'திராவிடநாடு', 11-6-50.
52. பிரமநாயகம், 'திராவிடநாடு', 2-7-50.
53. கருப்பண்ணசாமியோசிக்கிறார், 'திராவிடநாடு', 4-2-51.
54. மனிதமந்தை, 'திராவிடநாடு', 18-3-51.
55. திருமலை கண்ட திவ்யஜோதி, 'திராவிடநாடு', 13-1-52.
56. தஞ்சை வீழ்ச்சி, 'திராவிடநாடு', 14-1-53.
57. ரொட்டித்துண்டு, 'திராவிடநாடு', 14-1-53.
58. இருவர், 'திராவிடநாடு', 5-7-53.
59. பவழபஸ்பம், 'திராவிடநாடு', 14-1-54.
60. மூன்று கடிதங்கள், 'திராவிடநாடு', 14-1-54.
61. எதனால்?, 'திராவிடநாடு', 21-2-54.
62. சமயபுரத்து அம்மன் தொடுக்கும் மானநஷ்ட வழக்கு, 'திராவிடநாடு', 16-5-54

63. ஒருவன்தான் பிடிபட்டான், 'திராவிடநாடு', 14-1-54.
64. அறுவடை, 'திராவிடநாடு', 14-1-55.
65. பல்லிளிக்கும் பரப்பிரம்மங்கள், 'திராவிடநாடு', 14-1-55.
66. யார் மீது கோபித்துக் கொள்வது?, 'திராவிடநாடு', 30-1-55.
67. சமூகசேவகி சாருபாலா, 'திராவிடநாடு', 18-9-55.
68. கனவான், 'திராவிடநாடு', 14-1-56.
69. மேலதிகாரி, 'திராவிடநாடு', 14-1-56.
70. செங்கரும்பு, 'திராவிடநாடு', 5-2-56.
71. ஒளியூரில், 'திராவிடநாடு', 12-2-56.
72. கன்னி விதவையான கதை, 'திராவிடநாடு', 14-1-61.
73. நீதிபதி வக்கீலானார், 'திராவிடநாடு', 14-1-61.
74. நெஞ்சில் நெருப்பு, 'திராவிடநாடு', 14-1-61.
75. வள்ளியின் தேவி, 'திராவிடநாடு', 19-2-61.
76. ஏழை, 'திராவிடநாடு', 14-1-62.
77. உபகாரி உலகநாதன், 'காஞ்சி', 24-7-64.
78. வரவு செலவு, 'காஞ்சி', 20-9-64.
79. அவர் எழுதிய இரு கடிதங்கள், 'காஞ்சி', 14-1-65.
80. உடைபோட்டதும், 'காஞ்சி', 14-1-65.
81. காலிழந்தான், 'காஞ்சி', 14-1-65.
82. சுமார் சுப்பையா, 'காஞ்சி', 14-1-65.
83. பித்தளை அல்ல பொன்னேதான், 'காஞ்சி', 14-1-65.
84. வழுக்கி விழுந்தவர்கள், 'காஞ்சி', 14-1-65.
85. விழுப்புரம் சந்திப்பு, 'காஞ்சி', 14-1-65.
86. சொக்கி, 'காஞ்சி', 13-6-65.
87. 'எங்கும்' அவன், 'காஞ்சி', 03-10-65.
88. உடையார் உள்ளம், 'காஞ்சி', 14-1-66.
89. பொங்கல் பரிசு, 'காஞ்சி', 14-1-66.

## அகரவரிசையில் அண்ணாவின் குறும் புதினங்கள்

1. அப்போதே சொன்னேன், 'காஞ்சி, பொங்கல் மலர், 1968.
2. கடைசிக் களவு, 'திராவிட நாடு' பொங்கல் மலர், 1957.
3. கபோதிபுரக் காதல், 'குடியரசு', 12-11-39 - 3-3-40. திராவிடப் பண்ணை, திருச்சி, முதற்பதிப்பு, 1952, மூன்றாம் பதிப்பு, 1968.
4. குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள், 'திராவிட நாடு', 15-3-42 - 28-6-42, வானம்பாடி பதிப்பகம், காஞ்சிபுரம், முதற்பதிப்பு 1943 அன்பு நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1953.
5. குமரிக்கோட்டம், 'திராவிட நாடு', 24-3-46 - 7-4-46 திராவிடப் பண்ணை, திருச்சி, முதற் பதிப்பு 1946, ஒன்பதாம் பதிப்பு, 1975.
6. கோமளத்தின் கோபம், 'குடியரசு, 16-7-39 - 13-8-39.

7. தழும்புகள், 'காஞ்சி', ஆண்டு மலர் - 1965 (புத்தக வடிவில் இடம் பெறவில்லை).
8. புதிய பொலிவு, 'திராவிட நாடு', பொங்கல் மலர், 1956, பரிமளம் பதிப்பகம், காஞ்சிபுரம், முதற்பதிப்பு, 1963.
9. வண்டிக்காரன் மகன், 'காஞ்சி' ஆண்டு மலர் 1966, பரிமளம் பதிப்பகம், காஞ்சிபுரம், முதற்பதிப்பு 1969.

## காலவரிசையில் அண்ணாவின் குறும் புதினங்கள்

1. கோமளத்தின் கோபம், 'குடியரசு', 16-7-39 - 13-8-39.
2. கபோதிபுரக் காதல், 'குடியரசு', 12-11-39 - 3-3-40.
3. குமாஸ்தாவின் பெண்தான் அல்லது கொலைகாரியின் குறிப்புகள், திராவிட நாடு, 15-3-42 - 28-6-42.
4. குமரிக்கோட்டம், 'திராவிட நாடு', 24-3-46 - 7-4-46.
5. புதிய பொலிவு, 'திராவிட நாடு', பொங்கல் மலர், 1966,
6. கடைசிக் களவு, 'திராவிட நாடு' , பொங்கல் மலர், 1957.
7. தழும்புகள், 'காஞ்சி', ஆண்டு மலர், 1965.
8. வண்டிக்காரன் மகன், 'காஞ்சி' ஆண்டு மலர், 1966.
9. அப்போதே சொன்னேன், 'காஞ்சி', பொங்கல் மலர், 1968.

## அகரவரிசையில் அண்ணாவின் புதினங்கள்

1. இன்பஒளி, 'காஞ்சி', பொங்கல் மலர், 1968 (புத்தக வடிவம் பெறாத- முடிவுறாத கதை).
2. கலிங்கராணி, 'திராவிட நாடு', 12-7-42-10-10-43. திராவிடப் பண்ணை, திருச்சி, முதற்பதிப்பு, 1954, ஐந்தாம் பதிப்பு, 1957.
3. தசாவதாரம், 'திராவிடநாடு', 17-6-45 - 23-9-45 (புத்தக வடிவம் பெறாத - முடிவுறாத கதை).
4. பார்வதி, பி.ஏ., 'திராவிட நாடு', 17-10-43 - 4-3-45, பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1953, நான்காம் பதிப்பு, 1967.
5. ரங்கோன் ராதா, 'திராவிட நாடு', 21-4-46 - 25-1-48, பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1950, மூன்றாம் பதிப்பு, 1955.
6. வீங்கிய உதடு, 'விடுதலை', 29-6-40-28-12-40 (புத்தக வடிவம் பெறாத - முடிவுறாத கதை).
   பின்னர் 'என் வாழ்வு' என்ற பெயரில் திராவிட நாடு ஏட்டில் 22-2-48 - 25-7-48 முடிய வந்தது.

## கால வரிசையில் அண்ணாவின் புதினங்கள்

1. வீங்கிய உதடு, 'விடுதலை', 29-6-40 - 28-12-40.
2. கலிங்கராணி, 'திராவிட நாடு', 12-7-42 - 10-10-43.
3. பார்வதி, பி.ஏ., 'திராவிட நாடு' 17-10-43 - 4-3-45.
4. தசாவதாரம், 'திராவிட நாடு', 17-6-545 - 23-9-45.
5. ரங்கோன் ராதா, 'திராவிட நாடு', 21-4-46 - 25-1-48.
6. இன்பஒளி, 'காஞ்சி', பொங்கல் மலர், 1968.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113

# அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |
| தமிழ் நாடக மொழியும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு. என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |

---

| | |
|---|---|
| 684 அண்ணாவின் புனை கதைத்திறன் | 70.00 |